126

T.N.L.A.D
11.5.2000
V105 No.1

©

D.
V24,31 pe
P66 NOS.1
223321.

வெளியீடு 18-4-2001

Issued 18-4-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 11, 2000 – தொகுதி 105 – எண் 1

Thursday the 11th May, 2000 – Volume 105 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

## 11-5-2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-35 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 15 மற்றும் 16) | 35-106 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இட ஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கை—விவாதம்-தேதி | 107 |
| (ஆ) மாண்புமிகு முதல்வர், உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து | 157 |
| (இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு | 157 |
| (ஈ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு | 179 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) திருபுவனம் தமிழ் மாநில காங்கிரஸ் பிரமுகர் கொலை | 107-119 |
| திரு. செ. இராமலிங்கம் | 108 |
| திரு. சி. ஞானசேகரன் | 108-112 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 112-114 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 114-115 |

223321




| | பக்கங்கள் |
|---|---|
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி | |
| *திரு. இரா. தாமரைக்கனி | 115-117 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 117-119 |
| (ஆ) திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை சாய்ந்து பெண் இறப்பு | 119-121 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 119-120 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 120-121 |
| (இ) மத்திய, மாநில அரசுகளின் செயலைக் கண்டித்து வேலைநிறுத்தம் | 129-156 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 129-131,155 |
| *திரு. கே. சுப்பராயன் | 132-135,136 |
| திரு. சி. வேலாயுதன் | 135-137 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 137-139,155 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 139-144 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 145-148,156 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 130,137,142, 143,148-156 |
| திரு. ச. அழகிரி | 148,150-152 |
| 4. தகவல் கோரல்— | |
| (அ) உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரத்திற்கு தொலைபேசியில் வந்த மிரட்டல் | 122-123 |
| (ஆ) அவையின் நேரத்தை நீட்டித்தல் | 156-157 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| (அ) திருவில்லிபுத்தூர் நகர எல்லைக்குள் கண்மாய் மற்றும் கால்வாய்களில் தூர் எடுத்தல் | 124-126 |
| (ஆ) அருப்புக்கோட்டை இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல் | 126-129 |





| | பக்கங்கள் |
|---|---|
| அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 157 |
| (ஆ) மனுக்கள் குழு | 158 |
| மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 31 — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்<br>(ஆ) கோரிக்கை எண் 30 — பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 158-280 |
| *மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 158,165, 264-276 |
| *மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு | 162,166,211-213, 246-264 |
| திரு. மு. அப்பாவு | 167-173 |
| திரு. கொ.வீ. நன்னன் | 174-178 |
| திரு. எஸ்.வி. கிருஷ்ணன் | 179-182 |
| திரு. மு. பன்னீர்செல்வம் | 182-185 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 185-191, 212 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 161-162,165, 191-195,277, 279 |
| *திரு. சி. சந்திரசேகரன் | 195-198 |
| திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் | 160,164,198-201, 277,279 |
| திரு. ஜி.கே. மணி | 160,164,201-207,277,279 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| திரு. கோ. நயினா முகமது | 207-210 |
| *திரு. சொ. கருப்பசாமி | 210-215 |
| *திரு. ச. அழகுவேலு | 215-218 |
| *திரு. ஏ.வி.ஏ. நாசர் | 159,163,218-221,277,278 |
| *திரு. ச. புரட்சிமணி | 221-224 |
| திரு. பால. ஆனந்தன் | 224-227 |
| திரு. எஸ். டேவிட் செல்வின் | 227-230 |
| திரு. அ. வெங்கடாசலம் | 230-233 |
| திரு. வி. முத்து | 233-236 |
| திரு. ஆர். தமிழ்ச்செல்வன் | 236-239 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 239-240 |
| *திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 240-246 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 280-282 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

**7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

**8. போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

**10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

**11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல். பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

**12. பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



**3. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

**14. சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

**15. கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித தொழில்.

**16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாடுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு

**18. வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | | |
|---|---|---|
| 21. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன். எம்.ஏ., எல்.எல்.பி. | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள். எம்.ஏ., பி.லிட். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |

19. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்
20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்
21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்
22. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்
23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. - சார்புச் செயலாளர்
24. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்
25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. - சார்புச் செயலாளர்
26. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்
27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்.சி., பி.எல். - சார்புச் செயலாளர்
28. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்
29. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. - தலைமை நிருபர்
30. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. - தலைமை நிருபர்
31. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். - சார்புச் செயலாளர்
32. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்
33. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்
34. திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்
35. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்
36. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். - தலைமை நிருபர்
37. திரு. தி. உமாபதி, பி.ஏ. - தலைமை நிருபர்
38. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்
39. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. - சார்புச் செயலாளர்
40. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. - திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. - அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். - மயிலாடுதுறை
4. அப்துல் லத்தீப், திரு. ம. - வாணியம்பாடி
5. அப்பாவு, திரு. மு. - இராதாபுரம்
6. அமரமூர்த்தி, திரு. டி. - அரியலூர்
7. அய்யலுசாமி, திரு. வி. - கோவில்பட்டி
8. அருண்குமார், திரு. பா. - மேட்டுப்பாளையம்
9. அழகராஜா, திரு. என்.ஆர். - தேனி
10. அழகிரி, திரு. ச - சிதம்பரம்
11. அழகுவேலு, திரு. ச. - கண்டமங்கலம் (செ.வ.)
12. அன்பரசன், திரு. சி. - அறந்தாங்கி
13. அன்பழகன், திரு. வ. - செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. - துறைமுகம்
15. அன்பில் பெரியசாமி, திரு. - திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. - ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. - பவானிசாகர்
18. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். - வில்லிவாக்கம்
19. ஆலடி அருணா, திரு. - ஆலங்குளம்

| | | |
|---|---|---|
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | - திருச்செங்கோடு |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 23. | ஆனந்தன், திரு. பால. | - வந்தவாசி (செ.வ.) |
| 24. | இரகுமான்கான், திரு. அ. | - இராமநாதபுரம் |
| 25. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | - மேலூர் |
| 26. | இராசமாணிக்கம், திரு. பி. | - ஒரத்தநாடு |
| 27. | இராசன், திரு. வி.பி. | - இராஜபாளையம் (செ.வ.) |
| 28. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ | - ஆண்டிமடம் |
| 29. | இராமசாமி, டாக்டர் வை. | - பண்ருட்டி |
| 30. | இராமசாமி, திரு. கே.ஆர். | - திருவாடனை |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | - தொண்டாமுத்தூர் |
| 33. | இராமச்சந்திரன், திரு. மா. | - திருவோணம் |
| 34. | இராமலிங்கம், திரு. ஏ. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. | இராமலிங்கம், திரு. செ. | - திருவிடைமருதூர் |
| 36. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | - பள்ளிப்பட்டு |
| 37. | இராமஜெயம், திரு. ந.பூ. | - மயிலாப்பூர் |
| 38. | இராஜ ரெட்டி, திரு. ச. | - தளி |
| 39. | இராஜேந்தர், திரு. டி. | - பூங்கா நகர் |
| 40. | இளங்கோ, திரு. கோ. | - அவினாசி (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 41. | ஈஸ்வரன், திரு. ரா. | - வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. | உதயசூரியன், திரு. தா. | - சங்கராபுரம் |
| 43. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - தஞ்சாவூர் |
| 44. | கணேசன், திரு. ஐ. | - எடப்பாடி |
| 45. | கணேசன், திரு. கே.சி. | - ஜெயங்கொண்டம் |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | - சேப்பாக்கம் |
| 47. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. | கருப்பண்ண உடையார், திரு. ந. | - பாபநாசம் |
| 49. | கருப்புசாமி, திரு. டி. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 50. | கன்னையன், திரு. க. | - தொட்டியம் |
| 51. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | - கிருஷ்ணகிரி |
| 52. | காந்தி, திரு. ஆர். | - இராணிப்பேட்டை |
| 53. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | - ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. | கிருஷ்ணன், திரு. எஸ்.வி. | - நாங்குநேரி |
| 55. | கிருஷ்ணன், திரு. சீ.வெ. | - வேடசந்தூர் |
| 56. | குண்டன், திரு. டி. | - உதகமண்டலம் |
| 57. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | - குத்தாலம் |
| 58. | குமாரதாஸ், டாக்டர் தே. | - கிள்ளியூர் |
| 59. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | - கும்மிடிப்பூண்டி |
| 60. | குழந்தை தமிழரசன், திரு. | - விருத்தாசலம் |
| 61. | கோதண்டம், திரு. ஏ. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. | கோபால், திரு. பா. | - மேட்டூர் |

63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - நினைத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79 சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80 சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
112. ஞானசேகரன், டாக்டர் ஆ - மேல்மலையனூர்
113. ஞானசேகரன, திரு. சி. - வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
118. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ - பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்



130. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
131. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
132. துரைமுருகன், திரு. - காட்பாடி
133. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
134. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
135. நடராசன், திரு. ஆ - பேரூர்
136. நடராஜன், திரு. த - செஞ்சி
137. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
138. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
139. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
140. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
143. நேரு, திரு. கா.நா. - லால்குடி
144. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
145. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
152. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்

153. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
155. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
156. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
164. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
165. பொன்னார்டு, திரு. இரா. - குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. - நாட்றாம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ
173. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
174. மணி, திரு. டி. - விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்



176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
177. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
179 மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. - தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
189. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்

198. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
199. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
200. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
201. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
202. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
203. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)
204. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்
205. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்
206. ராஜு, திரு. எஸ். - பொள்ளாச்சி
207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. - சத்தியமங்கலம்
208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். - காங்கேயம்
209. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
210. வல்லரசு, திரு. பி.என். - உசிலம்பட்டி
211. வாசுகி முருகேசன், திருமதி - கரூர்
212. விஜயகுமார், திரு. கே.எம். - சாத்தூர்
213. விஜயன், திரு. டி.சி. - திருவொற்றியூர்
214. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - வீரபாண்டி
216. வீரப்பன், திரு. கே.கே. - கபிலர்மலை
217. வெங்கடசாமி, திரு. பி. - ஓசூர்
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். - பாலக்கோடு



220. வெங்கடேசன், திரு. ச.க. - மதுராந்தகம்
221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். - காவேரிப்பட்டினம்
222. வெங்கிடு, திரு. ஜி.பி. - கோபிச்செட்டிப் பாளையம்
223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். - அரூர் (செ.வ.)
224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
225. வேலாயுதன், திரு. சி. - பத்மநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. - மதுரை கிழக்கு
227. வேல்சாமி, திரு. க. - நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். - திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. - முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
234. ஆன் டி' மான்டி, திருமதி - நியமனம்
235. வெற்றிடம் - திருப்போரூர் (செ.வ.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்ற

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறி

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 29, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 11, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்".*

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

### 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 581, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**581—**

**மதுபானக் கடைகள் ஏலம்**

***23154—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் மதுபானக் கடைகள் ஏலம் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) மேலும் வருமானத்தை அதிகரிக்க வகை செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2000 மே 11

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) 1997-98*-ஆம் ஆண்டில் மதுக்கடைகளின் விற்பனை மூலம் அரசுக்கு மொத்தம் ரூ. 226.00 கோடி வருவாய் கிடைத்தது.

*(ஆ) 1998-99* ஆம் ஆண்டில், அரசு, நடைமுறையிலே இருக்கும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையில் சில திருத்தங்களைச் செய்தது. அதன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கடைகளுக்கான ஏலத்திற்கான குறுமத்தொகை (Upset price), பிணைவைப்புத் தொகை (Earnest Money Deposit) மற்றும் காப்புத் தொகை (Security Deposit) ஆகியவை கணிசமான அளவில் உயர்த்தப்பட்டு உள்ளன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபான ஏல முறைகளிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால், சட்டங்களின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு சில சமூக விரோதிகள், சில அரசியல்வாதிகளின் துணையோடு முன்கூட்டியே ஒரு syndicate form செய்து கொண்டு, அரசின் ஏலத்தை நடைமுறையில் நீர்த்துப் போகவைக்கின்ற நடவடிக்கைகளிலே இறங்கி இருப்பதாகப் பத்திரிகைகளிலே பரவலாக அவ்வப்போது செய்திகள் வந்தன, வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமைகளை அரசு கவனித்து, வெளிப்பகுதிகளில் முன்கூட்டி ஏலத்தைத் தீர்மானித்துக் கொண்டு, ஒரு 'நாம்கே வாஸ்தே' முறையாக இங்கே வந்து ஏலம் எடுக்கிற நடைமுறையைத் தடுக்கப் பொருத்தமான வழிவகைகளை மாநில அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதே பிரச்சினை குறித்து இந்த அவையில் ஏற்கெனவே பல உறுப்பினர்களும் தங்களுடைய அரிய கருத்துகளை எடுத்துக் கூறினார்கள். அதிலும் குறிப்பாக, நம்முடைய சட்டமன்றத்திலேயிருந்த முன்னாள் உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சில அரிய கருத்துகளை எடுத்துக்கூறி, அந்த அடிப்படையிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கவலைப்படுவதைப் போல உள்ள நிலைமை பெருமளவிற்குக் குறைக்கப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



2000 மே 11]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னது மாதிரி, ஏலத்திலேயும் கோளாறுகள், குளறுபடிகள் நடைபெறுகின்றன. அதைத் தவிர, வெளி மாநிலங்களிலேயிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டதை, மதுபானக் கடைகளிலே வைத்து விற்பனை செய்கிறார்கள். அவ்வாறு விற்பனை செய்யக்கூடியவர்களை விட்டுவிட்டு வாங்கி குடிக்கக்கூடியவர்களை, எடுத்துச் செல்கின்ற வழியிலே, காவல் துறை அதிகாரிகள் பிடித்து, இது கர்நாடகத்திலேயிருந்து வந்த சரக்கா அல்லது பாண்டிச்சேரியிலேயிருந்து வந்த சரக்கா என்று கேட்டு, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யக்கூடிய நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆதாரங்களோடு என்னால் சொல்ல முடியும். அதைப்போலவே, கிராமப்புறங்களிலே கள்ளச்சாராயம் விற்பதைக்கூட, அங்கே ஏலமாக விட்டுக் கொண்டிருக்கிறார்கள். காலையிலேகூட 2 நபர்கள் வந்து என்னிடத்திலே சொன்னார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகள் நடப்பதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் என்ற வகையிலும், பார்களிலே மற்றும் விற்பனை நிலையங்களிலே நடத்தப்படுகின்ற தவறுகள் அதிகமாகி விட்டன என்ற வகையிலேயும் உள்ள அத்தகைய குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னிடத்திலே ஏராளமான ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆதாரங்களைத் தருவார்களேயானால், அதைப்பற்றிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிடும்போது, சிண்டிகேட் அமைத்து, வெளி ஏலம் விடுவதாகக் குறிப்பிட்டார்கள். அதைத் தடுப்பதற்கு அந்தந்த ஏரியாக்களில் உள்ள கடைகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்யாமல், குறைந்தபட்சம் 3 இலட்சமோ, 5 இலட்சமோ, 10 இலட்சமோ, ஏரியாவிற்குத் தகுந்தாற்போல குறைந்த பட்சத் தொகையை நிர்ணயித்து, அந்தத் தொகையைச் செலுத்தும் அனைவருக்கும் அங்கே உரிமம் வழங்கப்பட்டால், இதுபோன்று வெளியிலே சிண்டிகேட் அமைப்பது குறைக்கப்படும். அரசுக்கும் வருமானம் அதிகரிக்கும். ஆகவே, அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரசுக்கு வருமானம் அதிகரிக்கக்கூடிய வகையிலே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை இருக்குமேயானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அளவில் மதுபானங்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் எத்தனை? அரசுக்கு வருமானத்தைப் பெருக்குகின்ற வகையில் எதிர்காலத்தில் அந்த எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த மது வகைகளை உற்பத்தி செய்கின்ற நிலையங்கள் 5.

1. Balaji Distilleries Ltd.,
2. Shiva Distilleries Ltd.,
3. Mohan Breweries and Distilleries Ltd.,
4. Empee Distilleries Ltd.,
5. Southern Agriforane Industries Ltd.,

என்ற 5 தான் இருக்கின்றன. மேற்கொண்டு இவற்றைப் பெருக்கலாம் என்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றால், அதனால் பல தொல்லைகள் ஏற்படக்கூடும். எம்.ஜி.ஆர். காலம் முதல் இதே முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகளை ஏலம் எடுத்தவர்கள் 'பார்' நடத்தக்கூடாது என்கிற ஒரு கண்டிஷன் இருந்தாலும்கூட, தமிழ்நாட்டில் பரவலாக, பொதுவாக, சுருங்கச் சொன்னால், எல்லாக் கடைகளிலுமே, இப்போது 'பார்'-ஐ நடத்தி அங்கே பாட்டில்களைச் சில்லறையாக



விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி விற்கின்ற காரணத்தாலேதான் அந்த ஏரியாக்களிலே பல குற்றங்கள் நடைபெறுவதற்கு அது ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. ஆகவே, இதுபோன்ற 'பார்'-களை நடத்தக்கூடியவர்களுடைய லைசென்சுகளை உடனடியாக, அதிரடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய கருத்துப்படி, இந்தக் கடைகளை எல்லாம் ஆய்வு செய்கின்ற வகையில் 1999 ஆம் ஆண்டு மாத்திரம் 40,286 கடைகள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றிலே சட்டத்திற்குப் புறம்பாக, 'பார்' நடத்தியதற்காக, 2,923 கடைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, இது தொடரும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு தெரிவித்த சில யோசனைகளின் அடிப்படையிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த மாற்றங்கள் நடைமுறையில் இலாபகரமான மாற்றங்களாக அமைந்திருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம் என்னவென்றால், தமிழ்நாட்டில் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் பெரிதும் நட்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பண்டகசாலைகளுக்கு, ஒரு பண்டகசாலைக்கு ஒரு மதுபானக் கடை என்று, ஒரு அடிப்படை விலையிலே தீர்மானித்து வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளை இணைத்துக் கேட்டிருக்கிறார். மாற்றங்களால் ஏற்பட்ட பயனை, ஆண்டுவாரியாகச் சொல்ல விரும்புகிறேன். 1995-96-ல், இந்தக் கடைகளின் ஏல விற்பனை மூலமாகக் கிடைத்த தொகை 217 கோடி ரூபாய். 1996-97-ல் 220 கோடி ரூபாய், 1997-98-ல் 225 கோடி ரூபாய், இந்த மாற்றங்களுக்குப் பிறகு, 1998-99-ல் கிடைத்த தொகை 518 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு சொசைட்டிகளுக்கு மொத்த விற்பனையைத் தர இயலுமா என்று கேட்டார்கள். இப்பொழுதுகூட, இந்தக் கடைகள் மூன்று ஆண்டுகளுக்குத்தான் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. மூன்று

[2000 மே 11

ஆண்டுகளுக்குப் பிறகு மறு ஏலம் நடைபெறும். இரண்டாம் ஆண்டு 15 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டு மேலும் 10 சதவிகிதமும் அதிகமாக வைத்து ஏலதாரர்களுக்கு வழங்கப்படும். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு யாரும் வராமல் இருப்பார்களேயானால், அந்தக் கடைகள் அநேகமாக, பெரும்பாலும் கூட்டுறவு சொசைட்டிகளுக்குத்தான் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 582, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**582—**

**கல்லூரிக்குக் கட்டடம்**

***26696—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் இயங்கிவரும் அரசுக் கலைக் கல்லூரி, அரசு மேல்நிலைப் பள்ளியில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கல்லூரிக்குக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இளைஞனுக்குக் கல்லூரி வாழ்க்கை என்பது ஒரு இன்றியமையாத கட்டமாகும். ஆனால், பரமக்குடியில் இயங்குகின்ற அந்தக் கல்லூரியானது, ஒரு பள்ளி வளாகத்திலே இயங்குகிறது. அதே பள்ளியில் படித்துவிட்டு, அதே பள்ளியிலே உள்ள கல்லூரியில் படிக்கின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தாலே, மாணவர்கள் கல்லூரியில் படிக்கின்ற உணர்வே இல்லாமல் இருக்கின்றனர். இவற்றையெல்லாம் புரிந்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நமது மாண்புமிகு கல்வித்



2000 மே 11]

துறை அமைச்சர் அவர்களும், கருணையோடு அந்தக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக அறிவித்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் அந்தக் கட்டடம் கட்டப்படும்? ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டனவா? அந்தப் பணிகளை விரைவாக முடிக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக அந்தக் கல்லூரி இயங்கி வருகிற பள்ளி இருக்கிற இடத்திலேயிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் அதற்கான இடம் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, கட்டடங்கள் கட்டுவதற்கு அரசின் சார்பில் 215.6 இலட்சங்களுக்கு—2 கோடி ரூபாய் 15 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வரைபட அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, அந்தக் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தங்கள், கட்டட ஒப்பந்தங்களைப் பற்றி இறுதியாக முடிவு செய்கின்ற Tender Award Committee-யின் முன்னிலையில் முடிவு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளன. அந்தக் குழுவின் முடிவு தெரிவிக்கப்பட்டவுடன் அந்த ஒப்பந்ததாரர் மூலம் கட்டடப் பணிகள் தொடங்கி, நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 583, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**583—**

**நூலகத்திற்குக் கட்டடம்**

***31711—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரிலுள்ள பொது நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 11

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பவானி நகரிலுள்ள கிளை நூலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. காலிமனை பெற தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கிடைக்கப்பெற்றதும் இக்கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, இடம் கிடைக்கவில்லை என்ற கருத்தினைக் கூறினார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே, பவானி நகராட்சியின் மத்தியப் பகுதியான தேவபுரத்தில் நூலகம் கட்டுவதற்காக, அங்கே இருக்கக்கூடிய 20 சென்ட் நிலத்தில் 10 சென்ட் நிலத்தை நூலகம கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கின்றோம். நூலகக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் நகராட்சியின் மூலமாக அனுப்பப்பட்டு, என்னைப் போன்றவர்கள் நூலகப் பொறுப்பாளரிடத்திலே, அதிகாரியிடத்திலே அணுகி விண்ணப்பம் கொடுத்தும்கூட, இன்னும் செயல்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், நிலம் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், இந்த நிதியாண்டிலே கட்டிக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், நிலத்தை வழங்குவதற்காக இந்தத் துறைக்கு அனுப்ப வேண்டிய ரெக்கார்டு அல்லது பதிவை அனுப்பியிருக்க மாட்டார்கள். அதனால்தான், நிலம், காலிமனை பெறப்படவில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி நிலம் கிடைக்குமேயானால், எவ்வளவு விரைவில் முன்னுரிமை கொடுத்து, கட்டடம் கட்ட முடியுமோ, அந்த அளவு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 584, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



2000 மே 11]

**584—**

### விவசாயத் துணை நிலையம்

***30717—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் தொகுதி, கோண்டூர் கூட்டுப் பாதையில் விவசாயத் துணை நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கண்டமங்கலம் ஒன்றியம், கோண்டூர் கூட்டுப் பாதையில் விவசாயத் துணை நிலையம், வேளாண்மை விரிவாக்கத் துணை நிலையம் தொடங்க இதற்கு முன் கோரிக்கையோ அல்லது வேளாண்மை இயக்குநரிடமிருந்து கருத்துருவோ வரப்பெறவில்லை. எழுப்பப்பட்டுள்ள வினாவினைக் கவனத்தில் கொண்டு, வேளாண்மை இயக்குநரிடம் அறிக்கை பெற்று, ஆய்வுசெய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அளித்த பதிலுக்கு, தொகுதி சார்பாக மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 585, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**585—**

### தோட்டக்கலைப் பிரிவு அலுவலகம்

***30718—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலைத் துறையின் பிரிவு அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

முற்பகல் 9-45

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் பகுதியில் அதிகமாக காய்கறிகளும், பழங்களும் உற்பத்தியாகின்றன. இப்போது தமிழ்நாட்டிலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்திலேதான் உள்ளது. அங்குள்ள விவசாயிகள் ஏதாவது விவசாயம் சம்பந்தமாக ஆலோசனை பெறவேண்டுமானால் பழனி அல்லது திண்டுக்கல்லுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. அங்குத் தோட்டக்கலைத் துறை மூலமாக—"TANCOF" மூலமாக—ஒரு கட்டடம் கட்டப்பட்டு, அங்குக் காய்கறி, பழங்கள் எல்லாம் வாங்கப்பட்டு, வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்வதற்குக்கூட, இப்போது அந்தத் துறை ஏற்பாடு செய்திருக்கிறது. அங்கே வந்த தோட்டக்கலைத் துறை இயக்குநர் அவர்கள்கூட, ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலைப் பிரிவு அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, இப்போது அரசுக்கு அவர்கள் கோப்பு அனுப்பியிருப்பதாக நான் அறிகின்றேன். இந்த அவையில்கூட, இந்த ஆண்டு தமிழகத்திலே மிகப் பெரிய உழவர் சந்தை ஒட்டன்சத்திரத்தில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, ஒட்டன்சத்திரத்தில் இந்த ஆண்டு தோட்டக்கலைத் துறைப் பிரிவு அலுவலகம் அமைக்க முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில், நிலக்கோட்டை, வேடசந்தூர், நத்தம், திண்டுக்கல், சிறுமலை மற்றும் பழனி ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு, 6 தோட்டக்கலை அலுவலகங்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மேம்பாட்டுப் பணியினைத் தற்போது செய்து வருகின்றன. ஒட்டன்சத்திரம் வட்டார அலுவலகத்தில் தோட்டக்கலைத் துறையின் உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் தோட்டக்கலைப் பணிகளைத் தற்போது மேற்கொண்டு வருகிறார்.



ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலைத் துறைப் பிரிவு அலுவலகம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் செயற்குறிப்பில் இல்லை. ஒட்டன் சத்திர வட்டார தோட்டக்கலை வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் பழனியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் தோட்டக்கலை அலுவலர் கவனித்து வருகிறார். ஒட்டன்சத்திரத்தை உள்ளடக்கிய திண்டுக்கல் மாவட்டத்தில், தோட்டக்கலைப் பயிர்கள் மேம்பாட்டிற்காக மேலும் 8 உதவி வேளாண்மை அலுவலர்களைக் கூடுதலாகப் பணிப் பயிற்சி மூலம் நியமனம் செய்ய, பிரேரணை ஒன்று அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. ஒட்டன்சத்திரம் தனி வட்டமாகத் தற்போது அறிவிக்கப்பட்டிருப்பதால், அங்குத் தனியாக அலுவலர்கள் நியமிப்பதைப் பற்றி அரசின் பரிசீலனையிலே இருக்கிறது. இன்னும் தோட்டக்கலைத் துறையிலேயிருந்து அதற்கான குறிப்பு அரசுக்கு வந்து சேரவில்லை. வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 586. திரு ஆ இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. தங்கம் தென்னரசு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**586—**

**புலிகளைப் பாதுகாத்தல்**

***14701—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**
**திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) புலிகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, களக்காடு, முண்டந்துறை பகுதிகள் இந்தியாவில் 17 ஆவது

புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது. மேலும் திருட்டு வேட்டை, வன உயிரினங்களைக் கொல்லுதல், திருட்டுத்தனமாக வனப் பொருட்களைச் சேகரம் செய்தல், வன உயிரினங்கள் வாழும் இடங்களை ஆக்கிரமித்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த வனப் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது. குற்றங்கள் நடக்காத வண்ணம் தடுப்பதற்கு வனப் பணியாளர்களுக்கு கம்பியில்லாத் தொலைத் தொடர்பு போன்ற நவீன சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியாவினுடைய அங்கீகரிக்கப்பட்ட தேசிய விலங்காக இருக்கின்ற புலிகளுடைய எண்ணிக்கை பொதுவாகக் குறைந்து வருகிறது என்பதைப் பத்திரிகைகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. அதை வனத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளும் ஒப்புக்கொள்கிறார்கள். குறிப்பாக, முதுமலை மற்றும் பிற இடங்களிலே இந்தப் புலிகளுடைய எண்ணிக்கை குறைந்து வருவதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். இந்தப் புலிகளுடைய நகங்கள், புலிப் பற்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதிலே ஒரு நம்பிக்கை மக்களிடையே இருக்கின்ற காரணத்தினாலே வேட்டையாடப்படுகின்ற ஒரு சூழ்நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் தடுத்து, இந்தப் புலிகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதேபோல் வெளிநாடுகளிலே வெள்ளைப் புலி போன்ற அரிய வகைப் புலியினங்கள் இருக்கின்றன. அத்தகைய புலியினங்களை நம்முடைய வனங்களிலே வளர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வந்த தகவல், புலிகளுடைய எண்ணிக்கை குறைந்து வரவில்லை என்பதுதான். "பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது, பல வனத் துறையினர் சொன்னார்கள்" என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்படியிருந்தால், அது ஆதாரமற்ற செய்தியாகத்தான் இருக்க முடியும். காரணம், ஆண்டுதோறும் புலிகளுடைய எண்ணிக்கையைக் கணக்கெடுக்கிறார்கள். சில ஆண்டுகளிலே விட்டுவிடுகிறார்கள். இதிலே அரசு எடுக்கின்ற புள்ளிவிவரங்கள் சரியாக இருக்கும் என்றுகூடச் சில நேரங்களிலே சொல்லமுடியாது. காரணம், புலிகள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இடம் பெயரக்கூடிய உயிரினங்கள். ஒரு மாநில எல்லையை விட்டு, இன்னொரு மாநில எல்லைக்குப் போகக்கூடியவை. ஆக,





புலிகளுடைய எண்ணிக்கையை உருவத்தைப் பார்த்துக் கணக்கெடுப்பது அல்ல. அதன் காலடியைப் பார்த்துத்தான் கணக்கெடுப்பார்கள். ஒருவருடைய கைரேகை இருப்பதைப்போல இன்னொருவருடைய கைரேகை இருப்பதில்லை. அதைப்போல, புலிகளுடைய பாத அமைப்பைப் பார்த்தால், ஒரு புலியினுடைய பாத அமைப்பைப்போல இன்னொரு புலியினுடைய பாத அமைப்பு இருக்காது. ஆகவே, நம்முடைய வனப் பணியாளர்கள் அல்லது வார்டர்கள், ரேஞ்சர்கள், எந்தெந்த வகையான அமைப்பு இருக்கிறதோ, அவற்றையெல்லாம் சேகரித்து, அதை இன்னொரு வனத் துறை எடுத்ததோடு ஒப்பிட்டுப் பார்த்து, அதிலே ஒரே வகையான பாத அமைப்புகளாக இருந்தால், அது ஒன்று என்று கணக்கிட்டு எடுக்கப்படுகின்ற புள்ளிவிவரங்கள் அவை. ஆகையினால் பத்திரிகையாளர்கள் இங்கு உட்கார்ந்துகொண்டு, புலிகளுடைய எண்ணிக்கை குறைந்துவிட்டது என்று எழுதுவதும், யாரோ போகிறவர்கள் சொல்வதும் கணக்கல்ல. ஆக, பல இன்னல் இடையூறுகளுக்கிடையே எடுக்கப்படுகிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால்கூட, 1988 ஆம் ஆண்டு முண்டந்துறை, களக்காடு, பொள்ளாச்சி, உதகை இந்த 4 இடங்களையும் சேர்த்து 29 புலிகள் இருந்ததாகத் தகவல். ஆனால், படிப்படியாக 31, 38, 56, 63 என்று 1994 ஆம் ஆண்டு 48 புலிகள், 1995 ஆம் ஆண்டு 33, 1996-ல் 41, 1997-ல் 47 என்று புலிகளுடைய எண்ணிக்கை குறையவில்லை, ஏறியிருக்கிறது என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. சில நேரங்களிலே குறைந்துகூடப் போய்விடலாம். நம் ஊரிலே அதற்கு ஒன்றும் பார்டர் கிடையாது. நம் ஊரிலே உள்ள புலி கேரளா காட்டுக்கு ஓடிப் போய்விடும். நம் ஊரில் இருப்பது ஆந்திரா காட்டுக்கு ஓடிப் போய்விடும். மறுபடியும் அங்கிருப்பது இங்கு வரும். இருந்தாலும் statistics எடுத்த வகையிலே புலிகளுடைய எண்ணிக்கை குறையவில்லை என்று தெரிகிறது.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலி நம்முடைய தேசிய விலங்கு மாத்திரமல்ல. புகழ்பெற்ற ஜிம்கார்பெட் அவர்கள் சொல்வதைப் பார்த்தோமானால், "Tiger is the large hearted gentleman with boundless courage" என்று சொல்கிறார்கள். அத்தகைய ஒரு அரிய விலங்கினம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால், காடுகளின் பரப்பு அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கு முக்கியமாகக் காடுகளிலும், காடுகளைச் சுற்றியிருக்கக்கூடிய மக்களிடத்திலும் அதற்குரிய

விழிப்புணர்வுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். மக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே வேட்டையாடுதலை நாம் கண்டிப்பாகத் தவிர்க்க முடியும். எனவே, இந்தச் சூழ்நிலையில் காடுகளைச் சுற்றியிருக்கக்கூடிய மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை அரசு மேற்கொள்ளுமா? அதைப்போல இப்பொழுது முண்டந்துறை பகுதியிலே மட்டும்தான் 'ப்ராஜக்ட் டைகர்' திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயத்திற்கும், அதைப்போல முதுமலைக்கும் அந்தத் திட்டத்தை மத்திய அரசிடத்திலே தெரிவித்து அங்கேயும் நீட்டிப்பதற்குத் தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. காட்டை அடுத்து இருக்கிற ஊரிலே இருக்கின்ற மக்களால் சில நேரங்களில் புலிகளுக்கு, மிருகங்களுக்கு காடுகளுக்கு ஆபத்து நேர்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆகையினால் தான் ஜப்பான் நாட்டு உதவியோடு நமக்குக் கிடைத்திருக்கிற 550 கோடி ரூபாயை, காட்டை அடுத்த ஊரிலே இருக்கிற மக்களுடைய சௌகரியங்களுக்கு நாம் பயன்படுத்துகிறோம். 'டார்க் வில்லேஜ்' என்கிறோம். அந்தக் கிராமத்து மக்களைப் போய் நம்முடைய காட்டு இலாகா அதிகாரிகள் அணுகி, "நீங்கள் காட்டிலே சென்று விறகு ஒடிக்க வேண்டாம். உங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக இதை நீங்கள் செய்கிறீர்கள் அது எங்களுக்குத் தெரிகிறது. சில நேரங்களிலே மான்களை வேட்டையாடுகிறீர்கள்; இறைச்சிக்காகவும், தோலை விற்பதற்காகவும்"—அதேபோல மாண்புமிகு தீரன் அவர்கள் சொன்னதுபோல—"புலியைச் சில நேரங்களிலே கொல்கிறீர்கள் அதனுடைய பல்லுக்கும் நகத்திற்கும்; யானையைக் கொல்கிறீர்கள் தந்தத்திற்கு; நீங்கள் அவற்றையெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்வது எங்களுக்குத் தெரியும். எனவே, நீங்கள் அவற்றை விட்டுவிடுங்கள், உங்களுக்கு வேண்டிய பல்வேறு தொழில்களுக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். உங்கள் ஊரில் எண்ணெய் ஆலை ஒன்று போட வேண்டுமா, போட்டுத் தருகிறோம். தையல் மெஷின் வேண்டுமா, ஏற்பாடு செய்து தருகிறோம், சிறு தொழிலுக்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம். (குறுக்கீடு) சந்தன ஆலைகள் இல்லாமல் மற்ற ஆலைகள் எல்லாம் போட்டுத் தருகிறோம். இவற்றையெல்லாம் உங்களுக்குச் செய்கிறோம்" என்று ஆண்டுக்கு 200 கிராமங்களை அப்படி எடுத்து அந்தக் கிராமங்களுக்குச் சாலை வசதி,



வீட்டு வசதி, குடிதண்ணீர் வசதி, பள்ளிக்கூட வசதி எல்லாவற்றையும் செய்து கொடுத்து, அதை ஒரு Modern village-ஆக மாற்றுகிற காரியத்தை ஆண்டுக்கு 200 கிராமங்களிலே நாம் இப்போது செய்துகொண்டிருக்கிறோம். அதைக்கூட என்னிடத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "எங்கள் தொகுதியிலே நடப்பது எங்களுக்குத் தெரியவில்லையே" என்று சொன்னவுடன், உடனடியாக எந்தக் கிராமத்தை எடுக்கிறீர்களோ அதை அந்த சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று உத்தரவிடப்பட்டிருப்பதை அன்றைக்கு நான் சுட்டிக்காட்டினேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூடக் கேட்டார். "வெள்ளைப் புலிகளைப் பாதுகாக்க வேண்டாமா" என்று. சில இனங்கள் சில சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடிதான் வாழும். நான் கேள்விப்பட்ட வரையிலே Black Tigers, கறுப்புப் புலிகள்—நம்முடைய மேகமலைக் காட்டிலே இருப்பதாகச் சென்ற வாரம் மதுரைக்குப் போயிருந்தபோது அந்த அதிகாரிகள் தெரிவித்தார்கள். ஆகவே, இப்படிப்பட்ட உயிரினங்களை 'Zoo'—விலே வளர்க்கலாமே தவிர, காடுகளிலே அவை வாழ்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மிருகங்களைப் பாதுகாப்பதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களக்காடு பகுதிக்குச் சென்றிருந்தபோது, புலிகளைப் பார்ப்பதற்காக 2 நாட்கள் முயற்சி செய்தோம். அங்கே இருக்கக்கூடிய வன இலாகா அதிகாரிகளும்கூட வந்திருந்தார்கள். ஆனால் புலிகளையே ' அங்கே பார்க்க முடியாத ஒரு நிலை; இதற்குக் காரணம், பொதுவாக வேட்டையாடுபவர்கள் அதிகமாக அந்தப் பகுதியில் வேட்டையாடுவதாகத் தகவல்கள் கூறப்படுகின்றன. குறிப்பாக, இப்போது சிறுத்தைப் புலிகளையெல்லாம் சுருக்கு வைத்துப் பிடிப்பதாகப் பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. இவற்றையெல்லாம் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? இதுபோல வேட்டையாடுபவர்கள் சமீபத்திலே எத்தனை பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மே 11

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புலிகளை, யானைகளை, மான்களை வேட்டையாடுவது என்பது மனிதனுடைய சுபாவமாக அமைந்துபோய் விட்டது. ஆனால், பலபேருக்கு வேட்டையாடுவது என்பது ஒரு பெரிய, தனி taste. அதிலே அவர் சொன்னார், "சிறுத்தைப் புலிகளைக் கண்ணி வைத்துப் பிடிக்கிறார்கள்" என்று. புலி வேறு, சிறுத்தை வேறு. நம்முடைய இந்தியாவில் சிறுத்தை கிடையாது, நீங்கள் Discovery Channel பார்த்தீர்களானால், அந்தப் புலி என்பது, புள்ளி புள்ளியாக இருக்கும் உடல் முழுவதும். சிறுத்தை என்பது (குறுக்கீடுகள்) no, no, that is wrong. சிறுத்தை என்பது—சிறுத்தை என்பது, பட்டை பட்டையாகக் கோடு இருக்கும். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, Point of order.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களெல்லாம்.....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** புலி, வரிப்புலிதானே சொல்கிறீர்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) வரிப்புலியைப் பற்றித் தானே சொல்கிறீர்கள், இதோ சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, நீங்கள்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கேள்வியைத் தெரியாமலேயே கேட்கிறார்களா அங்கத்தினர்கள்? இல்லை, நான் சொல்வதையெல்லாம் கண்டிப்பாகக் கவனிக்கிறார்களா என்பதற்காகத்தான் நான் மாற்றிச் சொன்னேன். (சிரிப்பு) மாற்றிச் சொன்னேன். உள்ளபடியே, பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தக் காட்டு இலாகா மீது அக்கறை இருக்கிறது என்பதற்கு என்னுடைய பாராட்டு. இதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். (பலத்த சிரிப்பு).



2000 மே 11]

**திரு. பா. வேல்துரை:** தலைவர் அவர்களே,...

**திரு. ரா. ஈஸ்வரன்:** Speaker sir, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்திய விடையைக் கொடுப்பார்கள் (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆகவே, புலிகளிலே வரிப்புலி என்பது பட்டை பட்டையாக இருப்பதால்தான் அதற்கு வரிப்புலி என்று பெயர். ஆக, புலி, வேங்கைப்புலி, வரிப்புலிதான். அதனாலே, புலிகளை வேட்டையாடுகையில், கண்ணி வைத்துப் பிடிப்பது மற்றும் துப்பாக்கியால் சுடுவது என்று பல்வேறு முறைகளை வேட்டையாடுபவர்கள் கையாளுகிறார்கள். ஆனால், இதுவரையிலே அரசுக்கு—எங்களுக்குக்—கிடைத்திருக்கிற தகவல், யானையை வேட்டையாடுகிற அளவிற்குப் புலிகளை அவர்கள் வேட்டையாடுவது இல்லை என்று புள்ளிவிவரங்கள் கிடைத்திருக்கின்றன. சில நேரங்களில் இயற்கையாகவே இறந்து விடுகின்றதே தவிர, வேட்டையாடப்பட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 587, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

587—

**வனவிலங்கு சரணாலயம்**

***34531—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி நகராட்சிக்கு அருகிலுள்ள முல்லை நகர் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான சுமார் ஆயிரம் ஏக்கரில் வன விலங்கு சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 மே 11

(அ) மற்றும் (ஆ) தேனி நகராட்சிக்கு அருகிலுள்ள முல்லை நகர் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில், வன விலங்குகள் ஏதுமில்லாததால், இந்த இடத்தில் வனவிலங்கு சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா இருக்கையில் இல்லை. வினா எண் 588, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**588—**

**பணிமனை**

***17856—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறையில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறையிலே பணிமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். குஜிலியம்பாறை திண்டுக்கல்லிலிருந்து 45 கிலோமீட்டர் தூரத்திலும், வேடசந்தூரிலிருந்து 35 கிலோமீட்டர் தூரத்திலும் இருக்கிறது. அரசுப் பேருந்து பழுதாகிவிட்டால் பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பணிமனை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறையிலேயும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும் இரண்டேயிரண்டு நகரப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. இப்படி இரண்டேயிரண்டு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்ற பகுதியில் ஒரு



2000 மே 11]

பணிமனை உருவாக்க இயலாது. திண்டுக்கல்லில் இருந்து 41.8 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள குஜிலியம்பாறைக்கு 46 தனி நடைகளின் மூலமாக, புறநகர்ப் பேருந்துகளின் மூலமாகப் பேருந்து வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆகவே, தனியாகப் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 589, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**589—**

**பேருந்து வசதி**

***30817—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், நெய்வேலி நகரியத்திற்கும், பள்ளி, கல்லூரி நேரங்களில் மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு 5 நகரப் பேருந்துகள் நாளொன்றுக்கு 76 நடைகளுடனும், விருத்தாசலம்—நெய்வேலி வழித்தடத்தில் 5 நகரப் பேருந்துகள் 44 நடைகளுடனும் விழுப்புரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இப்பேருந்து இயக்கத்தினால் பயன்பெறுகின்றனர். இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே, மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்காகத் தனியே பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

முற்பகல் 10-00

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், நெய்வேலியிலிருந்து விருத்தாசலத்திற்கும்

[2000 மே 11

இப்போது அரசின் மூலமாக இயக்கப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கையைத் தெரிவித்தார்கள். அப்படி இயக்கப்படுவது உண்மைதான். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்க விரும்புவது, காலை நேரங்களிலே உளுந்தூர்பேட்டையிலிருந்து விருத்தாசலத்திற்குக் கல்லூரி மாணவர்கள், மாணவிகள் வருகிறார்கள். அதேபோன்று, நெய்வேலியிலிருந்து கல்லூரி மாணவர்கள், மாணவிகள் விருத்தாசலத்திற்கு வருகிறார்கள். வேப்பூரிலிருந்தும், மற்ற பகுதிகளிலிருந்தும், விருத்தாசலம் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் கல்லூரிக்கு வருகிறார்கள். அதேபோன்று, விருத்தாசலத்திலிருந்து நெய்வேலியிலே சிறந்த பள்ளிகள் இருக்கின்ற காரணத்தினால், மாணவ, மாணவிகள் அங்கும் செல்கிறார்கள். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கல்லூரி தொடங்கப்படுகின்ற நேரத்திற்கு முன்பாகச் செல்கின்ற, அந்தப் பேருந்துகளைத் தனியாக மகளிருக்காகவும், கல்லூரி மாணவ, மாணவிகளுக்காகவும், பள்ளி மாணவர்களுக்காகவும் ஒதுக்கினால் சிறப்பாக இருக்கும்; மாணவ, மாணவிகளுக்கு இடர்ப்பாடுகள் இல்லாமல் இருக்கும். அந்த வகையிலே அரசுப் பேருந்துகளை, தனியான உத்தரவு மூலம் இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று படிப்பதற்காகத் தான் இலவச பஸ் பாஸை கொடுத்தார்கள். விருத்தாசலத்திலே உள்ள வசதியுள்ள மாணவர்கள், மற்றொரு வசதியான நகரத்திற்குச் சென்று, நெய்வேலியிலே இருக்கின்ற வசதியான பள்ளிக்கூடத்திலே படிப்பதற்கு இந்தப் பேருந்துகளிலே இலவச பஸ் பாஸ் வழங்கப்படவில்லை. ஆகையால், அவர்களுக்காகத் தனிப் பேருந்துகள் கோருவது சரியாக இருக்காது. விருத்தாசலத்திலே இருக்கிற பள்ளிகள் எல்லாம் நலிவடைந்து விடக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உருவாக்கக் கூடாது. ஆகவே, பெரும்பாலும் அந்தப் பகுதிகளிலே இயக்கப்படுகிற பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்குப் போதுமான பேருந்து வசதிகள் இருக்கின்ற காரணத்தினால் தனியாகப் பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *590*, திரு. கு. மனோகரன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



2000 மே 11]

**590—**

**மேம்பாலம்**

***13299—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை அருகே N.H. 7 தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் இரயில் பாதையில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். இதற்கான செயற்குறிப்பு மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, சேலம் தேசிய நெடுஞ்சாலையிலே அதியமான்கோட்டை அருகேயுள்ள அந்த இரயில்வே மேம்பாலம் மிக மிக அவசியமானது என்பதைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்கு நன்றி. அதற்குண்டான அனுமதி கிடைத்துவிட்டதா? அந்தத் திட்டம் எத்தனை கோடியில் உருவாகவிருக்கிறது? விரைவில் டெண்டர் விடப்படுமா? வேலைகளை இந்த ஆண்டு தொடங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதியமான்கோட்டை அருகே இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு *10* கோடி ரூபாயில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கிடையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளை இணைக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய நெடுஞ்சாலைத் திட்டத்தை அறிவித்தார்கள். அதிலே வடக்கையும், தெற்கையும் இணைக்கக்கூடிய அந்தச் சாலைத் திட்டத்தில் இந்தப் பகுதியும் வருகின்றது. எனவே இது குறித்து மறுபடியும் ஆய்வு

செய்வதற்கு ஆணையிடப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலை 7, தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமம் (National Highways Authority of India) என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின் மூலம் இப்போது L & T RAMBOL என்ற நிறுவனத்தினிடத்திலே ஆய்வு செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறும் என்பதை மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றுகூட நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 591, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**591—**

**சாலையைச் செப்பனிடுதல்**

***28722—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவோணம் ஒன்றியம், ஒரத்தநாடு உட்கோட்டம், ஊரணிபுரம்-அண்ணாபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் ஏற்படும் நொடிகளை அவ்வப்பொழுது சீர்செய்து, போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரணிபுரத்திலிருந்து தென்கரை வரை, அண்ணாபுரம் வரை செல்கிற சாலை 12 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அது மிகவும் பழுதாகி இருக்கிறது. அவ்வப்போது செப்பனிடப்படுகிறதெனினும், மழைக்காலம் வருகின்றபோது அவை மறுபடியும் பழுதாகிவிடுகின்றன. அதேபோல, ஒரத்தநாடு உபகோட்டம் என்பது 380 கிலோ மீட்டர் கொண்டிருக்கிற பெரிய உபகோட்டமாக இருக்கிறது. ஒவ்வொரு



உபகோட்டத்திற்கும் ஒதுக்குகின்ற தொகையைவிட, ஒரத்தநாட்டிற்குப் பொதுவாகக் கூடுதலாக ஒதுக்கப்படுவதில்லை. அங்கே ஆற்றோரச் சாலை இருக்கிறது. ஆற்றில் தண்ணீர் போகிறபோது ஆற்றின் ஓரம் அரிக்கப்பட்டு அதுவும் குறுகலாகிறது. மழைக் காலங்களில் ஆற்று ஓரங்களிலே மழை பெய்கிற காலத்திலே கரையும் குறுகலாகிறது. குறுகலாகிறபோது இந்த நெடுஞ்சாலையும் குறுகலாகி, பஸ் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாகவும், ஆபத்தாகவும் இருக்கிறது. இந்தச் சாலையை மட்டும் அல்ல; வெட்டிக்காட்டிலிருந்து கோயிலூர் வரை செல்கின்ற 15 கிலோ மீட்டர் சாலையும் ஆற்றோரமாக ஜி.ஏ. கேனாலிலே செல்கிற சாலை என்பதனாலே இவற்றைச் செப்பனிட்டுத் தருவதை அரசு மிக முக்கியமானதாகக் கருத வேண்டும். ஆகையினாலே, இதற்கு ஒதுக்கீடு செய்து அந்தச் சாலைகளைச் செப்பனிட்டு, பெரிதாக்கித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல இந்தச் சாலையின் நீளம் 12 கிலோமீட்டர் அல்ல. 13.2 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கோ அல்லது புருவங்களைச் சரிப்படுத்துவதற்கோகூட பக்கத்திலே மண் எடுக்க முடியவில்லை. ஆகவே, புருவங்களைச் சரிபடுத்துவதற்குக்கூட வெளியேயிருந்து மண் கொண்டுவந்து, அந்தச் சாலையைச் சரிப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அகலப்படுத்துவதிலேயும் சிக்கல் இருக்கிறது. என்றாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே அறிவித்து, இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்களே, அந்தத் திட்டத்தில் இந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு 11.90 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது ஒப்புதலுக்காக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் ஒப்புதல் கிடைக்கும். இந்த 11.90 இலட்சம் ரூபாயில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 592, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2000 மே 11

592—

### பணி நிரந்தரம்

***19450—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளில் பணிபுரியும் சுமைதூக்கும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய மாநில அரசு மத்திய அரசுடன் ஆலோசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறையின்கீழ் இருக்கிற சேமிப்புக் கிடங்குகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் 10 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் நிரந்தரம் செய்யலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன்படியே, இந்திய உணவுக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளில் பணியாற்றக்கூடிய சுமைதூக்கும் தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்து, அதனை நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்ற சுமைதூக்கும் தொழிலாளர்களை நிரநதரப்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டது உண்மை. காரணம், அவர்கள் நிறுவனத்திலே பணிபுரிகிறார்கள். தரம்



2000 மே 11]

பிரிக்கிறார்கள், அதிலே எடை போடுகிறார்கள். பிறகு லாரியிலே ஏற்றுகிறார்கள். அப்படி சொந்தமாகவே அங்கு இருக்கிறார்கள். ஆனால், சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தைப் பொறுத்தவரை நுகர்பொருள் வாணிபக் கழகம், அதேபோல் பல்வேறு தனியார் நிறுவனங்கள், பாடநூல் நிறுவனங்கள், TASMAC போன்ற அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சரக்கோடு அந்த இடத்தை அவர்களுக்கு வாடகைக்கு விடுவது மட்டுமே எங்களுடைய பணி. அந்தச் சரக்கை ஏற்றி, இறக்க அந்த நிறுவனமே ஆள் வைத்திருக்கிற காரணத்தால், நேரடியாகச் சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே எந்த மூட்டை தூக்கும் தொழிலாளர்களும் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் நிரந்தரப்படுத்த வாய்ப்பே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 593, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

593—

### கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி

***26247—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு தஞ்சையிலிருந்து பிரித்து, திருச்சியில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஆய்வு செய்து, கரூரில் திறக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு

[2000 மே 11

பதிவு மூப்பு முன்னுரிமை அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் பணியிடங்களை நிரப்பி வருகிற காரணத்தால், இப்போது கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி பெற்றவர்களின் வீடு தேடி வேலை கிடைக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே கரூர் மாவட்டத்தில் ஒரு பயிற்சிப்பள்ளியை ஏற்படுத்தித் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 5 இடங்களிலே புதிய கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இந்த ஆண்டு எங்கெங்கு, எந்தெந்த மாவட்டங்களில் இல்லையென்று அறிந்து, அந்த மாவட்டங்களில் வேண்டுகோள் வைப்பார்களேயானால் திறக்கலாம் என்று நமது மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறோம். அதற்கேற்ப நிச்சயமாகத் திறக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், திருச்சி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி பள்ளிகளில் கரூர் மாவட்டத்திற்கு எவ்வளவு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரக் கணக்கு என்னிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 594, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்

**594—**

### ஆவின் பால் நிலையம்

***32612—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, முடிச்சூர் கிராமத்தில் ஆவின் பால் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மே 11]

அவ்விடத்தில் ஏற்கெனவே ஒரு பால் பூத் இயங்கி வருவதால், மற்றொன்று அவசியமில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியிலே எத்தனை பாக்கெட் பால் நிலையங்கள் இயங்குகின்றன? எத்தனை தானியங்கி பால் நிலையங்கள் இயங்குகின்றன? புதியதாகக் கட்டப்பட்ட தானியங்கி பால் நிலையங்கள் எத்தனை திறக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை திறக்கப்படாமல் இருக்கின்றன? அதற்குக் காரணம் என்ன? எப்போது திறக்கப்படும் என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் தற்போது இயங்கிவரும் தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் 22. எஃப் ஆர்.பி. (F.R.P) தொட்டிகள் 15. கட்டி திறக்கப்படாத தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் 3. விற்பனையாளர்கள் இந்த மூன்று நிலையங்களையும் இயக்க முன்வரவில்லை. அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளின் சங்கம் இவற்றை இயக்க முன்வந்தால் அவர்களுக்கு அவை வழங்கப்படும். இல்லையெனில் இணையமே விரைவில் இயக்க ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நம்முடைய சென்னை மாநகரத்திலே தனியார் பால் நிறுவனங்கள், ஆவின் பாலுக்கு மிகவும் பலத்த போட்டியாக உருவாகி வருவதைப் பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன. "Zero Bacteria" என்ற தலைப்பிலே அவர்கள் பல்வேறு விளம்பரங்களைக் கொடுத்து மிகக் கடுமையான ஒரு போட்டியை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தப் போட்டியைச் சமாளிப்பதற்காகவும், அதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காகவும், 'ஆவின்' என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் 6 மாதம் அல்லது ஒரு வருடமாக, 7,30,000 லிட்டர் என்ற அளவில் பால் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். எந்த வகையிலும் தனியார் பால் பண்ணைகளால் நம்முடைய 'ஆவின்' நிர்வாகத்தின் பால் விற்பனை குறையவில்லை என்பதையும், சிறந்த முறையில் பாக்டீரியா இல்லாத வகையில் 'ஆவின்'

பால் விநியோகம் செய்யப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *595*, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**595—**

**தொழிற் பயிற்சிப் பள்ளி**

***29552**—*அ*—**திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் ஒன்றியப் பகுதிகளில் தனியார் மூலமோ அல்லது அரசு சார்பிலோ தொழிற் பயிற்சிப் பள்ளி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க எப்போது அனுமதி வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடையநல்லூரில் 'எவரெஸ்ட் ஐ.டி.ஐ.' என்ற பெயரில் தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது.

(ஆ) எழவில்லை.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் ஒன்றியப் பகுதியில் மேலும் சில தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளிகள், புதிதாகத் தொடங்க அனுமதி கேட்டால் அனுமதி அளிக்கப்படுமா அல்லது தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் சேர அதிக மாணவர்கள் வருகின்ற காரணத்தால், அரசின் சார்பாக அங்கே இன்னொரு தொழிற் பயிற்சிப் பள்ளியை அமைக்க அரசே முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே மட்டும் அரசு ஐ.டி.ஐ. நான்கு இருக்கின்றன. தனியார் ஐ.டி.ஐ. 24 இருக்கின்றன. ஆனால் உறுப்பினர்





தொகுதியான கடையநல்லூரிலே ஏற்கெனவே எவரெஸ்ட் ஐ.டி.ஐ. இருப்பதால், மேலும் ஐ.டி.ஐ. தொடங்க அனுமதி கேட்டால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *596*, திரு. க. மணிவர்மா. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**596—**

**சார்பதிவாளர் அலுவலகம்**

***25311—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டில் பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தச்சம்பட்டு பகுதியிலிருந்து பல்வேறு கிராம மக்கள் திருவண்ணாமலையிலும், அருகில் உள்ள நாரையூர், அண்டம்பள்ளம், ஆனநந்தல், மதுராம்பட்டு, கரிப்பூர் போன்ற கிராமத்து மக்கள் வேட்டவலத்திலும், கண்டியாங்குப்பம், பழையனூர், தலையாம்பள்ளம், பரையம்பட்டு, நரியாம்பட்டு போன்ற கிராம மக்கள் தண்டராம்பட்டிலும் 30 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் பத்திரப் பதிவு செய்கின்ற நிலைமை உள்ளது. திருவண்ணாமலையில் இருக்கிற அரசு அதிகாரிகள் இதற்காகப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய இன்னல்களைப் போக்குகிற வகையில், 30 கிலோ மீட்டர் தூரம் சென்றால்தான் பத்திரப் பதிவு செய்ய முடியும் என்ற நிலைமையை மாற்றிட, தச்சம்பட்டில் இந்த ஆண்டே ஒரு சார்பதிவாளர் அலுவலகம் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மறுபரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 மே 11

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, தச்சம்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில்—திருவண்ணாமலை-1 சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட 11 கிராமங்களையும், திருவண்ணாமலை-2 சார்பதிவாளர் அலுவலகத்தின் 12 கிராமங்களையும், வேட்டவலத்தின் 2 கிராமங்களையும், தண்டராம்பட்டிலிருக்கும் 3 கிராமங்களையும் இணைத்தால், மொத்த ஆவணங்கள் ஒரு ஆண்டில் பதிவு செய்யப்படுவது 800 தான். அரசினுடைய கொள்கை, குறைந்தபட்சம் 2000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது. அதனால்தான் தற்சமயம் தச்சம்பட்டைப் பொறுத்த அளவில், சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கவேண்டுமானால் அங்கே ஆண்டுக்கு 2000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். 2000 ஆவணங்களுக்கு மேல் பதிவாகின்ற, கோரிக்கை இருக்கிற ஊர்கள் நிறைய இருக்கின்றன தமிழகத்திலே. அவற்றை வரிசை வாரியாக எடுப்பதற்கு அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 597, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

597—

**கால்நடை மருத்துவமனை**

***25624—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மே 11]

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டி கிராமத்தைச் சுற்றி முப்பதுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகளின் நலனைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டி கிராமத்தில் தற்போது கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு, அதன் மூலம் கால்நடைகளுக்குச் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அக்கால்நடைக் கிளை நிலையத்திற்கு சேனக்கவுண்டன்புதூர் பார்வைக் கிளை நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் ஓமலூர் ஒன்றியம், கருப்பூரிலே ஒரு கால்நடை மருந்தகமும், சிக்கம்பட்டி, காமலாபுரம், முத்தநாயக்கன்பட்டி ஆகிய மூன்று இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே தண்டமங்கலம், சரக்கபுள்ளையூர், பி. நல்லகவுண்டனூர் ஆகிய 3 இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. எதிர்வரும் காலங்களில் வெள்ளாளப்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டும் வெள்ளாளப்பட்டியில் கால்நடை மருந்தகம் தொடங்க பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 598, திரு. செங்கை சிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

598—

**நுழைவு வாயில்**

***26444—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 11

(அ) மாமல்லபுரத்தில் கலைப் படைப்புகளுடன்கூடிய புதிய நுழைவு வாயில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரத்தில் கலைப் படைப்புகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில் அமைக்கும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலாவது இந்தப் பணி மேற்கொள்ளப்படுமா? நம்முடைய ஆட்சிக் காலத்தில் மாமல்லபுரத்தில் செய்யப்பட்டு இருக்கிற பல்வேறு வசதிகள் என்னென்ன? குறிப்பாக அங்கே நடத்தப்படுகிற தமிழ்நாடு விடுதி மிகவும் தரக் குறைவாக உள்ளது. அயல்நாட்டுப் பயணிகள், சுற்றுலாப் பயணிகள் தங்க நல்ல வசதியோடுகூடியதாக அந்த விடுதியைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் இதுவரை நுழைவு வாயில் இல்லை என்ற குறையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். நுழைவு வாயிலைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு ஆலோசித்து முடிவு செய்யப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த 4 ஆண்டுகளில் மாமல்லபுரத்தில் சுமார் 44 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவடைந்திருக்கின்றன. தமிழ்நாடு விடுதியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே ஒப்புதல் வாங்கி 50 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 599, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.



2000 மே 11]

599—

**நவீன விளையாட்டுச் சாதனங்கள்**

***33124—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் வெளிநாடுகளில் உள்ளதுபோல் பெரியவர்களும் உல்லாசமாக விளையாட இராட்சச இராட்டினம் போன்ற நவீன கால விளையாட்டுச் சாதனங்களை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) அதனால் பல்வேறு நாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் பயன்படுத்தி நல்ல வருமானத்தை அளிக்க வாய்ப்பு உள்ளதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டில் உள்ள பெரியவர்கள் உல்லாசமாக விளையாட இராட்சச ராட்டினம் போன்ற நவீன கால விளையாட்டுச் சாதனங்களை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த, கலைநுட்பம் கொண்ட, மிக அற்புதமான கோயில்களும், எழில் கொஞ்சும் மலைவாசஸ்தலங்களும், ஏழைகளின் ஊட்டி என்று சொல்லக்கூடிய ஏற்காடும், உலகிலேயே இரண்டாவது மிக நீளமான கடற்கரையைக் கொண்ட சென்னை மாநகரும் உள்ள இவ்வளவு சிறப்பு வாய்ந்த தமிழகத்திலே அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கக்கூடிய வகையிலே மிகச் சிறப்பான முறையிலே அதைச் செயல்படுத்த வேண்டும். இந்த ஆண்டு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளார்கள்? அவர்கள் மூலமாகக் கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு வருகை தந்திருக்கின்ற சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை—வெளிநாட்டுப் பயணிகளுடைய

எண்ணிக்கையைப் பொறுத்தவரையில்--சுமார் 7¼ இலட்சம். அதேபோன்று, உள்நாட்டுப் பயணிகளைப் பொறுத்தவரையில், சுமார் 2 கோடிக்கு மேல் வருகை தந்திருக்கிறார்கள். எவ்வளவு வருமானம் வெளிநாட்டுப் பயணிகள் என்ற முறையில் கிடைத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 600, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சா.

**600—**

**தொழிற்கூடங்கள்**

***28195—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்களைக் கதர்த் தொழில் வாரியத்தின் மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்கள் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதி என்பது எவ்வித தொழில் வசதியும் இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே ஒகேனக்கல் என்று சொல்லக்கூடிய ஒரு சுற்றுலா மையம், பொது மக்கள் தினந்தோறும் அதிக அளவிலே சென்று வரக்கூடிய நீர்வீழ்ச்சி கொண்ட பகுதியாக அமைந்திருக்கிறது. அங்கே சுற்றுலா மையங்களில் இருக்கின்ற கடைகளிலே குழந்தைகள் விளையாடக்கூடிய பொம்மைகள் மற்றும் அழகுப் பொருட்கள் எல்லாம்





விற்பனையாகக்கூடிய ஒரு மையமாக இருக்கிற காரணத்தால், அங்குத் தொழில் வசதியைப் பெருக்குகின்ற நோக்கத்தோடும், சுற்றுலா மையம் என்ற நோக்கத்தோடும் அந்தப் பகுதியிலே காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கக்கூடிய பொம்மைத் தொழிற்சாலையை நிறுவுவதால் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும், கடைகளை வைத்துப் பிழைப்பு நடத்தக்கூடியவர்களுக்கு வாய்ப்பும் ஏற்படும் என்ற காரணத்தாலே அங்கே இப்படிப்பட்ட தொழிற்சாலை நடப்பு ஆண்டிலே கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைச் சிறப்பு மாவட்டமாக, மும்பை கதர் ஆணையக் குழுமமும், தமிழ்நாடு கதர் வாரியமும் இணைந்து, இப்போது தேர்வு செய்து இருக்கின்றன விளிம்புக் கடன் தொகையை வழங்குவதற்கு. அந்தக் கடனுதவித் திட்டத்தைத் தொழில் முனைவோர்கள் பயன்படுத்திக்கொண்டால், அந்தப் பொம்மைக் காகிதக்கூடங்கள் தயாரிப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்**

**பதினைந்தாம் பட்டியல்**

**1—**

**உருது ஆசிரியர் பணியிடங்கள்**

வினா எண் **12929—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட உருது ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) (1) 1997-98 முதல் 1999-2000 வரையில் ஏற்பட்ட உருது வழிப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.*

*(2) 1997-98-ல் ஏற்பட்ட இரு உருது மொழி ஆசிரியர் காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன.*

*1998-99, 1999-2000-ல் ஏற்பட்ட 7 உருது மொழியாசிரியர் காலிப் பணியிடங்களில் ஒரு பணியிடம் மட்டும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட்டது. உருது மொழியாசிரியர் மற்றும் உருது பட்டதாரி ஆசிரியர் குறித்து ஆண்டுதோறும் சரியான காலிப் பணியிட மதிப்பீடு ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் உருது மொழியாசிரியர் பணிக்குத் தகுதிவாய்ந்த நபர்கள் போதிய அளவு இல்லாமையால் அனைத்துப் பணியிடங்களையும் நிரப்ப இயலவில்லை.*

2—

**இளநிலை உதவியாளர் பணியிடங்கள்**

வினா எண் **31717—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்தில் காலியாக உள்ள கண்காணிப்பாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்தில் காலியாக இருந்த கண்காணிப்பாளர் பணியிடம் 11-8-1999-லும், இளநிலை உதவியாளர் பணியிடம் 14-2-2000-லும் நிரப்பப்பட்டுவிட்டன.*



3—

**ஜெனரேட்டர் நிறுவுதல்**

வினா எண் **23970—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் 15 எச்.பி. ஜெனரேட்டர் நிறுவப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக நிறுவ அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமையிட மருத்துவமனையில் 15 கே.வி.ஏ. ஜெனரேட்டர் நிறுவுதற்கு அறை கட்டித்தர உதவி செயற் பொறியாளருடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான அறை கட்டித்தரப்பட்டவுடன் ஜெனரேட்டரைப் பொருத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.*

4—

**மருத்துவ உதவிகள்**

வினா எண் **33282—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் பீடி பிடிப்பதினால் உண்டாகும் பீடி ரோக நோயினால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?*

*(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எத்தகைய மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பீடி புகைப்பதினால் வரும் உடல்நலக் கேடுகளில் 'பீடி ரோக நோய்' என்று பிரத்தியேகமாக ஏதுமில்லை. பொதுவாக புகை பிடிப்பதால் கேன்சர் நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு என்கிற அளவில் புகை பிடித்தலைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது. கேன்சர் நோயினால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

5—

**விட்டுமனை இடம்**

வினா எண் **13566—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பல்லவராயன் பாளையம் மற்றும் கஸ்தூரிபாளையம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள மக்களிடமிருந்து வீட்டுமனையிடம் கேட்டு விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பல்லவராயன்பாளையம் மற்றும் கஸ்தூரிபாளையம் ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிட மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பங்கள் வரப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டன. பிற இனத்தைச் சேர்ந்த மக்கள் எவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களிடமிருந்து வீட்டுமனை வேண்டி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.



6—

**விட்டுமனைப் பட்டா**

வினா எண் **20119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பம்பாளையம், புதூர் பட்டினாம்பட்டி, காந்தி நகர் ஆகிய பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பம்பாளையம், புதூர் பட்டினாம்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரியதன்பேரில் பட்டா வழங்குவது தொடர்பாக நிலமாறுதல் கருத்துரு மாவட்ட வருவாய் அலுவலரின் நடவடிக்கையில் உள்ளது. மேலும் காந்தி நகர் பகுதியில் உள்ள மக்களுக்கு கிராம நத்தத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க சங்ககிரி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

**பின்தங்கிய வகுப்பினருக்குப் பட்டா**

வினா எண் **24062—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒடத்துறை கிராமம், பாலப்பாளையத்திலும், அம்மாபேட்டை ஒன்றியம், ஒட்டப்பாளையத்திலும் குடியிருந்து வரும் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு உடனே பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒடத்துறை கிராமம், பாலப்பாளையம் புல எண். ரீ.ச.எண் 445, சாலையில் 32 மிகவும் பிற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலம் சாலை புறம்போக்கு ஆகும். இப்புலம் சாலையை விரிவுபடுத்தத்

தேவைப்படுவதால் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. அம்மாபேட்டை ஒன்றியம், ஒட்டப்பாளையம் கிராமத்தில் சுமார் 47 மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு புல எண் ரீ.ச.92/8 மற்றும் 92/15-இல் 0.36.5 எக்டர் பூமியை நத்தமாக நிலமாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா 10-1-1999-இல் வழங்கப்பட்டுள்ளது.

**8—**

### மின்விளக்கு வசதி

வினா எண் **5504—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியம், வேலம்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு மின்விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் வட்டம், பொங்கலூர் ஒன்றியம், வேலம்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பிற்குத் தற்சமயம் மின்விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**9—**

### மருத்துவ அலுவலர்கள்

வினா எண் **16674—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு மகப்பேறு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் பணியாற்ற போதிய மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?





(ஆ) ஆம் எனில், அதனைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 39 மகப்பேறு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. இம்மகப்பேறு மருத்துவமனைகளை இயக்க 39 மருத்துவ அலுவலர்கள் உள்ளனர். சென்னை மாநகராட்சியின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மேற்படி 39 மகப்பேறு மருத்துவமனைகளில் 8 மகப்பேறு மருத்துவமனைகளில் மட்டும் அறுவை சிகிச்சை அரங்குகள் மேம்படுத்தப்பட்டு 24 மணி நேரமும் இயங்குகின்றன. இந்த மேம்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளில் சிக்கலான பிரசவங்கள் பார்க்கப்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைகளை 24 மணி நேரமும் இயக்க 51 நலவாழ்வு மையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

**10—**

### கட்டட வசதி

வினா எண் **22860—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், பிரானூர் ஊராட்சி மன்றத்திற்கு கட்டட வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியம், பிரானூர் ஊராட்சி மன்றக் கட்டடம் 1998-99 ஆம் ஆண்டு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு 24-6-1999 முதல் இயங்கி வருகிறது.

[2000 மே 11

11—

## சுகாதாரப் பணியாளர்களை நியமித்தல்

வினா எண் **23969—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சிக்கு கூடுதலாக ஏழு சுகாதார பணியாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெலவேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சியில் தற்போது 17,496 கி.மீ. நீளமுள்ள சாலைகளும், 9,021 கி.மீ. நீளமுள்ள வடிகால்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் துப்புரவுப் பணியாளர் பணியிடங்களுக்கான பொது அளவுகோலின்படி இப்பேரூராட்சிக்கு கூடுதலாக 6 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் அரசாணை (நிலை) எண் 199, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12-8-1997-ல் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி தோற்றுவிக்கப்பட்டு, பேரூராட்சிகள் இயக்ககத்தின் 4-3-1999 தேதிய செயல்முறை ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண் 199, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12-8-1997 மற்றும் அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள 21-5-1998-இன்படி இப்பேரூராட்சியில் ஏற்கெனவே பணிபுரிந்து வரும் தினக்கூலிப் பணியாளர்களை தொகுப்பூதியத்தில் நிரந்தர அடிப்படையில் புதியதாக அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.



2000 மே 11]

12—

## தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் **27590—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி ஊராட்சியிலுள்ள பெரிய நாகலூரிலிருந்து வெள்ளிக்காடு வரையுள்ள இட்டேரியை தார்ச் சாலையாக மாற்றிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சியில் பெரிய நாகலூரிலிருந்து வெள்ளிக்காடு வரை தற்போது வண்டி தடம் சுமார் ஒரு பர்லாங் வரை செல்கிறது. மேலும், அது விவசாய நிலங்களாக உள்ளது. நில ஆர்ஜிதம் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் செய்து முடிந்தபின் தார்ச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

13—

## சாலை செப்பனிடுதல்

வினா எண் **27591—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், சரக்கப்பிள்ளையூர் 4 ரோடிலிருந்து தும்பிப்பாடி வரையுள்ள தார்ச் சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், சரக்கப்பிள்ளையூர் 4 ரோட்டிலிருந்து தும்பிப்பாடி வரையுள்ள தார்ச் சாலை 6.40 கி.மீ. (கி.மீ.0/0-6/4 வரை) நீளம் கொண்ட தார்ச் சாலையாகும். இச் சாலையில் கி.மீ. 4/0-4/8, கி.மீ. 4/9-5/6 மற்றும் கி.மீ. 5/7-6/0 வரை தார்ச் சாலையைப் புதுப்பிக்க ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

14—

## சாலை மாற்றம்

வினா எண் **27651—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கேசியன்காடு முதல் அணைமுனியப்பன் கோவில் வரை செல்லும் வண்டிப் பாதையை தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கேசியன்காடு முதல் அணை முனியப்பன் கோவில் வரை தற்போது வண்டிப் பாதை செல்கிறது. இருபுறமும் பட்டா நிலஙகளாக உள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்ய முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்து முடித்தபின் தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

## குடிநீர்ப் பற்றாக்குறை நீக்குதல்

வினா எண் **27658—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தின்னப்பட்டி கிராமம், கந்தசாமி காட்டுவளவுப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கூ. குட்டப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கந்தசாமி காட்டுவளவு புதிய குடியிருப்பு ஆகும். இக்குடியிருப்புக்கு புளோரைடு நீக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் கலுங்குபள்ளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

16—

## நடுநிலைப் பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் **30174—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், கடம்பை நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் 336 பிள்ளைகள் (ஆண்கள் 158, பெண்கள் 178) பயில்கின்றனர். இப் பள்ளிக்கு மூன்று கட்டடங்கள் தற்போது உள்ளன. (பக்கா கட்டடம்-1, ஓட்டுக் கட்டடம்-2) கூடுதலாக ஒரு கட்டடம் தேவைப்படுவதால் வரும் நிதியாண்டில் ஒரு திட்ட நிதியில் நடவடிக்கை மேற்கொள்ள திருவண்ணாமலை திட்ட அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[2000 மே 11

17—

### குடியிருப்பைச் சீர் செய்தல்

வினா எண் **32250—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, பெண் ஆசிரியை குடியிருப்பைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, பெண் ஆசிரியை குடியிருப்பு 25 ஆண்டுகளுக்கு முன் கல்வி நிதியிலிருந்து கட்டப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. கல்வி நிதி ஏதும் தற்போது அனுமதிக்கப்படாததாலும், குடியிருப்பில் ஆசிரியர்கள் குடியிருக்காததாலும், பராமரிப்பின்றி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளது. ஊராட்சி ஒன்றிய நிதியில் போதிய நிதி வசதி தற்போது இல்லாததால், வரும் நிதியாண்டில் இப் பணியினைச் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18—

### மின்சார மோட்டார்

வினா எண் **32881—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளாளப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் (டால்மியா வாட்டர்) உபயோகப்படுத்தப்படும் மின்சார மோட்டாரில் குதிரை சக்தியை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?



2000 மே 11]

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் வெள்ளாளப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஜூலை 1996 இல் பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினால் 20 குடியிருப்புகளில் உள்ள 13,700 மக்கள் பயனடைகிறார்கள். பம்பு செட்டுகள் மிகவும் பழுதடைந்து நீர் உந்தும் திறன் குறைந்து இருந்ததால் புதியதாக பம்பு செட்டுகள் 4/99-ல் மாற்றப்பட்டது. இதன்படி திட்ட வடிவமைப்பின்படி குடிநீர் நிமிடத்திற்கு 1000 லிட்டர் கிடைக்கிறது. இதனால், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் மக்களுக்குக் கிடைக்கிறது. எனவே, இந்த நிலையில் மேலும் குதிரைத் திறன் சக்தியை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

19—

### சாலைப் பணி முடித்தல்

வினா எண் **34429—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பாளை மண்டலம் 25-ஆவது வார்டு இராஜேந்திரா நகர் 5-ஆவது தெருவில் பணிகள் நடைபெற ஜல்லிகள் தெருவின் மையப்பகுதியில் அடிக்கப்பட்டு உள்ளதால் மக்கள் அவதிப்படுவதையும், பணி நீண்டகாலமாக நடைபெறாமல் உள்ளதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை வார்டு எண் 25 இராஜேந்திரா நகர் 5-வது தெருவில் புதிய தார் தளம் அமைக்க 1998-99-ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்குப் பணி ஆணை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை அமைக்கும் பொருட்டு ஜல்லிக் கற்கள் மட்டும் சேகரித்து வைத்துவிட்டு, உடனடியாக பணியினை முடிக்காததின் காரணமாக சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு மேற்கண்ட பணியினை உடன் முடிக்காததற்கு விளக்கம் கேட்டு அப்பணியினை குறிப்பிட்ட காலத்தில் முடிக்காமைக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி சாலைப் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு பொதுமக்கள் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளது.

20—

## வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் **24411—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறையிலும், நிலம் மற்றும் நீர் மேம்பாட்டு மையம், தஞ்சாவூரிலும், தென்னை ஆராய்ச்சி நிலையம் வேப்பங்குளத்திலும், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் பட்டுக்கோட்டையிலும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர இந்த மண்டலத்தில் திருச்சியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அதிக மூலதனம்,



விளைநிலங்கள், நீர்ப்பாசன வசதிகள், கட்டடங்கள், பரிசோதனைக் கூடங்கள் போன்றவை தேவைப்படுகின்றன. மேலும், சுமார் 2500-க்கு மேற்பட்ட வேளாண்மைப் பட்டதாரிகள் தற்பொழுது வேலை வாய்ப்பிற்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், பட்டுக்கோட்டையில், வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

21—

## நெல் சாகுபடி

வினா எண் **24883—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு காவேரி டெல்டா பகுதியில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிறும், தாளடிப பயிர்களும் எத்தனை இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டன?

(ஆ) மொத்தம் எவ்வளவு மகசூல் கிடைத்தது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1998-ம் ஆண்டு, காவேரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர், போன்றவற்றின் டெல்டா படுகைகளில் சுமார் 4.479 இலட்சம் எக்டேரில், சம்பா நெற்பயிரும், 0.972 இலட்சம் எக்டேரில் தாளடி நெற்பயிரும் ஆக மொத்தம் 5.451 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டன.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் சம்பா பருவத்தின் கீழ் அறுவடை முடிவுற்ற பரிசோதனைகளின் அடிப்படையில் உத்தேச சராசரி மகசூல் (Simple Averages) கணக்கிடப்பட்டுள்ளது. தற்பொழுது கிடைத்துள்ள சராசரி, மகசூலின் அளவான எக்டேருக்கு 2912 கிலோவினை மொத்த சாகுபடி பரப்பளவான 5.451 இலட்சம் எக்டேரில் கணக்கிடும்போது, சுமார் 15.873 இலட்சம் டன் அரிசி மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2000 மே 11

22—

உரங்கள் வழங்குதல்

வினா எண் **31872—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் விவசாயிகளுக்கு வழங்கும் உரங்களை வேளாண்மைத் துறை சிபாரிசுப்படி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பயிர்களுக்குத் தேவையான உரங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் வேளாண்மைத் துறையால் உரங்கள் விநியோகம் செய்யப்படுவதே கிடையாது. எந்தப் பகுதியிலும் உரம் வழங்க பரிந்துரை செய்யப்படுவதே கிடையாது. ஆனால் எந்தெந்தப் பயிருக்கு எவ்வளவு உரம் இட வேண்டும் என்ற விவரம் கிராம அளவில் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ஆகியோராலும் வட்டார அளவில் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்களாலும் பரிந்துரை செய்யப்படுகிறது.

23—

கசிவுநீர்க் குட்டை

வினா எண் **33827—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி, குணராமநல்லூர் ஊராட்சி, மேலமெஞ்ஞானபுரம், கண்டமங்கலம் குளம் அருகே கசிவுநீர்க் குட்டை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?



2000 மே 11]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி, மேலமெஞ்ஞானபுரம், கண்டமங்கலம் குளம் அருகே கசிவுநீர்க் குட்டை அமைக்க போதிய புறம்போக்கு இடம் இல்லை. ஆயினும் கசிவுநீர்க் குட்டைக்குப் பதிலாகப் புதிய ஊரணி அமைக்க வாய்ப்பு உள்ளது.

(ஆ) புதிய ஊரணி அமைப்பதற்கு ஏதுவாக, சில பட்டாதாரர்கள் நிலத்தை அரசுக்குத் தானமாக எழுதிக் கொடுத்தால், பிறகு மேற்கொள்ளப்படலாம்.

24—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா *33854*—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி வேளாண்மைத் தகவல் மையத்திற்குச் சுற்றுச்சுவர்ச் கட்டி, ஈப்புக் கொட்டகை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு பெற்று வேளாண்மைத் துறைக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும், இத்திட்டமும் *30-9-1998* உடன் முடிவடைந்துவிட்டது. எனவே, தென்காசி வேளாண்மைத் தகவல் மையத்திற்குச் சுற்றுச்சுவர் மற்றும் ஈப்புக் கொட்டகை கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மே 11

## உர அடையாள அட்டை வழங்குதல்

**25—**

வினா எண் ***33860*—திரு. கே.ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்படும் உர அடையாள அட்டை வழங்குவதால் உண்டான பயன்கள் என்ன?

(ஆ) உர அடையாள அட்டை வழங்குவதற்கு மேற்கொண்ட செலவினம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தமிழகத்திலுள்ள 80 இலட்சம் விவசாய பண்ணைக் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான உரங்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தனியார் உர விற்பனையாளர்கள் மூலமாகவும் பெறுகின்றனர். இவ்வுரங்களை இறக்குமதி செய்யும் நிலையிலும், போக்குவரத்து இடையூறுகளினாலும் விவசாயிகளுக்குத் தேவையான உரம் குறிப்பிட்ட காலக்கெடுவில் கிடைப்பது என்பது ஒரு சில கால கட்டங்களில் அரிதாகிறது. எனவே, இதுபோன்ற கால கட்டங்களில் உரங்களின் இருப்பு நிலை தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில் உரங்களின் விநியோகத்தை ஒழுங்குபடுத்த வேண்டி அனைத்து விவசாயிகளுக்கும் உர அடையாள அட்டைகள் வழங்குவது என்பது இன்றியமையாததாகின்றது. தற்போது மாவட்டத்திற்கு ஒரு கோட்டம் மட்டும் தெரிவு செய்து நீலகிரி நீங்கலாக 27 மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக 8 இலட்சம் உர அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுர அடையாள அட்டைகளின் பயன்பாட்டை உரங்கள் தட்டுப்பாடு காணப்படும் சமயங்களில் மட்டுமே முழுமையாக அறிய முடியும். சென்ற 3 ஆண்டுகளில் தமிழகத்தில் உரங்களுக்கான தட்டுப்பாடு நிலை ஏதும் ஏற்படவில்லை என்பதினால் உர அடையாள அட்டைகளின் பயன் முழுவதுமாக உணரப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை. எனவே, உரங்களின் இருப்பில் தட்டுப்பாடு நிலை தோன்றும்போது உரங்கள் எவ்வித சிரமமின்றி விவசாயிகளுக்குக் கிடைத்திட இவ்வுர அடையாள அட்டைகள் பெரிதும் பயன்படும்.



2000 மே 11]

(ஆ) முன்னோடித் திட்டமாக வழங்கப்பட்ட 8 இலட்சம் அடையாள அட்டைகளுக்கு அரசு அங்கீகரித்த ரூ.12.00 இலட்சத்தில் ரூ.11.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 72 இலட்சம் விவசாயிகளுக்கும் உர அடையாள அட்டைகள் படிப்படியாக வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**26—**

## பேருந்துகள்

வினா எண் **32708—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் நகரிலிருந்து கொட்டானூர்புதூர், குப்பிநாயக்கனூர் வழியாக தொப்பூருக்கு அதிக அளவில் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் குப்பிநாயக்கனூர், கொட்டானூர் வழியாக பையூரன் கொட்டாய் வரை தடம் எண் 05 பேருந்து மூலம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஓமலூரிலிருந்து தொப்பூருக்கு கொட்டானூர்புதூர் நீங்கலாக குப்பிநாயக்கனூர், குருவரெட்டியூர், ஜோடுகுளி வழியாக தடம் எண் 01 பேருந்து மூலம் 6 நடைகளும், 09 பேருந்து மூலம் 8 நடைகளும், 015 பேருந்து மூலம் 8 நடைகளும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளில் பயணிகள் வருகை முறையே 45.91%, 53.56%, 43.50% ஆக உள்ளன. தடம் எண் 01, 09 மற்றும் 015 பேருந்துகள் செல்லும் பிரதான சாலையிலிருந்து பிரிந்து உள்நோக்கி செல்லும் கிளைச் சாலையில் கொட்டானூர்புதூர் அமைந்துள்ளது. தடம் எண் 05 மூலம் கொட்டானூர் பிரிவு என்னுமிடத்தில் பிரதான சாலையுடன் இணைக்கப்பட்டு உள்ளதால் இப்பகுதி மக்கள் தடம் எண் 01, 09 மற்றும் 015 பேருந்துகள் மூலம் தற்போது தொப்பூருக்கு சிரமமின்றி சென்று வருவதால் கோரிக்கை வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கத் தேவை நிலவவில்லை.

[2000 மே 11

27—

## பேருந்துகள் தரம்

வினா எண் **32709—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு போக்குவரத்துப் பணிமனையில் இருந்து எத்தனை பேருந்துகள் இயக்கப்படுகின்றன?

(ஆ) அவற்றின் தரம் மிகவும் மோசமாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 45 நகரப் பேருந்துகளும் 5 புறநகர் பேருந்துகளும் ஆக மொத்தம் 50 பேருந்துகள் ஓமலூர் பணிமனையிலிருந்து இயக்கப்படுகின்றன. நல்ல முறையில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அவை தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. எதிர்பாராத பழுதுகள் ஏற்பட்டால், பயணிகளுக்குச் சிரமம் ஏற்படாமல் தடத்தில் இயக்குவதற்கு ஏற்றாற்போல் 4 மாற்றுப் பேருந்துகள் ஓமலூர் கிளையில் தயார் நிலையில் உள்ளன.

28—

## கிளை அலுவலகம்

வினா எண் **32713—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் கிளை அலுவலகம் எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில் போக்குவரத்து வாகனங்கள் தேவையான எண்ணிக்கையில் இல்லாத காரணத்தால் புதிய பகுதி அலுவலகம் அமைக்கத் தற்போது இயலாது.



2000 மே 11]

29—

## புதிய பேருந்துகள்

வினா எண் **32714—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூரிலிருந்து சின்ன திருப்பதி வழியாக மரக்கோட்டை செல்வதற்கு புதிய பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடத்தில் ஓமலூரிலிருந்து சின்ன திருப்பதி வரை அதன் வழியாக செல்லும் தடம் எண் 97, 99, 102, 01, 02, 013, 014, 015 மற்றும் எஸ்.1 பேருந்துகள் மூலம் தினசரி 84 நடைகள் பேருந்து வசதி உள்ளது. சின்ன திருப்பதிக்கும் மரக்கோட்டைக்கும் இடையே தடம் எண் 24-ன் மூலம் 6 நடைகள் பேருந்து வசதியுள்ளது. கோரிக்கை தடத்தில் நேரடியாக பேருந்து வசதி இல்லையென்றாலும் மேற்சண்டவாறு பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளதால் புதியதாக ஒரு பேருந்து இயக்கத் தேவை நிலவவில்லை.

30—

## பாலம் கட்டுதல்

வினா எண் **23934—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உபகோட்டம், குற்றாலம் மத்தளம்பாறை சாலையில் கி.மீ.0/4ல் மற்றும் 0/10ல் உள்ள பாலம், குற்றாலம்—செங்கோட்டை சாலையில் கி.மீ. 5/6ல் உள்ள பாலம், அம்பாசமுத்திரம், தென்காசி நெடுஞ்சாலையில் கி.மீ. 31/6 கி.மீ. 31/8ல் உள்ள பாலம், அம்பாசமுத்திரம்—தென்காசி சாலையில் திரவிய நகர் அருகே கி.மீ. 26/0ல் உள்ள பாலம், காசிமேஜர்புரம், குத்துக்கல் வலசை சாலையில் கி.மீ. 0/8ல் உள்ள பாலம் இலஞ்சிவல்லம் பள்ளிவாசல் சாலையில் கி.மீ. 3/2ல் உள்ள பாலம் ஆகியவற்றை புதிதாகக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம்—மத்தளம்பாறை சாலையில் கி.மீ. 0/4ல் மற்றும் 0/10ல் உள்ள பாலங்கள் மற்றும் குற்றாலம்—செங்கோட்டை சாலையில் கி.மீ. 5/6ல் மற்றும் இலஞ்சிவல்லம்—பள்ளிவாசல் சாலையில் கி.மீ. 3/2ல் உள்ள மூடுகண் பாலங்களை கட்ட குறைந்த அளவே நிதி தேவைப்படுவதால் காலமுறை பராமரிப்பில் இப்பணிகளை மேற்கொள்ளலாம். ஆனால் அம்பாசமுத்திரம்—தென்காசி சாலையில் கி.மீ. 31/8 மற்றும் கி.மீ 26/0ல் உள்ள பாலங்களை திரும்பக் கட்ட முறையே ரூ.70 இலட்சம் மற்றும் ரூ.50 இலட்சம் தேவைப்படுவதால் இப்பாலப் பணிகளை அண்மைக் காலங்களில் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் பரிசீலிக்கப்படும்.

31—

### சாலை அமைத்தல்

வினா எண் **25457—திரு. கே. ரவிஅருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம்—சுரண்டை செல்லும் நெடுஞ்சாலை மிகவும் குறுகியதாக இருப்பதால் போக்குவரத்து அடிக்கடி பாதிக்கப்படுவது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையானது இத்துறையால் மாவட்ட பெருஞ்சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் பாவூர்சத்திரம்—வெள்ளக்கால்—சுரண்டை சாலையாகும். 8.80 கி.மீ. நீளமுள்ள இச்சாலையானது ஒருவழித்தடச் சாலையாக உள்ளது. மேற்கூறிய சாலையில் கி.மீ. 0/0-4/0 வரை கட்டடங்கள் நிறைந்த பகுதியாகவும் கி.மீ. 4/0-8/0 வரை விளை நிலங்கள் வழியாகவும் மற்றும் 8/0-8/8 வரை கட்டடங்கள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. இச்சாலையை





இருவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இச்சாலையை இருவழித்தடச் சாலையாக மாற்றி அமைக்க தோராயமாக ரூ.1.50 கோடி தேவைப்படும். (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஆண்டுதோறும் திட்டப் பணிகளுக்கு மிகவும் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருவதால், மிகவும் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

32—

### தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் **29036—திரு. கே. ரவிஅருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி—வல்லம்—காட்டுப்பள்ளி வாசல் நொண்டிமடைபாலத்தில், பாலம் பழுதடைந்துள்ளதால் புதிய பாலம் கட்டவும், இலஞ்சி—காட்டுப்பள்ளிவாசல் சாலையை சீரமைத்து புதிய தார்ச் சாலை போடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பாலமானது இத்துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலையானது இலஞ்சி - வல்லம்—காட்டுப் பள்ளிவாசல் சாலை கி.மீ. 3/2ல் அமைந்துள்ள பழுதடைந்த மூடுகண் பாலமாகும். இதனை இரண்டு வரிசை குழாய்ப் பாலமாக திரும்பக் கட்டினால் தோராயமாக ரூ.1.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும். மேலும் இச்சாலையில் பழுதடைந்த பகுதிகளில் கி.மீ. 3/0-5/6 வரை தற்போது அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

33—

### தார்ச் சாலையாக்குதல்

வினா எண் **30753—திரு. கே. ரவிஅருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 11

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் ஆவுடையார் ஊராட்சி, சின்ன நாடானூரின் வடக்கே மருதடியூர், சாலடியூர் வழியாக தென்காசி-திருநெல்வேலி நெடுஞ்சாலையில் இணைகின்ற சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலமாக கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின் கீழ் தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி - செங்கோட்டை - கொல்லம் சாலையிலிருந்து மருதடியூர் செல்லும் சாலையில் கி.மீ. 0/0-2/0 வரையுள்ள பகுதிகளை மேம்படுத்தும் பணியானது நபார்டு-10 பேருந்து தடச்சாலை திட்டத்தில் சேர்த்து நபார்டு வங்கியின் உதவியுடன் நிறைவேற்ற இத்துறையின் 29-11-1999 நாளிட்ட அரசாணை எண் 277-ல் அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மருதடியூர்-சின்னநாடானூர் சாலையில் கி.மீ.0/0-1/2 வரையுள்ள பகுதிகளை மேம்படுத்தும் பணியினை வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப நபார்டு திட்டத்தில் சேர்த்திட பரிந்துரை செய்யப்படும்.

34—

## கட்டடம் கட்டுதல்

வினா எண் **20355—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், துணைப் பதிவாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு புதியதாகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் கட்டித் தரப்படுமா?



2000 மே 11]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் சரகத் துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கென புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

35—

## தொழிற்கல்வி பயிலுவதற்குக் கடன்

வினா எண் **32733—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் எத்தனை மாணவ/மாணவியர்களுக்குத் தொழிற்கல்வி பயிலுவதற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அளிக்கப்பட்ட கடன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் தொழிற்கல்வி பயிலுவதற்காக மாணவ, மாணவியர்களுக்கு கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

36—

## வீட்டுமனை வழங்குதல்

வினா எண் **19441—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில், எடப்பாடி நகரில், பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2000 மே 11

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில், எடப்பாடி நகரில், பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

**பணி நியமனம்**

வினா எண் **22574—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996 ஆம் ஆண்டு முதல் தமிழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்ட வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டத் தொழிற்சாலைகளில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு வேலை வாய்ப்பகங்கள் மூலம் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இந்திய பாராளுமன்ற சட்ட எண் 31/1959-ன்படி நிறைவேற்றப்பட்ட காலியிடங்களில் கட்டாய அறிவிப்புச் சட்டம் 1959 மற்றும் அதன் தொடர்பான விதிகள் 1960-ல் சட்டங்களின்படி பொதுத் துறையில் உள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் 25 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் ஊதியம் பெறும் பணியாளர்கள் உள்ள நிறுவனங்களும், விதி 4(1) மற்றும் (2)-ன்படி இந்நிறுவனங்களில் ஏற்படும் காலியிடங்களை உரிய படிவத்தில் சம்பந்தப்பட்ட உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்க வேண்டும். இருப்பினும் இச்சட்டத்தின்படி காலியிடங்கள் கட்டாயமாக அறிவிக்கப்பட்டாலும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமே பூர்த்தி செய்யப்படவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆயினும் மைய அரசு மற்றும் மாநில அரசுகள் பல்வேறு செயல் ஆணைகள் வழியாக அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் ஏற்படும் காலியிடங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமே பூர்த்தி செய்யப்பட வேண்டும் என ஆணைகள் பிறப்பித்துள்ளன. இதன்படி தனியார் துறை சார்ந்த



2000 மே 11]

நிறுவனங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நியமனம் மேற்கொள்ள வேண்டியதில்லை என்ற நிலை உள்ளது. பின்னர் அரசாணை எண் 1138, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-8-1978-ன்படி தனியார் துறையில் அரசு மானியம்/கடனுதவி பெறும் தொழிற்சாலைகள், கல்லூரிகள், பள்ளி விடுதிகள், ஆதரவற்றோர்க்கான விடுதிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் இவையாவும் அனைத்து நியமனங்களையும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவே மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும் பிற வழி நிறுவனங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து 'ஆள் இல்லைச் சான்றிதழ்' பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டது. அவ்வாறு அரசாணையைப் பின்பற்ற தவறும் நிறுவனங்களுக்கு அரசு மானியமாயின் உடனடியாக நிறுத்தப்பட்டு, கடன்களாயின் உடனடி வசூல் மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆணை வழங்கப்பட்டது.

2. வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஒப்பந்தம் செய்யும் நேர்வில், அந்நிறுவனங்களின் நியமனங்கள் வேலைவாய்பபு அலுவலகங்கள் மூலம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்தும் சூழ்நிலை இல்லை. தவிரவும், வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஒப்பந்தம் செய்யும்போது, அத்தொழிற்சாலைகளில் ஏற்படும் பணி காலியிடங்களுக்கு, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம்தான் பணி நியமனம் மேற்கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தம் ஏதும் மேற்கொள்ளப்படுவதில்லை. வெளிநாட்டு நிறுவனங்களால் தொடங்கப்படும் தொழிற்சாலைகளில் அந்நிறுவனங்களின் விருப்பப்படி பணி நியமனம் மேற்கொள்ளும்போது அரசால் கட்டாயப்படுத்தவோ, தடை விதிக்கவோ இயலாத சூழ்நிலை உள்ளது.

3. மேலும், இதுபோன்ற நிறுவனங்கள் தனியார் துறையைச் சார்ந்தவை என்றுதான் கருதப்படவேண்டும். தனியார் துறையைப் பொறுத்தமட்டில் காலியிடங்களை மட்டுமே கட்டாயமாக வேலைவாய்ப்பகங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று அரசு ஆணை உள்ளது. அக்காலியிடங்களை வேலைவாய்ப்பகம் மூலமாக நிரப்ப வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லை. எனவே அயல்நாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்படும் மனுதாரர்களை தேர்வு செய்வது என்பது அரசு கொள்கை அளவில் முடிவெடுக்க வேண்டிய ஒன்றாகும். இந்நிலையில் வெளிநாட்டு

[2000 மே 11

நிறுவனங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டத் தொழிற்சாலைகளில் உள்ள காலியிடங்களில் வேலைவாய்ப்புகம் மூலம் பணி நியமனம் செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

38—

**சிறைச்சாலைச் சோதனை**

வினா எண் **33692—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1998-99, 1999-2000-ஆம்* நிதியாண்டில் சிறைச்சாலையில் திடீர் சோதனையின்போது சிறைக் கைதிகளிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் ரூபாய் எவ்வளவு கையகப்படுத்தப்பட்டுள்ளன?

*(ஆ)* அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) 9-3-1999* அன்று கோவை மத்திய சிறையில் முஸ்லீம் மதவாதிகள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு சிறைப் பணியாளர்களைத் தாக்கியதைத் தொடர்ந்து எல்லா மத்திய சிறைகளிலும் காவல் துறை அலுவலர்களின் உதவியுடன் சோதனை மேற்கொண்டபோது கீழ்க்கண்ட விவரப்படியான பொருட்கள் சிறை வாசிகளின் சிறைகள் மற்றும் தொகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

*மத்திய சிறை, சென்னை:*

1. இரும்புக் கம்பி
2. போல்ட்ஸ்
3. ஆணி
4. காலியான பாட்டில்கள்
5. கடிதங்கள்
6. சிறிய கத்தி
7. பிளேடு
8. ரேசர்
9. சிறிய கயிறு
10. ரூபாய் 3,861.40 (ரூபாய் மூவாயிரத்து எண்ணூற்று அறுபத்தி ஒன்று மற்றும் பைசா நாற்பது மட்டும்)



2000 மே 11]

*மத்திய சிறை, வேலூர்:*

1. சிறிய காலியான செண்ட் பாட்டில்கள்
2. சிறிய காகிதம் அறுக்கும் கருவி
3. டோபாஸ் ஷேவிங் பிளேடு
4. சிறிய மரக்கட்டைத் துண்டு
5. சிறிய ஸ்குரு திருப்புலி
6. சூப்பர் மேக்ஸ் ஷேவிங் பிளேடு

*மத்திய சிறை, திருச்சி:*

1. ஒரு அடி இரும்புப் பட்டை
2. முக்கால் அடி நீளமுள்ள கத்தி
3. 9 அடி இரும்புத் தகடு
4. 4 அடி இரும்புத் தகடு
5. 2 அடி இரும்புக் கதவு பூட்டு
6. 4 அடி பேனாக் கத்தி இரும்பினாலானது
7. சிகரேட் லைட்டர்
8. எஸ்.எஸ். ஸ்பூன்
9. 2½" இரும்பு ஆணி
10. 1½" இரும்பு ஆணி
11. 3" மெல்லிய எஸ்.எஸ். இரும்புத் தகடு
12. 1" அலுமினியம் ஒயர் துண்டு
13. கொசுவர்த்தி ஸ்டாண்டு
14. ஒல்டர் பின்
15. செம்பு மின் கம்பி ஒயர்
16. புகைப்படம் அடங்கிய செய்தித்தாள்
17. உறவினர்களுக்கு எழுதப்பட்டக் கடிதங்கள்

[2000 மே 11

மத்திய சிறை, கோவை:

1. நீண்ட மர சுத்தி
2. சிறிய மர சுத்தி
3. கட்டை துண்டுகள்
4. அலுமினிய தகட்டால் ஆன சுத்தி
5. சுத்தி போன்ற இரும்பு கொக்கி

2. பாளையங்கோட்டை மத்திய சிறையில் 10-3-2000 மற்றும் 13-3-2000 ஆகிய தேதிகளில் சிறைவாசிகளுக்கு இடையே நடந்த மோதல்கள் மற்றும் சிறைப் பணியாளர்களைத் தாக்க முயன்ற சம்பவங்களைத் தொடர்ந்து 14-3-2000 தேதியன்று சோதனை மேற்கொண்டபோது கீழ்க்கண்ட பொருட்கள் ரிமாண்ட் தொகுதி-3 மற்றும் இதர இடங்களிலிருந்து கையகப்படுத்தப்பட்ட விவரம்.

1. ஊசிகள்
2. பிளேடு
3. சிறிய சுத்தி
4. சாப்பாடு தட்டு
5. பெல்ட்
6. தீப்பெட்டிகள்
7. சிகரேட் லைட்டர்
8. இரும்பு கம்பி
9. பெல்ட்

(1–9: ரிமாண்டு தொகுதி-3 குவாரண்டைன் 3-வது அறை)

10. எவர்சில்வர் சாப்பிடும் தட்டு
11. சிறிய சுத்தி
12. பிளேடு
13. சிகார்லைட்
14. கேரம்போர்டு

(10–14: தொகுதி-4 அறை-4)



2000 மே 11]

15. மைதா மாவு
16. கோதுமை மாவு
17. குஜு
18. பச்சைப் பட்டாணி
19. கடலைப் பருப்பு
20. தட்டைப் பயிறு
21. கறி மசாலா
22. புளி
23. மிளகாய்
24. பூண்டு
25. வெங்காயம்
26. பேரீச்சம்பழம்
27. வெந்தியம்
28. தூள்
29. சக்தி மசாலா
30. ஊறுகாய்
31. கருவாடு
32. பொறிகடலை
33. தேங்காய்
34. டம்ளர்
35. சிகரேட்
36. துணி துவைக்கும் சோப்பு
37. கண்ணாடி
38. தேங்காய் துருவல்
39. அலுமினியம் ஸ்பூன்
40. அன்னக்கரண்டி
41. இரும்பு தோசைக்கரண்டி
42. சேமியா

(15–42: சிறை அலுவலர் அறை)

[2000 மே 11

| பொருள் | இடம் |
|---|---|
| 43. எவர்சில்வர் தட்டு | சிறை அலுவலர் அறை |
| 44. டால்டா | |
| 45. சில்வர் ஸ்பூன் | |
| 46. தேங்காய் பிழியும் கருவி | |
| 47. பெல்ட் | |
| 48. மிளகாய் தூள் | |
| 49. கஞ்சா | கார்டு ரூம் சிறைக்கு வெளியே |
| 50. நீலநிற தொப்பி (தமிழ்நாடு சிறை முத்திரையுடன்) | |
| 51. ரெட் பெல்ட் சிறை முத்திரையுடன் | |
| 52. ஜே.ஜே. மில்டன் பெயர் தகடு | |
| 53. ரூ.10,314.40 (ரூபாய் பத்தாயிரத்து முன்னூற்றி பதினான்கு மற்றும் பைசா நாற்பது மட்டும்) | |
| 54. பீடி இரண்டு கட்டுகள் | |
| 55. மேசன் கரண்டி | தொகுதி-3 கண்டம் அறை |
| 56. இரும்புக் கம்பி | |
| 57. அலுமினிய தகடு | |
| 58. அலுமினியம் மக் மற்றும் சட்டி | |

(ஆ) மேற்கண்ட சம்பவங்கள் தொடர்பாக பொறுப்புக் காவலர்கள் மற்றும் அலுவலர்கள்மீது துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வன்முறையில் ஈடுபட்ட மற்றும் சிறைப் பணியாளர்களைத் தாக்க முற்பட்ட சிறைவாசிகள்மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு சிறைச் சலுகைகள் குறிப்பிட்ட காலவரைக்கு நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. சில சிறைவாசிகள் சிறை மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



2000 மே 11]

39—

### இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் **24003—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி திருவண்ணாமலை ஒன்றியம் நாரையூர், ஆனானந்தல், அண்டம்பள்ளம், கல்லேரி ஆகிய கிராமங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்திலுள்ள நாரையூர், ஆனானந்தல், அண்டம்பள்ளம், கல்லேரி ஆகிய கிராமங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி மனுக்கள் ஏதும் இதுவரையில் வரப்பெறவில்லை. எனினும் சட்டமன்ற உறுப்பினர் எழுப்பியுள்ள வினாவின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கிராமங்களில் வசிக்கும் மனையில்லாத பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களைக் கண்டறிந்து தகுதியான நிலத்தைத் தேர்வு செய்து முன்மொழிவுகள் அனுப்புமாறு செங்கம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டு கோரிக்கை நடவடிக்கையில் இருந்து வருகிறது. எனவே மேற்படி கிராமங்களில் வசிக்கும் வீட்டுமனை இல்லாத தகுதியான பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு வீட்டுமனை வழங்குவதற்குத் தனியார் நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

40—

### வீட்டுமனைப் பட்டா மற்றும் இலவச வீடு

வினா எண் **25372—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 11

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், தென்காசி புகைவண்டி நிலையம் அருகே குடிசையில் வாழும் குறவர் இனத்தவர்களுக்கு தேவையான வீட்டுமனைப் பட்டா மற்றும் இலவச வீடு கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி புகைவண்டி நிலையம் அருகில் குடியிருக்கும் நரிக்குறவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க தென்காசி வட்டம் பாட்டக்குறிச்சி கிராமம் புல எண் 174/2-ல் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் நிலக்கிரையம் பெற தென்காசி வட்டாட்சியர் அனுப்பிய பிரேரணைமீது நடவடிக்கை தொடரப்பட்டது. பிரஸ்காப நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு நில உரிமையாளர் ரூ.2,40,000/- வீதம் அரசுக்கு கிரையம் கொடுக்க சம்மதித்திருந்தார். திருநெல்வேலி பதிவுத் துறை துணைத் தலைவர் மொத்தமாக புன்செய்யாக கையகப்படுத்தும் நிலையில் புஞ்சை மதிப்புப்படி மற்றும் வழிகாட்டிப் பதிவேட்டின்படி சம்பந்தப்பட்ட நிலத்திற்கு ரூ.22,800/- வீதம் வழங்கலாம் என அறிவிக்கை அனுப்பி உள்ளதால் தென்காசி கோட்டாட்சித் தலைவர், நரிக்குறவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கத் தேவையான வேறு நிலம் உடனடியாக தேர்வு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். விரைவில் வேறு நிலம் தேர்வு செய்து, நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

## பட்டா வழங்குவதில் தாமதம்

வினா எண் **31461—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், கீழ்புத்தூர் ஊராட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?



2000 மே 11]

(ஆ) ஆம் எனில், பட்டா விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தெள்ளார் ஒன்றியம் கீழ்புத்தூர் ஊராட்சியில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பட்டா கோரி இதுவரையில் மனுக்கள் வரப்பெறவில்லை. நிலம் கையகம் செய்யப்படவுமில்லை. எனினும், தற்பொழுது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள வினாவினைத் தொடர்ந்து வீட்டுமனை இல்லாதவர்களின் பட்டியல் தயார் செய்து, தேவையான தனியார் நிலம் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் வழங்கிட நடவடிக்கை தொடரும்படி தனி வட்டாட்சியர் (பி.ந.) க்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் தனியார் நிலம் தேர்வு செய்து வீட்டுமனை இல்லாத தகுதியானவர்களுக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.

42—

## பட்டு வளர்ப்பு

வினா எண் **33350—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம், எடப்பாடி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் எத்தனை இடங்களில் பட்டு வளர்ப்பு நடைபெற்று வருகிறது?

(ஆ) அவற்றின் வளர்ச்சிக்கு அரசு செய்யும் உதவிகள் விவரம் அரசு தெரிவிக்குமா?

63-129—7

[2000 மே 11

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், கொங்கணாபுரம் ஒன்றிய பகுதிகளில் 40 விவசாயிகளாலும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 28 விவசாயிகளாலும், எடப்பாடி ஒன்றியத்தில் 45 விவசாயிகளாலும் ஆக 113 விவசாயிகளால் பட்டு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) புதிதாக மல்பரி நடவு செய்ய முன்வரும் விவசாயிகளுக்கு பகுதி 2 திட்டத்தின்கீழ் வீரிய இன மல்பரி விதைக் குச்சிகளும், நடவு மானியமாக ஏக்கருக்கு ரூ.500-ம், பட்டுப் புழு வளர்ப்பில் ரூ.150 உதவித் தொகையுடன் கூடிய பயிற்சியும் ரூ.990 மதிப்பிற்கு இலவச புழு வளர்ப்பு தளவாடங்களும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் 14 புதிய பட்டு விவசாயிகளுக்கு அரசு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் புதிய பட்டுப்புழு வளர்ப்பு மனைக் கட்ட 4 பட்டு விவசாயிகளுக்கு தலா ரூ.10,000/- மானியம் வழங்கப்பட்டுள்ளது. இது போல் பயிற்சி மற்றும் இலவச புழு வளர்ப்புத் தளவாடங்கள் 27 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, சொட்டு நீர் பாசன வசதிகள் 15 விவசாயிகளது மல்பரி தோட்டங்களில் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் புதிய விவசாயிகள் 8 பேருக்கு இவ்வாண்டு வங்கிக் கடன் உதவி பெற்றுத் தரப்பட்டுள்ளது.

43—

## பணியிடம் நிரப்புதல்

வினா எண் **30184—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் திரைக்கதை உதவி விரிவுரையாளர் பதவி நிரப்புதலில் இட ஒதுக்கீடு அமல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

(இ) அதை சுழற்சி முறையில் செயல்படுத்துமா?



2000 மே 11]

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) (ஆ) மற்றும் (இ) அரசு ஆணை (நிலை) எண் 162, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 21-9-1999-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி ஒரு பதவியில், ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் மொத்த எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தால் நேரடி நியமனத்தில் இடஒதுக்கீடு விதி பின்பற்றப்பட வேண்டும்.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் உதவி விரிவுரையாளர் (திரைக்கதை எழுதுதல்) நிலையில் ஒரு பணியிடம் மட்டுமே உள்ளது. எனவே, இப்பணியிடத்திற்கு இடஒதுக்கீடு விதி பின்பற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

44—

## கட்டடம் பழுதுபார்த்தல்

வினா எண் **24257—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகரில் இயங்கிவரும் கால்நடை மருத்துவ மனையின் நீர்வளக் கட்டடங்கள் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதை நீக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கால்நடை பராமரிப்புத் துறைக்கு சொந்தமான கட்டடத்தில் இக்கால்நடை மருத்துவமனை 27-3-1992 முதல் செயல்பட்டு வருகிறது. சிறுசிறு பழுதுகள் இதுவரை பலமுறை பார்க்கப்பட்டுள்ளன. 1991-92 ஆண்டு பொதுப்பணித் துறையினரால் பொது பழுது நீக்கம் செய்யப்பட்டது.

45—

**மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்**

வினா எண் **33346—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் எத்தனை கால்நடை மருந்தகங்கள் உள்ளன?

(ஆ) அவைகளில் மருத்துவமனையாக தரம் உயர்த்தும் நிலையில் உள்ளவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் கொங்கணாபுரம் மற்றும் வெள்ளாளபுரம் ஆகிய 2 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவற்றில் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் நிலையில் உள்ள கால்நடை மருந்தகம், கொங்கணாபுரம்.

46—

**கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்**

வினா எண் **33367—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள கால்நடை மருத்துவ மனையில்—1998-99-ல் சிகிச்சை பெற்ற கால்நடைகள் எத்தனை?

(ஆ) 1999-2000-க்குள் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை மருத்துவமனை, எடப்பாடி 1998-99ம் ஆண்டு சிகிச்சை பெற்ற கால்நடைகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | சிகிச்சை அளிக்கப்பட்டது | 15,661 |
| 2. | ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது | 738 |
| 3. | குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது | 5,228 |
| 4. | தடுப்பூசி போடப்பட்டது | 7,812 |
| 5. | செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டது | 1,416 |
| 6. | சினையானவை | 266 |
| 7. | கன்று பிறப்பு | 257 |
| 8. | அறுவை சிகிச்சை செய்யப்பட்டவை | 108 |
| 9. | கன்று பிறப்பு தொடர்பான சிகிச்சை செய்யப்பட்டவை | 285 |
| 10. | மலடு நீக்கம் செய்யப்பட்டது | - |

(ஆ) செயற்குறிப்பு ஏதுமில்லை

47—

**மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்**

வினா எண் **33368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள கால்நடை மருந்தகங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் நிலையில் உள்ளவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தின் மகுடஞ்சாவடி மற்றும் வைகுண்டம் ஆகிய 2 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவற்றில் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் நிலையில் உள்ள கால்நடை மருந்தகம் மகுடஞ்சாவடி.

48—

### கால்நடை மருத்துவர் நியமித்தல்

வினா எண் **33422—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் மதுரைப்பாக்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையின் கிளை, கட்டடத்துடன் இருந்தும் அதில் மருத்துவர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீதான நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மதுரைப்பாக்கத்தில் கால்நடை மருத்துவமனை கிளை நிலையம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு பதில் ஏதுமில்லை.

49—

### வாடகைக்கு இடம்

வினா எண் **16301—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, கோனலம் ஊராட்சியில் காகித அட்டை செய்யும் தொழிற்கூடம் பயனற்று கிடக்கின்றது. இதனை திருமணம் மற்றும் இதர காரியங்களுக்காக வாடகைக்கு விடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

அரக்கோணம் தொகுதி, கோனலம் ஊராட்சியில் அட்டை செய்யும் தொழிற்கூடத்தில் மேற்படி தொழில் நடத்த முடியாத நிலையினால் இத்தொழில்கூடத்தில் கருமார பட்டறை தொழில் செய்யும் அலகாக மாற்றி இவ்வாண்டு தொடர்ந்து ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் தயார் செய்து அரசு அலுவலகங்களுக்கு விநியோகம்



செய்யப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கான தொழில் செய்து 31-3-2000-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இங்குள்ள மக்களுக்கு இக்கூடம் வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. எனவே, மேற்படி அரக்கோணம் தொகுதி, கோனலம் ஊராட்சியில் காகித அட்டை செய்யும் தொழிற் கூடம் பயனற்ற நிலையில் இல்லை.

50—

### தேனீ வளர்ப்புப் பெட்டிகள்

வினா எண் **19869—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றிய கிராமப் பகுதிகளுக்கு அதிக அளவில் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மானிய விலையில் தர அரசு முயலுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

விற்பனைக்காக தேனீ வளர்ப்புப் பெட்டிகள் எதுவும் கதர் வாரிய அலகுகளில் செய்யப்படுவதில்லை. எனினும், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 100 சதவிகித மானிய அடிப்படையில் தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் எடப்பாடி தெகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றிய கிராமப் பகுதி மேற்கண்ட எந்த திட்டத்திலும் சேராததால் அப்பகுதியில் தேனீப் பெட்டிகள் மானிய விலையில் வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

## பதினாறாம் பட்டியல்

1—

### நூலகர் பணியிடங்கள்

வினா எண் **27514—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 11

(அ) நமது மாநிலத்தில் தற்போது ஏராளமான நூலகர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதையும் அதனால் நூலகங்களின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் சிலர் தமக்கு மூன்றாம் நிலை நூலகர் பணி நியமனம் வேண்டி தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்கண்ட வழக்குகளில் மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்களை நிரப்ப தீர்ப்பாயம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இதன் காரணமாக மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இத்தடையை நீக்கவும் அவசரத்தை முன்னிட்டு மேற்கண்ட வழக்குகளில் வழங்கப்படும் இறுதியாணைகளுக்குட்பட்டு காலியாகவுள்ள மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்ப அனுமதி வேண்டியும் நிர்வாக தீர்ப்பாயத்தில் மனுக்கள் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிர்வாக தீர்ப்பாயத்தின் அனுமதி பெறப்பட்டதும் காலியாகவுள்ள மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், நூலகங்கள் மூடப்படும் நிலையைத் தவிர்க்க, தற்போதுள்ள மூன்றாம் நிலை நூலகர்களை மாற்றுப்பணியில் அமர்த்துதல் மூலமும் அவர்களுக்குக் கூடுதலாக கிளை நூலகப் பொறுப்புகளை வழங்குவதன் மூலமும், தொகுப்பூதியப் பணியாளர்கள் பகுதிநேரப் பணியாளர்களை நியமிப்பதன் மூலமும், தற்காலிக தீர்வு காணப்பட்டு வருகிறது.

2—

**அரசு மகளிர் கலைக் கல்லூரி**

வினா எண் **33573—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 11]

(அ) சேலம் கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதி செய்யாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரியில் மாணவியருக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் பொருட்டு ஏற்கெனவே கல்லூரியில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுடன் மேலும் ஐந்து புதிய குடிநீர்க்குழாய் இணைப்புகள் சேலம் மாநகராட்சி மூலம் பெறப்பட்டுள்ளன. இவ்விணைப்புகள் மூலம் பெறப்படும் குடிநீரைத்தேக்கி உபயோகப்படுத்திக்கொள்ள புதிய தண்ணீர் தொட்டி கட்டும் பணிகளுக்கு ரூ.42,000-க்கு நிதி ஒதுக்கீடும் ஆட்சி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அக்கல்லூரி நீர் விநியோக அமைப்பு மற்றும் சுகாதார வசதிகளுக்கானப் பழுதுபார்ப்பு பணிகளுக்கென ரூ.45,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3—

**முழு உதவி பெறும் கல்லூரிகள்**

வினா எண் **33654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவர் பெயரில் நிறுவப்பட்டுள்ள அரசு முழுஉதவிபெறும் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) 1998-99ஆம் கல்வியாண்டில் எவ்வளவு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது?

[2000 மே 11

விடை—

**மாண்புமிகு பேராசிரியர், க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 3 கல்லூரிகள்

(ஆ) (1) பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி, மேலநீலிதநல்லூர், திருநெல்வேலி மாவட்டம் ரூ.99,49,392

(2) பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் ரூ.89,58,591

(3) பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவுக் கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம் ரூ.59,11,604

மொத்தம் .. ரூ. **2,48,19,587**

4—

**அரசு மருத்துவமனைகள்**

வினா எண் **18781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகள் எவ்வளவு? அதில் எத்தனை மருத்துவமனைகள் செயல்படாமல் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்தின்கீழ் 876 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

(i) சேலம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 524

(ii) கடலூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 352

மொத்தம் .. .. **876**

அவற்றுள் சேலம் மாவட்டத்தில் 1 ஆரம்ப சுகாதார நிலையமும், கடலூர் மாவட்டத்தில் 14 ஆரம்ப சுகாதார நிலையங்களும் தண்ணீர், மின்சார வசதிகள் இணைப்பு வழங்கப்படாத காரணத்தினால், செயல்படாது உள்ளது. கூடிய விரைவில், தேவையான வசதிகள் செய்யப்பட்டு, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுத்தப்படும்.



5—

**எய்ட்ஸ்**

வினா எண் **27079—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு அக்டோபர் முடிய சென்னையில் எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு என்று கண்டறியப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) 1998-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிய சென்னையில் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 501 ஆகும். அதில் ஆண்கள் 401 பேர், பெண்கள் 100 பேர் ஆவர்.

(ஆ) 1999-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய பெறப்பட்ட புள்ளிவிவரப்படி தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4016 ஆகும். அதில் ஆண்கள் 3683 பேர், பெண்கள் 933 பேர் ஆவர்.

6—

**வீட்டுமனைப் பட்டா**

வினா எண் **33215—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 1998, 1999 ஆண்டுகளில் பெறப்பட்ட வீட்டுமனைப்பட்டாக்கள் எவ்வளவு?

(ஆ) அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1998-99-இல் வீட்டுமனைப்பட்டாக்கள் கேட்டு 2,124 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில் 2009 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. இன்னும் 115 இனங்களில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7—

### வேகத்தடைகள் அமைத்தல்

வினா எண் **25771—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம தொகுதி, விருகம்பாக்கம், சாயி நகர் 6வது தெருவிலும், முதல் பிரதான சாலையிலும் வேகத்தடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதி, விருகம்பாக்கம், சாயி நகர் 6வது தெருவிலும், பிரதான சாலையிலும் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

8—

### தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் **26995—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த போச்சனக்கல் கிராமம், மாயவன் வீடு அருகில தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த போச்சனக்கல் கிராமம், மாயவன் வீடு அருகில் தற்சமயம் தெருவிளக்கு அமைக்க ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. இருப்பினும், 1999-2000 ஆம் ஆண்டில் நிதி ஆதாரத்திற்கேற்ப தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

### தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் **27567—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம் காமலாபுரம் ஊராட்சியிலுள்ள நாலுகால் பாலம் மெயின்ரோடு முதல் காமலாபுரம் ஏர்போர்ட் வரை ஆதிதிராவிடர் காலனி வழியாக சின்ன வெள்ளையனூர் வரை தார்ச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் காமலாபுரம் ஊராட்சியிலுள்ள நாலுகால் பாலம் மெயின்ரோடு முதல் காமலாபுரம் ஏர்போர்ட் வரை ஆதிதிராவிடர் காலனி வழியாக சின்ன வெள்ளையனூர் வரை இதர மாவட்ட சாலையாகும். இச்சாலை 0.80 கி.மீ. (கி.மீ.0/0 முதல் 0/80 வரை) நீளம் கொண்ட தார்ச்சாலையாகும். இச்சாலையில் பேருந்து போக்குவரத்து வாகனங்கள் செல்வதில்லை. இச்சாலையைப் புதுப்பிக்க தோராயமாக ரூபாய் இரண்டு இலட்சம் தேவைப்படும். தற்போது நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாததால் வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப சாலை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

10—

## சாலை செப்பனிடல்

வினா எண் **27592—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டியிலிருந்து ஜாலிக்கொட்டாய் வரையுள்ள சாலையை செப்பனிட்டு பராமரிப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டியிலிருந்து ஜாலிக்கொட்டாய் வரை சாலையானது 20.60 கி.மீ. நீளம் கொண்ட அரசு மாவட்ட சாலையாகும். மேற்படி சாலைகளில் மழையினால் ஏற்பட்டுள்ள குழிபள்ளங்களுக்கு தார் ஓட்டு போட்டும், கிராவல் கொட்டி சரி செய்யப்பட்டும் போக்குவாத்துக்கு ஏற்றவகையில் உள்ளது. மேற்படி சாலைகளைப் புதுப்பிக்க பணி மேற்கொளளத் தோராயமாக ரூ.135.00 இலட்சங்கள் தேவைப்படும். எனவே, நடப்பு நிதியாண்டில் நிதி பற்றாக்குறையின் காரணமாக புதுப்பிக்க இயலாது.

11—

## தார்ச் சாலை

வினா எண் **27649—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி ஊராட்சி, முள்ளிசெட்டிப்பட்டியிலிருந்து ரெயில்வே லைனுக்கு கிழக்குப்புறம் செல்லும் மண் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம். ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சி, முள்ளிசெட்டிப்பட்டியிலிருந்து ரெயில்வே லைனுக்கு கிழக்குப்புறம் செல்லும் சாலையை 1999-2000ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12—

## தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் **28150—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கூக்குட்ட மரதஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த நாயக்கனூர் வடக்குப் பகுதியில் இதுவரை தெரு விளக்கு இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தெரு விளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கூக்குட்ட மரதஅள்ளி ஊராட்சி, நாயக்கனூர் வடக்குப் பகுதியில் தெரு விளக்கு அமைக்க தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லை. இருப்பினும் 1999-2000 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமை அடிப்படையில் தேவைக்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

13—

### தெரு விளக்கு

வினா எண் **28151—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு **ஊரக வளர்ச்சி** மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்ட மரதஅள்ளி ஊராட்சி, சின்னூர் கிராமம், சின்னூர் சாலையில் இதுவரை தெருவிளக்கு அமைக்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தெரு விளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்ட மரதஅள்ளி ஊராட்சி, சின்னூர் கிராமம், சின்னூர் காலனியில் ஊராட்சி நிதியிலிருந்து தெரு விளக்கு அமைக்க 9-9-1999 அன்று ஊராட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்படி இடத்தில் தெரு விளக்கு அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

14—

### தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் **28154—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, மாங்குறிச்சி, மாங்குறிச்சி கிராமம், அரியான்கொட்டாய் குண்டுமணியாண் கொட்டாய், மாங்குறிச்சி ஆகிய இடங்களில் தெரு விளக்கு அமைக்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தெரு விளக்கு அமைக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மஞ்சாரஅள்ளி ஊராட்சி, மாங்குறிச்சி கிராமம், அரியான்கொட்டாய், குண்டுமணியான் கொட்டாய் மற்றும் மாங்குறிச்சி ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க மின் வாரியத்திற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மின் வாரியத்தால் சர்வே எடுக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மின்வாரிய மதிப்பீடு பெறப்பட்டதும் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

### தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் **28155---திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி ஊட்டமலை நாடார் கொட்டாய் கிராமத்திற்கு இதுவரை தெருவிளக்கு அமைக்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி ஊட்டமலை நாடார் கொட்டாய் கிராமத்திற்கு ஐந்து மின் விளக்குகள் புதியதாக அனுமதிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன.

[2000 மே 11

16—

## தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 28156—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி கே. புதூர் காலனியில் புதியதாக கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கூத்தப்பாடி ஊராட்சி கே. புதூர் காலனியில் புதியதாக தெரு விளக்கு அமைக்க ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மின் வாரியத்திற்கு கட்டணமும் செலுத்தப்பட்டு விட்டது. எனவே, இப்பகுதியில் விரைவில் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

17—

## மெர்குரி விளக்குகள் அமைத்தல்

வினா எண் 28664—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் நகரத்தில் கூடுதலாக மெர்குரி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மே 11]

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் பேரூராட்சியில் கூடுதல் மெர்குரி விளக்குகள் அமைத்தல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

18—

## குளம் தூர் எடுத்தல்

வினா எண் 28958—திரு மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வல்லம் நகரில் உள்ள அருணாங்குளத்தை தூர் எடுத்து படித்துறை கட்டி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அருணாங்குளத்தை தூர் எடுத்து படித்துறை அமைப்பதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

## தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம்

வினா எண் 29799—திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் நடப்பாண்டில் எத்தனை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்களை கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அவை யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் நடப்பு ஆண்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணிக்கு அரசால் ஒப்புதல் வழங்கப்படவில்லை.

**20—**

**கைப்பம்பு**

வினா எண் **30278—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் ஜடையன்காடு, தாசன்காடு ஆகிய கிராமங்களுக்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் கிராமத்தின் ஜனத்தொகை சுமார் 1,000 ஆகும். இங்கு ஏற்கெனவே 5 கைப்பம்புகள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி உள்ளன. ஜடையங்காட்டில் மொத்தம் 60 பேர் வசிக்கிறார்கள். வரும் நிதியாண்டில் ஓர் ஆழ்துளை கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தாசன்காடு கிராமத்தில் 100 பேர் வசிக்கிறார்கள். இங்கு கிராமப் பொதுநிதியிலிருந்து ஓர் ஆழ்துளை குழாய்க் கிணறு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

**21—**

**கைப்பம்பு அமைத்தல்**

வினா எண் **30566—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, மாட்டுக்காரனூர், சாமிநாதன் கொட்டாயில் குடிநீர் வசதி இல்லாமலிருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சிக்குட்பட்ட மாட்டுக்காரனூர், சாமிநாதன் கொட்டாய் ஆகிய இரு கிராமங்களுக்கும் சேர்த்து தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் மின் இணைப்பு பெறப்பட்டு குடிநீர் வழங்கப்படவுள்ளது. மேலும் மாட்டுக்காரனூர் கிராமத்தில் தற்போது 2 ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன.

**22—**

**புதிய மேல்நிலைத் தொட்டி**

வினா எண் **30899—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வான்ராயன்பட்டிக்கு புதிய மேல்நிலைத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டின் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுவிட்டது. சுமார் 150 குடும்பங்கள் மட்டுமே உள்ள இந்த ஊருக்கு இந்த மேல்நிலைத் தொட்டி போதுமானது. புதியதாக வேறு மேல்நிலைத் தொட்டி கட்டப்படவேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

23—

### நிழற்கூடம் அமைத்தல்

வினா எண் **31281—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பேரூராட்சிக்குட்பட்ட சேவுக்கண்டச்சிப்பட்டிக்கு பயணிகள் தங்குவதற்கு நிழற்கூடம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் பொதுநிதியில் இருந்து நிழற்கூடம் அமைக்கப்பட உள்ளது.

24—

### தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் **31326—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் தெருவிளக்கு பற்றாக்குறையாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) தெரு விளக்கு இல்லாத பகுதிகளுக்கு எப்போது தெருவிளக்கு அமைக்கப்படும்.



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் ஏறத்தாழ அனைத்து பகுதிகளுக்கும் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

25—

### சோடியம் மின் விளக்குகள்

வினா எண் **31669—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகர் பகுதியிலுள்ள புறவழிச்சாலையில் சோடியம் மின் விளக்குகள் அமைக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகர் பகுதியில் (வண்ணாரப்பேட்டை) உள்ள புறவழிச்சாலையில் பொதுமக்களின் நன்மை கருதி புதிதாக சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றிய உடன் மேற்படி இடத்தில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பணி முடிக்கப்படும்.

26—

### மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி

வினா எண் **32143—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மேலஊளூர் ஊராட்சியைச் சார்ந்த மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மேலஊளூர் மேற்கு என பிரிக்கப்பட்டு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.9.89 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் 2070 மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய் பதித்தல் ஆகிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டம் விரைவில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

27—

### மேல்நிலைத் தொட்டி செப்பனிடல்

வினா எண் **32144—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பொய்யுண்டார்கோட்டை ஊராட்சியிலுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டி பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பொய்யுண்டார்கோட்டை ஊராட்சியில் உள்ள பழுதடைந்துள்ள தற்போதுள்ள மேல்நிலைத் தொட்டியை செப்பனிட இயலாத காரணத்தால், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய புதிய தனி மின்விசை திட்டம் 1999-2000 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகளை முடித்து இத்திட்டங்களைப் பயனுக்குக் கொண்டுவர தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



28—

### மேல்நிலைத் தொட்டி

வினா எண் **32182—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சிவவிடுதி ஊராட்சியில் கூத்தாவிடுதி கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சிவவிடுதி ஊராட்சி, கூத்தாவிடுதி குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1000 மீட்டர் பகிர்மான குழாய் பதித்தல் மற்றும் 3 பொது குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் இத்திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

29—

### தார்ச் சாலையாக்குதல்

வினா எண் **32771—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி திப்பியக்குடி ஊராட்சியில் வெள்ளூர் சாலையிலிருந்து ஆம்பாலப்பட்டு சாலை வரை 1.00 கி. மீட்டர் சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி திப்பியக்குடி ஊராட்சி, வெள்ளூர் சாலையிலிருந்து ஆம்பாலப்பட்டு சாலை வரை 1.00 கி.மீ. சாலை தற்சமயம் கருங்கல் ஜல்லி சாலையாக உள்ளது. இதனை தார்ச்சாலையாக்க ரூ.6.40 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, இப்பணியை மேற்கொள்ள வழிவகை இல்லை.

30—

### குளம் செப்பனிடல்

வினா எண் **32773—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், காடுவெட்டு விடுதி ஊராட்சியை சேர்ந்த நரங்கிப்பட்டு கிராமத்தில் உள்ள நெடுங்குளத்தினை தூர் வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், காடுவெட்டு விடுதி ஊராட்சியை சேர்ந்த நரங்கிப்பட்டு கிராமத்தில் உள்ள நெடுங்குளம் ஊராட்சி குளம் ஆகும். இக்குளத்தினை தூர் வாரி செப்பனிடுவதற்கு சுமார் ரூ.1.50 இலட்சம் செலவாகும். தற்பொழுது போதிய நிதி வசதி இல்லை. எனவே, இதுபற்றி செயற்குறிப்பு ஏதும் தற்போதில்லை.

31—

### குளம் தூர் வாருதல்

வினா எண் **32775—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சிக்கு சொந்தமான ஊரணி குளத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வாரி தார்ச்சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சிக்கு சொந்தமான ஊரணி குளத்தை தூர் வாரி செப்பனிடுவதற்கு சுமார் ரூ.3 இலட்சம் செலவாகும் தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, இதுபற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

32—

### சாலை செப்பனிடல்

வினா எண் **32776—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி வடபாதி, நெய்வேலி செக்போஸ்ட் அய்யனார் கோவில் சாலை 2.00 கி. மீட்டர் சாலையை தார்ச்சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி வடபாதி, நெய்வேலி செக்போஸ்ட் அய்யனார் கோவில் 2.00 கி.மீ. சாலை 1997-98 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்பு திட்டத்தில் எடுக்கப்பட்டு தார்ச் சாலையாக போடப்பட்டு உள்ளது.

33—

### தார்ச் சாலையாக்குதல்

வினா எண் **32777—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஊராட்சி, பின்னையூர் கிராமத்தில் காளிங்கராயர் தெரு பாலத்திலிருந்து தெற்கு தெரு பாலம் வரையில் ஆற்றுக்கு கீழ்புறம் உள்ள சாலையினை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஊராட்சி, பின்னையூர் கிராமத்தில் காளிங்கராயர் தெரு பாலத்திலிருந்து தெற்கு தெரு பாலம் வரையில் ஆற்றுக்கு கீழ்புறம் உள்ள சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலை மொத்தம் 1.00 கி.மீ. நீளமுடையதாகும். இச்சாலை தற்பொழுது மண் சாலையாக உள்ளது. இதனை தார்ச்சாலையாக ஆக்க சுமார் ரூ. 8.00 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை என்பதால் இப்பணியை எடுத்துச் செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

34—

### புதிய சாலை அமைத்தல்

வினா எண் **32778—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி வடபாதி கிராமத்தில் அரிசனத்தெரு சாலையை அய்யனார் கோவில் சாலையிலிருந்து கோட்டக்கொல்லை கோனார் தெரு சாலையில் வந்து சேருமாறு புதிய சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி வடபாதி கிராமத்தில் அரிசனத்தெரு சாலை அய்யனார் கோவில் சாலையிலிருந்து கோட்டக்கொல்லை கோனார் தெரு சாலை வரை



ஊராட்சி சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 1 கி.மீ. இச்சாலையை போக்குவரத்திற்கு ஏற்றதாக அகலப்படுத்தி இரு பக்கமும் வடிகால் வசதியுடன் மண் வேலைகள் செய்து புதிய சாலை (தார்ச் சாலை) அமைப்பதற்கு சுமார் ரூ. 9.00 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, இதுபற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

35—

### தார்ச் சாலையாக்குதல்

வினா எண் **32779—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூர் ஊராட்சியில் திருநல்லூர் பொய்யுண்டார் குடிகாடு இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூர் பொய்யுண்டார் குடிகாடு இணைப்புச் சாலை ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானது. இச்சாலை தற்சமயம் கருங்கல் ஜல்லி சாலையாக உள்ளது. இதன் நீளம் 2 கி.மீ. ஆகும். இதனை தார்ச் சாலையாக்க சுமார் ரூ. 13.00 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, செயற்குறிப்பு ஏதுமில்லை.

36—

### குளம் தூர் எடுத்தல்

வினா எண் **32781—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூர் ஊராட்சியில் உள்ள குமரகுளம், அய்யனார் கோயில் குளத்தைத் தூர் எடுத்துச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூர் ஊராட்சியில் உள்ள குமரகுளம், அய்யனார் கோவில் குளங்கள் இரண்டும் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானதாகும், இதனை செப்பனிட சுமார் ரூ.2.00 இலட்சம் செலவாகும். 1999-2000ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியத்திற்கு குளம் தூர் எடுக்கும் பணி ஏதும் அளிக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் இப்பணியை செய்ய இயலவில்லை.

37—

### சாலை செப்பனிடல்

வினா எண் **32785—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சாக்காடு கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் தெரு சாலை 2.00 கி.மீ. சாலையை தார்ச்சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சாக்காடு கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் தெரு 2 கி.மீ. சாலை ஊராட்சிக்கு சொந்தமானது. இச்சாலையில் தற்பொழுது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் 950 மீட்டர் நீளம் இரண்டடுக்கு கருங்கல் தளம் சாலை போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 1050 மீட்டர் நீளத்தையும் கருங்கல் தளமாக்கி 2.00 கி.மீ. நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்க ரூ.14.00 இலட்சம் செலவாகும். தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. மேலும் இது பற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.



38—

### தார்ச் சாலையாக்குதல்

வினா எண் **32787—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சங்கரநாதர் குடிகாடு ஊராட்சியில் சங்கரநாதர் குடிகாடு பாலத்திலிருந்து உயர்நிலைப் பள்ளி வழியாக வேதபுரி காட்டாற்றுப் பாலம் வரை விடுபட்ட 1.6 கி.மீட்டர் சாலையைத் தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சங்கரநாதர் குடிகாடு ஊராட்சி, சங்கரநாதர் குடிகாடு பாலத்திலிருந்து உயர்நிலைப் பள்ளி வழியாக வேதபுரி காட்டாற்றுப் பாலம் வரை விடுபட்ட 1.6 கி.மீ. சாலை ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானதாகும். இச்சாலை மொத்தம் 2.6 கி.மீ. நீளமுடையதாகும். இதில் 1.6 கி.மீ. மண் சாலையாக உள்ளது. இதனை தார்ச்சாலையாக்க சுமார் ரூ.14.00 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, தற்போது இதுபற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

### தார்ச் சாலையாக செப்பனிடல்

வினா எண் **32791—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தோப்புவிடுதி ஊராட்சியில் செங்கிப்பட்டி-பட்டுக்கோட்டை சாலையின் இடையே பிரியும் பத்துப்புளி விடுதி சாலையைத் தார்ச்சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 11

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தோப்புவிடுதி ஊராட்சியில் உள்ள செங்கிப்பட்டி - பட்டுக்கோட்டை சாலை ஊராட்சி சாலையாகும். இச்சாலை தற்சமயம் 0/0-0/760 வரை தார்ச்சாலை போடப்பட்டு வருகிறது. எஞ்சிய மண் சாலையைத் தார் சாலையாக்க சுமார் ரூ.7.00 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தினால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

40—

### மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி

வினா எண் **32814—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பனிகொண்டான் விடுதி ஊராட்சியில் மேலஊரணி புறப் பகுதியான தங்கையன்தோப்பு ஏரிப் பகுதியில் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பனிகொண்டான் விடுதி ஊராட்சியில் உள்ள தங்கையன்தோப்பு (தங்கையன் தோட்டம்) குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நீர் உந்துக் குழாய், பகிர்மானக் குழாய், பொதுக் குழாய் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தினை விரைவில் மக்களின் பயனுக்குக் கொண்டுவர தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

41—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் **32818—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 11]

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை ஊராட்சி மாஞ்சக்காடு கிராமத்திலுள்ள குடிநீர் ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதால் அதனைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை ஊராட்சியில் மாஞ்சக்காடு குடியிருப்பில் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் உள்ளதால் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு மேற்படி மேல்நிலைத் தொட்டியில் குடிநீர் ஏற்றி ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு தற்போது பயனில் உள்ளது.

42—

### குடிநீர்த் தொட்டி

வினா எண் **32882—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், திருவம்பலாபுரம் ஊராட்சி, பார்க்கனேரி கிராமத்தில் வாழும் மக்களுக்கு குடிநீர்த் தொட்டி அமைத்துக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், திருவம்பலாபுரம் ஊராட்சியினைச் சார்ந்த பார்க்கனேரி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 500 ஆகும். இங்குள்ள இரு ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர்வற்றிவிட்டன. இக்குடியிருப்பிற்கு திருவம்பலாபுரம் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர்க் குழாய் நீட்டிப்புச் செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2000 மே 11

43—

## கான்கிரீட் தளம் அமைத்தல்

வினா எண் **33365—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி வாரச் சந்தையில் கடை போடுபவர்களுக்கு கான்கிரீட் தளம் போட்டுத் தராமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அங்கு கான்கிரீட் தளம் அமைக்க அரசு மானியக் கடன் வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி, நிதிநிலை தொடர்ந்து பற்றாக்குறையாகவே உள்ளது. வாரச் சந்தைக் கடைகளுக்கு கான்கிரீட் தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சம் ஆகும். நகராட்சி, அரசு மற்றும் பிற நிதி நிறுவனங்களிலிருந்து பெற்றுள்ள கடன்களுக்கு திரும்பச் செலுத்த வேண்டிய தொகை ரூ.4.05 கோடி நிலுவையில் உள்ளது. நூலக வரி ரூ.14.00 இலட்சம், ஊழியர் மற்றும் ஆசிரியர் சேம நல நிதிக்கு செலுத்த வேண்டிய நிலுவை ரூ.30.00 இலட்சம் ஆகியவையும் நிலுவையில் உள்ளது. எனவே, நகராட்சி நிதி நிலை மேம்பட்டதும் இப்பணி செய்ய நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

## ஏரிகள் அமைத்தல்

வினா எண் **4086—டாக்டர் இஎஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டம், மேல்பாலாபுரம், ஆர்.ஜே. கண்டிகை, வேணுகோபாலபுரம் ஆகிய ஊர்களில் புதிய ஏரிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2000 மே 11]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், மேல்பாலாபுரம் கிராமம், பாசனம் பெறும் வகையில் மகான் காளிகாபுரத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்தில் திட்டப்பணி தொடங்க உள்ள இடம் ஆந்திர மாநில எல்லையில் வருவதாலும் ஆந்திர மாநில நிலம் கையகப்படுத்த வேண்டியது இருப்பதால் இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள சாத்தியக்கூறு இல்லை.

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், வேணுகோபாலபுரம் கிராமத்தில் ஏரி பல ஆண்டுகளாக உள்ளது.

ஆர்.ஜே. கண்டிகையில் ஏரியமைக்கும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு சாத்தியக்கூறு இல்லாததால் ஏரி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

45—

## கருவேல மரங்கள்

வினா எண் **27897—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதுமுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கண்மாய்களில் வளர்க்கப்பட்டு ஏலம் விடப்பட்ட கருவேல மரங்கள் மூலம் அரசுக்கு 1998-99ஆம் ஆண்டு கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) மேற்குறித்த வருமானத்தை சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99ஆம் ஆண்டு ஏலம் விடப்பட்ட கருவேல மரங்கள் மூலம் அரசுக்கு கிடைத்த வருமானம் ரூ.533.35 இலட்சம் ஆகும்.

(ஆ) 1993-94ஆம் ஆண்டு முதல் 1996-97ஆம் ஆண்டு வரை பஞ்சாயத்துக்களுக்கு சேரவேண்டிய பங்குத்தொகையினைப் பகிர்ந்தளிக்க அரசாணை (நிலை) எண் 33, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 15-2-2000-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளுக்கான பங்குத்தொகை அளிப்பது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

[2000 மே 11

46—

ஏரிக்கரை சரி செய்தல்

வினா எண் **29864—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், வெலிங்டன் நீர்த்தேக்கம் ஏரியின் மையப் பகுதியில் உள்ள கரை அமுங்குவதால் அதை அரசு நல்ல முறையில் சரி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1994 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்தில் வெலிங்டன் ஏரியில் 2,050 மீட்டர் முதல் 2,300 மீட்டர் வரையிலான பகுதி அமுங்கிவிடுகிறது. அணைப் பாதுகாப்புக் குழுத் தலைவர் அவர்கள் 5/98-ல் பார்வையிட்டு இதனை சரி செய்வதற்குக் கூறிய ஆலோசனைகளின் அடிப்படையில் ஒரு பகுதி அவசர அடிப்படையில் 8/98-ல் எடுத்து செயலாக்கப்பட்டது. அதனுடைய மற்றொரு பகுதிக்கு நிரந்தர சீரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டபோது வடிவமைப்பு கண்காணிப்புப் பொறியாளரால் மாற்றுத் திட்டம் அளிக்கப்பட்டு இவ்விரு திட்டங்களும் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உள்ளன. அணைப் பாதுகாப்புக் குழுத் தலைவரால் இந்த ஏரி மீண்டும் பார்வையிடப்பட்டு ஏரியில் சீர்திருத்த மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

47—

தொழிலாளர் பொறுப்பு

வினா எண் **31771—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர் பொறுப்பு குறித்து விரிவான விவாதத்தைத் தொழிற்சங்கங்களோடு நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மே 11]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர் பொறுப்பு குறித்து விரிவான விவாதத்தைத் தொழிற்சங்கங்களோடு நடத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

சர்குலர் மினி பஸ்

வினா எண் **33844—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி எல்லைக்குள் சர்குலர் மினி பஸ் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிற்றுந்து திட்டம் ஏற்படுத்தியதின் முக்கிய குறிக்கோள் போக்குவரத்து வசதியில்லாத கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குப் போக்குவரத்து வசதி அளிப்பதற்குத்தான். எனவே, தென்காசி நகராட்சி எல்லைக்குள் சர்குலர் மினி பஸ் விட வாய்ப்பு ஏதும் இல்லை.

49—

கடன் வழங்குதல்

வினா எண் **32726—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக புதிய கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்க எவ்வளவு

விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) விதிகளுக்குட்பட்டு கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் புதிய கிணறுகள் மற்றும் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்க வாய்ப்பு இல்லாத காரணத்தால் 1998-99ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மூலம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி விதிகளுக்குட்பட்டு எவ்வித கடனும் வழங்கப்படவில்லை.

50—

**மண்ணெண்ணெய் ஒதுக்கீடு**

வினா எண் **34026—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டத்தில் மண்ணெண்ணெய் எவ்வளவு லிட்டர் ஒதுக்கீடு செய்யப்படுகிறது?

(ஆ) ஒதுக்கீடு பற்றாக்குறையானதாக உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், திருப்பூர் வட்டத்திற்கான மொத்த மண்ணெண்ணெய் தேவை 843 கி. லி. (8,43,000 லிட்டர்கள்) ஆகும். மேற்படி 843 கி.லி. மண்ணெண்ணெய் பற்றாக்குறை ஏதும் இன்றி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.



## 2. அறிவிப்புகள்

### (அ) ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இடஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கை-விவாதம்-தேதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தின்போது அறிவித்தபடி அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை இங்கே அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வெள்ளை அறிக்கை குறித்த விவாதம் வருகிற 16 ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கின்றேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருபுவனம் தமிழ் மாநில காங்கிரஸ் பிரமுகர் கொலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருபுவனம் (குறுக்கீடு) திரு. சுந்தரம், நான் என்னுடைய Order of business-படி எடுத்துக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் எழுந்து நிற்கக் கூடாது, உட்காருங்கள். திருபுவனம் த.மா.கா பிரமுகர் கொலை செய்யப்பட்டது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. ஞானசேகரன், எஸ்.வி. திருஞானசம்பந்தம், டாக்டர் பத்மா, திரு. சோ. பாலகிருஷ்ணன், டி. சுதர்சனம், வி.கே. லட்சுமணன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், டாக்டர் அ. செல்லக்குமார் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம் அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இன்று காலையில் அறிவிப்புக் கொடுத்தவர்கள், திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், இரா. தாமரைக்கனி, வை. சிவபுண்ணியம், பி.ஆர். சுந்தரம், எஸ்.என். பாலசுப்பிரமணியன் ஆகியோர். அவற்றையெல்லாம் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொண்டு, சுருக்கமாக, முதலில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் வட்டம், திருபுவனம் பேரூராட்சியில் 9-5-2000 அன்று திரு. அரிதாஸ் என்பவர் மரணமடைந்திருக்கிறார். அவருடைய மரணம் பற்றி தற்போது பிரேத விசாரணை நடைபெற்று இருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது என்ற தகவல்தான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இதை வைத்து ஓர் அரசியல் நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பழி போடுவதற்கு அங்கே உள்நோக்கத்தோடு சிலர் ஆர்ப்பாட்டம் செய்ததாக நான் அறிகிறேன். எனவே, இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-5-2000 அன்று திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் குமார் என்பவர் குடிபோதையில் இருந்தபோது, அங்கே தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்த இராகவன் மற்றும் அவர் உள்ளிட்ட நண்பர்களுக்கிடையே வாசற்படியிலே தகராறு ஏற்பட்டிருக்கிறது. பிறகு இது சம்பந்தமாக தமிழ் மாநில காங்கிரஸ் ஆட்களை குமார் வகையறா அடித்ததன் விளைவாக, அவர்களெல்லாம் வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். ஆனால் தங்களுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி குமார் என்பவர் அப்பகுதியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்களையெல்லாம் சந்தித்து, 'நம்மிடமே, ஆளும் கட்சியிடமே தகராறுக்கு வருகிறார்கள்' என்றெல்லாம் சொல்லி, ஒரு வழக்கை அவர்கள் — 506 Part II ஒரு வழக்கை — 6 பேர் மேல் பதிவு செய்ய வைத்திருக்கிறார். ஆனால் தமிழ் மாநில காங்கிரஸ் தொண்டர்கள் இராகவன் மற்றும் மற்றவர்களெல்லாம் தாக்கப்பட்ட சம்பவம் சம்பந்தமாக வழக்குக் கொடுத்தும்கூட, திருவிடைமருதூர் காவல் நிலையத்தைச் சார்ந்தவர் அங்கிருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் ஆளும் கட்சியினுடைய செல்வாக்குக்கு அடிபணிந்து, அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொடுத்த வழக்கை மட்டும் பதிவு செய்துவிட்டார்களே ஒழிய, தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்த இராகவன் போன்றவர்களெல்லாம் தாக்கப்பட்ட வழக்கை அவர்கள் பதிவு செய்யாமல் வெறும் பெட்டிஷனாக மட்டும் வைத்துக் கொண்டார்கள். பிறகு மறுநாள் 5 ஆம் தேதிகூட இராகவனுடைய இல்லத்திற்குச் சென்று அந்தக் குமார், அவரைச்





சார்ந்த நண்பர்களெல்லாம் வீட்டுக் கதவைத் தட்டி தாக்க முற்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்த 6 பேர் மட்டும் 506 Part II-ல் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். பிறகு அவர்கள் இப்பொழுது ஜாமீனிலே விடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 20 நாட்களுக்கு கும்பகோணத்திலே தங்கி கையெழுத்திட வேண்டுமென்று சொல்லி ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள். பிறகு 7 ஆம் தேதி இரவு, இராகவனுடைய உறவினர் சுந்தரமூர்த்தி என்பவர் தமிழ் மாநில காங்கிரஸின் தொழிற்சங்கத் தலைவராக, அந்த நெசவாளர் சொசைட்டியில் இருந்து கொண்டிருக்கிற அவரும் அவருடைய தம்பி அரிதாஸ் என்கிற நெசவுத் தொழிலாளியும் தன்னுடைய தங்கை வீட்டிற்குச் சென்றுவிட்டு இரவு 8 3/4 மணிக்கு திரும்பி இருக்கிறார்கள். ஏற்கெனவே வீடு திரும்பியவர், ஏனோ வரவில்லை என்ற சந்தேகம் வந்தவுடன் மறுநாள் 8 ஆம் தேதி காலை சுந்தரமூர்த்தி, காவல் நிலையத்திற்குச் சென்று "என்னுடைய தம்பி நேற்று இரவு போனவர் ஏனோ இன்னும் வரவில்லை, அரசியல் விரோதம் சாரணமாக அவர் தாக்கப்பட்டிருக்கலாம், கடத்தப்பட்டிருக்கலாம், கொலை செய்யப்பட்டிருக்கலாம்" என்றுகூட ஒரு Complaint-ஐ அவர் திருவிடைமருதூர் காவல் நிலையத்திலே கொடுத்திருக்கிறார். திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண் 125/2000 என்கிற வழக்கில் Man missing complaint என்பதாக அது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற அளவிற்கு தன்னுடைய அச்ச உணர்வை அந்த Man missing complaint-லேயே சுந்தரமூர்த்தி தன்னுடைய தம்பி காணாமல் போனது குறித்து கொடுத்திருக்கிறார். ஆனால், காவல் துறையினர் அதைப் பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே இருந்துவிட்டார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னாலே- அங்கே தாமரைக்குளம் என்கிற ஒரு குளத்தில் இரண்டு அடி தண்ணீர்தான் இருக்கிறது. யாருமே அந்தக் குளத்திலே suicide அதாவது தற்கொலை செய்துகொள்ள முடியாது—இந்த அரிதாஸை அடித்துக் காயப்படுத்தி, கை கால்களைக் கட்டி அந்தத் தாமரைக்குளத்திலே போட்டிருக்கிறார்கள். இரண்டு நாட்கள் கழித்து

அந்தப் பிணம் மிதந்ததைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சுந்தரமூர்த்தி ஏற்கெனவே Man missing complaint கொடுத்ததினுடைய—125 குற்ற எண்ணுடைய — தொடர்ச்சியாக, "இந்த வழக்கில் என்னுடைய தம்பி அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் கொல்லப்பட்டிருக்கிறார் என்று அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அங்கே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக நகரச் செயலாளர் எஸ்.கே. பஞ்சநாதன் அவருடைய தம்பி செல்வம், சோனி s/o. செல்லையன், சிதம்பரத்தான் என்கிற ரவி, கே. குருமூர்த்தி, கே. சுரேஷ் ஆகியவர்கள் மீது வழக்கு கொடுத்திருக்கிறார். இவர்கள்தான் கொலை செய்திருப்பார்கள், இவர்கள்தான் ஏற்கெனவே விரோதம் என்றெல்லாம் கொடுத்தும்கூட காவல் துறையினர் அவர்களைக் கூப்பிட்டு விசாரிக்கவே இல்லை. பிறகு இந்த body-ஐ எடுத்து post mortem-க்குக் கொடுத்து இருக்கிறார்கள். கை கால்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன, அதற்கான புகைப்படங்கள் எல்லாம்கூட எடுக்கப்பட்டிருக்கின்றன. நிறைய காயங்களும் உடலிலே இருக்கின்றன. அதை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் அங்கே post mortem செய்து கொண்டிருக்கும்போதே அந்தப் பகுதியினுடைய டிஎஸ்பி. ராஜேந்திரன் அவர்களும், ஆர்.டி.ஓ. சுப்புராமன் என்பவரும் இது தற்கொலை, இதற்குப் போய் பெரிதாக complaint எல்லாம் கொடுக்க வந்துவிட்டீர்கள். இந்தத் தற்கொலை கேசை எல்லாம் நீங்கள் ஏன் இவ்வளவு பெரிதுபடுத்துகிறீர்கள் என்றெல்லாம் சொல்லி இவர்கள் வழக்கைத் திசை திருப்ப முற்பட்டதினுடைய விளைவு அங்கே இருக்கக்கூடிய தமிழ் மாநில காங்கிரசினுடைய தொண்டர்கள் மற்றும் சர்வ கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் 3 ஆயிரம் பேர் அப்போது அங்கே சாலை மறியலிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

Indian Express பத்திரிகையிலேகூட with multiple injuries அந்த உடல் recover செய்யப்பட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. மற்ற அனைத்துப் பத்திரிகைகளிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. இதிலே காயங்களோடு அந்த நபர் தமிழ் மாநில காங்கிரசினுடைய தொண்டர் நெசவுத் தொழிலாளி அரிதாஸ் என்பவர் அங்கே கொலை செய்யப்பட்டு, கை கால்கள் கட்டப்பட்டு குளத்திலே போடப்பட்ட பின்னாலும்கூட உரிய நடவடிக்கையை அந்த டிஎஸ்பி-ம், ஆர்.டி.ஓ.-ம் எடுக்காததனுடைய விளைவுதான் ஒரு பெரிய சாலை மறியலுக்கே இடத்தைக் கொடுத்துவிட்டு, அந்த இடத்திலே ஒரு பதட்ட நிலை உருவாகி இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தக் காவல் துறை 4 ஆம் தேதியே குமார் என்பவர் குடித்துவிட்டு



கலாட்டா செய்தபோது உரிய நடவடிக்கையை இராகவனுடைய complaint மீது எடுத்திருக்குமேயானால் இப்படிப்பட்ட ஒரு கொலைச் சம்பவம் நடந்திருக்காது. தமிழ் மாநில காங்கிரஸ் தொண்டர் அரிதாஸ் என்பவர் இறந்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையே உருவாகியிருக்காது. ஆனால், காவல் துறை என்பது, ஏற்கெனவே நான் இந்த அவையிலே சொன்னதுபோல, தமிழ் மாநில காங்கிரசை ஒரு எதிரியாகவே பார்க்கிறது. நீங்கள் எங்களுக்கும் முதல்வர், அதேபோல திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கும் முதல்வர். அந்தத் துறைக்கும் தலைவர் தாங்கள்தான். எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று பல காலகட்டத்தில் நாங்கள் சொல்லி வருகிறோம். ஆனால், காவல் துறையினர் ஏனோ கட்சிக் கண்ணோட்டத்தோடு அவர்களும் ஆளும் கட்சிக்கு சம்பந்தப்பட்டவர்கள்போல, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலே நடந்துகொள்கிறார்கள். அங்கே இருக்ககூடிய ஆர்.டி.ஓ., டிஎஸ்பி. 4 வருடங்களாக அதே இடத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அந்த சுப்புராமன் என்கிற ஆர்.டி.ஓ., அதேபோல ராஜேந்திரன் என்கிற டி.எஸ்.பி. இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர்கள் போலவே செயல்பட்டு, எங்களை, அதாவது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களை ஓரம்கட்டுவது அல்லது உதாசீனப்படுத்துவது என்ற ஒரு நிலை அந்தப் பகுதியிலே நெடுங்காலமாக இருந்து வரக்கூடிய ஒரு சூழ்நிலை எங்களுக்கு எல்லாம் மிக்க வருத்தத்தை அளிக்கிறது. காரணம், எந்தவித கட்சி வித்தியாசமுமின்றி, கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் நடந்துகொள்ளவேண்டிய நடு நிலைமையோடு நடந்துகொள்ளவேண்டிய, அதிகாரிகள் இப்படிச் செயல்படக்கூடிய காரணத்தினால்தான் உயிருக்குக்கூடப் பாதுகாப்பு இல்லாமல், தமிழ் மாநில காங்கிரசினுடைய தொண்டர்கள் அந்த இடத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒருவர் இறந்துவிட்டும் இருக்கிறார்.

முற்பகல் 10-30

நான் மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட அதிகாரிகளை அந்த இடத்திலே விட்டு வைப்பது நல்லதல்ல; அவர்கள் தங்களுடைய ஆட்சிக்குக் கெட்ட பெயரைச் சுமந்து வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை உடனடியாக நீங்கள் இடமாற்றம் செய்து, அந்த இடத்தில் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, injuries எல்லாம் இருக்கக்கூடிய இந்த வழக்கை 302 ஆக மாற்றவேண்டும். இதுவரைக்கும் 302 கேஸே இவர்கள் போடவில்லை. இவர்கள் `Man missing'-லிருந்து அதை 174 ஆக மட்டுமே alter செய்திருக்கிறார்கள். Criminal Procedure Code-174 — 'Suspicious Death' என்று மட்டுமே செய்திருக்கிறார்களேயொழிய, அதை 302 வழக்காக இன்றுவரை மாற்றாமல் இருக்கிறார்கள். ஏற்கெனவே complaint-ல் சொல்லப்பட்டிருக்கக்கூடிய இந்த நபர்களை இன்னும் கைது செய்யாமல், விசாரிக்காமல் இருந்துகொண்டிருப்பது காவல் துறை எந்த அளவிற்கு மெத்தனமாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக இந்தத் தவறு செய்தவர்களை, குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். அங்கு இருக்கக்கூடிய காவல் துறைமீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை; நம்பிக்கை கொஞ்சங்கூட இல்லை. ஆகவே, இந்த வழக்கை உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் C.B., C.I.D., யினுடைய பிரிவிற்கு மாற்றி, எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் நடுநிலைமையோடு இதுபோன்ற விசாரணை நடத்துவதற்கு அவர்கள் ஆவன செய்யவேண்டும். ஒரு தொழிலாளி, கூலித் தொழிலாளி, நெசவுத் தொழிலாளி மாண்டுவிட்டிருக்கிற காரணத்தினாலே, அந்தக் குடும்பமே இப்போது பரிதவிக்கிறது. அந்தத் தொழிலாளிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி செய்யவேண்டுமென்று கேட்டு, இதுபோன்ற தவறு செய்யக்கூடிய அதிகாரிகளை உடனடியாக மாற்றம் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அருகில் திருவோணத்தைச் சேர்ந்த அரிதாஸ் என்ற தமிழ் மாநில காங்கிரஸ் தொண்டர் சாவில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினை குறித்து இங்கே உறுப்பினர்கள் கூறினார்கள். குறிப்பாக, உயிர் என்றால் அரசியல் மற்றும் பல நிகழ்ச்சிகளை எல்லாம் கடந்த நிலையிலேதான் அதைப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இதிலே பல கருத்துகள், பல பிரச்சினைகள் வருகின்றன. நான் அதன் உள்ளே செல்ல விரும்பவில்லை. குறிப்பாக, அவருக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகளில் அங்கே விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்னதாக இப்படி ஒரு பிரச்சினை





வந்த காரணத்தினாலே, ஞாயிற்றுக்கிழமை காலை காணவில்லை என்ற காரணத்தினாலே, அவருடைய சகோதரர் சுந்தரமூர்த்தி, திருவிடைமருதூர் காவல் நிலையத்திலே புகார் செய்திருக்கிறார். அதன்மீது அந்தக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது இங்கே கேள்விக்குரிய விஷயமாக இருக்கிறது. மறுநாள் அவர் பிணமாக ஒரு குளத்திலே மிதந்தார் என்ற செய்தி வந்திருக்கிறது. அதுவும் கையிலே கயிற்றால் கட்டப்பட்டு, காயங்களோடு இருந்தார் என்று செய்தி வந்திருக்கிறது. ஆகவே, அவருடைய பிரேதப் பரிசோதனையினுடைய முடிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே தெரிவிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

அதைப்போல, இப்படிச் சாவுகள் நம்முடைய தமிழகத்திலே மர்மமான முறையிலே நடைபெறுவதும், அதுவும் சில அரசியல் கட்சித் தொண்டர்களுக்கு இப்படி ஏற்படுகிறது என்றும், பிரச்சினை வருவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை நம்முடைய தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காவல் துறையினுடைய அலட்சியப்போக்கின் காரணத்தினாலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து வருகின்றன. ஆகவே இதைத் தடுப்பதற்கான முயற்சியை எடுத்து, இந்த அரிதாசினுடைய கொலையில் உண்மைக் குற்றவாளிகளாக யார், யார் இருக்கிறார்கள், என்ன பிரச்சினையின்மீது இது ஏற்பட்டிருக்கிறது என்பதை உரிய முறையில் விசாரித்து, இதிலே ஏற்பட்டிருக்கிற இந்தச் சந்தேகத்தையும் அச்சத்தையும் போக்கி, சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். அதேபோல் சாதாரணத் தொழிலாளியாக இருக்கிற அரிதாஸ் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அதோடு, சாலை மறியல் போராட்டம் நடத்தி, அதிலே அதிகாரிகள் பங்குகொண்டு, அது குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்படும் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? யார் மீதாவது அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த நிலைகளைப் பற்றிய விவரங்களையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினைக்கு அல்லது அந்தச் சாவிற்குரிய காரணங்களைக் சந்தேகத்திற்கு தீர்வுகாண

கண்டறிந்து, நியாயம் வழங்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமா.கா. கட்சியைச் சார்ந்த அரிதாஸ் என்பவர் கொலை செய்யப்பட்டார் என்பது சம்பந்தமான விவரங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர் இங்கே தெரிவித்த உணர்வுகளோடு நானும் என்னை இணைத்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

நான் ஒன்றை இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமீப காலமாக, 6, 7 மாத காலமாக, தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் கொலை செய்யப்படுவதும், கொலை செய்யப்படுகிற நேரத்தில் காவல் துறை சரியான முறையில், நடந்துகொள்ளவில்லை என்றும் பாரபட்சத்தோடு நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டும் மக்களிடமிருந்து வந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த அக்டோபர் மாதத்திலே என்னுடைய தொகுதியிலே பெலார்மைன் என்ற ஒருவர் கொலை செய்யப்பட்டார். திருவட்டாறு காவல் நிலையத்திலே F.I.R. போடப்பட்டது. எதிரிகளினுடைய பெயர்களும் அதிலே குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால், இன்றுவரை எதிரிகளைக் கைது செய்யவோ, அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவோ, case charge செய்யப்படவோ இல்லை. இப்போது நமக்கு வந்திருக்கிற தகவல் மாஞ்சோலையிலே I.N.T.U.C. தலைவர் பாலகிருஷ்ணன் என்பவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டும். அதைத் தனியாகக் கொடுத்தீர்கள் என்றால் பேச அனுமதி கொடுக்கிறேன். இதைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்ன சொல்கிறேன் ,என்றால், இப்படிப்பட்ட சில நிகழ்ச்சிகள் நடப்பதால், இந்த நிகழ்வுகளில் காவல் துறை பாரபட்சமற்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்த வேண்டும். ஆனால், அந்த முறையில்



காவல் துறை நடந்துகொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுதான் அரிதாஸ் சம்பந்தமான நிகழ்விலேகூட இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்தி; அதேபோன்று அவருடைய சொந்தக்காரர்களாலும் தெரிவிக்கப்பட்டு இருக்கிற புகார்; ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், 4-5-2000 அன்று அவர் சம்பந்தமாக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்ட நேரத்திலேயே காவல் துறை தகுந்த அளவிலே நடவடிக்கை எடுத்து இருக்குமானால், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நிச்சயமாகத் தவிர்த்து இருக்க முடியும். ஆகவே, காலாகாலத்திலே காவல் துறை பாரபட்சமற்ற முறையில் இப்படிப்பட்ட விஷயங்களில் நடந்துகொள்வதற்கு அரசு காவல் துறையைக் கண்டிப்பாகச் செயலாற்ற வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அரிதாஸை இன்று இழந்து தவித்துக் கொண்டிருக்கிற அவருடைய குடும்பத்திற்குத் தகுந்த உதவி செய்வதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம். (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம், திருவிடைமருதூர் அருகே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டர் அரிதாஸ் அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகக் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அதை 302-வது பிரிவாக மாற்றாமல், ஏதோ விசாரணை பண்ணியமாதிரி அங்கே உள்ள காவல் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு அரசியல் Motive-லே நடந்தால், உடனே முதலமைச்சருக்கு இப்படி அரசியல் Motive-லே கொலை நடந்து இருக்கிறது; இப்படிப் புகார் எல்லாம் பண்ணி இருக்கிறார்கள் என்று சொல்லி மறுநாளே, மறு நிமிஷமே, போலீஸினுடைய உளவுத் துறை முதலமைச்சருக்குத் தகவல் கொடுக்கும். முதலமைச்சருக்குத் தெரியாத காரியம் இல்லை. ஆனால், அவர் நடவடிக்கை எடுக்கச் சொன்னால், நடவடிக்கை எடுத்து இருப்பார்கள். காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லா சாதி, மதத்தினருக்கும், எல்லா கட்சியினருக்கும், நீங்கள்தான் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். Police இலாகா உங்கள் கையிலேதான் இருக்கிறது. மதுரையிலே வந்து லீலாவதி கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்...

[2000 மே 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம், நீங்கள் இதைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, நடவடிக்கை எடுத்தீர்கள்; அதேமாதிரி, partiality இல்லாமல் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். Police கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன; தமது கட்சிக்காரராக இருந்தாலும், யாராக இருந்தாலும், நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்; அங்குள்ள காவல் துறை செயல்படவில்லை என்று சொல்கிறார்கள்; ஆகவே, ஒன்று, நீங்கள் முதலமைச்சராக இருப்பதால், கட்சிக்காரன் கோபித்துக் கொள்வானோ, அங்குள்ள கட்சிக்காரன் வருத்தப்படுவானோ என்று நினைத்திருந்தால், C.B., C.I.D. உங்கள் Control-ல் இருக்கிறது; ஆகவே C.B.C.I.D. விசாரணைக்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயகத்தில் பேச்சுரிமை, எழுத்துரிமை எல்லாமே இருக்கிறது. கொலை செய்வது என்பது ஒரு கலையாக இருக்கக்கூடாது; தமிழ்நாட்டிலே அது கலையாக இருக்கிறது. மர்மயோகி படத்திலே கொலை செய்வது ஒரு கலை என்று டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே வசனம் எழுதி இருக்கிறார்கள். அதனாலே கூலிக்குக் கொலை செய்வது ஒன்று. அரசியல் காழ்ப்புணர்ச்சியிலே கொலை செய்தார்களா அல்லது சொந்தபந்தத்திலே கொலை செய்தார்களா என்பது ஒரே புதிராக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, கூலிக்குக் கொலை செய்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். தலையை வெட்டுவதற்கு 2 இலட்சம் ரூபாய், காலை வெட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாய், கையை வெட்டுவதற்கு இவ்வளவு ரூபாய் என்று இருக்கிறது. கையால் காயம் ஏற்படுத்தி, இந்தமாதிரி குளத்தில் போடுவதற்கு என்று ஒரு ரேட் இருக்கிறது. அதேமாதிரி எரித்து விடுகிறார்கள். பிணத்தை எரித்து விடுகிறார்கள். அடையாளம் தெரியாமல் ஆக்கிவிடுகிறார்கள், அதற்கு என்று ஒரு ரேட் இருக்கிறது. தமிழ்நாட்டில் கூலிப் படைகள் இருக்கின்றன. இந்தக் கூலிப் படைகளை ஒழிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? கூலிப் படைகளுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். ஆகவே தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய கட்சிக்காரராக இருந்தாலும், அவர்மீது நடவடிக்கை எடுத்திருந்தாலும், மனது கொஞ்சம் வேதனைத்தான் படும், "நம்முடைய கட்சிக்காரர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா" என்று. ஆகவே, சி.பி.ஐ. விசாரணைக்கு இதை உட்படுத்தி, நடவடிக்கை எடுக்க மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றஞ்செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற



2000 மே 11] [திரு. இரா. தாமரைக்கனி]

நம்பிக்கையில்தான் நாங்கள், எல்லாக் கட்சிக்காரர்களும், பேசுகிறோம். மீதி உங்கள் பிரியம்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்வு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமலிங்கம், திரு. ஞானசேகரன், திரு. சிவபுண்ணியம், திரு. ஹேமச்சந்திரன் திரு. தாமரைக்கனி ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையினை வைத்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகள் எனக்கு அனுப்பியுள்ள தகவல்.

திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர், முன்னாள் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. எம்.ஜி. சுந்தரமூர்த்தி 8-5-2000 அன்று திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் அவரது தம்பி திரு. அரிதாஸ், அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகத் தெரிவித்ததன் பேரில் குற்ற எண் 125/2000-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

9-5-2000 அன்று காலை 9-00 மணியளவில் திருபுவனம் குட்டையில் அரிதாஸ் சடலம் கிடப்பதாக சுந்தரமூர்த்தி மீண்டும் புகார் செய்தார். அதன் பேரில் வழக்கு 'சந்தேக மரணம்' என்ற பிரிவுக்கு மாற்றப்பட்டது. காவல் துறையினர் அரிதாஸின் சடலத்தை திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக எடுத்துச் சென்றார்கள். பிரேதப் பரிசோதனையில் அரிதாஸினுடைய உடம்பில் இரண்டு தொடைகளிலும் சிராய்த்த காயம் காணப்பட்டது. இது தவிர, வேறு காயங்கள் இல்லை. பிரேதப் பரிசோதனை முடிந்த பிறகு உள் உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அரிதாஸ் சடலம் வாகனத்தில் ஏற்றப்பட்டு அவருடைய வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது.

மாலை 6-30 மணியளவில் பிரேதத்தை எடுத்துச் சென்ற வாகனத்தோடு ஊர்வலமாக வந்து திருபுவனம் கடைத்தெருவில் நிறுத்தி அரிதாஸ் இறப்புக்குக் காரணமான குற்றவாளியைக் கைது செய்யக்கோரி இறந்தவரின் உறவினர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸாரும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதுபோன்ற சாலை மறியல்களால்

கோரிக்கையை வலியுறுத்துவது ஒரு புறம் இருந்தாலும்கூட, சில நேரங்களில் சாலை மறியலைக் கைவிட வேண்டுமென்பதற்காக காவல் துறையினரேகூட யாரையாவது இரண்டு பேரைக் கைது செய்வோம் என்று, சம்பந்தம் இல்லாத நிரபராதிகளைக்கூட கைது செய்துவிடக் கூடும் என்பதை சாலை மறியலில் ஈடுபடுகின்றவர்கள் அல்லது அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர்கள் உணர வேண்டுமென்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு கும்பகோணம் வருவாய்க் கோட்ட அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சென்று பேச்சுவார்த்தை நடத்தி அது பயன்தராமல் போகவே, இரவு 9-20 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பிலே உள்ளவர்) மற்றும் காவல் கண்காணிப்பாளர் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தி இவ்வழக்கை மாவட்டக் குற்றப் பிரிவிற்கு மாற்றுவதாக உறுதி அளித்ததன் பேரில் சாலை மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது. இரவு 11-45 மணியளவில் உடல் தகனம் செய்யப்பட்டது. தற்போது அசம்பாவிதம் ஏதுமில்லை எனறாலும்கூட, இந்த நிகழ்வையும், வழக்கையும் C.B., C.I.D. பிரிவுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். இறந்து போனவருடைய கட்சி சார்பில் அவர்கள் பேசிய காரணத்தினாலும், அந்தக் கட்சிக்கு உரிய குரல் என்கின்ற முறையினாலும், மற்ற உறுப்பினர்கள் வலியுறுத்தலின் பேரிலும், இந்த அரசு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நியாயம் வழங்கக் கூடியது, நியாயத்தை நிலைநாட்டக் கூடியது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கின்ற வகையிலும், இந்த வழக்கை சி.பி. சி.ஐ.டி.-க்கு இந்த அரசு மாற்றித் தரும் என்ற செய்தியை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டதாக நம்முடைய தாமரைக்கனி சொன்னார். அதெல்லாம் அந்தக் காலம். காவல் துறையினுடைய கைகளைக் கட்டிப்போட்டு, கொடவாசல் நடத்துவதெல்லாம் அந்தக் காலம், இந்தக் காலத்தில் அல்ல என்பதையும் தெரிவித்து உரிய நடவடிக்கைகளை — ஆளுங்கட்சியா, எதிர்க்கட்சியா என்று பாராமல் — ஆளுங்கட்சிக்காரராக இருந்தாலும் எடுப்பதற்கு காவல் துறையினருக்கு இந்த அவையின் மூலமாக நான் அறிவுறுத்துகின்றேன். C.B., C.I.D. விசாரணையும் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அந்த விசாரணைக்குப் பிறகு அந்தக் குடும்பத்திற்குத் தர வேண்டிய நிவாரண நிதியைப் பற்றிப் பிறகு அறிவிக்கலாம் என்று இந்த நேரத்திலே உறுதி கூறி, இந்த அளவில் அமைகின்றேன்.

முற்பகல் *10-45*

## (ஆ) திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை சாய்ந்து பெண் இறப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருவில்லிபுத்தூரில் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை விழுந்து பெண் ஒருவர் இறந்தது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாகப் பேச வேண்டும், திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நகர அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா அவர்களுடைய சிலை இருக்கிறது. இந்தச் சிலையையும், அண்ணா பேருந்து நிலையத்தினுடைய வளைவையும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். அந்த அண்ணா சிலையினுடைய அஸ்திவாரம் சரியாக இல்லாத காரணத்தாலும், திருவில்லிபுத்தூர் நகரில் கனமழை பெய்த காரணத்தாலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு சோடியம் லைட் பக்கத்தில் போட்டார்கள், அதனால் ஒரு பெரிய பள்ளம் தோண்டப்பட்டது, திருவில்லிபுத்தூர் அருகே உள்ள வத்திராயிருப்புக்கு அருகே உள்ள சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குச் செல்வதற்காக இலட்சுமி என்ற அம்மையார் அவர்கள் திருவில்லிபுத்தூர் பஸ் நிலையத்திற்கு வந்தார்கள். வரும்போது, மழை பெய்த காரணத்தாலும், அண்ணா சிலை ரொம்ப கொதிம்பிபோய் அஸ்திவாரம் சரியில்லாத காரணத்தினாலும் திடீரென்று அண்ணா சிலை விழுந்து அந்தப் பெண்ணை பள்ளத்தில் அமுக்கி இறக்க நேரிட்டது. அந்த அம்மையாருக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு மகனும் இருக்கிறார்கள்; ஏழையெளிய தச்சுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; அன்றன்றைக்கு மரவேலை செய்து பிழைக்கின்ற குடும்பத்தைச்

சேர்ந்தவர். இதே அவையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது, டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, இதே சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குச் செல்லும்போது, காட்டாற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட 38 பேர் குடும்பங்களுக்கு நிதியுதவி பண்ண வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது முறையிட்டவுடனே எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டாற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டு இறந்த அந்தக் குடும்பங்களுக்கு நிதி உதவியெல்லாம் செய்தார்கள். ஆகவே, சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குப் போய் ஏதாவது வேண்டுதல் செய்து குடும்பம் நல்ல நிலையில் வாழ வேண்டுமென்று சொல்லி என்னென்ன கனவுகளைக் கண்டார்களோ அப்பேர்ப்பட்ட அந்தத் தாயினுடைய வயிற்றில் பிறந்திருக்கிற 3 குழந்தைகளுக்கு உதவ வேண்டும். ஏழைக் குடும்பம். அண்ணா சிலை நீங்கள் திறந்து வைத்த சிலை. அந்த அண்ணா சிலையை தி.மு.க. சார்பிலே வைத்தாலும், நாங்கள் அ.தி.மு.க. சார்பிலே சிலைக்கு முன் கல்வெட்டு வைத்து பக்கத்தில் எம்.ஜி.ஆர். சிலையை வைத்திருக்கிறோம். அதற்கு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அதற்காக ரொம்ப நன்றி. ஆகவே அண்ணா சிலை விழுந்து இறந்த அந்த இலட்சுமி அம்மாள் குடும்பத்திற்கு கருணை உள்ளத்தோடு — உங்களிடம் நிதி இருக்கிறது, பெயரும் கலைஞர் கருணாநிதி என்று இருக்கிறது — நிதி கொடுத்து நீங்கள் உதவி செய்யுமாறு கேட்டு அந்தக் குடும்பத்தை வாழ வைக்க வேண்டுமாய்க் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-8-1999 அன்று திருவில்லிபுத்தூரில் கனமழை பெய்திருந்தது. அங்கே நகர்மன்ற பேருந்து நிலையம் அருகில் அண்ணா அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலை ஒன்று இருந்தது. 11-8-1999 தேதியை ஞாபகப்படுத்துகின்றேன். இது அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல. இருந்தாலும்கூட தாமரைக்கனி என்பதால் இந்த ஒத்திவைப்பு அல்லது கவனமூட்டல் இடம் பெற்றிருக்கிறது. அதற்கு ஹைமாஸ்ட் விளக்கு வைப்பதற்காக பிளாட்பாரத்தின் அருகே மண் தோண்டப்பட்டிருந்தது. அன்று பெய்த மழையினால் அண்ணா அவர்களின் சிலையும் அதற்கு





மேலே போடப்பட்டிருந்த சிமெண்டிலான கூரையும் கீழே சாய்ந்து விட்டது. அப்போது சிலை அருகே இருந்த சிவகாசி நகரைச் சேர்ந்த செல்லையா என்பவருடைய மனைவி 35 வயதுடைய இலட்சுமி சிலையின் பீடத்தின் அடியில் சிக்கி இறந்துவிட்டார்.

மேற்படி பணி செய்த ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் இறந்தவருடைய கணவருக்கு நஷ்ட ஈடாக 25 ஆயிரம் ரூபாயை அளித்துள்ளார். அண்ணா சிலை கீழே விழுந்தபோதிலும் சிலைக்கு பாதிப்பு ஏதுமில்லை. மறுபடியும் 27-1-2000 அன்று அதே இடத்தில் சிலை வைக்கப்பட்டுவிட்டது. இதுகுறித்து திருவில்லிபுத்தூர் நகரக் காவல் நிலையத்தில் குற்ற எண் 747/99 இல் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து அரசு நிவாரணத் திட்டங்களின்கீழ் நிவாரணத் தொகை வழங்க பரிசீலனை செய்யப்பட்டது. இறந்தவருடைய கணவரான திரு. செல்லையா வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவராக இருப்பதால் நலிந்தோர் உதவித் திட்டத்தின்கீழ் தகுதியற்றவர் ஆகிறார். விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்குவதற்கும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 47 இனங்களில் இந்த இனம் சேர்க்கப்படவில்லை. இருந்தாலும் அவரது குடும்ப நிலையையும் விபத்து நடந்த தன்மையையும் எண்ணிப் பார்த்து அந்தக் குழந்தைகளுடைய பராமரிப்பை எண்ணிப் பார்த்து, 5 நிமிடங்களுக்கு முன்புதான் திரு. தாமரைக்கனி அவர்கள் இந்த அரசைத் தாக்கிப் பேசியிருந்தாலும்கூட, திரு. தாமரைக்கனி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று முதல்வர் நிதியிலிருந்து 15,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஏகப்பட்டது, பேசுவதற்கு இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள்.

## 4. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரத்திற்குத் தொலைபேசியில் வந்த மிரட்டல்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நேற்று இரவு நான் என்னுடைய அறையிலே இருந்தபோது நள்ளிரவு டெலிபோன் வந்தது. சுமார் 12.00 மணியளவில் டெலிபோனில் பேசிய நபர் என்னை ஒருமையில் பேசி, "நீ என்ன, எங்கள் மாவட்ட அமைச்சரைப் பற்றி ஒவ்வொரு முறையும் புகார் கூறிக் கொண்டிருக்கிறாய்; அவர் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்து இருக்கின்றாய்; அந்த உரிமைப் பிரச்சினையை வாபஸ் வாங்க வேண்டும். இல்லையென்றால் உன்னைத் தொலைத்து விடுவோம்" என்று கூறி, "நீ இராசிபுரம் செல்லும்போது சேலம் வழியாகத்தானே செல்வாய்; உன்னுடைய உயிரை எடுக்காமல் விட மாட்டோம்" என்று கூறினார். "நீ யார் பேசுகிறாய்" என்று கேட்டபோது டெலிபோனை வைத்துவிட்டார். அதற்குப் பிறகு 15 நிமிடம் கழித்து அதே குரல் மீண்டும் பேசியது. "நீ இராசிபுரம் வரும்போது உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம்" என்று மீண்டும், மீண்டும் பேசினார். ரிசீவரை எடுத்துக் கீழே வைத்துவிட்டேன். அதற்குப் பிறகு 5.00 மணியளவில் உங்களுக்கு நான் நடந்த நிகழ்ச்சியினைத் தொலைபேசியில் கூறினேன். இங்கே போலீசில் நான் புகார் கொடுத்திருக்கின்றேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இங்கே ரிக்கார்டில் இருக்காது. நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன். நீங்கள் மரபை மீறிப் பேசுகிறீர்கள். உரிமைப் பிரச்சினை கொடுத்தாயிற்று. அது என்னவென்று நான் விசாரிப்பேன். அந்த அளவோடு நிற்க வேண்டுமே ஒழிய ** என்று நான் பேசிவிட முடியுமா? ஆகவே, நீங்கள் இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பேச்சுரிமை மறுக்கப்படுகிறது. சுதந்திரமாக நான் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. ** என்று கூறிக்கொண்டு நீங்கள் தகுந்த பாதுகாப்பு எனக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். என்னுடைய உயிரைப் பற்றிக் கவலைப்பட்டது கிடையாது. அண்ணா தி.மு.க. 1972-லே இருந்து — நாங்கள் — பல உயிர்களைப் பறிகொடுத்துத் தான் இந்த இயக்கம் இன்றைக்கு வந்திருக்கின்றதேயொழிய பல....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.






**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உயிரைப் பற்றிக் கவலை இல்லையென்றால் எதற்கு எழுந்து உரிமைப் பிரச்சினை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பொறுப்பைச் சொல்கிறேன் நான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டிய விவரத்தைச் சொல்லிவிட்டீர்கள். நான் போலீஸ் துறைத் தலைவரை என் அறைக்கு அழைத்து, என்ன, ஏது என்று விசாரணை செய்து, உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமானால் கொடுக்கச் சொல்கிறேன். உங்களுக்குத் தனிப்பட்ட முறையிலே உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் அரசியல் ரீதியாக, "உயிர் போனாலும் பரவாயில்லை" என்று பேசுவதில் அர்த்தம் இல்லை. உட்காருங்கள். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடு) நான் இல்லையென்று சொல்லவில்லை. காவல் துறைத் தலைவரையே என் அறைக்கு அழைத்து என்னவென்று விசாரித்து உங்களுக்காக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே என்மீது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை. இன்னொரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **என்பதை அவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட்டேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நாங்கள் எல்லாம், எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். Official resolution-ஐ முடித்துவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 மே 11

# 5. கவன ஈர்ப்பு

## (அ) திருவில்லிபுத்தூர் நகர எல்லைக்குள் கண்மாய் மற்றும் கால்வாய்களில் தூர் எடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் நகர எல்லைக்குள் அமைந்துள்ள கண்மாய் மற்றும் கால்வாய்களில் தூர் எடுக்க வேண்டிய அவசியம் குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் நகராட்சி எல்லைக்குள் பெரியகுளம் கண்மாய் மற்றும் வடமலைக்குறிச்சி கண்மாய் ஆகிய இரண்டு பொதுப் பணித் துறைக் கண்மாய்கள் அமைந்துள்ளன. அதன் அருகே அத்திகுளம், செங்குளம் கண்மாய் மற்றும் கொலூர் குளம் அமைந்துள்ளன. பெரியகுளம் கண்மாயிலிருந்து வழிந்தோடுவதன் மூலம் வெளியேறும் நீர் நகரினுள் 800 மீட்டர் சென்று அதன்பின் நான்கு பிரிவுகளாகப் பிரிந்து அத்திகுளம், செங்குளம் கண்மாய், கொலூர் குளம், இராஜகுலராமப்பேரி கண்மாய் மற்றும் சோழன் குளம் கண்மாய் ஆகிய நான்கு கண்மாய்களுக்குச் செல்கின்றது. உபரி நீர்க் கால்வாயின் மொத்த நீளம் 4 கிலோ மீட்டர் ஆகும். கொலூர் குளம், ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ள கண்மாய் ஆகும். மற்ற மூன்று கண்மாய்களும் பொதுப் பணித் துறை பொறுப்பில் உள்ள கண்மாய்கள் ஆகும்.

பெரியகுளம் கண்மாயிலிருந்து பிரியும் உபரி நீர்க் கால்வாய், நகரின் உள்ளே செல்வதால், நகரில் சேரும் குப்பைகள் மற்றும் இடிந்த கட்டடங்களிலுள்ள செங்கல், காரை ஆகியவற்றைக் கால்வாயின் உள்ளே போட்டுள்ளனர். மேலும், முட்செடிகள், புதர்கள் ஆகியவை வளர்ந்து





உபரி நீர்க்கால்வாயின் கொள்ளளவைக் குறைத்துள்ளன. ஆகவே, பெரும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் ஊருக்குள் இருக்கும் 10 சிறு பாலங்களில் அடைப்பு ஏற்பட்டு, கால்வாயிலிருந்து நீர் வழிந்து ஊருக்குள் செல்லும் நிலைமை உள்ளது. இதனைத் தடுத்திட 4 கிலோ மீட்டர் நீளம் உள்ள நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர் வாரிச் சீரமைக்க சுமார் 20 இலட்சம் ரூபாய் நிதி தேவைப்படும்.

வடமலைக்குறிச்சி கண்மாயிலிருந்து வெளியேறும் நீர் அத்திகுளம், செங்குளம் கண்மாய்க்கும் செல்கின்றது. உபரி நீர்க்கால்வாயின் நீளம் 700 மீட்டர் ஆகும். இக்கால்வாயும் திருவில்லிபுத்தூர் ஊருக்குள்ளே செல்வதால் பெரியகுளம் கால்வாயைப் போன்றே குப்பைகள் மற்றும் காரைகள் போடப்பட்டு, கால்வாயின் கொள்ளளவு குறைக்கப்பட்டு மழைக் காலங்களில் தண்ணீர் வழிந்து திருவில்லிபுத்தூர் நகருக்குள் செல்லும் நிலைமை உள்ளது. இக்கால்வாயைத் தூர் எடுத்துச் சீரமைப்பதற்கு ரூ.2.50 இலட்சம் நிதி தேவைப்படும்.

திருவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள 46 கண்மாய்கள் மற்றும் கால்வாய்களைப் பராமரிப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5.30 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. எனவே மேற்கூறிய தூர்வாரும் பணிகளைப் பராமரிப்பு நிதியிலிருந்து எடுத்துச் செயல்படுத்த இயலாது. எனினும் எதிர்வரும் காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப தூர் வாரும் பணிகள், ஆய்வு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த குறிப்பில் தெரிவித்துள்ளபடி திருவில்லிபுத்தூர் நகரைச் சுற்றி பொதுப் பணித் துறைக் கண்மாய்கள் இருக்கின்றன. அந்தக் கண்மாய்கள் நிறைந்து வருகிறபோது கால்வாயிலுள்ள தண்ணீர் திருவில்லிபுத்தூர் நகருக்குள் புகுந்து நெசவாளர் குடியிருப்பு, ஏழை எளிய அரிஜன குடியிருப்புகளுக்குள் நுழைந்து, நெசவாளர் தளவாடச் சாமான்கள், நெசவுத் தொழில் சாமான்களை எல்லாம் அடித்துச் சென்று விடுகின்றன. வீடுகள் எல்லாம் இடிந்துவிடுகின்றன. இதுவரையில் அந்தக் கால்வாய்கள் சீரமைக்கப்படவில்லை.

*முற்பகல் 10-55*

அதுமட்டுமல்ல, தூர் வாராத காரணத்தால், மேடாக இருக்கின்ற காரணத்தால் கன்னித் தீவு மாதிரி காட்சியளிக்கிறது. ஊருக்குள் முழுவதும் தண்ணீர் புகுந்து விடுகிறது. இதனால் உயிர்ச் சேதமும்

[திரு. இரா. தாமரைக்கனி] [2000 மே 11

நிறைய நடந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்குக் கொடுத்துள்ள குறிப்பில், திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தூர் வாருவதற்கு, பொதுப் பணித் துறை கண்மாய்ப் பராமரிப்புக்காக 5½ இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதனால் இதைச் சீர்படுத்துவதற்கு ஏதாவது special grant இருந்தால் செய்ய முடியும் என்ற அளவில், பொதுப் பணித் துறை அதிகாரிகள் அமைச்சருக்குச் சொல்லி, அமைச்சர் அவர்கள் எனக்குக் குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, சிறப்பினமாகக் கருதி, திருவில்லிபுத்தூர் நகரிலுள்ள பொதுமக்கள் நலனைக் கருதி, அந்தப் பொதுப் பணித் துறைக் கால்வாய்களில் தூர் வாருவதற்கு வேண்டிய நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையைச் சார்ந்த பெரியகுளம் கண்மாய், வடமலைக்குறிச்சி கண்மாய் ஆகிய இரண்டும் திருவில்லிபுத்தூர் நகர எல்லைக்கு உட்பட்ட பகுதியாகும். அதிலிருந்து வருகின்ற தண்ணீர் செங்குளம், அத்திகுளம், கொலூர் குளம், இராஜகுலராமப்பேரி குளம் ஆகிய குளங்களுக்குச் சென்று மீதியுள்ள உபரி நீர் அப்படி ஓடுகிறது. பெரியகுளம் கண்மாயிலிருந்து வருகின்ற தண்ணீர் 4 கிலோ மீட்டர் தூரமும், வடமலைக்குறிச்சி கண்மாயிலிருந்து வருகின்ற தண்ணீர் 700 மீட்டர் தூரமும் நகரத்தில் ஓடுகிறது. ஆனால் உங்கள் நகரத்தில் இருப்பவர்கள் குப்பையையும் அதிலேதான் கொட்டுகிறார்கள், வீடு இடிந்தால் மண்ணையும் அதிலேதான் போடுகிறார்கள். அதன் காரணமாக 10 சிறு பாலங்கள் அடைபட்டு மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி சேதாரம் ஏற்படுகிறது என்பதை உணர்கிறோம். எனவே அது குறித்து ஒரு மதிப்பீடு தயார் செய்யச் சொல்லியிருக்கிறோம். அதில் இந்த ஆண்டு தூர் வாருகின்ற பணியிலேகூட ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளலாம் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) அருப்புக்கோட்டை இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் திரு. கே.எம். விஜயகுமார் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.



2000 மே 11]

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய நெடுஞ்சாலை எண் 45-பி அருப்புக்கோட்டை நகராட்சி எல்லையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இரயில்வே மேம்பாலம் திருச்சி விராலிமலை-துவரங்குறிச்சி-மேலூர்-மதுரை-அருப்புக்கோட்டை தூத்துக்குடி சாலையில் கி.மீ. 46/6-47/2-ல் (தேசிய நெடுஞ்சாலை எண் 45பி) அமைந்துள்ளது. மேற்கண்ட இரயில்வே மேம்பாலம் அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. இரயில்வே மேம்பாலம் நல்ல நிலையில் உள்ளது. மேம்பாலத்திற்குச் செல்லும் அணுகுசாலை குறுகலாக உள்ளது. அதனை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய ரூ.92.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்றிரண்டு இலட்சம் மட்டும்) தேவைப்படும்.

இப்பணி அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம்பெறவில்லை. இம்மாதிரி அதிகத் தொகை தேவைப்படும் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவியுடன் திட்டங்களை எடுத்துக்கொள்ளும்போது, இப்பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு துறை அதிகாரிகள் தவறான தகவல் ஒன்றைத் தந்திருக்கின்றார்கள். இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்ற இரயில்வே மேம்பாலம் தேசிய நெடுஞ்சாலை 45-பி-ல் அமைந்திருப்பதாக விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தேசிய நெடுஞ்சாலையில் இல்லை. அருப்புக்கோட்டை நகரில் அமைந்துள்ளது. அது தேசிய நெடுஞ்சாலை அமைப்புக்குள் வரவில்லை.

ஏற்கெனவே இந்த மேம்பாலம் கட்டப்பட்டபோது குறுகலாக 5½ மீட்டர் அகலத்திலே கட்டப்பட்டுள்ளது. தற்போது இருபக்கமும் அப்ரோச் மண் சரிந்து ஏறக்குறைய 4 மீட்டர் அகலம் மட்டுமே உள்ளது. இரண்டு பேருந்துகள் எதிர் எதிரே அந்தப் பாலத்தைக் கடக்கும்போது நின்று, நிதானித்து மிகவும் ஜாக்கிரதையாக விலகிச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அடிக்கடி பேருந்துகள் அந்தப் பாலத்திலே கடக்கும்போது பாலத்திலிருந்து சரிந்து விழக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டு, அதிக அளவிலே விபத்துகள் நடந்துகொண்டிருக்கின்றன. பாதசாரிகளும், இரு சக்கர வாகன ஓட்டுநர்களும் அந்தப் பாலத்தைக் கடக்கும்போது, எதிரே பேருந்துகள் அல்லது லாரிகள் வரும்போது விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. மேலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருப்புக்கோட்டை நகரிலே உழவர் சந்தையைத் திறக்க வந்திருந்தபோது அந்த விழா மேடையிலேயே நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** இந்த நிதி ஆண்டிலேயே—இந்தப் பாலத்தை அகலப்படுத்தும் பணி நடைபெறும் என்ற உறுதிமொழியை அருப்புக்கோட்டை நகர மக்கள் மகிழத்தக்க வகையில் கூறிவிட்டு வந்தார்கள். எனவே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே அருப்புக்கோட்டை நகர இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துவதற்கு தனி நிதி ஒதுக்கீடு செய்து, இந்தப் பணியை முடித்து அருப்புக்கோட்டை நகர மக்களுடைய அச்சத்தைப் போக்க வழிவகுக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டு, அமைகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டைக்கு அருகிலே உள்ள அந்த இரயில்வே மேம்பாலத்தினுடைய நிலைமை குறித்து நானும் நன்றாக அறிவேன். தொடக்கத்தில் அந்த மேம்பாலம் அமைக்கப்பட்டபொழுது இரயில்வே மேம்பாலம் இருக்கிற அளவிற்கு அணுகுச் சாலைகள் அமைக்கப்படவில்லை. முதலிலேயே அந்தத் தவறு நடந்திருக்கிறது. இரயில்வே மேம்பாலம் 12 மீட்டர் அகலம் இருக்கிறது. அணுகுச் சாலை 6 மீட்டர் அகலம்தான் இருக்கிறது. எனவே, அந்த அணுகுச்



சாலையை அகலப்படுத்த வேண்டும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. நிதியாதாரம்தான் இதிலே முக்கியம். எனவே இந்தப் பணியை ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக நிதியாதாரம் பெற்றுச் செயல்படுத்தலாமா என்று துறை ஆலோசித்து அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 92 இலட்சம் ரூபாய்க்கான அந்த மதிப்பீடு இப்போது துறையினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. அரசின் பரிசீலனைக்குப் போகவேண்டும். அரசு அனுமதிக்கிறபொழுது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இதனுடைய அவசிய முக்கியத்துவத்தை அரசும் உணருகிறது; துறையும் உணருகிறது.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

### (இ) மத்திய, மாநில அரசுகளின் செயலைக் கண்டித்து வேலைநிறுத்தம்

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியா முழுவதும் நம்முடைய மத்திய, மாநில அரசுகளினுடைய நடவடிக்கைகளைக் கண்டித்து மிகப் பெரியதொரு மக்கள் போராட்டம் நடந்து கொண்டிருக்கிற இந்த வேளையில...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தியா முழுவதும் எப்படி மாநில அரசிற்காக நடக்கும்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மத்திய மாநில அரசுகளைக் கண்டித்து, நம்முடைய தமிழகத்தில் ஏற்படுகின்ற சூழ்நிலைகளையெல்லாம் விவரமாக இந்த அவையில் பேசுவதற்கு, இங்கே இருக்கின்ற எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து தங்களுக்கு ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் அதை எடுத்து, இங்கே விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** இதை எடுத்துக்கொண்டால் சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு நேர விவாதம்? (குறுக்கீடு) மானியக் கோரிக்கை என்ன ஆவது? (குறுக்கீடு) இரண்டு மணி நேரமா? இல்லை, உங்களுக்கு வேறுவிதமான முடிவு இருந்தால், அதை அறிவித்துவிட்டுப் போகலாம். (சிரிப்பு) சுருக்கமாகப் பேசுவதாக இருந்தால் நான் இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதிக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இதே கோரிக்கைகளுக்காக நாடு தழுவிய போராட்டம் நடைபெற்றபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவான நிலையை எடுத்தது. ஆனால், அதே கோரிக்கைகளை இன்றைக்கு முன்வைத்துப் போராடுகிறபோது, எதிரான நிலையை எடுத்திருக்கிறது. எனவே, இந்தப் போராட்டத்தின்பால் மாநில அரசு எதிரான அணுகுமுறைகளை முன்வைத்திருக்கின்ற காரணத்தினால், இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று நாங்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். எனவே, இதுகுறித்து மாநில அரசின் நிலை என்ன என்பதைத் தெரிந்து கொண்டால்தான் அதற்கு ஒத்தபடி எங்களுடைய கருத்துகளை வெளியிட முடியும் என்பது எங்களுடைய கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் கருத்துத் தெரிவித்துக் கொண்டிருப்பது முறையல்ல.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் அவர்கள். ஏன் ஈடுபட்டோம் என்பதை அவர்கள் தெரிவித்தால், ஏன் ஈடுபடத் தேவையில்லை என்பதை நாம் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன், சுருக்கமாகப் பேச வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மத்திய அரசு விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு உர விலையை ஏற்றியது. ஏழைகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு மண்ணெண்ணெய் விலையை ஏற்றினார்கள் அதுபோல அரிசி விலையை ஏற்றினார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அந்த அரிசி விலையை தமிழக அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்துவிட்டார்கள். இருந்தாலும்கூட, நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற வரிப்பணம்தான் அதிலே பாழாகிறது என்றுகூட நம்முடைய உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள் பேசுகின்றபொழுது, ஒரு தோளிலே இருக்கிற சுமையை இன்னொரு தோளுக்கு மாற்றுகிறீர்களே தவிர, இதனால் நம்முடைய தமிழகத்திற்கு இழப்பு என்பதை மிக விளக்கமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதேபோல, மத்திய தர வகுப்பினர்களை மிக மிகப் பாதிக்கக்கூடிய வகையில் சமையல் Gas விலையை ஏற்றினார்கள். தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான



தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய சேலம் உருட்டாலையை, நாம் எவ்வளவோ கேட்டுக்கொண்டும்கூட, இந்த அவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியும்கூட, மத்திய அரசு போட்ட தீர்மானத்தை இன்னும் அவர்கள் விலக்கிக்கொள்ளவில்லை. அந்த உருட்டாலை தனியாருக்குப் போகக்கூடிய மிகப் பெரிய ஆபத்தான சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, மின்சாரத் தட்டுப்பாடு என்பது, மிகப் பெரியதொரு கடுமையான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகளுக்கும் சரி, தொழிற்சாலைகளுக்கும் சரி, மற்ற இடங்களிலேயும் சரி, மின்சாரத் தட்டுப்பாடு என்பது மிகக் கடுமையாக இருந்து கொண்டிருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்கள் எல்லாம் மிக அதிகப்படியான விலைக்கு விற்பதன் காரணமாக, அவற்றை வாங்கிச் சாப்பிடுபவர்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பஸ் கட்டண உயர்வைப் பற்றிப் பல தடவை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு, நம்முடைய தமிழக அரசு எந்தவிதமான முயற்சியையும் எடுக்கவில்லை. அதேபோல், பல பிரச்சினைகளில் நம்முடைய தமிழக அரசு, மத்திய அரசோடு இணைந்து செயல்படுகின்ற ஒரு சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறதே தவிர, இந்தத் தமிழக மக்களுடைய நன்மையைக் கருதி, ஏழையெளிய மக்களுடைய முன்னேற்றத்தைக் கருதி, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்வதிலே எந்தவிதமான தயக்கமும் காட்டத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நம்முடைய மத்திய, மாநில அரசுகளுடைய, மக்கள் விரோதச் செயல்களைக் கண்டிக்கிற வகையில், இந்த அவையில்—நம்முடைய அவையிலே—ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். குறிப்பாக மற்ற எதுவும் இல்லாவிட்டாலும்கூட, சேலம் உருட்டாலை பழைய படி அரசிடம் வந்துவிட்டதா என்பதை இங்கே அறிவிக்க வேண்டும். அதேபோல், மண்ணெண்ணெய் விலையை—நாங்கள் என்ன கேட்டோம் என்று சொன்னால், நீங்கள் எப்படி "அரிசி விலையை நாமே ஏற்றுக் கொள்கிறோம்" என்று சொன்னீர்களோ, அதேபோல் மண்ணெண்ணெய் விலையையாவது—நம்முடைய தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை எல்லாம் வைத்து, நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

[2000 மே 11

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்வீர்களே? தத்துவங்கள் எல்லாம் பேசாதீர்கள். நீங்கள் இதுகுறித்து மட்டும் சொல்லுங்கள். திரு. கே. சுப்பராயன். (குறுக்கீடு) பேரவைத் தலைவருக்கு உரிமையைக் கொடுக்கமாட்டோம் என்கிறீர்களே? உங்கள் கட்சியிலே யார் பேச வேண்டுமென்று நான் முடிவெடுத்தால், நீங்கள் மாற்றுகிறீர்கள்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. திரு. பழனிசாமி பேசுவதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், தாங்கள் நினைப்பதுபோல், நீண்ட நேரம் நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

மிக இராஜதந்திரமான முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே விவாதத்திற்கு அனுமதித்து இருக்கிறார்கள். அவருடைய நீண்ட, பழுத்த அனுபவங்களின் முதிர்ச்சி வெளிப்படுகிறது என்கிற முறையிலே நான் அவருடைய திறமைக்குத் தலைவணங்கித்தான் என்னுடைய பேச்சைத் தொடங்க இருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆனால், ஒரு துரதிருஷ்டம் என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் முன்னரே குறிப்பிட்டது மாதிரி, மே 11 ஆம் தேதி இந்திய நாடு முழுவதும் நடைபெறுகிற இந்த வேலைநிறுத்தம், 23 கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறுகிறது. இந்த 23 கோரிக்கைகளிலே பெரும்பகுதி மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயங்கள்தான். ஆனால், மத்திய அரசு சம்பந்தப்பட்ட இதே விஷயங்கள் கடந்த முறை முன்வைக்கப்பட்டு வேலைநிறுத்தம் நடைபெற்றபோது, திராவிட முன்னேற்றக் கழகமும், அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அங்கம் பெறுகிறவர்களால் தலைமையேற்று வழி நடத்தப்படுகிற L.P.F.-உம் ஆதரவு அளித்தன. ஆனால், துரதிருஷ்டவசமாக இப்போது எதிர்ப்பாக நிற்பதுதான் வேதனையாக இருக்கிறது. நாங்கள்கூட ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு.-வின் சார்பில் கூட்டாக அவற்றினுடைய மாநிலப் பொதுச் செயலாளர்களைக் கலந்துகொண்டு, "திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்; இந்த வேலைநிறுத்தத்தை ஆதரிக்க வேண்டும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குக் கடிதத்தைக் கொடுத்தோம். பத்திரிகையிலே நாங்கள் வெளியிட்டோம். ஆனால், அதைக்கூட எங்களுக்கு இசைவான பதில் இல்லை என்பதும் எங்களுக்கு வருத்தமளிக்கிறது. இந்தப் போராட்டம், மாநில அரசு



2000 மே 11] [திரு. கே. சுப்பராயன்]

சம்பந்தப்பட்ட விஷயங்கள் பெரிதும் கொண்டது இல்லை. மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயங்கள்தான். ஆனால், மத்தியில் நாடாளுகின்ற பொறுப்பில் திராவிட முன்னேற்றக் கழகமும் அங்கம் பெற்ற ஒரு கட்சி என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கான தார்மீகப் பொறுப்பு ஏற்க வேண்டிய, தவிர்க்க முடியாத அரசியல் நிர்பந்தத்தில் இருப்பதையும் மறந்துவிட முடியாது. எனவேதான், நான் இங்கே வைத்திருப்பதில் அடிப்படையான 3 விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், பேரவைத் தலைவர் அதிக நேரம் நான் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கட்டளையிட்டிருக்கிற காரணத்தால், அதனையும் நான் ஏற்று, இரண்டொரு விஷயங்களை மட்டும் பேசி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எப்போதுமே கட்டளையிடுவதில்லை. உங்களுக்கு வேண்டுகோள்தான். ஏனென்றால் நீங்கள் தத்துவம் பேச ஆரம்பித்தால், நானே மெய்மறந்து கேட்டுக் கொண்டிருப்பேன். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கட்டளையிடுவதற்குரிய முழு உரிமை படைத்தவர்கள்; கட்டுப்படுவதற்குரிய கடமை படைத்தவர்கள் நாங்கள் என்பதற்காகத்தான் நான் அவற்றைக் குறிப்பிடுகிறேன்.

இங்கே பெரிதும் 3 விஷயங்களைக் குறிப்பிட வேண்டுமானால் எதிர்காலத்தில் இந்தியாவின் அரசியல் சுதந்திரம் ஆபத்திற்கு உள்ளாகியிருக்கிறது. நடப்பில், இந்தியாவின் பொருளாதாரச் சுதந்திரம் முற்றிலும் I.M.F., World Bank, W.T.O. ஆகியவற்றின் கைகளில் கொடுக்கப்பட்டுவிட்டது. இந்திய நாடு முழுவதும் தொழில் துறையில், பொருளாதாரத் துறையில் அந்நிய கம்பெனிகள் முழு ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப்பட்டதன் மூலம் World Bank, I.M.F. அதேபோல் W.T.O. ஆகியவைதான் இந்தியாவின் பட்ஜெட் கொள்கைகளை, பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றன. இந்தியர்களால், ஓட்டுப் போடப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய அரசு, இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிக்க முடியாத ஒரு நிலையில் எதிர்காலத்தில் இந்தியா அரசியல் அடிமைத்தனத்திற்கு ஆட்பட்டு விடும் என்கிற ஆபத்தை உணர்ந்துதான் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். எப்படி வெகு காலத்திற்கு முன்னர் வெறும், அங்கங்கே கம்பெனிகளைத் தொடங்கி டேரா போட்டு தங்களுடைய

உற்பத்திப் பொருட்களை விற்றுச் செல்ல வந்த வெள்ளையர்கள் இந்தியாவின் அரசியல் அதிகாரத்தையே கைப்பற்றிக்கொண்ட, கடந்த கால வரலாற்றில் ஏற்பட்ட விபத்து மீண்டும் நிகழ்ந்துவிடாமல் தடுக்க வேண்டுமானால், இந்தியா பொருளாதாரத் தற்சார்பை உறுதிப்படுத்திக் கொள்கிற கொள்கையைத்தான் வலியுறுத்த வேண்டும். அவை வலியுறுத்தப்படுவதில் மத்திய அரசு பின்தங்கி இருக்கிறது.

*முற்பகல் 11-10*

மத்திய அரசில் மிக மிக முக்கிய ரோல் செய்வது திராவிட முன்னேற்றக் கழகம். எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதில் பெரிதும் பங்கு உண்டு. அதுமட்டுமல்ல, இப்போது பெரும் பகுதி பொதுத் துறை நிறுவனங்கள் விலை பேசப்படுகின்றன. தனியார்மயம் ஊக்குவிக்கப்படுகிறது. இதில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அரசியல் நிலையை எடுத்து இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அடிநாட்களில் பொதுவுடைமை இயக்கத்தோடு, ஒத்த கருத்திசைவு கொண்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட, பொதுவுடைமைக் கருத்தோடு தென்னாட்டில் பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைப்போம் என்று பிரகடனம் செய்தார்கள். திராவிட இயக்கம் அடிநாட்களில் பொதுவுடைமைக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட இயக்கம். திராவிட இயக்கத்தினுடைய அன்றைய சிந்தனைகளிலேயும் 'கார்ல் மார்க்ஸ்' மிகப் பெரிய செல்வாக்கைச் செலுத்தினார் என்பதுதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வீட்டிலேயே, ஸ்டாலின் என்கிற பெயர் இன்றைக்கும் நிலவுவதற்குக் காரணம். திராவிட இயக்கம் பொதுவுடைமை இயக்கத்தோடு எவ்வளவு ஈடுபாடு கொண்டது என்பதற்குரிய அழிக்க முடியாத அடையாளமாகத்தான் அது இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இயக்கம் நாடாளுகிற பொறுப்பை மேற்கொண்டிருக்கிறபோது, மத்தியில் பொதுத் துறை நிறுவனங்கள் முழுவதும் விலைப் பேசப்படுவதும், அதேபோல் தனியார்மயம் ஊக்குவிக்கப்படுவதும், பொருளாதாரத் தற்சார்பு தகர்க்கப்படுவதும், அந்நிய கம்பெனிகள் இந்தியாவில் ஆக்கம் பெறுவதும், இந்தியத் தொழில்கள் இயங்க முடியாதவாறு மத்திய அரசு கொள்கைகளை வகுப்பதும், இந்தியாவுக்கு ஆபத்து என்பதால்தான் தேச பக்த உணர்ச்சியால், இந்த தேசத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நாங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறோம்.



அதில் ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கடினமான பார்வை பார்க்கிறீர்கள். அந்த ஒன்றே ஒன்றோடு முடித்துக்கொள்கிறேன். இன்னொன்று, இந்தியா ஒரு நாடு என்றாலும், 100 கோடி மக்கள் ஒரு ஜாதி அல்ல; ஒரு மதம் அல்ல. இந்தியர்களை ஜாதியால், மதத்தால் பிரிக்கிற, பிளக்கிற விஷமக் கருத்துகளை உள்ளடக்கிய பி.ஜே.பி. நாடாளுகிறது. அந்த பி.ஜே.பி.-யினுடைய விஷமச் சேட்டைகளின் பிரதிநிதியான ஆர்.எஸ்.எஸ். இந்திய நாடு முழுவதும், மக்களுடைய மத்தியில் கலக விதைகளைத் தூவிக் கொண்டிருப்பதையே தன்னுடைய அன்றாட அரசியலாகக் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது...

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. கே. சுப்பராயன்:** திரு. வேலாயுதன் அவர்கள் ஆத்திரப்பட வேண்டியதில்லை, அதிர்ச்சி அடைய வேண்டியதில்லை. இதுதான் அடிப்படை உண்மை. எனவேதான், மத்தியில் நாடாளுகின்ற அந்த பி.ஜே.பி., கல்வித் துறையில். ஆராய்ச்சித் துறையில், வரலாற்றுத் துறையில், ஒவ்வொரு துறையிலேயும் திட்டமிட்டு ஆர்.எஸ்.எஸ்.-ஐப் புகுத்தி விட்டார்கள். பாதுகாப்புத் துறையில் ஆர்.எஸ்.எஸ்.-ஐப் புகுத்தி விட்டார்கள். சகல துறைகளிலும் ஆர்.எஸ்.எஸ். புகுந்துவிட்டது. இந்தியாவில் தேசிய கட்டமைப்பின் ஆணிவேர் செல்லரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்தியாவின் அரசியல் சுதந்திரம் ஆபத்திற்கு உள்ளாக்கப்படுகிற அளவிற்கு பொருளாதாரச் சுதந்திரம் விலை பேசப்பட்டுவிட்டது. இந்தியச் சமூகம், மண்குடம் கருங்கல்லில் அடித்தால் சில்லுச் சில்லாகச் சிதறி விடுவதைப்போல, இந்திய சமுதாயத்தை சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், சில்லுச் சில்லாகச் சிதறடிக்கிற தீய சக்தியான ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி-யின் வடிவில் அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கிறது. எனவே, அரசியல்...

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. கே. சுப்பராயன்:** அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு, இந்தியாவில் இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. இந்த வேலைநிறுத்தத்தை ஆதரித்து, இந்தப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இந்த வேலை நிறுத்தத்தை ஆதரிக்கிற, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற சக்திகளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிற தீர்மானம் ஒன்றை இந்தப் பேரவையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில்....

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, Point of order என்பது எதன் பெயரால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஒருவர் பேசுகிறபோது தலையிட்டுக் கருத்தைச் சொல்வது Point of order என்பதிலே வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. அவர் கேட்கிறார். அதெல்லாம் நியாயம். (குறுக்கீடு) நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். நீங்கள் பேசும்போது உங்கள் கட்சியின் கருத்தைப் பற்றிச் சொன்னீர்களேயானால், யாரும் குறுக்கிட நான் அனுமதிக்க மாட்டேன். இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியை, தீயசக்தி, அது, இது என்று சொல்லும்போது, அவர் இந்த அவையிலே சும்மா உட்கார முடியாது. அப்படிப்பட்ட சக்தி நாங்கள் இல்லை என்று அவர் ரெக்கார்டிலே ஏற்றுவதற்கு உரிமை உண்டு. ஆகவே, நான் அவருக்குப் பேச அனுமதி கொடுக்கிறேன்.

முற்பகல் 11-15

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகளுடைய .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏற்றுக்கொள்ளவில்லை என்பது இல்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற உரிமை, சுப்பராயன் அவர்களுக்கு இருக்கின்ற உரிமை, வேலாயுதன் அவர்களுக்கும் உண்டு என்பதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகளுடைய நிலையைப் பற்றி, போராட்டத்தைப் பற்றி பேச ஆரம்பித்தார்கள். அப்படி என்று சொன்னால், அதைப்பற்றி மட்டும் பேசியிருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருப்பார்கள். ஆனால் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாரதிய ஜனதா கட்சியை இழுத்த காரணத்தால், நான் சில கருத்துகளைக் கட்டாயமாகச் சொல்ல வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், ஆர்.எஸ்.எஸ். அப்படிப்பட்ட இயக்கம் இல்லை என்பதை மட்டும் சொல்லி முடியுங்கள். அவருடைய கருத்துக்கு மறுப்பு மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ்.எஸ். இந்த நாட்டில் என்னென்ன செய்துகொண்டிருக்கிறது என்பதைப் பொதுமக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதை ஆதரிக்கக்கூடிய பி.ஜே.பி.-யையும் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, பொதுமக்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவளித்து, இரண்டு பாராளுமன்ற உறுப்பினரிலிருந்து 50 ஆகி, 60 ஆகி, 100 ஆகி, இப்பொழுது 182 என்று ஆகியிருக்கிறது. ஆனால், 75 வருடங்களாக, இந்த நாட்டில், இந்த நாட்டினுடைய பண்பாடு, கலாசாரத்திற்காக உழைக்கக்கூடிய அமைப்புகளைப் பற்றி, இப்படிக் கோள் சொல்லி, கோள் சொல்லி, மோசமாகப் பேசிப் பேசியே, அந்தக் கட்சி பொது மக்களுடைய மத்தியிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அனுபவ ரீதியாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். 75 ஆண்டுகள் ஆகியும்கூட எந்த ஒரு இடத்திலும்கூட தனித்துப் போட்டியிட முடியாத ஒரு அரசியல் கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இங்கே பேசும்போது எதிர்க்கட்சிகள் எல்லாம் எதற்காகப் பொது வேலைநிறுத்தம் செய்கின்றன என்ற காரணத்தைத் தெரிவித்தால், அதற்கு ஆதரவு தெரிவிக்கலாமா, வேண்டாமா என்பதை, நான் பதிலுரையில் கூறுகிறேன் என்று கூறி இருக்கின்றார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் எதற்காகப் பொது வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கின்றன என்பது அவருக்குத் தெரியாதது அல்ல. இன்றைக்கு மத்திய....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரித்துக் கூறுவதே சுந்தரத்தினுடைய இலக்கணம் என்றால், அதற்காக நான் மிகுந்த கவலைப்படுகின்றேன். அவர், அதைத் திருத்திக்கொள்ள வேண்டும். நான் அப்படிச் சொல்லவில்லை. வேலைநிறுத்தம் எப்படி அவசியமானது என்பதை அவர்கள் விளக்கட்டும், ஏன் தேவையில்லை என்பதை நான் விளக்குகிறேன் என்றுதான் சொன்னேன்.

[2000 மே 11

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, இன்றைக்கு அரிசியினுடைய விலை, கோதுமையினுடைய விலை, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றினுடைய விலைகள் எல்லாம் பன்மடங்கு உயர்ந்திருக்கின்றன. விவசாயிகள் பயன்படுத்துகின்ற அத்தியாவசியத் தேவையான, உரமான யூரியாவினுடைய விலை பன்மடங்கு உயர்த்தப்பட்டுவிட்டது. இது குறித்து நாடாளுமன்றத்திலே பலமுறை விவாதிக்கப்பட்டு, இரண்டு நாட்களுக்கு முன்புகூட, "இந்த விலைகள் எல்லாம் கண்டிப்பாக குறைக்கப்படமாட்டாது" என்று நிதியமைச்சர் கூறியிருக்கின்றார்கள். இதற்கு முன்பே, எதிர்க்கட்சியினர் அனைவரும் சேர்ந்து, "பொது வேலை நிறுத்தம் நடத்துவோம்" என்று எடுத்துக் கூறிய பிறகும், அவர்களுடைய கூட்டணியிலே இருக்கின்ற, மம்தா பானர்ஜி, சந்திரபாபு நாயுடு அவர்கள் எல்லாம் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்ததற்குப் பிறகும், நாடாளுமன்றத்திலே அவர்கள் இதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாமல், விலையைக் குறைக்கவே முடியாது என்று கூறியிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "பண்டாரங்கள், பரதேசிகளைத் தமிழகத்திலே நுழைய விடமாட்டோம்" என்று கூறிவிட்டு, இன்றைக்கு அந்தப் பெயரிலே இருப்பவர்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கின்ற புதிய பொருளாதாரக் கொள்கையை ஆதரித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், இப்போது இந்த விலைகள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

விவசாயிகளுடைய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகாத...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்; அதாவது மூலக்கருத்தை. எதிர்க்கட்சித் தலைவர் உங்கள் அனைவரின் சார்பிலும் எது, எதற்கு விலை ஏறியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் சொல்லாதது ஒன்றை நான் சொல்லிவிடுகிறேன். விவசாயத் தொழிலாளர்களுடைய நலச் சட்டம், பெண்களுக்கு நாடாளுமன்றத்தில், சட்டமன்றத்தில் 33 சதவிகித இடஒதுக்கீடு சட்டம், வேலை உரிமையை அடிப்படை உரிமையாக்கும் சட்டம், ஆகியவை நிறைவேற்றப்படவில்லை. அவர்களுடைய கோரிக்கையில் மிக முக்கியமானது "14 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்;



2000 மே 11] [திரு. பி.ஆர் சுந்தரம்]

தலித்துகள், பழங்குடியினர்களுடைய உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்" என்பது. அதை வலியுறுத்திப் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மேலும், குறிப்பாக 714 பொருட்களை இறக்குமதி செய்யும்போது தர வேண்டிய சுங்கத் தீர்வையைக் குறைத்துள்ள காரணத்தினால், இன்றைக்கு விவசாயிகள் எல்லாம் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய சூழ்நிலையிலேதான் இருக்கிறார்கள். ஏனென்றால், தேங்காயினுடைய விலை எல்லாம் 4 ரூபாய், 5 ரூபாய் என்ற விலையிலிருந்து, இன்றைக்கு ஒரு ரூபாய் அளவிற்கு விற்றுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் எல்லாம் மூடிக்கிடக்கின்றன. இரும்பு ஆலையைப் பொறுத்தவரையில், இங்கே ஒரே ஒரு வரித் தீர்மானம்; ஏதோ ஒப்புக்குச் சப்பாணி என்று கூறுவார்கள், அதுபோல், இங்கே அனைவருமே கூறிவிட்டார்கள் என்பதை வைத்துக்கொண்டு ஒரு வரித் தீர்மானம் போடப்பட்டு இருக்கின்றது. முதல்வர் அவர்கள் கூடத் தற்போது டெல்லிக்குச் சென்றார்கள். அப்போது, இது விஷயமாக பிரதமரிடம் வலியுறுத்திப் பேசியிருந்தால்கூட அந்த இரும்பு ஆலையினுடைய விவரத்தை இங்கே தெரிவித்திருக்கலாம். எனவே, அந்த விவரம் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, இவற்றையெல்லாம் வலியுறுத்தி இன்றைக்கு எதிர்க்கட்சியினர் பொது வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே நீங்கள் அவையிலே கூறியபடி, தமிழக அரசு எப்படி எதிர்க்கட்சிகள் மற்றும் அவர்களுடைய மந்திரி சபையிலே இருக்கும் மம்தா பானர்ஜி அவர்களும், அவர்களை ஆதரிக்கும் சந்திரபாபு நாயுடு அவர்களும் எல்லோரும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களோ, அதேபோல, நீங்களும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான், உங்களுடைய தயவிலே அந்த அரசு நடந்துகொண்டிருக்கிற காரணத்தினால், அந்த விலைகளையெல்லாம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். எனவே தீர்மானம் போட்டு, நாம் இங்கேயிருந்து அனுப்ப வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை அரசியல் சார்பு இல்லாத பிரச்சினை என்று நான் கருதுகிறேன். அரசியலுக்கு அப்பாற்பட்டு, நாட்டிலுள்ள அனைத்து

மக்களுடைய நல்வாழ்வைக் கருத்தில்கொண்டு, அணுக வேண்டிய பிரச்சினை இது. இது ஏதோ "நீ சொல்கிற கருத்து அது, நான் சொல்கிற கருத்து இது" என்ற அளவிற்கு வாதப்பிரதிவாதங்களால் ஒருவரையொருவர் வெட்டிக்கொள்கிற பிரச்சினை என்று நான் கருதவில்லை. எனவே, இங்கே எழுப்பப்பட்டிருப்பது இந்த நாட்டினுடைய மக்களுடைய வாழ்வில் இப்போது ஏற்படுத்தி இருக்கிற பல கேள்விக்குறிகளைக் குறித்துப் பேசுகின்ற ஒரு பிரச்சினை

குறிப்பாக விலையேற்றம்; பொருளாதாரச் சீர்குலைவு; நிதித் துறையிலே ஒழுங்கீனங்கள்; அரசமைப்புச் சட்டம் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் வழங்கியிருக்கிற குறிப்பிட்ட அதிகார வரம்புகளில், வரம்பு மீறி மத்திய அரசு தலையிடுகிற ஒரு நிலை; அதை எதிர்க்க வேண்டிய கட்டாயம்; அதுவும், குறிப்பாக மாநில அரசுகள், தன்னுடைய மாநிலத்தில் வாழ்கிற மக்களுடைய நல்வாழ்வுக்காக மட்டுமல்ல, நம்முடைய அரசமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கு வழங்கியிருக்கிற அதிகாரங்களைக் காப்பாற்றுகின்ற தலையாய அந்தக் கடமையையும் பொறுத்திருக்கிறது இது. இப்போது மத்திய அரசு சில பொருட்களுடைய விலையை உயர்த்திவிட்டது. சில பொருட்களுக்கு வழங்கி வந்த மானியங்களைக் குறைத்துவிட்டது அல்லது இல்லாமல் ஆக்கி விட்டது. எனவே. இது, மிக ஆழமாகவும், அழுத்தமாகவும் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய ஒரு பிரச்சினை. அதுவும், இந்தச் சட்டமன்றத்தில் பேசப்படும்போது. இதனுடைய விளைவுகள் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முற்பகல் *11-25*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், இன்றைக்கு பொது வேலைநிறுத்தம் ஏன் நடைபெறுகிறது என்பதை விளக்கிப் பேசியிருக்கிறார்கள். எந்தெந்தப் பொருட்கள் விலையேறிவிட்டன? எந்தெந்தப் பொருட்களுக்கு மானியங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன? இப்படிக் குறைக்கப்பட்ட பிறகு இதிலே இருக்கிற மிக முக்கியமான விஷயம், அதுவும் குறிப்பாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பது மத்திய அரசு இந்த மானியங்களைக் குறைத்த பிறகு, இதனுடைய தீய விளைவுகள் என்ன என்பதை எங்களைப் போன்ற வெளியே இருப்பவர்கள் சொல்லவில்லை, எதிர்க்கட்சிகள் மட்டும் சொல்லவில்லை, இப்போது மத்திய அரசை நடத்திக்கொண்டிருக்கிற கூட்டு பொறுப்பில் பங்கு கொண்டிருக்கிற அனைத்துக் கட்சிகளும்—பி.ஜே.பி. தவிர்த்து—சொல்லியிருக்கின்றன. பி.ஜே.பி. இந்த அரசுக்கு தலைமையேற்று



நடத்துகிறது (குறுக்கீடு) மதன்லால் குரானாவே சொல்லியிருக்கிறார். அவர்—மதன்லால் குரானா—சொல்லி, இன்றைக்கு அவரை ஏதோ சரி செய்திருக்கிறார்கள். சரி செய்தாலும், நாட்டுக்குத் தெரியாமல் போகாது. எனவே, நான் கேட்டுக்கொள்வது—முதலமைச்சருடைய தீட்சண்யமான அறிவு எனக்குத் தெரியும். இன்று இருக்கிற இந்த விளைவுகளைப் பற்றியும் அவருக்குத் தெரியும். நான் கேட்டுக்கொள்வது—ஒரு ஆட்சி நடக்கிறது மத்தியிலே. அந்த ஆட்சியிலே பல கட்சிகள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்றன. 24 கட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டணி. அந்தக் கூட்டணிக்கு பி.ஜே.பி. தலைமை. அதிலே இப்போது நாமெல்லாம் அறிந்திருக்கிற அளவிற்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏனைய கட்சிகளோடு பா.ம.க.வும் அதிலே இடம் பெற்றிருக்கிறது: ம.தி.மு.க.வும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் தி.மு.க. மிக முக்கியமான பங்கு கொண்டிருக்கிறது, இந்த மத்திய ஆட்சியிலே. நான் கேட்கிறேன்; "இது நாட்டுக்குத் தீது, நாட்டுக்குத் தீமை விளைவிக்கக்கூடியது. மக்கள்மீது பாரம் சுமத்தக்கூடியது. எனவே இதை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள், நாட்டின் நன்மையை உத்தேசித்து; நம் மக்களின் நன்மையை உத்தேசித்து வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டுக் கொண்டது. எனக்குத் தெரியவில்லை, கேட்டுக் கொண்டதாக வந்தது பத்திரிகைச் செய்தி. அப்படியில்லையென்றால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களே இங்கே இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், ஆட்சியிலே இடம் பெற்றிருக்கும்பொழுது மத்திய அரசிடம் இதைக் குறித்து "புனராலோசனை செய்யுங்கள், மறு ஆய்வு செய்யுங்கள். இதை நீங்கள் தவிர்த்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னால், அதற்கு என்ன பதில் கிடைத்திருக்கிறது? Diametrically opposite-conflicting parties. இது என்ன கூட்டணி? இந்தக் கூட்டணியில் நீங்கள் சேட்டுக்கொண்டும், மத்திய அரசு மறுத்திருக்கிறது என்று சொன்னால், கொள்கை ரீதியாக, மனசாட்சிப்படி, அந்த பி.ஜே.பி. தலைமையை ஏற்றுக்கொண்டிருப்பதுகூட எப்படி? மனமறிந்து, நெஞ்சறிந்து, நாம் அவர்கள் செய்த தவறை ஏதோ ஒரு காரணத்தினாலே ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று வரலாற்றில் இடம் பெறுமானால் அது சரியா? யார் ஏற்றுக்கொண்டாலும் என்னுடைய நெஞ்சு பொறுக்காது. இங்கே எல்லாம் சொல்லப்பட்டது. கலைஞர் அவர்களுக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. கலைஞர் அவர்களுக்கு

ஒரு வரலாறு உண்டு. இன்றைக்கு மட்டுமல்ல. மிகப் பெரிய நீண்ட வரலாறு, தமிழகத்தினுடைய மனசாட்சியினுடைய நடமாடும் விளக்கமாக இருக்கிற கலைஞர் அவர்கள் சொல்லியும், மத்திய அரசு இப்போது அதற்கு மரியாதை தரவில்லை என்று சொன்னால், என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படி ஒரு ஆட்சியா? இப்படி ஒரு ஆட்சி தொடர வேண்டுமா? இந்த ஆட்சி தொடர்வதனால் தமிழகத்திற்கும், இந்திய நாட்டு மக்களுக்கும் என்ன நன்மை என்பதை இங்கே விளக்கிச் சொல்ல நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஒன்றை மட்டும் சொல்கிறேன். நீங்கள் என்னைப் பார்க்காதீர்கள். இது மிக முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைப் பார்த்துத்தான் ஆக வேண்டும், எனக்கு வேறு வழியில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** என்ன செய்வது, ஆகையினாலே நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன்; மிக வலிமையோடு சொல்கிறேன்; அழுத்தமாகச் சொல்கிறேன். அரிசிக்கு மானியத்தை அவர்கள் குறைத்துவிட்டார்கள். குறைத்துவிட்டால் மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் அதை எதிர்க்கிறார்கள். மானியத்தைக் குறைக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். நாம் ஏன் தேவையில்லாமல் ரூ. 300 கோடி மானியம் வழங்க வேண்டும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் கேரளா உட்பட, மேற்கு வங்கம் உட்பட, மத்திய அரசு அப்படி ஏற்றிய விலையை ஒத்துக்கொண்டு, பொது விநியோகத்திலே அரிசி விலையை அதிகமாக ஆக்கியிருக்கிறார்கள். அதைப்போல இங்கேயும் செய்யச் சொல்கிறீர்களா? கேரளாவிலே ஒரு கிலோ அரிசியை ரூ. 5, ரூ.6 என்று ஆக்கிவிட்டார்கள். மேற்கு வங்கத்திலே ரூ. 10 வரையிலே ஆக்கிவிட்டார்கள். அதைப்போல இங்கேயும் ஆக்கச் சொல்கிறீர்களா?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இந்தக் கேள்வி வரும் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் இது மிக முக்கியமான கேள்வி. மற்றவர்கள் ஏற்றிவிட்டார்கள். நாமும் ஏற்றலாமா? தமிழ்நாட்டு மக்களுக்கு இந்தச் சுமையைச் சுமத்தலாமா என்றால், இல்லை, கூடாது. நான் அப்படி ஏற்ற வேண்டுமென்று சொல்லவில்லை. நீங்கள் அவர்களை எதிர்த்துச்



சொல்ல வேண்டும். "இந்த மானியத்தைக் குறைக்கக் கூடாது" என்று நீங்கள் சொல்ல வேண்டும். அதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலேயே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. "அரிசியைப் பொறுத்தவரையில், மாநிலங்களுக்கு வழங்குகின்ற அரிசினுடைய விலையை ஏற்றியது வருந்தத்தக்கது. அதைத் திரும்பப்பெற வேண்டும்" என்ற கருத்து நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கிறோம். ஒரு முக்கியமான அடிப்படையான கேள்வி என்னவென்றால். நம்முடைய ஒட்டுமொத்தமான தேசிய பொருளாதாரம்; ஒட்டுமொத்தமான தமிழகத்தினுடைய பொருளாதாரம்; ஒட்டுமொத்தமான ப்ரைஸஸ். இந்த விலை நிர்ணயம் செய்வது இருக்கிறதே இதில் தேசிய நிர்ணயம் உண்டு, வட்டார நிர்ணயம் உண்டு. இந்த வட்டார நிர்ணயத்தில் தேசியம் தேவையில்லாமல் நம்மை அடக்குகிற வகையில் நம்முடைய முறையை மாற்றுகின்ற வகையில், நம்முடைய உரிமையைப் பறிக்கின்ற வகையில் எந்த அளவுக்கு அவர்கள் கட்டுப்படுத்த முடியும்? Federation என்று சொன்னால், மாநிலத்தையே இல்லாமல் ஆக்கிவிடுவதா?

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் இன்னும் எவ்வளவு நேரம் பேசுவார்கள் என்று சொல்வார்களானால் அவசரமாக நான் ஒரு செக்கரட்டரியிடத்தில் ஒரு செய்தி சொல்லவேண்டியிருக்கிறது. பத்து நிமிஷம் நான் வெளியே போய் வந்துவிடலாமா என்று நான் லத்தீப் அவர்களிடத்திலே அனுமதி கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேசி முடிக்கவேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேசுவதையே முதலமைச்சர் விரும்பவில்லை என்று சொன்னால் வளவளவென்று பேசுவதும் கொளகொளவென்று பேசுவதும் (குறுக்கீடு) நான் ஒரு அடிப்படையான பிரச்சினையைக் கேட்கிறேன். எனக்குத் தெரியாமல், கேட்கிறேன். முதலமைச்சர் இந்தத் துறையிலே இருக்கக்கூடியவர். மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கலாம். மாண்புமிகு பிரதம அமைச்சருடன் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம். வெளியே சொல்லாத சில விளக்கங்களை

உங்களுக்குச் சொல்லியிருக்கலாம். ஆகையினால் எங்களுக்கு அந்தத் திருப்தியை ஏற்படுத்த வேண்டும். நாங்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் அதனுடைய நோக்கமே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் கருத்தை சிக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எனவே நான் கேட்டுக்கொள்வது 300 கோடி ரூபாயை—நீங்கள் கொடுத்தது; மற்ற மாநில அரசுகள் எல்லாம் எதிர்த்திருக்கும்போது, இந்த 300 கோடி ரூபாயை—எங்கிருந்து கொடுக்கிறீர்கள்? மற்ற மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தைத்தான்-300 கோடி ரூபாயை அதிலிருந்து டைவர்ட் பண்ண வேண்டும். டைவர்ட் பண்ணித்தானே கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) அதுபற்றி இல்லை. சந்தனமோ, சந்தனம் இல்லையோ அதைப்பற்றி எல்லாம் நான் கவலைப்படவில்லை. ஒட்டுமொத்தமான இந்திய நாட்டினுடைய பொருளாதாரத்திற்காக நான் பேசுகிறேன். எனவேதான் இந்தப் பிரச்சினை ஒரு பொதுப் பிரச்சினை நான் என் சார்பாகச் சொல்கிறேன். இதை ஏதோ ஒரு எதிர்க்கட்சிப் பிரச்சினையாகவோ அல்லது ஆளும் கட்சிப் பிரச்சினையாகவோ நாஙகள் அணுகவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், நாங்கள் எடுத்துச் சொல்கிற கருத்துகள் எல்லோருக்கும் உரியது; மாநிலத்திற்கு உரியது. எனவே இதிலே நீங்கள் மாறி நிற்கிறீர்கள் என்பது வேண்டாம். அதுதான் என்னுடைய வேண்டுகோள். இதிலே மாறியிருக்கிறீர்கள் முதலமைச்சர் என்பது வேண்டாம். எனவே எல்லோரும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றி, மீண்டும் மத்திய அரசைக் கேட்டுக்கொள்வோம. (மணியடிக்கப்பெற்றது) "எல்லாவற்றையும் நீங்கள் இறக்குங்கள். பழைய மானியத்தைக் கொடுங்கள். இந்தமாதிரி விலையேற்றம் ஏற்படுத்தியதை நிறுத்துங்கள்" என்று தமிழ்நாடு சட்டமன்றத்தின் வாயிலாக உங்களுடைய தலைமையில் நாங்கள் எல்லாம் சேர்ந்து மத்திய அரசுக்கு வேண்டுகோளாக விடுவிக்கிற ஒரு வாய்ப்பாகத்தான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, இன்றைய இந்த வேலை நிறுத்தம் தேவையானது என்ற காரணத்தினால் செய்யப்படுகிறது. எனவே தயவுசெய்து அதை ஏற்றுக்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஏழை எளிய மக்களைப் பொறுத்த அளவில் வாழ முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி இரண்டு கருத்துக்கே இடம் இல்லை. தேசிய பரந்த மேடை என்பன போன்ற மற்ற வெகு ஜன இயக்கங்களுடைய ஸ்தாபனம் கொடுத்த வேண்டுகோளுக்கிணங்க இப்போது இன்றைய தினம் இந்திய நாடெங்கும் வேலைநிறுத்தப் போராட்டமும் அதேபோன்று பந்த் போராட்டமும் நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்திலே ஏற்பட்டிருக்கிற மிக முக்கியமான பிரச்சினை இந்த மத்திய அரசும் சில மாநில அரசுகளும் ஆதரித்துக் கொண்டிருக்கின்ற உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல் அதேபோன்று உலக வியாபார கராறு—ஒப்பந்தம்—என்பதிலே இந்திய நாடு தன்னை இணைத்துக் கொண்டதன் காரணமாக ஏற்பட்டிருக்கிற மிக மோசமான விளைவுகளால் ஏற்பட்டிருக்கிற நிலையை எதிர்த்து இன்று இந்தக் கொள்கையையே மத்திய அரசு கைவிட வேண்டுமென்று வலியுறுத்துவதற்காகக் கோடிக்கணக்கான உழைப்பாளி மக்களால் நடத்தப்படுகிற போராட்டம் இது. இன்று பொதுத் துறை ஸ்தாபனங்களைப் பொறுத்த அளவிலே அழிந்து கொண்டிருக்கிற ஒரு நிலை இப்போது நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. நான் அகில இந்திய ரீதிக்கு ஒன்றும் வரவில்லை. தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இந்த அவையிலே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம், "சேலம் உருக்காலையைத் தனியாருக்குத் தாரை வார்க்கக் கூடாது" என்று. என்ன ஆயிற்று? நம்முடைய அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக்கூட மத்திய அரசு புறக்கணித்துவிட்டிருக்கிறது. ஹிந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் என்று சென்னையிலே இருக்கிற ஒரு பொதுத் துறை ஸ்தாபனம், அது மூடுவிழாவினுடைய இடத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது. அதேபோன்று தமிழகத்திலே இருக்கிற மற்றொரு ஆலை, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் ஆலை, அதுவும் இப்போது மூடுவிழாவினுடைய இடத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறது. பல பொதுத் துறை ஸ்தாபனங்கள் இப்போது அழிந்து விடுகிற ஆபத்து ஏற்பட்டு இருக்கின்றது என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து.

*முற்பகல் 11-35*

அதுமட்டும் அல்ல, உணவுப் பொருட்களைப் பொறுத்த அளவிலே வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள முடியாத அளவிற்கு இப்போது விலை உயர்ந்திருக்கிறது. ஒரு கிலோ நெய்மீனுக்கு (வஞ்சிரம் மீன்) இப்போது

400 ரூபாய் என்று விலை ஏறிவிட்டிருக்கிறது என்றால், சாதாரண மக்கள் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள முடியுமா? அந்த அளவிற்கு ஏழை எளிய மக்களைப் பொறுத்த அளவிலே வாங்க முடியாத அளவிற்கு இப்போது விலைவாசி உயர்ந்திருக்கின்றது. அதேநேரத்திலே விவசாயிகளைப் பொறுத்த அளவிலே அவர்கள் உற்பத்தி செய்கிற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை.

தமிழகத்தைப் பொறுத்த அளவிலேகூட, நம்முடைய தொழில் மானியத்தினுடைய கொள்கைக் குறிப்பிலே, மூடிய பஞ்சாலைகளைப் பொறுத்த அளவிலே ஒன்றும் சொல்லவில்லை. 3000-த்திற்கும் அதிகமான பஞ்சாலைகள் இந்திய நாட்டிலே மூடப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே 100 பஞ்சாலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளிட்ட பஞ்சாலைகள் இப்போது மூடப்பட்டிருக்கின்றன.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதமராக இருந்த நேரத்தில், 1952 ஆம் வருஷத்தில், இந்திய நாடு வளர வேண்டுமானால் இந்திய நாட்டிலே இருக்கிற மக்களுக்குத் தேவையான பொருட்கள் இந்திய நாட்டிலேயே பொதுத் துறையிலேயே உருவாக்கப்பட வேண்டுமென்று பிலாய் உருக்காலை போன்ற மிகப்பெரிய ஸ்தாபனங்களை உருவாக்கி இந்திய நாட்டிலே பொதுத் துறை வளர்வதற்கான முயற்சிகள் எடுத்தார்கள். ஆனால், பின்னாலே ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தக் கொள்கைகளைக் கைவிட்டு, இப்போது ஏகாதிபத்திய நாடுகளுக்கு இந்த நாட்டை அடகு வைக்கக்கூடிய இடத்திற்குச் சென்றுவிட்டதனுடைய விளைவு, இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் வாழ்க்கையை நடத்திகொள்ள முடியாத அளவிற்கு இப்போது விலைவாசி உயர்ந்திருக்கிறது. அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிற ஆலைகளெல்லாம் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது நாம், ஆதிதிராவிட, பழங்குடியின மக்களைப் பொறுத்த அளவிலே பேசவிருக்கிறோம். அதில் என்ன நிலை? இன்று பொதுத் துறை ஸ்தாபனங்கள் மூடப்பட்டால், பழங்குடி மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் இருக்கிற அந்த இட ஒதுக்கீடு இருக்குமா? தனியார் துறையினர் இப்போது அப்படிப்பட்ட நிலையைப் பின்பற்றுகிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விஷயத்தைச் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சுருக்கமாக உரையை முடித்துவிடுகிறேன். 1996-வது வருஷத்தில், இந்தத் தமிழ்நாட்டினுடைய மலைப் பகுதிகளில்



இருக்கிற குறவர்கள், அதேபோன்று இருளர்கள் போன்றவர்களையெல்லாம் எஸ்.டி. பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று ஒரு கடிதத்தைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். அப்படியொரு வேண்டுகோளை வைத்தார்கள். ஆனால், இப்போது மத்திய அரசு அதை நிராகரித்திருக்கிறது. அப்படி இந்த எஸ்.டி. மக்களைப் பொறுத்த அளவிலே, எஸ்.சி. மக்களைப் பொறுத்த அளவிலேகூட என்ன முறையிலே ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது, இன்றைய மானியத்திலே பேசவேண்டியது. அதை இதிலே பேசிக் கொண்டிருக்கிறீர்களே? இதை மானியத்திலே பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால் பொதுத் துறை ஸ்தாபனங்கள் மூடப்படுகிற ஆபத்து இப்போது ஏற்பட்டுக் கொண்டிருப்பதனால், இப்படிப்பட்ட ஆபத்துகூட நமக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நாம் முயற்சித்து பெற்றிருக்கிற பல உரிமைகளை இப்போது பாதுகாத்துக்கொள்ள முடியாத அளவிற்குப் போய்க் கொண்டிருக்கின்றது.

இந்த நம்முடைய அவையிலேகூட, தேயிலைத் தொழிலைப் பொறுத்த அளவிலே அன்றைக்கு நாம் பேசினோம். நம்முடைய மாநில அரசுக்கு வரவேண்டிய சேல்ஸ் டாக்ஸை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது, அது ஏன்? இது குளோபலைசேஷன் காரணமாக ஏற்பட்டிருக்கிற நிலை. இப்போது இந்த மாநிலத்தினுடைய வருவாயை, இப்படித் தேயிலைத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, காப்பித் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, இரப்பர் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இழக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது. மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக, உலக வியாபாரக் கராறிலே-ஒப்பந்தத்திலே-கையெழுத்துப் போட்டு, வெளி நாட்டிலேயிருந்து இந்தப் பொருட்களையெல்லாம் இறக்குமதி செய்வதன் காரணமாக, மத்திய அரசு ஏற்கெனவே இந்தத் தோட்ட விளைபொருட்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு என்பது இப்போது கைவிடப்பட்டதன் காரணமாக, நம்முடைய மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய சேல்ஸ் டாக்ஸைக் குறைத்துக் கொடுக்க வேண்டிய நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நாம் அதைக் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்று

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மே 11

வாதாடியவர்களிலே நானும் உண்டு. ஏனென்றால் அந்தத் தொழில் இப்போது பாதுகாக்கப்பட வேண்டி இருக்கிறது. அந்தத் தொழிலில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களைப் பாதுகாக்க வேண்டுமேயானால் நாம் அந்த நடவடிக்கைக்குப் போக வேண்டியிருக்கிறது. இதனுடைய விளைவு யாருக்கு? ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல உணவுப் பொருட்களிலே நாம் மானியம் கொடுப்பதன் மூலமாக மற்ற வேலைகளுக்குச் செலவு செய்ய வேண்டிய பணம் குறைந்து நமக்கு இழப்பு ஏற்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் இப்படிப்பட்ட கொள்கை காரணமாக, மத்திய அரசு பின்பற்றுகின்ற கொள்கை காரணமாக நம்முடைய மாநிலத்திற்குப் பெரிய அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது . . .

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே சொன்ன கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொன்னால் என்ன அர்த்தம்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்தக் கொள்கையைக் கைவிட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தக்கூடிய முறையிலே ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு நான் அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு, ஆனால், தமிழ்நாட்டில் நடைபெறாவிட்டாலும்கூட அதைப் பற்றிய கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று விரும்பிய எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களுக்கு ஜனநாயக ரீதியிலே வழிவகுத்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக—நம்முடைய சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இராஜதந்திரமாக அல்ல—ஜனநாயக ரீதியாக அனைவரும் இங்கே கருத்துகளைச் சொல்ல வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடு) அதற்குள் என்ன point of order?

**திரு. ச. அழகிரி:** தமிழ்நாட்டிலே நடைபெறுகிறது, நடைபெறவில்லை என்று ரெக்கார்டு பண்ணிவிட்டால்...



2000 மே 11]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சரி, உட்காருங்கள். நடைபெற்றால் சந்தோஷம்தான். நடைபெற்றால் சந்தோஷம்தான்... (குறுக்கீடு) கடை எல்லாம் திறந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடைபெறவில்லை என்பது அவருடைய கருத்து.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பஸ் எல்லாம் ஓடுகின்றது. ஆட்டோ எல்லாம் ஓடுகின்றது. (குறுக்கீடு) சரி, சரி, உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது, நடைபெறுகிறது என்று சொல்கிறீர்கள். அதை இல்லையென்று சொல்வதற்கு முதலமைச்சருக்கு உரிமை இல்லையா? இது என்ன முறை? (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. கே. சுப்பராயன் அவர்களும், திரு. சுந்தரம் அவர்களும், திரு. ம. அப்துல் லத்தீப் அவர்களும், திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும் ஏறத்தாழ 40 நிமிடங்களுக்கு மேலாக இந்த விவாதத்திலே கலந்து கொண்டு தங்களுடைய கருத்துகளை எல்லாம் கூறியிருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசோடு மாநில அரசு இணைந்து செயல்படுகிறது என்பதை ஒரு குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். மத்திய அரசோடு மாநில அரசு இணைந்து செயல்பட்டால்தான் நிர்வாக ரீதியானாலும் வேறு எந்த வகையிலானாலும் இந்தியாவினுடைய இறையாண்மையைக் காப்பாற்ற முடியும் என்பதை நாங்கள் உணர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கை அடிப்படையிலே இந்தப் போராட்டம் என்று சொன்னார்கள். என்ன கொள்கை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது ஒரு தவறான கொள்கை; மத்திய அரசினுடைய தவறான கொள்கை என்று சொல்கிறார்கள். அதை விவாதிப்பதிலே எனக்கு வேறுபட்ட கருத்து இல்லை. அந்தக் கொள்கை சரியானதா அல்லது தவறானதா என்பதிலே எனக்கு வேறுபாடான கருத்து இல்லை. நான் விவாதிக்கக்கூடத் தயாராக இருக்கின்றேன். எனக்கும், சுப்பராயன் அவர்களைப் போன்ற கருத்து அதில் நிச்சயமாக உண்டு. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைப் போன்ற கருத்து எனக்கும் உண்டு. ஆனால் எந்தக் கொள்கை தவறு

என்று அதற்காக இன்றைக்கு வேலைநிறுத்தம் நடைபெறுகிறதோ இந்தக் கொள்கை எப்போது வகுக்கப்பட்டது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியும் அந்த ஆட்சிக்குத் துணையாக தமிழகத்திலே அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும் இருந்தபோது எடுக்கப்பட்ட சில முடிவுகள்தான் இந்த வேலை நிறுத்தத்திற்கே முக்கியமான காரணமாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதுதான் விதை. அது வளர்ந்து செடியாகி, கொடியாகி மரமாகியிருக்கலாம். ஆனால் விதை போடப்பட்டது மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது நரசிம்மராவ் ஆட்சியினுடைய காலத்திலே மன்மோகன்சிங் நிதியமைச்சராக இருந்தபோது. அது தொடர்ந்தது. மறுபடியும் அருமை நண்பர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் நிதியமைச்சராகப் பொறுப்பேற்று அப்போதெல்லாம் தொடர்ந்ததுதான். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், தலைவர்கள் அவ்வப்போது இதை நாடாளுமன்றத்திலும் பொது வெளிகளிலும், பத்திரிகைகளிலும், அறிக்கைகளிலும் கண்டித்திருக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிடவில்லை. ஆனாலும் ஒத்துழைத்திருக்கிறார்கள். கண்டித்துக் கொண்டே ஆதரவைத் தந்திருக்கிறார்கள். அது யாருடைய ஆட்சியானாலும் சரி. தேவகவுடா ஆட்சியிலே இதைக் கண்டித்தார்கள். ஏனென்றால் தேவகவுடா ஆட்சியிலே ப. சிதம்பரம் அவர்கள் நிதியமைச்சர். மன்மோகனசிங்கினுடைய வெளிநாட்டுக் கொள்கைகள், தாராளமயக் கொள்கையைத்தான் அவர்கள் பின்பற்றினார்கள். அப்போதும் கம்யூனிஸ்ட் கட்சி அதைக் கண்டித்தது. ஆனாலும் அந்த ஆட்சிக்கு ஆதரவு அளித்தது. அதை மறந்துவிடக்கூடாது. அதுபோன்ற தர்மசங்கடங்கள் எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு. உங்களுக்கு மாத்திரம் தான், தி.மு.க.-விற்கு இல்லை என்று ஏன் கருதுகிறீர்கள்? தர்மசங்கடத்தை எல்லோரும் பங்கு போட்டுக்கொள்ள வேண்டுமா வேண்டாமா (சிரிப்பு) இதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு) இருங்கள் சும்மா, சும்மா எழுந்திருந்தால்..

**திரு. ச. அழகிரி:** பதிவு பண்ணப் பார்க்கிறார்கள், பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Unparliamentary இல்லையென்றால் முதலமைச்சர் பதிவு பண்ண விரும்புவதை நீங்கள் தடுக்க முடியுமா? பேரவைத் தலைவர் நான் தடுக்க முடியுமா?

**திரு. ச. அழகிரி:** உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன நினைவுபடுத்தப் போகிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** சொல்கிறேன். Point of order, Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் point of clarification என்று சொல்லலாமேயொழிய, point of order என்ன இருக்கிறது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் yield ஆகிற காரணத்தால் clarification சொல்லலாம். ஆனால், point of order என்று சொல்கிற அளவிற்கு நான் ஒன்றும் மரபு மீறிய வார்த்தை எதையும் பயன்படுத்திவிடவில்லை.

**திரு. ச. அழகிரி:** Point of clarification. தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது திரு. நரசிம்மராவ் அவர்கள் காலத்தில், திரு. மன்மோகன்சிங் மற்றும் திரு. சிதம்பரம் அவர்கள் கொண்டு வந்ததினுடைய தொடக்கம் என்று அவர்கள் சொன்னார்கள். திரு. மன்மோகன்சிங் அவர்கள் கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கைக்கும் இப்போது திரு. சின்கா அவர்கள் கடைப்பிடித்து, இதனால் எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்ற இந்த பொருளாதாரக் கொள்கைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. திரு. நரசிம்மராவ் அவர்களே அப்போது 'காட்' ஒப்பந்தம் கொண்டுவந்தபோது ஒன்றைத் தெளிவுபடுத்தினார்கள். வரையறுக்கப்பட்ட தாராளமயமாக்கத்தைத்தான் காங்கிரஸ் ஆதரிக்கிறதேயொழிய, வரைமுறையற்ற, சுதந்திரமான தாராளமயமாக்கத்தை காங்கிரஸ் எதிர்க்கிறது என்று தெளிவாகச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் உதாரணமும் சொன்னார்கள். சோவியத் ரஷ்யாவிலே திரு. கோர்பசேவ் இதைப் போன்ற வரைமுறையற்ற ஒரு கொள்கையைக் கொண்டு வந்த காரணத்தினால்தான் அந்த நாடு சிதறுண்டு போனது. எனவே, காங்கிரஸ் கட்சி வரைமுறையற்ற ஒரு தாராளமயமாக்கத்தை அனுமதிக்காது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது பாரதிய ஜனதா கட்சி வரைமுறையற்ற ஒரு தாராளமயமாக்கத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பதற்காகத்தான் வேலைநிறுத்தம் நடைபெறுகிறதேயொழிய திரு. நரசிம்மராவ் அவர்களுடைய காலத்தினுடைய புதிய பொருளாதாரக் கொள்கைக்கும், திரு. வாஜ்பாய் அவர்களுடைய புதிய பொருளாதாரக்

கொள்கைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பதிவு செய்ய விரும்புகிற ஒவ்வொன்றுக்கும், நீங்கள் எழுந்து பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் முதலிலேயே உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அதற்கு இப்போது பதில் சொல்கிறார். Unparliamentary என்பதோ அல்லது point of order என்பதோ இருந்தால்தான் நான் இனிமேல் அனுமதிப்பேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதையெல்லாம் ஒத்துக்கொண்டுதான் 'காட்' ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டார்கள் என்பதை உலகமே அறியும். அவ்வளவுதான் நான் இதற்குச் சொல்ல முடியும். இப்போது பெட்ரோலியத் துறையிலே ஏற்பட்டுள்ள விலை உயர்வு; அதுதான் மிக முக்கியமானது. எப்படிப் பொருளாதாரக் கொள்கை தவறானது என்ற அடிப்படையிலே இந்த சேவலை நிறுத்தமோ, அதைப் போலவே பெட்ரோலியத் துறையிலே ஏற்பட்டுள்ள விலை உயர்வு; அதற்கு யார் யார் காரணம் என்பதற்கு நான் சொல்கின்றேன். பெட்ரோலியத் துறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு வல்லுநர் குழுவை முன்னாள் பிரதமர் திரு. நரசிம்மராவ் நியமித்தார். அந்தக் குழு திரு. தேவகவுடா பிரதமராக வந்தபோது இரண்டு அறிக்கைகளைத் தந்தது. அநதக் குழுவின் இரண்டாவது அறிக்கையை மத்திய அரசில் திரு. ஐ.கே. குஜ்ரால் பிரதமராகவும், திரு. ப. சிதம்பரம் அவர்கள் மத்திய நிதியமைச்சராகவும் இருந்தபோது ஏற்றுக்கொண்டு, 20-11-1997-ல் அந்த முடிவுகளை எடுத்தது. என்ன முடிவுகள்? 2001-2002 ஆம் ஆண்டில் பொதுவிநியோகத் துறையிலே வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்காக வழங்கும் மானியம், கச்சா எண்ணெய் இறக்குமதி விலையில் 33.3 விழுக்காடு அளவிற்குக் குறைக்கப்படும் என்பதும், 2000-2001 ஆம் ஆண்டில் சமையல் எரிவாயுவிற்கு -எல்.பி.ஜி. கேஸ்-வழங்கும் மானியம் இறக்குமதி விலையில் 15 விழுக்காடு அளவிற்குக் குறைக்கப்படும் என்பதும், இறக்குமதி விலைக்கு ஈடாக பெட்ரோல் மற்றும் விமானத்திற்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் விலை உயர்த்தப்படும் என்பதும், டீசல் விலை உலக விலைக்கு International Price-க்கு ஏற்ப தொடர்ந்து மாற்றியமைக்கப்படும் என்பதும் ஏற்கெனவே மத்திய அமைச்சரவை 1-9-1997 அன்று எடுத்த முடிவுகளைப் பின்பற்றி





எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகும். அந்த முடிவுகளினுடைய விளைவுகளைத்தான் இன்றைக்கு நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

இன்னொன்று, ஏதோ, தலித் மக்களுக்கு எல்லாம் இப்போது இந்த மத்திய அரசு அநீதி இழைக்கிறது என்றார்கள். இன்று காலைப் பத்திரிகையிலேதான் கொட்டை எழுத்துக்களிலே செய்தி வந்திருக்கிறது. தலித் மக்களுக்கு, பேக்லாக் போன்றவற்றை எல்லாம் அகற்றி அவர்களுக்கு நல்ல வாய்ப்பு; இன்னும் சொல்லப்போனால், ஐக்கிய முன்னணி ஆட்சியிலேகூட தலித் மக்களுக்கு சாதகமான ஒரு முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், இப்போது தலித் மக்களுக்கு சாதகமான ஒரு முடிவு எடுக்கப்பட்டு, இன்றைக்கு நாம் வைத்திருக்கிறோமே—White paper—வெள்ளை அறிக்கை; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெள்ளை அறிக்கை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அதாவது ஆதிதிராவிடர்களுக்காகவும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை வைப்பதற்கு முன்பே மத்திய அரசில் நேற்றையதினம் நாடாளுமன்றத்திலே 418 பேர் வாக்களித்து, ஒரேயொருவர் மாத்திரம் எதிராக வாக்களித்து தலித் மக்களுக்காக ஒரு அருமையான சட்டம் உருவாகியிருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

பெட்ரோலியப் பொருட்களுடைய விலை உயர்விற்கு, கச்சா எண்ணெய் போன்றவற்றினுடைய விலை உயர்விற்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது, வளைகுடா நாடுகளினுடைய விலையேற்றம்தான். அங்கே விலையை ஏற்றினால் இங்கே விலை ஏறுகிறது. அங்கே விலை குறைந்தால் இங்கே விலை குறைகிறது. மானியத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 23,000 கோடி ரூபாய் இந்திய அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. இப்போது ஏற்றியிருக்கிற விலையின் காரணமாகக்கூட 6000 கோடி ரூயாய்தான் அதிலே அட்ஜஸ்ட் ஆகிறது. அப்பொழுதும் ஏறத்தாழ 17,000 கோடி ரூபாய் அளவிற்கு இந்த விலையேற்றத்தின் காரணமாக, வளைகுடா நாடுகளுடைய கச்சா எண்ணெய் விலையேற்றத்தின் காரணமாக, நாம் பாதிக்கப்பட்டு இருக்கிறோம் என்பனவற்றையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தில் ஈடுபடவில்லையா, அடிநாள்தொட்டு இருந்த அந்த உணர்வுகள் எல்லாம் தி.மு.க.-வுக்கு போய்விட்டன என்று சுப்பராயன் அவர்கள் மிக அழகாக ஒரு சொற்றொடர் மூலமாகச் சொன்னார்கள். அடிநாள்தொட்டு இருந்த தி.மு.க. வுடைய உணர்வு, இன்றைக்கு மங்கிப் போய்விடவும் இல்லை, என்றைக்கும் மங்கவும் மங்காது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால் அடிநாள்தொட்டு பொதுவுடைமைக் கட்சிக்கு இருந்த அந்த உணர்வு அப்படியேதான் இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து எண்ணிப்பாருங்கள். இல்லை; அந்த உணர்வு இல்லை.

நான் கண்ணால் பார்த்தேன், காதால் கேட்டேன், அருகில் இருந்து இரசித்தேன். திரு. தேவகவுடா அமைச்சரவையிலே திரு. லல்லு பிரசாத் யாதவின் தோழர்கள் அமைச்சர்களாக இருந்தபோது, அப்போது அந்தக் கமிட்டியிலே அவரும் இடம் பெற்றிருந்தார். அவர்மீது ஒரு புகார் வந்தது அப்பொழுது. குற்றச்சாட்டு வரவில்லை; புகார்தான் வந்தது. குற்றப்பத்திரிகை படிக்கப்படவில்லை கோர்ட்டில். அவர்மீது குற்றம் பதிவு செய்யப்படவில்லை. புகார் வந்தது. அந்தப் புகாருக்கே, அவர் உள்ளே உட்காரக்கூடாது என்று பொதுவுடைமைக் கட்சியினுடைய அகில இந்திய பொதுச் செயலாளர் சுர்ஜித் அவர்கள், அவரை வெளியேறச் சொன்னார். அவரும் வெளியேறினார். காரணம், அவர்மீது புகார் வந்துவிட்டது, ஆகவே அவர் உள்ளே இருக்கக்கூடாது என்று சொன்னார். ஆனால் அதே சுர்ஜித் தான்—அவர் மீது புகார் வந்தது மட்டுமல்ல, குற்றப்பத்திரிகையே படிக்கப்பட்டு, ஒருமுறை சிறைச்சாலைக்கும் சென்றுவந்தபிறகு — அதே வல்லுபிரசாத்துக்காகச் சென்று தேர்தலிலே இப்போது வாக்கு வேட்டை ஆடினார் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சுப்பராயன் அவர்கள் சிரிக்கக்கூடும். ஏனென்றால் அவர்கள் அதிலே கலந்துகொள்ளவில்லை. சி.பி.ஐ.-யைப் பொறுத்தவரையில், அவர்கள் லல்லுபிரசாத்தை ஆதரிக்கவில்லை. எனவே இப்படிப்பட்ட கோணல் மாணல், பொதுவுடைமைக் கட்சியிலேயே இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏன் இங்கே அவர்கள் ஜெயலலிதாவை ஆதரிக்கும்போது நாங்கள் ஏன் லல்லுவை ஆதரிக்கக்கூடாது என்று கம்யூனிஸ்ட் கட்சி கேட்பது எனக்குப் புரிகிறது. (சிரிப்பு) சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயும் மீண்டும் இங்கே வழக்கு வந்த பிறகும் கூட, இன்னும் ஜெயலலிதா நேர்மையானவர், நாணயமானவர், புனிதமானவர் என்கின்ற அந்த



அளவுக்கு, அந்த அம்மா இன்றைக்குப் பாராட்டப்படுகிறார்கள். அந்தப் புனிதம் எந்த அளவுக்குப் போயிருக்கிறது என்றால், இன்றைக்கு ஜெயலலிதாவே சொல்கிறார்—திருமதி சசிகலாவினுடைய கணவர் நடராஜனை வாய்க்கு வந்தவாறு திட்டிவிட்டு, அந்த அம்மையார் தம் கைப்பட எழுதிய அறிக்கையிலே குறிப்பிடுகிறார்—"இப்படியெல்லாம் சசிகலா கேட்டிருப்பார், ஆனால் சசிகலா கேட்கமாட்டார். ஏனென்றால் அவர் குடும்பப் பெண். (சிரிப்பு) நான் கேட்கிறேன்" (மீண்டும் சிரிப்பு) என்று ஜெயலலிதா அறிக்கை விட்டிருக்கிறார். அப்படிப்பட்ட உறவோடு, இந்த உறவோடு, நடத்துகிற வேலைநிறுத்தத்திலே, எங்களை எப்படி அய்யா கலந்துகொள்ளச் சொல்கிறீர்கள்? (நீண்ட நேரம் மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முதல்வர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் பதிலில் விளக்கம் எல்லாம் கிடையாது. எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய விளக்கம் எங்களுக்குத் திருப்தி அளிக்காததால், (சிரிப்பு) நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** எங்களுக்கும் மைக் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட பதிலுரையில் ஒரு தனித் தீர்மானம் இயற்றாததால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. பி.ஆர் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொது வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக இந்த அரசு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். தீர்மானம் நிறைவேற்றாத காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். முதலமைச்சர் அவர்கள் எதையோ நினைத்து எதையோ பேசக்கூடாது. அவர்கள் பேசும் போது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் செய்யுங்கள். தேவையில்லாமல் பிரச்சினையைக் கிளப்பாதீர்கள். முதலமைச்சர் அவர்கள் வரம்பு மீறிப் பேசவில்லை என்று நான் தீர்ப்புக் கூறிவிட்டேன். நீங்கள் வெளியேறுவதானால் வெளியேறலாம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானம் இங்கே நிறைவேற்றுவதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்வராததை ஆட்சேபித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். அவர்கள் பேசும்போது, லல்லு பிரசாத்தை நாங்கள் ஆதரித்தது சம்பந்தமாகப் பேசினார்கள். பாரதிய ஜனதா கட்சி, பீகாரில் வெற்றிபெற்று வரக்கூடாது என்பதற்காக நாங்கள் அவரை ஆதரித்தோம். நாங்கள் ஆதரித்ததன் காரணமாக பி.ஜே.பி. கட்சி அங்கே வரவில்லை.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உண்மையை மறைக்கக்கூடாது. அந்த லல்லு பிரசாத், தேவகவுடா அமைச்சரவையிலே இடம் பெறக்கூடாது, அதை ஆதரிக்கவே கூடாது என்று சொன்னவர் சுர்ஜித்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முதல்வர் அவர்கள், நாங்கள் லல்லு பிரசாத் அவர்களை ஆதரித்தது சம்பந்தமாகச் சொன்னார்கள். இந்தத் தேர்தலிலே நாங்கள் அவர் மேலே ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது என்ற காரணத்தால், அவருடன் இருப்பது சரியல்ல என்று சொன்னோம். அது உண்மைதான், சரிதான். ஆனால் பி.ஜே.பி. ஆட்சிக்கு வரக் கூடாது என்பதற்காக அவரை ஆதரித்தோம்.

*[இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]*

## 4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (ஆ) அவையின் நேரத்தை நீட்டித்தல்

**திரு. ஜி.கே. மணி:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையினுடைய நேரம் பல்வேறு கோணங்களிலே சென்று விட்டது. இன்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர் நலன் பற்றிய முக்கியமான கோரிக்கை. அனைத்துத் தரப்பு மக்களுடைய வாழ்க்கைப்



பிரச்சினை உரிமைப் பிரச்சினை என்ற காரணத்தாலேயும், நேர அவகாசம் குறைவாக இருக்கிற காரணத்தாலேயும், இரண்டு அமைச்சர்கள் பதிலுரை கூறவிருக்கின்ற காரணத்தாலேயும் அவையின் நேரத்தை நீட்டிப்பதற்கு ஆவன செய்ய வேண்டி முதலில் நான் கேட்டு, அமைகிறேன்.

## 2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) மாண்புமிகு முதல்வர் உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று இரவு 7-30 மணிக்கு தாஜ் கோரமண்டல் உணவகத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்ள, இன்று மாலை சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து தாஜ் கோரமண்டல் உணவகத்திற்குச் செல்வதற்கும், பின் திரும்புவதற்கும் ஏதுவாக தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக பேரவை மண்டபத்தை ஒட்டியுள்ள பிளாசாவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று நண்பகல், மதிய உணவு வழங்க மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். அதற்கு என்னுடைய அனுமதியைக் கோரி இருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் தலைவர் சார்பாக. திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 258 முதல் 267 வரையிலான அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மனுக்கள் குழுவின் தலைவர் திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1999-2000 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 23, 24 மற்றும் 25 ஆவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்.**

**(ஆ) கோரிக்கை எண் 30 - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.**

**(அ) கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 31—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.156,32,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1937, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கும் கடன் தொகை ஆண்டுக்கு 4 முறை மனு செய்தோருக்கு வழங்க வேண்டியதன்



அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 156,32,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4623, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்லூரியில் பயிலும் காலத்தில் வழங்கும் உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1281, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3503, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மை முஸ்லீம் பெருமக்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3830, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3434, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்க ஒதுக்கப்படும் தொகையை உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000- ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2897, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, சுவாமிமலையில் பிற்படுத்தப்பட்டோர் விடுதி ஒன்று கட்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3112, திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to include the Vakkaliga community in the list of Most Backward Class in Tamil Nadu', I move—

"That the sum of Rs. 156,32,99,000/- allocated under Demand No.31-Welfare of Backward Classes, Most Backward Classes and Denotified Communities be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2396, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1733, திரு. வி. கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேவாங்கு செட்டியார் இனத்தையும், கொங்கு வேளாள கவுண்டர் இனத்தையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2849, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டு மனைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.156,32,99,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**(ஆ) கோரிக்கை என் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.346,25,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1938, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி சேப்பாக்கம் ஆதிதிராவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4849, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி சின்னமணலி ஆதிதிராவிடர் தெருவில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1302, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணாபுரத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவியர் தங்கும் விடுதிக்கு புதிய [illegible] கட்டித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2200, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுத் துறையில் பழங்குடியினர், ஆதி திராவிடர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியிருப்பது போல் தனியார் துறையிலும் இடஒதுக்கீடு செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3501, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிடர் நலப்பள்ளி விடுதிகளுக்கு வழங்கப்படும் உணவுப் படியினை அதிகரித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4508, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாழ்க்கைத் தரத்தில் மிகவும் மோசமான நிலையில் உள்ள லம்பாடி இன மக்களை கர்நாடகாவில் உள்ளது போல எஸ்.டி. பட்டியலில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3362, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சியிலுள்ள ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3012, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் கீழமாஞ்சேரியிலுள்ள ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2819, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,25,84,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2347, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், அவற்றுக்கு என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

@ 283 முதல் 314 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், அவற்றுக்கு என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏறத்தாழ 16 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். அதனால் அவையைத் தொடர்ந்து 3-00 மணி வரையில் நடத்தலாம் என்ற ஒரு கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆகவே, அதை மனதிலே வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாதிரி ஒரு மணி நேரம் இடைவெளி விடலாம். நேற்றைக்கு நல்ல ரெஸ்பான்ஸ் இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே சாப்பாடு போடுகிறோம். எனக்கு பழுத்த அனுபவம் இருக்கிறது. நேற்றைக்கு இருந்த ரெஸ்பான்ஸ் இன்றைக்கு இருக்காது. அதனால் நீங்கள் தவறாக நினைக்க வேண்டாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அது சொல்ல முடியாது. ஏனென்றால் நேற்றைக்கு அந்த மானியக் கோரிக்கை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் நான் சொல்கிறேன். நேற்றைக்கு இருந்த ரெஸ்பான்ஸ் இன்றைக்கு இருக்காது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூட அப்படி, இப்படி என்றார். நான் நேற்று 35 பேரைப் பேச விட்டேன்.

தொடங்கும் உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களுக்குக் கொஞ்சம் கூடுதல் நேரம் கொடுக்கப்படும். அதேபோன்று இறுதியாகப் பேசும் உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுக்குக் கொஞ்சம் கூடுதல்

@@ 315 முதல் 325 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



நேரம் கொடுக்கப்படும். மற்றவர்களெல்லாம் விரைவாகத் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்பாவு அவர்களைப் பேச அழைக்கின்றேன். பத்து நிமிடங்களில் பேசி முடிக்கவேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி”

என்ற அவ்வையாரின் கூற்றுக்கிணங்க, ஜாதி இரண்டே தவிர அதற்கு மேல் ஜாதிகள் இல்லை. ஆனால் இன்று இந்த நாட்டையே ஆட்டிப்படைக்கின்ற அளவுக்கு ஜாதிகள் வளர்ந்து விட்டன. இவ்வாறு ஜாதிகள் வளர்வதற்கு அரசியல் கட்சியினர்தான் மிக அதிக அளவில் இதில் காரணமாக இருக்கின்றவர்கள். அதில் சில கட்சிகளுக்கு அதிகமாகவும், சில கட்சிகளுக்குச் சற்று குறைவாகவும் பங்குகள் இருந்தாலும்கூட இந்த ஜாதிச் சண்டைக்கு ஆரம்ப அடிப்படைக் காரணமாக விளங்குவது அரசியல் கட்சிகள்தான் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.

பிற்பகல் 12-05

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

குறிப்பாக, திராவிட இயக்கங்களை எடுத்துக்கொண்டால், ஜாதிகளுக்கு வித்திட்டவர்கள் என்று கூறலாம். காரணம் எல்லா மேடைகளிலும் 1967-க்கு முன்னால் “ பாம்பை விட்டுவிடு, பாப்பானைக் கொல்லுங்கள்” என்ற சுலோகத்தைச் சொல்லிக் கொடுத்து சாதிக்கு வித்திட்ட பெருமை திராவிடக் கழகங்களைச் சாரும். ஆனால் இன்று அதனுடைய பரிணாம வளர்ச்சி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கையில் பேச வேண்டும். தேவையில்லாததை எதற்குச் சொல்கிறீர்கள்?

**திரு. மு. அப்பாவு:** அதனுடைய பரிணாம வளர்ச்சிதான் இப்போது இந்த அளவில் ஜாதிக் கொடுமைகள் வளர்ந்துவிட்டதற்குக் காரணம் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக, ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசில் பணியாற்றுகின்ற ஊழியர்கள்

எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்றுகூட ஒரு காலத்திலே தெரிந்திருக்க மாட்டார்கள். ஆனால், இப்போது காவல் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் இந்த பகுதியில் பணியாற்றக் கூடாது என்று இந்த அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. தமிழகத்திலே இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு 173 காவல் துறை ஆய்வாளர்கள்—திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தேவர் இனத்தைச் சார்ந்தவர்கள், நாடார் இனத்தைச் சார்ந்தவர்கள், ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த ஆய்வாளர்கள்—எல்லாம் இந்தத் தென் மாவட்டங்களில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் பணியாற்றக் கூடாது என்று ஒரு ஆணை பிறப்பித்து அவர்களை எல்லாம் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். அங்கே இந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் இல்லையா? ஏதோ இந்த வகுப்பைச் சாராதவர்கள் இருக்கின்ற வேறு நாடுகளுக்கா நீங்கள் மாற்ற முடியும்? ஆகவே, நீங்கள், காவல் துறையிலே பணியாற்றுகின்றவர்களைக் காவலர்களாகத்தான் பார்க்க வேண்டுமே தவிர, ஜாதிக் கண்ணோட்டத்திலே இந்த அரசே பார்க்க நினைத்தால் உண்மையிலே இந்த ஜாதிக்கு எரிகின்ற தீயில் எண்ணெய் விட்டதுபோல்தான் இருக்கும்.

அதேபோலத்தான், காவல் துறையிலே உயர் அதிகாரிகள் பணியாற்றுகின்ற அலுவலகங்களிலே முஸ்லீம் இன காவலர்கள், நீண்ட நெடுங்காலமாக அவர்கள் நாணயமாக அங்கே இருந்தவர்களைக்கூட இடம் மாற்றம் செய்து இருக்கிறீர்கள். அவர்கள் இரகசியத்தை முஸ்லீம்களுக்குக் கொடுத்து விடுவார்கள் என்று கூறி அவர்களையும் அந்த இடத்திலேயிருந்து மாற்றியிருக்கிறீர்கள்.

இந்த நேரத்திலே ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களிடம், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற பணியிலே அமர்த்தப்பட்டிருந்த காவலர்களில் சிலரால் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று சொன்னபோதுகூட—உளவுத் துறையின் மூலம் இந்த மாநிலத்தைச் சாாந்தவர்களை நீங்கள் பாதுகாப்புக்கு வைத்திருக்க வேண்டாம் என்று அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொன்னபோதுகூட—இந்த மண்ணில் பிறந்த நம்முடைய பாரதப் பிரதமர் அன்னை இந்திரா அவர்கள் சொன்னார்கள், "நான் இந்தியத் திருநாட்டின் எந்த மாநிலத்தையும் பிரித்துப் பார்க்க விரும்பவில்லை. ஆகவே, அந்த அடிப்படையில் என்னுடைய பாதுகாவலர்களை நான் மாற்ற



விரும்பவில்லை" என்று சொன்ன தீரம் செறிந்த அந்த அன்னை இந்திரா காந்தி வாழ்ந்த இந்தப் புண்ணிய பூமியில், அரசு ஊழியர்களை அவர்கள் ஜாதியை வைத்துப் பிரித்து நீங்கள் பார்ப்பதை நான் உண்மையிலேயே வேதனையோடு எண்ணிப் பார்க்க விரும்புகிறேன். ஆகவே, காவல் துறையிலே....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் அரசாங்கத் துறையிலே வேலை செய்கின்றவர்களுக்கு ஜாதி பெயரிலே வேலைகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலேயே பிற்படுத்தப்பட்ட சமுதாயம் எது எது, அந்தப் பட்டியலிலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றெல்லாம் அறிவித்து, அந்தச் சலுகைகள் அப்போதும் வழங்கப்பட்டன. அவை தொடர்ந்து இப்போதும் வழங்கப்படுகின்றன.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. பின்தங்கிய வகுப்பினர்கள், தாழ்த்தபட்டவர்களுக்கு, அவர்களுக்கு முன்னேறுவதற்கான இட ஒதுக்கீட்டை வழங்குவதை நான் குறைபாடாகச் சொல்லவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்ற காவலர்கள் இந்த வகுப்பைச் சார்ந்தவர், இந்த மாவட்டத்தில் பணியாற்றக்கூடாது என்ற ஒரு உத்தரவை நீங்கள் பிறப்பித்திருப்பதைத்தான் நான் வேதனையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இந்த ஜாதியைச் சேர்ந்தவர் இந்த அலுவலகத்தில் பணியாற்றக் கூடாது என்று...

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்திலேயும் இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் இங்கே பணியாற்றக்கூடாது என்று ஒரு உத்தரவு போடவில்லை. சில தலைமை அதிகாரிகள் அங்கே இருக்கக்கூடிய ஜாதி மோதல்கள் அதிகமாகக் கூடாது என்பதற்காக அப்படிப்பட்ட இலாகாத் தலைவர்களை வேண்டுமானால் அங்கே நியமிப்பதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கிறதே தவிர, அங்கே பணியாற்றக்கூடிய மற்ற ஜாதிக்காரர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. மு. அப்பாவு:** கலவரங்களைப் பொறுத்தவரையில், காவல் துறையிலே கண்ணியத்தோடு அவர்கள் பணியாற்றினால் உண்மையிலேயே ஜாதிக் கலவரங்கள் எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் வரத்தான் செய்யும். ஜாதிக் கலவரம் என்று இன்றைக்கு எடுத்துக்கொண்டால், ஒன்றுமே அங்கு நடைபெறவில்லை. ஜாதிச் சண்டைகள் நடைபெறும் என்றால், தினமும் நடைபெற வேண்டுமே.

சுய இலாபங்களுக்காகச் சிலர் இடுகின்ற ஒரு தீப்பொறிதானே தவிர, ஜாதிக் கலவரம் என்று மக்கள் அந்தப் பகுதியிலே செய்யவில்லை.

இப்போது நெல்லை மாவட்டத்திலே ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் கண்ணப்பன் என்பவர் பணியாற்றுகின்றார். இவர் வந்த பின்பு கள்ளச் சாராயத்தை முதல் கட்டமாக ஒழித்தார். நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன், தென் மாவட்டங்களின் ஜாதிக் கலவரங்களுக்கு அடிப்படைக் காரணம் கள்ளச் சாராயம் என்று நாம் சொன்னோம். இவர் வந்தபின்பு கடுமையாகப் பணியாற்றி கள்ளச் சாராயத்தை ஒழித்தபின்பு நியாயமான முறையில், எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் அளவில் அவர் பணியாற்றுகின்ற காரணத்தினால், அங்கு சற்று அமைதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அளவில் காவல் துறையினர் கடமையுணர்வோடு சிறப்பாகப் பணியாற்றினால், எவ்வளவு பெரிய, மிகப் பெரிய கலவரங்களைக்கூட, அடக்கியாளலாம். அந்த அளவுக்குக் காவல் துறையினர் கடமையோடு பணியாற்ற வேண்டும். ஆகவே ஜாதியை வைத்து அல்ல; அவர்களுடைய மனதில் கடமையுணர்வோடு பணியாற்றினால் நிச்சயமாக நல்லமுறையிலே பணியாற்ற முடியும்; ஜாதிக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பது என்னுடைய கருத்து.

இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண் குழந்தைகள் படிப்பதை ஊக்கப்படுத்தும் வண்ணமாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 3 முதல் 5 வகுப்பு வரை படிக்கின்ற பெண் குழந்தைகளுக்கு ரூபாய் ஐநூறும், 6 முதல் 8 வரை படிக்கின்ற பெண் குழந்தைகளுக்கு ரூபாய் ஆயிரமும் ஆண்டுக்கு வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். வரவேற்கிறேன். ஆனால், ஒன்றை அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். எந்தத் திட்டத்தையும் அவசரக் கோலத்தில் பண்ணும்போது, மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையும் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, அதேபோன்று முன்னேறிய வகுப்பு என்று நீங்கள் குறிப்பிடுகின்ற வகுப்பைச் சார்ந்தவர்களும்கூட பள்ளிக்குச் செல்லமுடியாத ஏழ்மையான



நிலையில் எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. நீங்கள் அவர்களையும் பரிசீலிக்கவேண்டும். ஆகவே, நம்முடைய மறைந்த மாண்புமிகு பாரத இளம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னதுபோன்று, அவர்களுடைய வருமானத்தின் அடிப்படையில், பொருளாதார அடிப்படையில், உண்மையிலேயே அவர்களுக்கு மேல் படிப்பு படிக்கமுடியாத ஒரு நிலை இருக்கின்ற குடும்பத்தை, அவர்களுடைய வருமான அடிப்படையில் கணக்கிட்டு, அவர்களுக்கும் படிக்கின்ற ஊக்கத்தைக் கொடுத்து அவர்கள் முன்னேறுகின்ற வகையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும்....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னேறிய சமூகத்தார் தங்களுடைய குழந்தைகளைக் கஷ்டப்பட்டாவது படிக்க வைக்கவேண்டுமென்ற ஒரு விருப்பம் உள்ளவர்கள். மிகமிகப் பின்தங்கிய சமூகமும், தாழ்த்தப்பட்ட சமூகமும் கஷ்டப்பட்டாவது படிக்க வைக்கவேண்டுமென்ற ஒரு ஆர்வம் இல்லாதவர்கள். எனவே அந்த சமூகத்திலே அதிகக் குழந்தைகள் விட்டுப்போகிற காரணத்தால், அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்குத்தான் நிதியுதவி செய்ய முடியுமே தவிர, மற்றவர்களுக்கு இலவச உடை வரையில்தான் தரமுடியும்.

**திரு. மு. அப்பாவு:** நான் சொல்வதை நீங்கள் தவறாக நினைக்கவேண்டாம். ஏதோ தாழ்த்தப்பட்டவர்கள் என்றால் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும், பிள்ளைகள் மேலே அக்கறை இல்லாமல் இருப்பார்கள் என்ற ஒரு தவறான எண்ணம் வந்துவிடக்கூடாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமூக அடிப்படையில், கல்வியில் பின்தங்கியிருப்பவர்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்காக கஷ்டப்படுவதற்கு விரும்பமாட்டார்கள். குழந்தைகளைக் கொண்டு தாங்கள் வருமானம் பெறமுடியுமா என்று எதிர்பார்க்கிற நிலை உண்டு. ஆகவே, சமூகநிலையை நான் சொல்கிறேனே தவிர, தாழ்த்தப்பட்டவர்களிலே டாக்டர் கிருஷ்ணசாமி மாதிரி படித்தவர்களும் இருக்கிறார்கள். குடியரசுத் தலைவரேகூட அந்தச் சமூகம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே அது அல்ல; சமூக அடிப்படையில் அந்த உதவிகளைச் செய்கிறபோதுதான் சமூக நீதி கிடைக்கிறது.

*(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-15*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று தமிழகத்திலே மீன் பிடிக்கின்ற பரவர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு. கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் செங்கோட்டை தாலுகாவிலேயும் வாழ்கின்ற கிறிஸ்தவ மீனவ பரவர்களை நீங்கள் பின்தங்கிய வகுப்பில் வைத்திருக்கிறீர்கள். ஆகவே, அவர்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பனையேறுகிற, நம்முடைய நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்களும் மிகவும் கஷ்டமான ஒரு தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பலவிதமான இன்னல்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த பனையேறும் நாடார் மக்களை எல்லாம் நீங்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பிலே சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறோம். (மணியடிக்கப்பெறறது) முடித்துவிடுகிறேன்.

அதேபோன்று ஆடு மாடுகள் கால்நடைகளை மேய்க்கின்ற யாதவர்களும், மிகவும் பின்தங்கியவர்கள், அவர்கள் காட்டிலே சென்று ஆடு மாடுகளை வளர்த்து வந்து கொண்டிருக்கிறார்கள்; ஏதோ படிப்பில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை; அவர்களும் முன்னேறுவதற்கு. நாடார் சமுதாயத்தையும் யாதவ சமுதாயத்தையும் மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று குலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு ஒரு தனி வாரியம் கேட்டு இருக்கிறார்கள். உண்மையிலேயே மிகவும் புராதன காலங்களிலிருந்து, மட்பாண்டங்கள் செய்து நாகரீகத்திற்கு அடிகோலியவர்கள் இந்த குலாளர் மக்கள்தான். ஆகவே, குலாளர் மக்களை பழங்குடி மக்கள் என்ற பிரிவில் நீங்கள் சேர்க்க வேண்டும். கதர் வாரியத்தில் அவர்களுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் அளவில்தான் கடன் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. (மணியடிக்கப் பெற்றது) முடித்துவிடுகிறேன். அந்த குலாளர் சங்கத்தினுடைய தலைவர் எங்கள் தமிழ் மாநில காங்கிரஸினுடைய மரியாதைக்குரிய நாராயணன் அவர்கள் மொத்தத்தில் இந்த மக்களை எல்லாம் ஒருங்கிணைத்து அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிற கஷ்டங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறார்கள். உண்மையிலேயே 20 இலட்சம் ரூபாய் அளவுதான் கதர் கிராம தொழில் வாரியத்தின் மூலம் அவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது)



முடித்துவிடுகிறேன். அதை அவர்களுக்கு இரத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.சி./எஸ்.டி மாணவர்கள் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு படித்த மாணவர்கள் இல்லை. ஆனால், இன்று கிட்டத்தட்ட 2425 பணி இடங்கள் காலியாகவே இருக்கின்றன. அந்த காலியான பணி இடங்களுக்கு பட்டதாரிகளை நியமிக்கலாம் என்று 113 விதி. 16-3-1997-ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் அதே ஆண்டு ஜி.ஓ. 423, 3-10-1997-ல் ஒரு ஆணை வழங்கப்பட்டு—(மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன்;—தமிழ், அறிவியல், கணிதம் படித்த பட்டதாரிகளை மட்டும்தான் அதிலே நியமிக்க வேண்டும் என்று ஒரு முன்னுக்குப்பின் முரணான ஆணையைப் பிறப்பித்த காரணத்தால்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது முன்னுக்குப்பின் முரணானது அல்ல. எந்தச் சமூகமாக இருந்தாலும், Secondary grade பயிற்சி பெற்றவர்களை நியமிக்கிற இடங்களில் பட்டதாரிகளை நியமிக்கக்கூடாது என்று ஏற்கெனவே நீதிமன்றத்திலே ஒரு கருத்துக் கூறப்பட்டு இருக்கிறது. ஆகவே, secondary grade இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களைப் பட்டதாரிகளைக் கொண்டு நியமிக்கிறபோது, சில சிறப்புத் தகுதிகள் இருப்பதனால், சில குறைகளைப் போக்குவதற்கும், தகுதி உடையவர்களையே நாங்கள் எடுக்கிறோம் என்று ஒரு காரணம் சொல்வதற்காக, அது அமைக்கப்பட்டு இருக்கிறது. காரணம் இல்லாமல் எடுத்தால், பட்டதாரியை இடைநிலை ஆசிரியர் பணி இடத்தில் நிரப்புகிறோம் என்ற குறை வருகிறது; குற்றச்சாட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கொ.வீ. நன்னன்.

*(குறுக்கீடு)*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன்; complete பண்ணிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. மு. அப்பாவு:** ஒரு நிமிடத்திற்கு மேல் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவர் அவர்கள் உங்களுக்கு 10 நிமிடங்கள்தான் கொடுத்து இருக்கிறார்கள். நீங்கள் அதற்கு மேல் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள்.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையின் மேல் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அலைமோதி ஆர்ப்பரிக்கும் கடலும் சற்று
அமைதியாய் ஓய்வெடுத்து அயர்ந்து தூங்கும்
இலைமீது வீழுகின்ற பனித் துளிகள்
இளைப்பாறி உருமாறி மறைந்து போகும்
மலைமீது தழுவுகின்ற மேகம் கூட
மலைமீது தழுவுகின்ற மேகம் கூட
மழையாக இறங்கவொரு காலம் பார்க்கும்
தலைசாயும் நேரமின்றி பணிகளாற்றும்
தலைவரே 'முதல்வரே' வணங்கு கின்றேன்."

என்று வணங்கி என்னுடைய பேச்சைத் தொடங்குகின்றேன். சாதிக் கொடுமைக்கும் தீண்டாமை ஒழிப்புக்கும் போராடிய தலைவர்கள்கூட துணிந்து ஏற்றுக்கொள்ள முடியாத நடைமுறையைச் சொன்னதோடு மட்டுமல்லாமல், செயல்முறையிலே காட்டி ஆதிதிராவிட மக்களின் சம்பந்தியாக நடைமுறைக்குக் கொண்டுவந்து காட்டி, ஆதிதிராவிட மக்களுக்காகப் போராடி வரும் இந்தத் தலைவரைப் போல, தமிழக முதல்வரைப் போல எந்தத் தலைவரும் இனிமேல் பிறக்கப்போவதில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்காட்டிகூட ஆண்டில் ஒருநாள், அதாவது சனவரி முதல் நாள் கிழிக்கப்படாமல் ஓய்வு எடுத்துக்கொள்கிறது. ஆனால், நமது தமிழக முதல்வர் அவர்கள் தமிழுக்காகவும், தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் பணியாற்ற என்றைக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டாரோ, அன்றுமுதல் இன்றுவரை ஓய்வில்லாமல் உழைத்து, தமிழும் தமிழினமும் உயர பாதையமைத்து வருகிறார் என்பதை நாடும் நல்லோரும் அறிவார்கள். முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வர் பொறுப்பு ஏற்றுள்ளார்கள். அவர் ஒவ்வோர் ஆண்டும் அளிக்கும் நிதிநிலை அறிக்கை, அறிஞர்கள் போற்றும் அற்புதமானது என்றாலும்கூட இந்த ஆண்டு அளித்த நிதிநிலை அறிக்கை அதனினும் சிறந்தது அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அத்தியாவசியமான வாழ்க்கைக்கு அத்தனையும் வழங்கி அடித்தளம் அமைத்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.



போலிக் கண்ணீர் வடிக்கும் மனித முதலைகளுக்கு இரையாக வாழுகின்ற அப்பாவி மக்கள் ஏற்றம் காண, அவர்களின் வாட்டம் தீர அல்லும் பகலும் அயராது உழைக்கும் அறிவுத் திறனும் அமைந்த பாங்கினை அரசியல் அறிந்தோர் - அரிது அரிது நிதிநிலை அரிது; இதனினும் அரிது எங்கனும்—இல்லையென — எல்லோரும் போற்றுவர்.

நாடு சிறக்க, நகரம் பொலிவுற உள்ளாட்சி அமைப்பிற்கு நிதியொதுக்கி நிறைவு செய்ததும், வேளாண்மைக்கும் வேளாண் மக்களுக்கும் கேளாமலே நிதி தாராளமாகத் தந்ததும், சாலை வேலை தாமதமில்லாது நடக்க, நாளைக் கடத்தாமல் நிதி நல்கிய தன்மையும் தொழில் பல செய்வோர், துயரைத் துடைத்திட திட்டம் பல தீட்டியதும் செயல்படுத்தியதும் ஆதியில் இல்லாமல் பாதியில் வந்த சாதியை ஒழிக்க சட்டங்கள் செய்ததும் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை குறையெனக் கூறாமல் நிறையக் கொடுத்த உங்கள் கற்பகக்கரங்களை தமிழ் உலகம் வணங்கும் வாழ்த்தும் இன்று. உங்களை நான் வணங்குகிறேன்.

பிற்பகல் 12-20

ஏதோ மாண்புமிகு முதலமைச்சர் மக்களிடமிருந்து வாக்குச் சீட்டுக்களைப் பெறுவதற்காக அவர் தற்போது சீர்திருத்தம் பேசுவதாக யாரும் எண்ணிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் கூறுகிறேன்.

குன்றனைய கோடுயரட்டும், நாடு செழிக்கட்டும், நலிந்தோர் சிரிக்கட்டும், ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை மண்ணிலே, தாழ்ந்த குலம் என்பவரும் தமிழகத்தில் இல்லையே என்று காலம் புகழ்பாடும். கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஆதிதிராவிடர் என்ற இனச் சொல்லே தமிழ் மொழியில் இல்லாமல் செய்ய வேண்டுமென நீதி திராவிடர்கள் நெஞ்சம் நினைக்கட்டும்.

1789-லே பிரெஞ்சு மண்ணிலே தோன்றிய முதல் ஜனநாயகப் புரட்சியின்போது சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் என்ற கோஷம் புதிதாக ஒலித்து சமுதாயப் புரட்சிக்கு வித்தூன்றியது. வெறும் கூப்பாடாக இருந்த அந்த வார்த்தைகளைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்த பெருமை நம் முதல்வர் அவர்களையே சாரும். அதன் வெளிப்பாடுதான் ஊர்தோறும் உருவாகிக் கொண்டிருக்கும் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்.

அமெரிக்காவில் கெட்டிஸ்பர்க் என்னுமிடத்தில் ஆப்ரகாம் லிங்கன் நிகழ்த்திய சொற்பொழிவுதான் ஆதிக்க வர்க்கத்தை எதிர்த்து அடிமைகளுக்காக, ஆதரவும் பரிவும் காட்டிய சிறப்பான சொற்பொழிவு என்று உலக வரலாறு கூறுகின்றது. ஆனால் சமாதானத்தை ஆதரித்து சாத்திரத்தை எதிர்த்து, சாதியத்தை எதிர்த்து இளம் வயதிலிருந்து நம் முதல்வர் பேசிய பேச்சும், எழுதிய எழுத்தும், ஆப்ரகாம் லிங்கன், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, இவர்களெல்லாம் விட்டுச் சென்ற சீர்திருத்தப் பணியைத் தொட்டுத் தொடர திருக்குவளை மண்ணிலே ஒரு மனிதர் பிறந்து வளர்ந்ததை வருங்கால வரலாறு வரையப்போவது மறுக்க முடியாத உண்மையாகும். ஆண்டாண்டு காலமாக அடிமைகளாகும் கொடுமைக்கு உள்ளாகிய அந்தத் தாழ்த்தப்பட்டவர்களின் மீது படிந்துள்ள கறையைத் துடைப்பதற்கு இன்றைய தமிழக முதல்வரை விட்டால் வேறு யாரால் முடியும்? அந்த அப்பாவி மக்களின் இதயத்தில் விழுந்துள்ள வடுவை ஆற்ற கலைஞரைத் தவிர வேறு எவரால் இயலும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

நனைகின்ற ஆடுகளைப் பார்த்துப் பார்த்து அழுகின்ற ஓநாய்கள் இருக்கும் நாட்டில் முனைகின்ற முற்போக்குவாதிகூட முடங்கியே கிடக்கின்ற நிலைதான் தோன்றும் என்பதைப் புரிந்துகொண்ட தமிழக முதல்வர் அவர்கள் நனைகின்ற ஆடுகளாக இருக்கின்ற அந்த ஆதிதிராவிட மக்களை அன்போடு அரவணைத்து, அவர்களின் கண்களைத் திறக்கக் கல்விக் கற்கச் செய்து முனைகின்ற முற்போக்குவாதிகளாக்கி அவர்களின் முன்னேற்றத்திற்கு இருக்கின்ற தடைகளை எல்லாம் நீக்கி அவர்களைச் சுதந்திரப் பறவைகளாய் ஆக்கி வாழவைக்கும் வல்லவர்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பது இந்த மாமன்றம் பெருமிதத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

நான் சார்ந்து இருக்கும் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு இரும்புத் தொழிற்சாலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக என்னுடைய மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி, இங்கு வாழும் மக்கள் விவசாயத்தைப் பெரிய அளவில் நம்பி வாழ்கின்றனர். என் தொகுதி மக்கள் நிறைய வேலையின்மையால், பிழைப்புக்கு வழி தேடி பெங்களூருக்குப் போய் வாழ்கின்றனர். என் தொகுதி மக்களின் வறுமை நீங்கி, இன்னலைப் போக்க தமிழக அரசு என் தொகுதி மீது



கருணைகூர்ந்து ஒரு தொழிற்சாலை அமைத்து, ஓரளவு மக்களின் இன்னலை, வறுமையை நீக்க திட்டம் வகுக்க வேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணைக்கு வரும் தென்பெண்ணையாற்றில இருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அடிப்படையில் என் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அரசுப் பேருந்துகளுக்காகப் பணிமனை நிரந்தரமாக அமைத்து, கட்டட வசதியும் செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பாளையத்திலுள்ள புறக்காவல் நிலையத்தை முக்கியக் காவல் நிலையமாக மாற்ற வேண்டும்.

செங்கம் நகரில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இருக்கும் இடத்திற்கு இடமாற்றம் செய்துவிட்டு, ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை போளூர் சாலையில் இருக்கும், மூடிய நிலையில் உள்ள பட்டுப் பூச்சி அலுவலகம் இருக்கும் இடத்தில் கட்டட வசதி செய்து இடமாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொட்டகுளம் செய்யாற்றில் மேம்பாலம், நீப்பத்துறை தென்பெண்ணையாற்றில் மேம்பாலம், ஓரவந்தவாடி செய்யாற்றில் மேம்பாலம் ஆகிய இத்தனை மேம்பாலங்களும் மிக முக்கியம் வாய்ந்தவை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்களின் அவல நிலையைத் தீர்க்க கருணைகாட்டி இம் மேம்பாலங்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செங்கம் ஊராட்சி ஒன்றியம் இளங்குண்ணி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும். இங்குள்ள மக்கள் விவசாயத்தையும் கால்நடைகளையும் பெரிதும் நம்பி பிழைப்பு நடத்துபவர்கள்.

செங்கம் முக்கிய சாலையின் அருகில் அமைந்துள்ள குளம், நீர் இல்லாமல் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் அளவிற்குக் கழிவுநீர் சேர்ந்து இயற்கையை மாசுபடச் செய்கிறது. இதை அரசு சீர்செய்து, அந்த இடத்தில் மூன்று மாடிக் கட்டடம் கட்டி, வணிக வளாகம் ஏற்படுத்தினால் செங்கம் நகரப் பகுதியில் ஜன நெரிசல் குறைந்து மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் காஞ்சி ஊராட்சியில்

உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதி ஏற்படுத்தித் தர வேண்டும். செங்கம் போளூர் சாலையில் புதுப்பாளையம் அருகில் உள்ள காட்டாற்றில் மேம்பாலம் அமைக்க வேண்டுகிறேன். செங்கத்தில் இருந்து மேல்பட்டு வழியாகச் செல்லும் ஜவ்வாது மலைச் சாலைகள் தார்ச் சாலைகளாக அமைக்கப்பட வேண்டும்.

ஜவ்வாது மலைக் கிராமங்களுக்கு பஸ் வசதி செய்து தர வேண்டுமாய் வேண்டுகிறேன். திருவண்ணாமலையில் இருந்து எனது தொகுதியிலுள்ள கிராமம் படிஅக்ரகாரத்திற்கு பஸ் வசதி வேண்டி 4 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறேன். என் முக்கியமான கோரிக்கையான இதை நிறைவேற்றும்படி பணிவோடு வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-25*

*2000* ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த புத்தபிரான் மனித உள்ளங்களில் மனித நேயத்தை விதைத்து மனித சமுதாயத்தில் சமத்துவம், சமாதானம், சகோதரத்துவம் இவற்றைத் தளிர்க்கச் செய்தார். அவருடைய மறைவுக்குப் பிறகு அவை கொஞ்சம் கொஞ்சமாகப் பாம்பின் வாயில் அகப்பட்ட தேரைபோல மறைந்து மனிதன் வன்முறையில் இறங்கியும் அறவழியில் செல்ல மறுத்தும், இரத்த வெறி கொண்டு அலைந்தும் நல்ல சிந்தனைகளில் நம்பிக்கையில்லாமல் அழிந்து கொண்டும் வருகிறான். இதுவரை கிணற்றில் போட்ட கல்லாகக் கிடந்த அந்த மனித நேயம் தலைவர் கலைஞர் காலத்தில்தான் மீண்டும் துளிர்விட்டுத் தழைக்கிறது என்பதைத் தெரிவித்து, ஒரு தத்துவப் பாடலை நான் பாடுகிறேன்.

"அந்த புத்தன் மறைந்ததும், அவன் உரைத்த போதனை மறைந்தது" இந்தப் பொல்லாத மனிதன் வாழ்க்கையிலே பெரும் சோதனை புகுந்தது. பல வேதனை தொடர்ந்தது, உலகமெங்கும் படர்ந்தது''...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்கெனவே 20 பேர் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினருடைய பாடலை நீங்கள் கேட்க விரும்பினால் இன்று முதலமைச்சர் அவர்களுடைய விருந்திலே கேட்டுக் கொள்ளலாம். மற்றவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள் (குறுக்கீடு) பேசி முடித்துவிட்டீர்கள். அடுத்து, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.



**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் சீர்மரபினர் குறித்த...... (மணியடிக்கப்பெற்றது)

## 2. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஈ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் [illegible]பில் மதிய உணவு வழங்குவதுபோல ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பில் பிற்பகல் 2.30 மணிக்கு சிற்றுண்டி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கேட்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது.

## 7. மானியக் கோரிக்கைகள், 2000 - 2001, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண். 31- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண். 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்--தொடர்ச்சி

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மானியக் கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் சமூகத்தில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிடர்கள், பழங்குடியின மக்கள், மற்ற மக்களோடு மக்களாக மேல் ஜாதிகளோடு இணையாக இணைய வேண்டுமானால் அரசு அவர்களுக்கு முன்னுரிமை அளித்து கல்வி பயில்வதற்கு முழு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆதிதிராவிட மக்கள், பழங்குடியின மக்கள் கல்வி பயில்வதற்கு முடியாத நிலை கிராமங்களில் இருக்கிறது. கிராமங்களில் வாழ்கின்ற ஏழையெளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளை, தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு முடியாத நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் வறுமைதான். அந்த வறுமையால் பல்வேறு வகைகளில் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பொருளாதார ரீதியாகவும், பல்வேறு தொழில்கள் இல்லாத காரணத்தினாலும் சுயமாகத் தொழில் செய்ய முடியாத காரணத்தினாலும் கிராமங்களில் உள்ள மக்கள் தங்களுடைய

குழந்தைகளைக் கல்வி பயில்வதற்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஆகவே தமிழக அரசு ஆதிதிராவிட மக்கள் மற்றும் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்புக்குப் போதிய ஏற்பாடு செய்வது மட்டுமல்லாமல், அரசின் மூலமாக நிதி அளித்து, அவர்கள் சுயவேலைவாய்ப்பு தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இரு சமுதாயத்தினருக்கும் வீடுகள் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டாலும்கூட அதை மேலும் விரிவுபடுத்தி பல்வேறு கிராமங்களிலே நகரங்களிலே இருக்கிற ஏழை மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரசு மாணவ மாணவியர்களுடைய விடுதிகளிலே தங்கிப் பயன்பெறுகின்ற மாணவ மாணவியர்களுக்கு நிதி அதிகம் அளிக்கப்பட வேண்டும். மாணவர்களுடைய விடுதியிலே இப்போது மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு 225 ரூபாய் வழங்கப்படுகிறது. வழங்கப்படுகின்ற அந்த நிதியானது பற்றாக்குறையாக இருக்கின்றது. ஆகவே அந்த நிதியை மாணவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

மேலும் பல்வேறு இடங்களில் தமிழகத்திலே அரசு விடுதிகள் இல்லாத காரணத்தால் மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்தெந்த இடத்தில், தகுதியுள்ள இடத்தில், விடுதிகள் அமைக்க வேண்டுமோ அங்கங்கு அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் விடுதிகள் நடைபெறுகின்ற இடங்களில் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் இருக்கும் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் அமைக்க வேண்டும். மேலும் மாணவர்களுக்குச் சீருடை முறையாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே தீண்டாமை மேலும் தொடராமல் இருப்பதற்குத் தமிழக அரசு முழு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆயிரக்கணக்கான கிராமங்களிலே டீ கடைகளில் இருந்த இரட்டை கிளாஸ்முறை இப்போது அறவே ஒழிக்கப்பட்டு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே எந்தெந்த கிராமங்களிலே இருந்தது, எந்தெந்த கிராமங்களில் ஒழிக்கப்பட்டது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகின்றேன். இன்னும் பல கிராமங்களில் இருப்பதாகப் பல்வேறு பொதுமக்கள் இடத்திலிருந்து கருத்துகள் வந்துகொண்டிருக்கின்றன.



துப்புரவுத் தொழிலாளிகள்; மனிதனுடைய கழிவை மனிதனே அள்ளிச் சுமக்கக் கூடாது, அந்த ஈனத் தொழிலைச் செய்யக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்து, நவீன முறையின் மூலம் அகற்றப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் வேலைவாய்ப்பை இழந்த துப்புரவுத் தொழிலாளர்களுக்கு உத்தரவாதமாக நிரந்தரமான சுய வேலைவாய்ப்பு, வழங்குவதற்கு அரசால் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மேலும், கிராமங்களில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள், காட்டுநாயக்கர்கள், சோழகர்கள் போன்றவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதில் அரசு அதிகாரிகளால் தாமதம் ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே, எளிய முறையில் அந்த அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நகரங்களில் வாழ்கின்ற ஆதி திராவிடர்களுக்கும், கிராமத்தில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கு வழங்குவதுபோல இலவச வீடு வழங்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நாங்குநேரி பகுதியில் கட்டளை என்ற கிராமத்திலுள்ள ஆதி திராவிடமக்களுக்காக பல ஆண்டு காலமாக வீட்டுமனைப் பட்டா வேண்டும் என்று கேட்டும் கூட காலம் கடத்தப்படுகிறது. அங்கே திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இடம் இருந்தும்கூட அந்த இடத்தை கையகப்படுத்துவதற்கு அந்த ஆதீனமே சம்மதித்தும் கூட இன்னும் காலதாமதப்படுத்தப்படுகிறது. ஆகவே, உடனடியாக, கட்டளையைச் சார்ந்த ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்குறுங்குடியிலே சத்திரத்திற்குச் சொந்தமான யூனியனின் கண்ட்ரோலில் உள்ள இடத்தில் ஆதிதிராவிட மக்கள் சுமார் 10 ஆண்டு காலமாகக் குடியிருந்து வருகிறார்கள். அங்கே ஆதிதிராவிடர் மட்டும் அல்லாமல், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பல சமுதாயத்தினர் குடியிருந்து வருகிறார்கள். அங்கே ஒருசிலர் அதிகாரத்தைப் பயன்படுத்தி (மணியடிக்கப்பெற்றது) யூனியன் மூலமாகவும், அங்கே இருக்கின்ற ஆதிதிராவிட மக்களையும், பிற்படுத்தப்பட்ட மக்களையும் குடிசையில் வாழ்கின்ற மக்களையும் அகற்றவேண்டுமென்று முயற்சி செய்வதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு நிரந்தரமாக அந்த இடத்தில் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதியிலே களக்காடு பகுதியிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 1000 பேர் இருக்கிறார்கள். ஆகவே, களக்காட்டில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காக ஒரு மாணவர் விடுதி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருதால்குறிச்சி கிராமத்தில் வில்வராயபுரம் என்ற ஆதிதிராவிடர் காலனி இருக்கிறது. பல ஆண்டுகாலமாக நானும் கோரிக்கை வைத்து, அந்த ஆதிதிராவிடர் காலனிக்குச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தும், பல்வேறு அதிகாரிகளை அணுகியும் கூட அந்தச் சாலை இதுவரை போடப்படவில்லை. ஆகவே, அந்த சாலையை உடனடியாகப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீனங்குளத்தில் ஆதிதிராவிட மக்கள் தனியாகப் பகுதி நேர ரேஷன் கடைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. பன்னீர்செல்வம்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து ஓரிரு கருத்துகளை முன்வைக்கலாம் என விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

அரசியல் சட்ட மாமேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் பெயரால் முதலில் சட்டக் கல்லூரியை ஆரம்பித்து, அதற்குப் பின்னாலே இந்தியாவில் எங்கும் இல்லாத அளவுக்கு அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகத்தையும் அமைத்து இப்போது இந்திய வரலாற்றில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுடைய பெயரிலே நினைவு மணி மண்டபத்தை அமைப்பதற்காக 5 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, அந்தப் பணியை முடித்து விரைவிலே மணி மண்டபத்தைத் திறக்க இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு



எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்து கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கு இந்த இரண்டு துறைகளின் மூலமாக நடத்தப்படுகின்ற ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் மற்றும் இவற்றைச் சார்ந்திருக்கக்கூடிய விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக இலவசப் புத்தகங்கள், சீருடை எல்லாம் வழங்கப்படுகின்றன. தங்கும் விடுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, பிற்படுத்தப்பட்டோர் துறையின் மூலமாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் மூலமாகவும் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, அதிலே படித்துவிட்டு வெளியே வந்து கொண்டிருக்கின்ற பட்டதாரி மாணவர்கள், முதுநிலைப் பட்டதாரி மாணவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள் எல்லாம் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்று அரசு பல்வேறு வகைகளிலே முயற்சிகளை மேற்கொண்டு, பயிற்சிகளை அளித்து வருகிறது; குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னையிலே இயங்கிக் கொண்டிருக்கிற I.A.S., I.P.S., L.I.C., தேர்வுப் பயிற்சி, B.S.R.B. தேர்வுப் பயிற்சி, இரயில்வே தேர்வுப்பயிற்சி, Tamil Nadu Public Service Commission தேர்வுப் பயிற்சி Staff Selection Commission தேர்வுப் பயிற்சி போன்ற பயிற்சிகளிலே இந்த இரண்டு துறைகளையும் சார்ந்த மாணவர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய மாணவர்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்ற காரணத்தால், அந்தப் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மாணவர்களுடைய சேர்க்கையை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் வேலையில்லாமல் இருக்கக்கூடிய பட்டதாரிகளுடைய பிரச்சினையைப் போக்கமுடியும் என்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, I.A.S., I.P.S.,-க்கு என்று இருக்கக்கூடிய பயிற்சி மையங்கள் இங்கே ஒரே மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இதைத் தமிழகத்தில் குறைந்தபட்சம் 3 மையங்களாக உருவாக்கித் தந்தால்தான் இந்த இரண்டு சமுதாயமும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயமும் உயர்கின்ற ஒரு மிகப்பெரிய வாய்ப்பைப் பெறமுடியும் என்ற காரணத்தாலே இந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன்; அவசியம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடியது 'தாட்கோ' நிறுவனம். தாட்கோ நிறுவனம் என்று சொன்னால், ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கடன் பெற்றுத் தொழில் செய்து, தொழிலின் மூலமாக முன்னேறலாம் என்ற நிலையில்தான் தாட்கோ அலுவலகத்தை அணுகிச் செல்கிறார்கள். ஆனால், தாட்கோ அலுவலகத்திலே எப்படிப்பட்ட, எவ்வளவு பெரிய கடன் தொகையாக இருந்தாலும், அதற்கென்று அதிகப்படியான மானியத் தொகையாக 25 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுகிறது. விளிம்புத் தொகையாக 20 சதவீதம் அளிக்கப்படுகிறது. 20 சதவீதம் விளிம்புத் தொகையையும், 25 ஆயிரம் ரூபாய் மானியத் தொகையையும் கொடுத்தும்கூட, வங்கிகளுக்கு அவர்கள் பரிந்துரை செய்து அனுப்பிய பிறகு வங்கிகளுக்குச் சென்றால் கடன் கிடைக்கவில்லை.

அதேபோன்று N.S.F.D.C. என்று சொல்லக்கூடிய தேசிய தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்பதிலிருந்து வழங்கப்படுகின்ற அந்த நிதியைக் கூட அதிகரித்துக் கொடுத்தால்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயம் முன்னேறுவதற்கு, தொழில் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

தாட்கோ நிறுவனம் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யக்கூடிய அந்த நிலையை மாற்றி தாட்கோவே நேரடியாக கடனைக் கொடுத்தால்தான் அந்த மக்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்; பொருளாதார நிலையிலே உயரமுடியும்; இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் தீவிரமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து ஆலோசித்து, ஒரு நல்ல நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று, தொகுதிப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன்.



பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலே, கொண்டலில் அரசு ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே பெண்கள் அதிகமாகப் படிக்கின்ற காரணத்தால், அந்தத் துறையின் மூலமாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி உருவாக்கித் தரவேண்டும். ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக சீர்காழி நகரத்திலே இயங்கி வருகிற மாணவர் இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், அதேபோன்று, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக இயங்கி வருகிற பெண்கள் விடுதிக்கு ஒரு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, தந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய நான்கு வருடங்களாக இந்த அவையிலே பலமுறை நான் வலியுறுத்தி வந்த, தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கையை இந்த அவையிலே இன்று சமர்ப்பணம் செய்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நான் புதிய தமிழகம் கட்சியினுடைய சார்பாக மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வெள்ளை அறிக்கை மட்டுமல்ல, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கையும் இத்தோடு சேர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவும் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று பட்டியலின மக்களுக்கான மானியத்திலே புதிய தமிழகத்தின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்டியலினத் துறையில், இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, ஏறக்குறைய 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்களுடைய வாழ்நிலையை மாற்றியமைப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய துறையில், ஒரு மிகப் பெரிய குறை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறைக்கு ஒதுக்கப்படக்கூடிய

நிதியாதாரங்கள், ஏறக்குறைய 350 கோடி ரூபாய் அளவிலே காட்டப்பட்டிருந்தாலும் கூட, அந்த 350 கோடி ரூபாயிலே திட்டச் செலவுகள், திட்டங்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய நிதி எவ்வளவு என்று பார்க்கின்றபொழுது, அது மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதிலே கூட, கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கான உதவித் தொகை ஆகியவற்றைக் கழித்துப் பார்க்கின்றபோது, இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படக்கூடிய நிதியினுடைய அளவு மிக மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டிலே சுதந்திரம் வாங்குகின்றபொழுது, நாமெல்லாம் ஒன்று சேர்ந்து போராடி, சுதந்திரத்தைப் பெற்றோம். ஆனால், இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய எண்பது சதவிகித மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறபொழுது 20 சதவிகித தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மக்கள் மட்டும்தான் இன்னும் சமுதாயத்திலே பொருளாதார ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும், அரசியலிலேயும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கக்கூடிய, ஓரங்கட்டப்பட்டிருக்கக்கூடிய, விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கக்கூடிய இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விசேஷக் கவனம் செலுத்தப்பட வேண்டுமே தவிர, இது ஏதோ ஒரு துறை என்ற அளவிலே பார்க்கப்படக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும் சேர்ந்திருக்கக்கூடிய இந்த வேளையிலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருப்பது, இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய 20 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் கிடையாது. அந்த மக்களிலே பெரும்பாலானோர், இன்னும் சொல்லப்போனால், 90 சதவிகிதம் மக்கள் விவசாயத் தொழிலாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நில உடைமையாளர்களோடு, நிலச்சுவான்தாரர்களோடு ஒப்பிட்டு— இந்த நாட்டிலே போலி வேடம் சிலபேர் பூண்டிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேகூட, இட ஒதுக்கீடு பெறுவதற்காக சிலபேர் புகுந்திருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிட்டு—இவர்களுக்குக் குறைந்த நிதி ஒதுக்கப்படக்கூடாது என்பதை நான் சுட்டிக்காட்டக்



கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையானவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இன்று ஒதுக்கப்படக்கூடிய நிதியைக் காட்டிலும் பல மடங்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

பிற்பகல் 12-45

அதுமட்டுமல்ல, இந்தத் துறைக்கென்று தனியாக அதிகாரிகள் இல்லாதது ஒரு மிகப் பெரிய குறை. இந்தத் துறையைக் கூட இன்னும் சீராகச் செயல்படுத்த, இன்னும் சிறப்பாகச் செயல்படுத்த, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்கீழ் செயல்படுத்தினால்தான் அது சிறப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு குறிப்பாக, 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்புவரை படிக்கக்கூடிய பெண் குழந்தைகளுக்கு, மாணவிகளுக்கு, வருடத்திற்கு 500 ரூபாய் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை குழந்தைகளுக்கும் இது கொடுக்கப்படுவது கிடையாது. ஏதோ ஆயிரம் குழந்தைகள் படித்தால், 10 சதவிகிதம், 15 சதவிகிதம் குழந்தைகளுக்கு மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கின்றபோது, எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுவதாகச் சொல்வது நியாயமல்ல. எனவே, எல்லாக் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு, திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டங்களிலே 9 ஆயிரம் பிள்ளைகள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 3-லிருந்து 5-வது வகுப்புவரை படித்தால், அதிலே 2 ஆயிரம் பேர்களுக்கு மட்டும்தான் உதவி கிடைக்கிறது.

அதேபோல், ஏறக்குறைய 3 வருடங்களுக்கு முன்பு இதே சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, சுயநிதிக் கல்லூரிகளிலே பயில்கின்ற மாணவர்களுக்கு payment seat என்று வருகின்றபோது, அதைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லப்பட்டது. ஆனால், இன்று வரையிலே, சுயநிதிக் கல்லூரியிலே பயில்கின்ற மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ அல்லது நர்ஸிங் கல்லூரியிலோ பயில்கின்ற அந்த மாணவர்களுக்கு அந்தக் கட்டணத்தை அரசு ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சுயநிதிக் கல்லூரிகளிலே படிக்க முடியாமல் போய் விடுகிறது. உதாரணத்திற்கு 100 இடம் என்று எடுத்துக் கொண்டால்,

அதிலே 50 இடங்களுக்கு மட்டும்தான் இப்போதுகூட இட ஒதுக்கீடு அமலாக்கப்படுகிறது. எனவே, சுயநிதிக் கல்லூரிகளிலேகூட, ஒட்டுமொத்தமான இடங்களுக்கும் இட ஒதுக்கீடு அமலாக்கப்பட வேண்டும். அந்த payment seat என்று சொல்லக்கூடிய பணம் கட்டிப் படிக்கக்கூடிய, (மணியடிக்கப்பெற்றது) அந்த இடங்களுக்கு எவ்வளவு செலவாகிறதோ, அதைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்கூட இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறக்குறைய 3 வருடங்களுக்கு முன்பு இதே சட்டமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக, 'தாட்கோ' வங்கி ஒன்று உருவாக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், அதற்குண்டான எந்தவிதமான நடவடிக்கையும் இன்று வரை எடுக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொடியங்குளத்திலே ஒரு பாலிடெக்னிக் கொண்டு வருவோம் என்று 1996 ஆம் ஆண்டு அறிவித்து, இன்றுவரை அதற்குண்டான எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதை நான் மன வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பட்டா கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பட்டா கொடுப்பதற்கு நிலம் எடுக்கிறார்கள்; ஆனால் அந்த நிலங்களை அளந்து கொடுப்பது கிடையாது. எந்த அதிகாரி எடுக்கிறாரோ, அதே அதிகாரி, அந்த நில உரிமையாளரிடத்திலே சொல்லி, வழக்குப் போடவைத்து, ஆயிரக்கணக்கான வழக்குகள், ஏறக்குறைய 30 ஆயிரத்திற்கும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் இன்னும் (மணியடிக்கப்பெற்றது) உயர்நீதிமன்றத்திலே தேங்கி இருக்கின்றன. எனவே, இந்தத் துறை மூலமாகத் துரித நடவடிக்கை எடுத்து, அந்த வழக்குகளை எல்லாம் உடனடியாகத் தீர்த்துவைத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் பட்டா கொடுப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அது மட்டும் போதாது. ஏறக்குறைய பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், கல்லூரிகளிலே படிக்கக்கூடியவர்கள் Scholarship கிடைக்காமல், கடந்த 2 வருடங்களாக முறையாகக் கிடைக்காமல், காலம் தாழ்த்திக் கிடைக்கின்ற காரணத்தினால், பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்.



அதேபோல, loan scholarship என்பது, கடந்த காலங்களிலே முறையாகக் கொடுக்கப்பட்டு வந்தது, இப்போது loan scholarship கொடுப்பதே கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) இப்படி, இந்தத் துறையிலே பல திட்டங்கள் காலதாமதமாவதும், அதேபோல அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அமலாக்கப்படாமலும் இருக்கிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நான் கடந்த முறை பேசுகின்றபோது, இந்தத் துறையிலே ஒருகாலத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுப் பள்ளிக்கூடங்களிலே சென்று படிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்த காலத்திலே தொடங்கப்பட்ட ஆதிதிராவிட நலப் பள்ளிகளைக் கல்வித் துறையின்கீழ் கொண்டுவந்து, பள்ளி மாணவர்களுக்கெல்லாம் வேறுபாடற்ற அளவிலே கல்வி கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். ஏனென்றால், கல்வித் துறையின்கீழே இருந்தால், மாணவர்களுக்கு முறையாகக் கல்வி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இப்போது ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழும் பட்டியல் இனத் துறையின்கீழும் இயங்கக்கூடிய பள்ளிகளைக் கண்காணிக்கக்கூடியவர் யாராக இருக்கிறார் என்றால், ஒரு தாசில்தாராக இருக்கிறார். அவரால் எப்படி நல்ல கல்வியை அந்த மாணவர்களுக்குக் கொடுக்க முடியும்? (மணியடிக்கப்பெற்றது) எனவே, அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் மட்டுமல்ல; ஒட்டுமொத்தமாக இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்றால், இந்த மக்களுக்கு உழுவதற்கு நிலம் கொடுத்தாக வேண்டும். 9.5 சதவிகித மக்கள் விவசாயத் தொழிலிலே ஆண்டாண்டுக் காலமாக அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த மக்களுக்கு வெறும் கல்வி வசதி மட்டும் கொடுத்தால் போதாது. கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட வேண்டும். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று கொடுக்கப்படுகின்றபோது, மிகக் கவனமாகப் பார்க்க வேண்டும். உழுபவர்களுடைய பட்டியலிலே தாழ்த்தப்பட்டோர் பெயர் இருப்பது கிடையாது. அவர்கள் இன்னும் விவசாயத் தொழிலாளர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு நிலங்களைக் கொடுத்தாலும் அல்லது பெரிய பெரிய பண்ணையார்களிடத்திலேயிருந்து எடுத்துக் கொடுத்தாலும், ஆதீனங்களின் சொத்துக்களை, நிலங்களை எடுத்துக் கொடுத்தாலும் அல்லது கோவில் நிலங்களை எடுத்துக் கொடுத்தாலும், விவசாயத் தொழிலாளர்களுக்கு, கூலித் தொழிலாளர்களுக்கு அதுவும் தாழ்த்தப்பட்ட

மக்களுக்கு நிலம் கொடுத்தால்தான் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும்; மாற்றம் அடையும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, பத்து நிமிடம் பேசிவிட்டீர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேசி முடித்து விடுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'தாட்கோ' வங்கி என்பது மிக மிக முக்கியமானது. ஏனென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் மானியம் கொடுக்கிறீர்கள். ஆனால், மானியத்தை மட்டும் கொடுத்துவிட்டு கடனுக்கு வேறு வங்கிகளுக்குச் சென்றால் பல காழ்ப்புணர்ச்சிகளின் காரணமாகவோ அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் வளர்ந்து விடக் கூடாது என்ற நோக்கத்தோடோ அல்லது பல காரணங்களினாலோ இவர்களுக்கு கடன்வசதி செய்வது கிடையாது. எனவே, நீங்கள் எத்தனை மானியங்கள் கொடுத்தாலும், அந்த மானியங்கள் எல்லாம் 6 மாதமோ அல்லது 1 மாதமோ கழித்து உங்களிடமே மீண்டும் திரும்பி வருமே தவிர... (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம், இது முக்கியமான பாயின்ட்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையான பயன் நிச்சயமாக வராது. எனவே, எப்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுகிறதோ, அதுபோல தாட்கோ வங்கி என்பது மிக மிக அவசியம். அதுபற்றி ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, 100 கோடி ரூபாயோ, 200 கோடி ரூபாயோ கொடுத்து அந்த தாட்கோ வங்கி உடனடியாகத் தொடங்கப்படுவதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதோடு, வேலைவாய்ப்புகளிலே இட ஒதுக்கீடு என்பது இன்னும் முறையாக அமல்படுத்தப்படாமல் பல துறைகளிலே இருந்து கொண்டிருக்கிறது. அவற்றைக் கண்காணிக்கக்கூடிய துறையாகவும், இந்தப்



பட்டியலினத் துறை விளங்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்தி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளிலே தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் மக்களுக்கான வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டு இருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 16 ஆம் தேதி இது குறித்து விவாதம் இருக்கிற காரணத்தாலே, இதிலே அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இப்போது சுழற்சி முறையிலே, மிகப் பிற்படுத்தபட்ட மக்களுக்கு இதுவரையிலே, ஏற்கெனவே இருந்து வந்த பாதிப்புகளை தமிழக அரசுக்கு நாங்கள் சுட்டிக் காட்டியபோது, அவர்கள் அதனை ஏற்று, இப்போது 10 இடங்களிலே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்கெனவே 1 இடம் மட்டுமே கிடைத்து வந்த நிலைமையை மாற்றி, அதை 2 இடங்களாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருப்பதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி 10 இடங்களிலே, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தரப்படுகின்ற இடமானது, 3-வது, 4-வது இடத்திலே வருகிற மாதிரி அந்தச் சுழற்சி முறையிலே இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, 10 இடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் கூட மட்டுமே இட ஒதுக்கீடு முறை பல்கலைக்கழகங்களிலே எல்லாம் இருந்தது. 'ஏ' பிரிவு போன்ற தொகுதிகளிலே பெரும்பாலும், 10 இடங்களுக்குக் குறைவாகத்தான் பணியிடங்கள் வரும். எனவே, அதனையும் கருத்திலே கொண்டு, ஒரு இடத்திற்கு மேற்பட்ட அனைத்து இடங்களிலேயும், எந்தப் பணியிடங்களாக இருந்தாலும், அவற்றில் இட ஒதுக்கீட்டு முறைப்படி இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று ஆணையைப் பிறப்பித்து—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் வெள்ளை அறிக்கையை முழுமையாகப் படித்து 16 ஆம் தேதி மாலையிலே நடைபெறவிருக்கின்ற விவாதத்திலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வேறு செய்திக்குச் செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களிலே, மிகக் கணிசமான மக்கள் தொகையைப் பெற்றிருப்பவர்கள் வன்னியர் சமுதாயத்து மக்கள். இவர்கள் இந்திய மக்களிலே பூர்வீகக் குடிமக்களாக இருந்து இருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் இருப்பதில் நான் ஒன்றினை மட்டும் இங்கே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது அவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களாக, மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருக்கக் கூடியவர்கள்; இவர்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை இருப்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த வன்னிய மக்களைப் பூர்வீகக் குடிமக்கள், பழங்குடியின மக்கள் பட்டியலிலே சேர்ப்பதற்கான காரணத்தை, இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு பழங்குடியினர் சட்டம், பிரிவு 14, வரிசை எண் 32-ன்படி, பள்ளியர் பழங்குடியினர் பட்டியலிலே இடம்பெற்றிருப்பது ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியர் யார் என்று பார்க்கிறபொழுது, தமிழ்ப்புள்ளிகள், அவர்களையே வன்னிய மக்கள் என்று Edward Thurstan அவர்கள் ``Castes and Tribes of Southern India" என்ற நூலிலே தெளிவாகக் கூறியுள்ளார்கள். அதோடு மட்டுமின்றி, Gazeteer of India-வில் பக்கம் 194-இலே, பள்ளியர் அல்லது வன்னியர் அல்லது படையாச்சி ஆகியோர், ஒரே சமூகத்தவர் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். 1871 ஆம் ஆண்டு சென்னை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பாகம் 1 பக்கம் 157-ல் பள்ளியர் மற்றும் வன்னியர் பூர்வீகக் குடிமக்கள் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து, தமிழக அரசிடம் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.





இப்போது பழங்குடியினத்தவருக்கு என்று தனித் துறையும், இயக்குநரகமும், அதேபோல, பழங்குடியினத்தவருக்கு இட ஒதுக்கீட்டில் ஒரு சதவிகிதமும் வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றோடு, மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேயுள்ள வன்னிய மக்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த இட ஒதுக்கீட்டிலே, மக்கள் தொகைக் கணக்கெடுத்து, அதற்கு ஏற்ப 15 சதவிகிதத்தையாவது எடுத்து, இந்தப் பழங்குடியினத்தவர் பட்டியலிலே, வன்னியர் சமுதாயத்தைச் சேர்த்து வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இப்போது தனியார் துறைகளிலே இட ஒதுக்கீடு இல்லை. தாராளமயமாக்கல் கொள்கையினாலே எல்லாமே தனியார் மயமாகி வருகிறது. பெரும்பாலான வேலைவாய்ப்புகள் தனியார் துறையிலேதான் இருக்கின்றன. இப்போது அகில இந்திய எஸ்.சி./ எஸ்.டி. ஆணையத்தினுடைய தலைவராக இருக்கிற எச். அனுமந்தப்பா அவர்கள்கூட, "தனியார் துறைகளிலே இட ஒதுக்கீடு கட்டாயம் செய்து தரப்பட வேண்டும், அப்போதுதான், உண்மையான சமூகநீதி நிலைநாட்டப்படும்" என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசானது மத்திய அரசை வலியுறுத்தி தனியார் துறைகளிலேயும், வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தனியார் முதலீடு செய்வதாக இருந்தாலும்கூட, நிலம், தண்ணீர் மின்சாரம் போன்றவற்றுக்கு வரிச் சலுகைகளை, மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான், அந்தத் தனியார்களுக்கு நாம் வழங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே, தனியார் துறைகளிலும் வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு வலியுறுத்தப்பட வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலேகூட, பூர்வீகக் குடிமக்களாக இருக்கின்ற செவ்விந்தியர்களுக்கும், கறுப்பர்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறுபான்மையின மக்களுக்கு உருது அகாடமி தொடங்கப்பட்டிருப்பதை வரவேற்கிற அதே நேரத்திலே, சிறுபான்மையின மக்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று அரசு ஏற்கெனவே உறுதி அளித்திருந்தது. அதையும் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன். பல நலக் குழுக்களினுடைய

பரிந்துரைகளைத் தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது. அதிலே இரண்டாவது பிற்படுத்தபட்டோர் நலக் குழுவினுடைய திரு. அம்பாசங்கர் தலைமையிலான நலக் குழுவினுடைய பரிந்துரைகளிலே மிக முக்கியமானதொரு பரிந்துரையாக வன்னியர் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திலே, குரூப்-1 தேர்வுக்கு, நேர்காணலுக்கு 250 மதிப்பெண்களும், குரூப்-2 தேர்வுக்கு 140 மதிப்பெண்களும் இப்போது இருக்கிறது. இதை மாற்றி 50 மதிப்பெண்களாகக் குறைத்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இரயில்வே துறையிலே அமைச்சராக இருந்த திரு. நிதிஷ்குமார் அவர்கள் நேர்காணலையே முழுவதுமாக நீக்கிவிட்டார்கள். ஆகவே, இந்த நேர்காணலுக்கு இருக்கின்ற அதிக மதிப்பெண்ணைக் குறைத்து வழங்கினால் பல பேர்கள் பயனடைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, U.P.S.C. என்று சொல்லப்படுகின்ற அனைத்திந்திய அரசு பணிகளிலே, இப்போது நேர்காணலுக்கு 300 மதிப்பெண் இருக்கின்ற காரணத்தினாலே, தமிழகத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் அதிலே தேர்வு பெற முடியவில்லை. எனவே, நாம் அந்த மதிப்பெண்ணையும், 50 ஆகக் குறைக்க வேண்டுமென்று, மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

அதேபோல, மாநில வாரியாக ஐஏஎஸ்/ஐபிஎஸ். (மணியடிக்கப்பெற்றது) போன்ற படிப்புகளிலே நமக்கான மாநில ஒதுக்கீடு கேட்டுப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்புப்படி சுயநிதிக் கல்லூரிகளிலும் 50 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. payment seat என்று சொல்லப்படுவனவற்றிலும் மாநில அரசுகள் விரும்பினால் இட ஒதுக்கீடு செய்து தரலாம் என்று சொல்கிறது. ஆகவே, அதையும் அரசு கவனத்திலே கொண்டு அவற்றை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



அரசு மற்றும் பல்கலைக்கழக நல்கைக் குழு நிதி உதவியுடன் நடக்கும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கான, மாணவர் சேர்க்கையை நம்முடைய சென்னை அண்ணா பல்கலைக்கழகம், உயர் கல்வி துறைக்குப் பரிந்துரை செய்திருப்பதைபோல, அந்த முழு மாணவர் சேர்க்கையையும் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இராணுவத்தில் தற்போது ஆள் எடுப்பதாக அறிகிறோம். கூர்கா ரெஜிமெண்ட், சிக் ரெஜிமெண்ட், நாகா ரெஜிமெண்ட் என்று இருப்பது போல மாநில அரசு, மத்திய அரசிடம் வலியுறுத்தி, Warrior Tribe என்று அழைக்கப்படுகின்ற இந்த படையாச்சி ரெஜிமெண்ட் ஒன்றைத் தொடங்குவதற்குப் பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சந்திரசேகரன்.

***திரு. சி. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகில் மனிதன் பிறக்கின்றான். பிறந்து வளர்கின்ற மனிதன் இயற்கைச் சூழ்நிலையில் பல்வேறு இடங்களில் வாழ்கின்றான். அப்படி வாழ்கின்ற மனிதர்களில் மலைப் பகுதிகளிலும், மலைக் குகைகளிலும் பிறந்து வாழ்கின்றவர்கள் மலைவாழ் மக்கள். மலைவாழ் மக்கள் தங்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்துகொள்வதில் மிகவும் சிரமமான சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், செல்ல சாலை இவற்றை அமைத்துக் கொள்வதே பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது.

நான் பிறந்த ஊர் கொல்லிமலை அரியூர் புதவலவு கிராமம் ஆகும். நான் சிறு வயதாக இருந்தபொழுது என்னை வளர்க்க எனது தாய் தந்தையர் 20 கிலோ மீட்டர் நடந்து சென்று மலையில் விளையும் பழ வகைகளைத் தலையில் சுமந்து சென்று பொருட்களை விற்று உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உடுத்த உடை வாங்கி வந்த காலம் உண்டு. உயர்நிலைக் கல்வி பயில தினந்தோறும் 10 கிலோ மீட்டர் நடந்து சென்றுதான் வர வேண்டும்; பேருந்து வசதியில்லாத கிராமம்; இந்த நிலைதான் மலைவாழ் மக்களுக்கு இருந்து வருகிறது.

உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவராகவும், தமிழினத்தின் தலைவராகவும், மலைவாழ் மக்களின் பாதுகாவலராகவும் விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு கொல்லிமலைப் பகுதிக்கு வருகை தந்து கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்குச் சிலை வடித்து விழா எடுத்தார்கள்.. அந்த நேரத்தில்தான் மலைவாழ் மக்களை நேரில் சந்தித்தார்கள். குறைகளைக் கேட்டறிந்த பிறகுதான் பல்வேறு திட்டங்கள் திட்டப்பட்டு அரசு சலுகைகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களும் 1998 ஆம் ஆண்டு இறுதியில் கொல்லிமலைப் பகுதிக்கு வருகை தந்து வாழவந்தி நாடு உண்டுஉறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு கணினி பாடப் பிரிவைத் தொடக்கி வைத்தார்கள். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனித குலத்தில் மலைவாழ் மக்கள் பின்தங்கிய நிலையில் இருக்கக் கூடாது. மலைவாழ் மக்கள் மற்ற சமுதாய மக்களைப் போல் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிலிருந்து பிரித்து, பழங்குடியினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனி இயக்ககம் அமைத்துத் தந்துள்ளார்கள். எனவே, தமிழகத்தில் வாழ்கின்ற 6 இலட்சம் மலைவாழ் மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது பணிவார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மலைவாழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ள மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மற்றும் மலைவாழ் மக்கள் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் வைத்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை மலைப் பகுதியில் ஆன்றோர் மன்றக் கூட்டம் ஏற்பாடு செய்து, மலைவாழ் மக்கள் பிரச்சினைகளைத் தெரிந்து, மலைவாழ் மக்களுக்கு மூன்றாண்டுகளில் அத்தனை அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க மூன்றாண்டுத் திட்டத்தை உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். மலைவாழ் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த மலைவாழ் மக்கள் பெரிய அளவிலான பலநோக்கு (LAMP) கூட்டுறவுச் சங்கம் அமைத்ததும், பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க மலைவாழ் மக்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அளித்த



சலுகையும், உண்மையான மலைவாழ் மக்களுக்கு ஜாதி சான்றிதழ் எளிதில் கிடைக்க, பள்ளியிலேயே ஜாதி சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்ததும், வீட்டுமனை இல்லாத மக்களுக்கு, ஆதிதிராவிடர் மக்களைப்போல் மலைவாழ் மக்களுக்கும் வீட்டுமனை வழங்கியதும், தாட்கோ கடன் வழங்கும் திட்டத்தில் மலைவாழ் மக்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை உருவாக்கித் தந்ததும், நம் கழக அரசு; நம் கலைஞர் அவர்கள்தான். இதுபோன்று எத்தனையோ ஏட்டில் அடங்காத் திட்டங்களைச் செயல்படுத்தி மலைவாழ் மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மலைவாழ் மக்களின் பிரச்சினைகளுக்காக, இந்த அவையில் நான் எடுத்துக் கூறும் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களும் செயல்படுத்த வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மலைப் பகுதியில் எங்கெல்லாம் மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் வனத் துறை அனுமதி பெற மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து சாலை வசதி செய்து தர வேண்டுகிறேன்.

மண்சாலை அமைக்கப்பட்டுள்ளதை தார்ச் சாலையாக மாற்ற மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்ட நிதியை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கி இந்த ஆண்டு தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டுகிறேன்.

கொல்லிமலைப் பகுதிக்கு முள்ளுக்குறிச்சி — மூலக்குறிச்சி முதல் பூசணிகுழி, நரியங்காடு வரை சாலை வசதியும், பெரிய கோம்பை — பாலப்பட்டி முதல் வால்குழி வரை வனத் துறை அனுமதி பெற்று சாலை வசதியும், ஆலத்தூர் குண்டனி வரை 12 கிலோ மீட்டர் மண்சாலையாக உள்ளதை தார்ச் சாலையாக மாற்றித் தரவும், சுண்டக்காடு — தாம்பப்பாடி வரை மண்சாலையாக உள்ளதை தார்ச் சாலையாக மாற்றித் தரவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதிக்கு மின்சார வசதியில்லாத கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க சுமார் 50 கிராமங்களுக்கு மின்சார வாரியத்தின் மூலம் ரூ.1 கோடியே 24 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பியுள்ளதையடுத்து மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு மின்சார வசதி செய்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, அரியூர், கஸ்பா, குழிப்பட்டி, ஊர்முடிப்பட்டி, சில்லேரி, பலவாழி, வடகாட்டுப்பட்டி, வால்குழி கிராமத்தில் மின்சார வசதி செய்திட வேண்டும். மலைவாழ் மக்கள் வாழ்ந்து வரும் பகுதியில் அமைந்துள்ள 75 சதவிகித மாணவ, மாணவிகள் கல்வி பயிலும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை மலைவாழ் மக்கள் உண்டுஉறைவிடப் பள்ளிகளாக மாற்றித்தர வேண்டும். விடுதிகள் இல்லாத பள்ளிகளுக்கு விடுதி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். கொல்லிமலை, செங்கரை உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உருவாக்கித் தர வேண்டும்.

அரியூர், புதுவளவு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 95% மாணவ மாணவிகள் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி பயில்வதால் உண்டுஉறைவிடப் பள்ளியாகவும்— உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் 10 கிலோ மீட்டர் தூரம் ஆகிறது. எனவே—உயர்நிலைப் பள்ளியாவும் உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-05

முள்ளுக்குறிச்சி மலைவாழ் மக்கள் உண்டுஉறைவிடப் பள்ளியில் மாணவிகள் 2000-க்கும் மேற்பட்டவர்கள் கல்வி பயில்வதால், மாணவிகளுக்குத் தனியாகப் பள்ளி அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆதிதிராவிடர் நலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே தந்தை பெரியாருடைய பொன்மொழி பொறிக்கப்பட்டிருக்கிறது. சாதிபேத வேறுபாடு உள்ள நம்முடைய நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் உரியவர்களுக்கு உரிய உரிமை வழங்கப்படாவிட்டால் அவர்களுடைய ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படும்



என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையிலே தந்தை பெரியாருடைய கொள்கையைப் பின்பற்றி நடைபெறுகிறது என்று சொல்லப்படுகின்ற இந்த அரசு பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவீதமும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதமும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவீதமும், மலை சாதியினருக்கு 1 சதவீதமும் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்த ஒதுக்கீடுகள் அனைத்துத் துறைகளிலும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக அவற்றையெல்லாம் ஆய்வு செய்வதற்காக 1998-லே அமைக்கப்பட்டிருக்கின்ற உயர்மட்டக் குழுவினுடைய அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அவை, உரிய காலத்திலே, உரிய முறையிலே விவாதித்து, அமல்படுத்தப்பட்டு, அத்தனை சமுதாய மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே இந்த அரசு துரிதமாகச் செயல்பட வேண்டும்.

அத்தோடு இல்லாமல் எந்தெந்தப் பணியிடங்கள் காலியாக உள்ளனவோ, அவற்றிற்கெல்லாம் பூர்த்தி செய்யப்படாத இன மக்களுக்கு வாய்ப்பளித்து, அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு பணி உயர்வினைப் பொறுத்தமட்டில் — பதவி உயர்விலும்கூட—வணிக வரித் துறை, வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, பதிவுத் துறை ஆகிய நான்கு துறைகளைத் தவிர, மற்ற எல்லாத் துறைகளிலுமே இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுவது இல்லை. எனவே எல்லா துறைகளுமே அதைப் பின்பற்ற அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அத்தோடு இல்லாமல், குறிப்பாக தேர்வாணையத்திலே குரூப் 1, குரூப் 2 போன்ற பதவிகளில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு வாய்ப்புகள் குறைவாகவே வழங்கப்பட்டிருக்கின்றன; இனி வருங்காலத்தில் அவற்றிலெல்லாம் அதிகமான அளவிலே வழங்கப்பட வேண்டும்.

அதோடு தற்போது தமிழகத்திலிருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர் கல்விக்குத் தேர்வு செய்யப்படுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டிருந்தாலும், இந்த அரசு 1997-98-லே 50 மாணவர்களுக்கும், அதுபோன்று இந்த ஆண்டு 100

பேருக்கும் சென்னையிலே பயிற்சி அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பயிற்சி மையங்கள் தமிழகத்திலே இன்னும் கூடுதலாக மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே— திருச்சியிலும், மதுரையிலும் இன்னும் 2 பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி—இன்னும் தமிழகத்திலே பல இன மக்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பதவிகளைப் பெறுவதற்கு இந்த அரசு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இல்லாமல் சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகாலமாகியும் தமிழகத்திலே இன்னும் பல்வேறு சமுதாயங்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர் படிப்பை எல்லாம் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக தமிழகத்திலே இருக்கின்ற முத்தரையர், முடி திருத்துவோர், சலவையாளர், கருமார், பொற்கொல்லர், கூடைமுடைவோர், பாய் பின்னுவோர், பண்டாரத் தொழில் செய்வோர், பூசாரிகள், நாவிதர், மண்பாண்டத் தொழில் புரிகின்ற இன மக்கள் எல்லாம் இதுவரையில் ஐ.ஏ.எஸ். படித்ததில்லை; ஐ.பி.எஸ். படித்ததில்லை. இதுபோன்று பொருளாதாரத்திலும், கல்வியிலும் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற இந்தச் சமுதாய மக்களை மிக மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்றொரு பட்டியலை உருவாக்கி தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற அனைத்துச் சலுகைகளையும் இதுபோன்ற சாதி மக்களுக்கு வழங்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மேம்பாட்டு ஆணையம் 1981-லே துவக்கப்பட்டிருந்தாலும், ஏறக்குறைய 20 ஆண்டு காலம் ஆகியும் இந்த ஆணையத்தின் மூலமாகப் பயனடைந்தோர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலே இருக்கிறது. குறிப்பாக இந்த ஆணையத்திலே தொடர்புகொண்டு கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பெறுவதற்குக் காலதாமதமாகிறது. அப்படிப் பெற்றிருந்தாலும், அந்த விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ் பெற்று, அந்த ஆணையத்தோடு தொடர்பு கொள்கிறபோது, அவர்கள் வங்கிக்குப் பரிந்துரை செய்வார்களேயானால், அங்கே அந்த வங்கிகளிலே அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படாமல் அவர்கள் எல்லாம் நிராகரிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்கு உரிய நேரத்திலே கடன் வழங்கப்பட ஆவன செய்ய வேண்டும்.

223321.



அதுபோன்று தற்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனுக்கான வட்டி 13.5 சதவீதமாக இருக்கிறது. அதை 9.1 சதவீதமாகக் குறைப்பதோடு, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் தொகை ரூ.5 இலட்சமாக இருக்கிறது. அந்தத் தொகை போதாது. அவர்கள் என்ன தொழில் செய்கிறார்களோ, அந்தத் தொழிலுக்குத் தகுந்தாற்போல அந்தக் கடன் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 1-10

அதோடு தமிழகத்திலே தற்போது பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர்மரபினர் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, சென்ற ஆண்டு இதற்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு முழுமையாகப் பயன்படுத்தப்படாத சூழ்நிலை இருக்கிறது. அந்தத் துறையிலே உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் பல்வேறு கிராமங்களிலே பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும், சீர்மரபினருக்கும் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே சேதுபாவாசத்திரம், பெருமகளூர், முத்தால்சேரி, மரக்காவலசை மற்றும் பல்வேறு கிராமங்களிலே இதுபோன்ற வீட்டுமனைக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலரோடு தொடர்பு கொண்டிருந்தும் ஏறத்தாழ 2 ஆண்டுகள் ஆகியும் அங்கே வழங்கப்படவில்லை. எனவே ஆதிதிராவிடர்களுக்கு என்று தனி வட்டாட்சியர் நியமிப்பதுபோல இந்த பிற்படுத்தப்பட்ட நலத் துறைக்கு என்று ஒவ்வொரு வட்டத்திலும் தனியாக பிற்படுத்தப்பட்ட நல வட்டாட்சியர் நியமிக்கப்பட வேண்டும். அதேபோல எனது தொகுதியிலே இருக்கிற . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டினுடைய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய அன்பான நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் நலன் என்று சொல்லுகின்ற நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சிக்கு இந்தக் கோரிக்கையிலே பேசுவதற்கு மிகுந்த பங்கு இருக்கிறது என்ற காரணத்தினாலே இன்னும் சில மணித் துளிகள் எனக்குக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று சொல்லி, முதலாவதாக என்னுடைய கோரிக்கையை வைத்து ஒருசிலவற்றை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த சமுதாய மக்கள், வாழ்க்கையிலே அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழக்கூடியவர்கள் எல்லாம் முன்னேற வேண்டும் என்று சொன்னால் அவரவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்கத்தினுடைய சலுகைகள், உரிமைகள் எல்லாம் முறையாகக் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைக்கின்ற நேரத்திலேதான் அது முழுமையான சமூக நீதி என்று சொல்ல முடியும். இந்தச் சமூக நீதியைப் பற்றி தந்தை பெரியார் அவர்கள் என்ன சொன்னார்களோ, அந்தக் கருத்துகளை மனதிலே கொண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களும் இந்தச் சமூக நீதிக்காக எந்த வகையிலே பாடுபட்டு வருகிறார்கள் என்பதையெல்லாம் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 1989ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற வரிசையிலே 107 ஜாதிகளைச் சேர்த்து, அதற்குப் பிறகு ஒரு ஜாதியைச் சேர்த்து 108 ஜாதிகளுக்கு மாண்புமிகு கலைஞர் அவர்கள் 20% இட ஒதுக்கீட்டை வழங்கினார்கள். அப்படி வழங்கிய காரணத்தினால்தான் எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் பல்வேறு மாநாடுகளின் வாயிலாக, மேடைகளிலே அவருக்கு நன்றியைக் காணிக்கையாக்கினோம். அதைப்போலவே பாராட்டவும் செய்தோம். அந்த வகையில் இப்படி இட ஒதுக்கீட்டை வழங்கிய கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்லக்கூடிய அதே நேரத்திலேதான் இந்தச் சமூக நீதியை நிலைநாட்ட தந்தை பெரியார் அவர்கள் சொன்ன வகையிலே எங்களுடைய நிறுவனர் தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் ஐயா அவர்கள் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுதந்திரம் பெறுவதற்கு எவ்வளவு போராட்டங்கள் நடைபெற்றன என்பதையெல்லாம் உணர்ந்து பார்க்கின்ற அதேநேரத்திலே இந்தச்



சமூக நீதிக்காகப் பாட்டாளி மக்கள் கட்சி டாக்டர் ஐயா அவர்கள் தலைமையிலே தொடர்ந்து போராட்டங்களை நடத்தி அந்தப் போராட்டங்களின்போது காவல்துறையாலே காக்கை, குருவிகளைச் சுடுவதைப் போலச் சுடப்பட்டு 21 உயிர்களைப் பறிகொடுத்த பிறகுதான் இந்தச் சமூக நீதி கிடைத்தது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிச் சமூக நீதி வழங்கப்பட்ட . . .

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது எந்த ஆண்டு நடைபெற்றது என்று சொல்லிவிட்டுப் பேசினால்தான் சரியாக இருக்கும். இல்லையென்று சொன்னால் ஏதோ இப்போது இருக்கிற ஆட்சி தொடர்ந்து இருந்தது மாதிரியும், இதன் காலத்திலேதான் இந்தத் துப்பாக்கிச் சூடு எல்லாம் நடந்து பல பேர் உயிர் இழப்பதற்கு இந்த அரசு பொறுப்பாக இருந்ததாகவும் அது பொருள்பட்டுவிடும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20% வழங்கியதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மாநாடுகளைப்போட்டுப் பாராட்டுச் செய்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறேன். ஆகவே இந்த ஆட்சி அல்ல என்பது நாடறிந்த உண்மை. கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது என்பதையும் நாடு நன்றாக அறியும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொடர்ந்து இந்த இட ஒதுக்கீட்டிலே பல்வேறு குறைகள் இருக்கின்றன என்பதை நாங்கள் இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டி வந்தோம். அப்படி அந்த இட ஒதுக்கீட்டிலே இருக்கக்கூடிய குறைகளைச் சுட்டிக்காட்டுகிற நேரத்திலே நிவர்த்தி செய்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்து, அந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

*பிற்பகல் 1-15*

அந்த வகையிலே B.C. ஆக இருந்தாலும் M.B.C. ஆக இருந்தாலும், S.C., S.T.-ஆக இருந்தாலும்கூட, இந்த நாட்டிலே எவ்வளவு வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர் என்ற புள்ளிவிவரத்தை அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லி, தமிழ்நாட்டிலே முதன் முதலாக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்று

சொன்னவர் டாக்டர் அய்யா அவர்கள். அந்த வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அந்த வெள்ளை அறிக்கையை இந்த மாமன்றத்திலே வெளியிட்டிருப்பது மிகவும் வரவேற்கக்கூடியது என்பதையும் இந்த நேரத்திலே மீண்டும் ஒரு முறை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இட ஒதுக்கீட்டிலே கூட குறைகள் இருக்கின்றன; அவற்றைக் களைய வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். இப்போது 108 ஜாதிகளுக்கு 20 சதவீதம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 108 ஜாதிகளிலே இந்த இட ஒதுக்கீட்டிலே சில நன்மைகளும் இருக்கின்றன; அதைப்போலவே பாதிப்பும் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 100 Engineer-களை Appointment செய்கிறார்கள் என்று சொன்னால் அதிலே மிகப்பெரிய சமுதாய மக்களை அல்லது குறைவான எண்ணிக்கையை உடைய சமுதாய மக்களைப் புறக்கணிக்க வேண்டுமென்று யார் நினைத்தாலும்கூட, எந்தெந்தச் சமுதாய மக்களைப் புறக்கணிக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களை விட்டுவிட்டு அந்த 100 Engineer-களையும் நியமிக்கக்கூடிய வாய்ப்பும், மற்றவர்களுக்கு வழங்கக்கூடியதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைத்தான் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே, இந்த இட ஒதுக்கீட்டை வழங்குவதற்கு முன்பாக எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களை முதலமைச்சருடைய இல்லத்திலே அழைத்துப் பேசுகின்ற நேரத்திலே டாக்டர் ஐயா அவர்கள் ஒரு Formula-வைச் சொன்னார்கள். என்னவென்று சொன்னால், கர்நாடக மாநிலத்திலே தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை என்று சொல்லக்கூடிய Compartmental Reservation அமலாக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே செய்தீர்கள் என்று சொன்னால் எல்லாச் சமுதாய மக்களும் பாதிப்பில்லாமல் முறையாக அந்தப் பலனைப் பெறுவதற்கு வாய்ப்பிருக்கும் என்று சொன்னார்கள். அதற்குக்கூட இங்கே என்னிடத்திலே ஆதாரங்கள் இருக்கின்றன. கர்நாடக அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அந்த உத்தரவிலே, "The percentage of reservation for the other backward classes of citizens listed in Annexure No.I and II under Article 15 (4) and 16(4) of the Constitution shall be fixed at 50% respectively as follows:

Category No.I — 5% — Most Backward . . . . (Gong was sounded)



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலே அப்படியொரு உத்தரவு போட்டிருந்தாலும் நம்முடைய மாநிலத்திலே இருப்பதைப்போல பிற்படுத்தப்பட்ட சமுதாயம், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களுக்குக் கிடைக்கும் அந்த Percentage அங்கே கிடைக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன்; இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளிலே 80 சதவிகிதத்திற்கும் மேலாக இந்தச் சமுதாய மக்கள் பலன் அடைகிறார்கள். ஆனால் அந்த G.O.-படி பார்த்தால், அவர்கள் ஏற்கெனவே பல்வேறு reservation வைத்திருக்கிறார்கள். அதிலே இந்தச் சமுதாயத்து மக்களுக்கு அந்தப் பலன் கிடைக்காது. கர்நாடகாவிலே இருப்பதைவிட நம்முடைய மாநிலத்திலே போட்டிருக்கின்ற சட்டம், கடைப்பிடிக்கின்ற வழிமுறைகள்தான் பின் தங்கிய சமுதாயத்திற்கும், மிகவும் பின் தங்கிய சமுதாயத்திற்கும் சிறந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலே மருத்துவத் துறையிலே கூடுதலான இடம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இருந்தாலும்கூட தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று இரண்டு தொகுப்பு மட்டுமே இருக்கின்றன. ஆந்திராவிலே 4 தொகுப்புகள் இருக்கின்றன. கர்நாடக மாநிலத்திலே 4 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கேரள மாநிலத்திலே 6 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப் பிரிக்கக்கூடிய காரணத்தினாலேதான் மக்கள் தொகைக்கேற்ப தந்தை பெரியார் சொன்னது மாதிரி சமூக நீதி கிடைக்கும். ஆகவே, இதிலே எந்த வகையிலும் யாருக்கும் பாதிப்பு வராது. அதற்கான புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. இப்படி அந்த 50 சதவீதத்தை 4 தொகுப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதிலே "Most Backward, More Backward, Backward, Occupational Group" என்று சொல்லி 4 பிரிவுகளாக கர்நாடக மாநிலத்திலே பிரித்திருக்கிறார்கள். அதைப்போலவே, ஆந்திர மாநிலத்திலேகூட 4 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ``Group A, Group B, Group C, Group D" இப்படி 4 பிரிவுகளாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்; அதைப்போலவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அங்கே 4 பிரிவுகளாகப் பிரித்து வழங்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் கூடுதலாக நேரம் வேண்டும்; நிறையப் பேசுவதற்குப் பொருள் இருக்கின்ற காரணத்தினாலே. அங்கே ஆந்திர மாநிலத்திலே

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டை அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே இருக்கக்கூடிய பிரிவுகளிலே எல்லா வகுப்பினருக்கும் சரியான சமூக நீதி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தினாலே 4 ஆகப் பிரித்திருக்கிறார்கள். அதைப்போலவே, தமிழ்நாட்டிலும், யாரையும் குறை சொல்வதற்காக நான் சொல்லவில்லை. இங்கே தலித் மக்களிலே அதிகப் பெரும்பான்மை கொண்டவர்களாக இருக்கக்கூடியவர்கள் ஆதிதிராவிட மக்கள், தேவேந்திர குல வேளாளர் மக்கள், அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மற்றவர்களெல்லாம் எண்ணிக்கையிலே குறைவாக இருக்கிறார்கள். ஆகவே, தலித் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு இருக்கக்கூடிய இட ஒதுக்கீடு அந்த 18 சதவீதத்தை, ஆந்திர மாநிலத்திலே வழங்கப்பட்டிருப்பதைப் போல, கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல இங்கேயும் 3 ஆக, 4 ஆகப் பிரித்து வழங்கினால் எல்லா மக்களுக்கும் சரியான பங்கு கிடைக்கும் என்று அந்த வாய்ப்பை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-20

இன்னொன்றுகூட...... (மணியடிக்கப்பெற்றது) நான் பேசி விடுகிறேன். எனக்குக் கூடுதலாக நேரம் கொடுங்கள். நிறையப் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படிச் சொல்கின்ற நேரத்திலே இந்த இட ஒதுக்கீட்டை எல்லாம் வழங்குவதற்கு சாதிவாரிக் கணக்கெடுப்பு அவசியம் தேவை. இங்கேகூட நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்கிற நேரத்திலே மாநிலத்தினுடைய மொத்த மக்கள் தொகையில், ஒடுக்கப்பட்ட இப்பிரிவினர் தொகை எத்தனை விழுக்காடு இருக்கின்றதோ அதற்கேற்றபடி இடஒதுக்கீட்டின் அளவு அமைய வேண்டும் என்பது இவ்வரசின் இறுதியான முடிவாகும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்திலே, 2001-லே இந்திய அரசாங்கம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்யவிருக்கிறது. சாதிவாரியான கணக்கெடுப்பு செய்வதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும். அதற்கு மத்திய அரசையும் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி சாதிவாரி கணக்கெடுப்பு செய்தால் தான் எல்லோருக்கும் சரியான நேரத்திலே கிடைக்கும்.

இங்கேகூட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே அந்த மக்கள் தொகை 18.9 சதவிகிதம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தலித் மக்கள் பொதுவாக



தமிழ்நாட்டிலே 22 சதவிகிதம் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தலித் மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கக்கூடிய இட ஒதுக்கீடு 18 சதவிகிதத்தை 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கேரள மாநிலத்திலே இஸ்லாமியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு இருக்கிறது. நான் கூட அதை இந்த மன்றத்திலே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் கொஞ்சம் பேசிவிடுகிறேன். இஸ்லாமிய மக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது M.B.C.-க்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய இட ஒதுக்கீடு 20 சதவிகிதம் என்பது போதாது. குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே அதை 30 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, 69 சதவிகித இடஒதுக்கீடு என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்பாடுபட்டாவது அதை நிறைவு செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட நாடாளுமன்றத்திலே அதைச் சட்டத் திருத்தமாகக் கொண்டு வந்து நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த 13 மாத ஆட்சிக் காலத்திலும் நிரந்தர தீர்வு காண முடியாமல் போய்விட்டது. இப்போதும் கேள்விக்குறியாக ஆகிவிடக்கூடாது என்ற காரணத்தினாலே கூட்டணி சூழ்நிலை சரியாக இருக்கின்ற காரணத்தினாலே அதைப் பெறுவதற்கு எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். கர்நாடகத்திலே Backward Class Commission அமைக்கப்பட்டது. இந்திய அளவிலே, தமிழ்நாடு அளவிலே பல்வேறு குழுக்களெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் எல்லாம் கூட இதைத்தான் சொல்கின்றன. சாதிவாரிக் கணக்கெடுப்பு வேண்டும் என்று சொல்கிறார்கள். சாதிவாரியாக இடஒதுக்கீடு வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த வகையிலே அந்தச் சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் தேவை என்பதை மீண்டும் மீண்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கேரளத்திலே—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதி பேத நிலை உள்ள நாட்டில் கல்வி, பொருளாதாரம்,

பொது வாழ்வில் அந்தஸ்து, பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் அவரவர்களுக்கான அளவு விகிதம் இல்லாவிட்டால் பகை, குரோதம், மோசடி போன்ற முயற்சிகளோடுதான் வாழ வேண்டும் என்று அன்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றோ சாதி பேத நிலை இல்லாமல் பொது வாழ்வில் அந்தஸ்து, பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் அவரவர்களுக்கான அளவு விகிதம் சமமாகக் கிடைக்கச் செய்து பகை, குரோதம், மோசடி முயற்சி இல்லாமல் நம்மையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கும் இன்றைய தாடியில்லாப் பெரியார் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து எனது உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோர் நலன்களுக்கு 156 கோடி ரூபாய் ஒதுக்கி இத்துறையை மேலும் மெருகேற்றிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கல்வியில் பின்தங்கி இருப்பதால் அவர்களைக் கல்வியில் மேம்பாடு அடையச் செய்ய மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 60 ஆயிரம் மாணவிகளுக்கு வருடத்திற்கு ரூபாய் 500 வீதம் ஊக்கத் தொகை வழங்கியதும், ஆறாம் வகுப்பு பயிலும் 30 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஓர் ஆண்டில் 10 மாதத்திற்கு ஊக்கத் தொகை வழங்கியதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மையை எடுத்துக்காட்டுகிறது. 1996 ஆம் வருட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பிற்படுத்தப்பட்டோர் 46.14 சதவிகிதமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 17.43 சதவிகிதமும், சீர்மரபினர் 3.44 சதவிகிதமும் ஆக மொத்தம் 67.01 சதவிகிதம் இருக்கிறார்கள். இத்துறை தமிழகத்தில் உள்ள 67.01 சதவிகித மக்களைக் கவனிக்க வேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் 46.14 சதவிகிதமாக இருந்தாலும் இதிலே இஸ்லாமியர்கள் 5 சதவிகிதமாக உள்ளனர். இவர்கள் உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஏனைய வகுப்பினரிடம் போட்டி போட வேண்டியிருக்கிறது. அதனால் இவர்களுக்குப் படிப்பு, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் இடம் கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே, அதைக் கருத்தில் கொண்டு முஸ்லீம்களுக்குக் குறைந்தபட்சம் 5 சதவீத இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-25*

முஸ்லீம்கள் பெரும்பாலும் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைத்தான் முழுமையாக நம்புகிறார்கள். முஸ்லீம்கள் மத்தியில் யார் எதைச் சொன்னாலும் அது எடுபடாது என்கின்ற சூழ்நிலை தற்போது முஸ்லீம் மக்க்ள் மத்தியிலே தெளிவாகத் தெரிகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களே, தலைவர் அவர்களே, உங்கள் ஒருவரைத்தான் முஸ்லீம் மக்கள் நம்புகிறார்கள். ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக முஸ்லீம்களுக்கு உதவிடும் வகையில் அறிக்கைகள் மற்றும் உதவிகள் செய்ததை முஸ்லீம் மக்கள் மறக்கவில்லை. ஏதோ, இன்று புதியதாகத் தோன்றிய தலைவர்கள் எல்லாம் ஆட்சியில் இருந்தபோது இந்த முஸ்லீம் மக்களைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், இன்றோ முஸ்லீம் மக்களின் பாதுகாவலர் தாங்கள்தான் என்று அவர்கள் தம்பட்டம் அடிப்பது முஸ்லீம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதை ஆணித்தரமாக இந்தச் சபையில் என்னால் சொல்ல முடியும். எனவே, தலைவர் அவர்களே, முஸ்லீம் மக்களின் நலன் மீது அக்கறை கொண்ட தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் முஸ்லீம்களுக்குக் குறைந்தபட்சம் இட ஒதுக்கீடு 5 சதவீதம் வழங்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன்.

கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்திலே தனது உடைமைகளை இழந்த பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு முதல் கட்டமாக நிவாரணத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. இரண்டாம் கட்ட நிவாரணத் தொகையை மக்களுக்கு மிக விரைவில் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சபையின் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

அதேபோல உருது மொழி பேசும் முஸ்லீம்களின் கனவை நனவாக்குகின்ற வகையில் உருது அகாடமி ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழக வரலாற்றிலே மூன்று மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களாக மூன்று முஸ்லீம்களை நியமித்து, முஸ்லீம்களின் நலனில் அக்கறை காட்டியது மட்டுமல்லாமல், முஸ்லீம்களின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பவர் என்பதைத் தாங்கள் நிரூபித்துள்ளீர்கள்.

தமிழ்நாட்டிலே பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைத்து, இதுவரை 2,171 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கியுள்ளீர்கள். அதுபோன்று, சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைத்து சிறுபான்மையினர் பயனடைகிற வகையிலே 464 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளீர்கள். மேலும், இத்துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. இதனால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, அதைக் கருத்தில் கொண்டு வக்ஃப் வாரியத்திற்குத் தனியாகச் சொந்தக் கட்டடம் கட்ட ரூபாய் 1 கோடி ஒதுக்கித் தரவேண்டும் என்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பழங்குடியினர், ஆதிதிராவிடர் நலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துகளை வழங்குவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஒரு வெள்ளை பேப்பரில் கருப்பு மையினால் அச்சடிக்கப்பட்டு, வெள்ளை அறிக்கை என்ற அறிக்கையை வைத்திருப்பது, அது வெள்ளை அறிக்கையா? கருப்பு அறிக்கையா என்பதை . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இங்கு ஏற்கெனவே சொல்லிவிட்டேன், அந்த வெள்ளை அறிக்கை மீது தனியாக விவாதம் நடைபெறவிருக்கிறது என்று அப்போது அதைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம். இப்போது இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** அப்போது பார்த்துக்கொள்வோம். மேலும், ஆதிதிராவிட மக்களுக்காக ஒதுக்கப்படுகிற நிதி, குறிப்பாக இட ஒதுக்கீடு பிரகாரம், சுமார் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட வேண்டிய நிதி 275 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்படுவதன் காரணம் என்ன?

மேலும், பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்காக வீட்டுமனைப்



பட்டா வழங்குவதற்காக சில இடங்களில் அரசு நிலம் கையகப்படுத்துகின்ற சூழ்நிலையில் சில நபர்கள், நிலத்தினுடைய உரிமையாளர்கள், 4(1) வழக்கு போட்டு நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். கிட்டத்தட்ட 10 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் வரை அந்த வழக்குகள் நிலுவையில் இருப்பதன் காரணமாக வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட வேண்டிய அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு, அவர்கள் உயிரோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில் வீட்டுமனைப் பட்டா வழங்க முடியாத நிலைமை இருக்கின்றது. இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டுவதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சொ. கருப்பசாமி:** நீதிமன்றத்திற்குச் செல்லவிடாத அளவிற்கு உடனடியாக அதை மாற்றம் செய்யவேண்டும். சில இடங்களில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்பட்ட பின்னரும் கூடச் சில நபர்கள் கோர்ட்டுக்குச் சென்று நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட பிறகு கோர்ட்டுக்குச் செல்வதால், பயனாளிகளுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதில் தாமதமும் இடையூறும் இருந்து வருகின்றன.

ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதுபோல, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், நலிவுற்ற நபர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்ட கூடுதலாக நிதி ஒதுக்கித்தர வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கின்றேன். குறிப்பாக ஆதிதிராவிட நலத் துறை மூலம் மத்திய அரசு வழங்குகின்ற சுமார் 400 கோடி ரூபாய் கடன் உடனடியாக மக்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையிலேயே இருந்து, சென்னை தலைமையிடத்திலே அந்தப் பணம் எல்லாம் தேங்கி, வேறு திட்டத்திற்குச் செலவிடுவதாகப் புகார்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. உடனடியாக அந்தந்த மாவட்டங்களுக்கு, மாவட்ட மேலாளர் (ஆதி திராவிடர் நலன்) மூலமாக பயனாளிகளுக்கு வழங்கிட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட

400 கோடி ரூபாய் ஆங்காங்கே தேங்கி இருக்கிறது, அது செலவிடப்படவில்லை என்று பொத்தாம் பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். எந்தப் பணமும் செலவழிக்கப்படாமல் இல்லை. கடந்த கால ஆட்சியில்தான் ஆதிதிராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை Surrender செய்த வரலாறு எல்லாம் உண்டு. இந்தத் துறையைப் பொறுத்த அளவில், ஒதுக்கப்பட்ட பணத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக முறையோடு செலவழித்து வருகிறோம். குறிப்பாக, பழங்குடி மக்களுக்காக ஒதுக்கப்பட்ட அத்தனை பணத்தையும் முறையாகச் செலவு செய்கிற ஆட்சி தமிழக ஆட்சிதான், தலைவர் கலைஞருடைய ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலேதான் விவசாயிகளுக்கு கிணறுகள் வெட்டுவதற்காக மானியமாக ரூ.10,000-மும், கடனாக ரூ.10,000-மும் வழங்கப்பட்டது. அதுபோல, Oil Engine-ஐப் பொறுத்தவரையில்....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று செலவிடுவதற்காக, குறிப்பாக மயானங்களுக்குச் செல்கின்ற பாதை அமைக்க, மயானங்களுக்குக் கூரைகள் அமைக்க, விளக்கு வசதிகள் செய்வதற்கு என்று ஒதுக்கப்படக்கூடிய பணம் முறையாகச் செலவழிக்கப்படவில்லை என்பது யதார்த்தமானது. அதுபோல, துறையில் இத்தனை கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, எந்தெந்தக் கிராமங்களில் எந்தெந்தப் பகுதிகளில் அது செலவழிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. எனவே, உறுப்பினர் அவர்களின் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்காகச் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் என்ற ஒரு அருமையான திட்டத்தினை, 1980-லிருந்து தமிழக அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. இதற்காகக் கடந்த மூன்றாண்டுகளில் 3277 கோடி ரூபாய்



ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் 1083 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிட நலத்துறை முழுமையாக இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கிய பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. மேலும், 20 துறைகள் மூலம் — பல்வேறு துறைகள் மூலம் — நலத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்குரிய விவரங்களும் இருக்கின்றன. சுய தொழில் தொடங்குவதற்கும், சுய தொழில் நடத்துவதற்கும் வேண்டிய நபர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குரிய பட்டியலும் தாட்கோ மேலாண்மை இயக்குநரிடம் இருக்கிறது என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்சார மோட்டார் வழங்கப்பட்டன; சிறு விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வழங்கப்பட்டன; அப்போது வழங்கப்பட்ட அந்தக் கடன் தொகை, மானியத் தொகை எல்லாமே இப்போது இந்த ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டன. நெல்லை மாவட்டத்தில் மாவட்ட மேலாளர் அவர்களிடம் நேரடியாகக் கேட்கும்போது——

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, வாங்கப்பட்டது, வாங்கப்பட்டது என்று கணக்கு எழுதப்பட்டது என்பது மட்டும் உண்மை. அதைத்தான் இந்த நேரத்தில் குறிப்பிடலாம்.

*பிற்பகல் 1-35*

**திரு. சொ. கருப்பசாமி:** இப்போது எந்தச் சலுகையும் வழங்கப்படவில்லை. இதை நான் அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தனை பேருக்கு உழவு மாடுகள், Oil Engines வழங்கப்பட்டன என்று ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக அவர்கள் அறிவிப்புக் கொடுப்பார்களேயானால், அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்த அளவுக்கு இப்போது மானியங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு விட்டன.

அதேபோல தனித் தாசில்தார் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலே இருந்து அவர்கள் பணிபுரிய வேண்டும். குறிப்பாக, வட்டாட்சியர் அலுவலகத்தில் தனித் தாசில்தார், (குடிமைப் பொருள் வழங்கல்), தனித் தாசில்தார் (நலிவுற்றோர் குடும்ப நலத் திட்டம்) என இப்படிப்பட்ட தாசில்தார்கள் எல்லாம் அந்த வட்டாட்சியர்

அலுவலகத்திலிருந்து பணி செய்கிறார்கள். ஆனால் ஆதி திராவிடர் நலத் துறை தாசில்தார் அவர்கள் மட்டும் தனியாக ஒதுக்குப் புறத்தில் இருக்கிறார்கள். அது அலுவலகம் மாதிரி இல்லை. அந்த அளவுக்கு ஒதுக்குப்புறத்தில், சரியான முறையில் வேலை செய்யாத, குற்றம் சாட்டப்பட்டவர்கள், புகார் கொடுக்கப்பட்டவர்கள், மாறிவந்தவர்கள்தான் பணி செய்கிறார்கள். அங்கே Phone கிடையாது. அவர்களுக்கு ஜீப்பும் வழங்கப்படவில்லை. அவர்கள் ஆபீஸில் இருப்பதே கிடையாது. நான் சிலமுறை அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்க்கச் செல்கின்றபோது எப்போதுமே Camp-க்குச் சென்று விட்டார், Camp-க்குச் சென்று விட்டார் என்று சொல்கிறார்களே தவிர, அந்த அலுவலகத்தில் இருந்து பணி செய்வது இல்லை. அந்த அளவிற்கு அந்தத் தனித் தாசில்தார்கள் மிகவும் ஒதுக்குப்புறமாக இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்க ஊழியர்கள் மாதிரி தெரியவில்லை. அந்த அளவுக்கு இப்போது இந்த ஆட்சி சென்று கொண்டிருக்கிறது.

அடுத்து, ஆதிதிராவிடர் நலத் துறை மாணவ மாணவிகளுடைய விடுதிகளில் தரமான உணவு வழங்கப்படுவது இல்லை; அவர்களுக்குச் சீருடை எல்லாம் கொடுப்பது இல்லை. மிகவும் மோசமான நிலையில் சுகாதார வசதியில்லாமல் எங்களுடைய சங்கரன்கோயில் தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் சுற்றுப்புறம் மிகவும் மோசமாக இருக்கிறது. முறையான விடுதிக் காப்பாளரே இல்லை. அந்த அளவுக்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் விடுதியில் உள்ள மாணவர்கள் எல்லோருக்கும் சொறி, சிரங்கு வந்து மிகவும் நலிவுற்ற நிலையில் நோய்வாய்ப்பட்டு, அவர்கள் அடிக்கடி ஊருக்குச் செல்ல வேண்டிய நிலையில் எங்களுடைய சங்கரன்கோயில் தொகுதி இருந்து வருகிறது. (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக நடத்தப்படும் மாணவர்களுடைய விடுதிகளிலும் தரமான உணவு வழங்கப்படுவதில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உணவினுடைய விகிதத்தையும் கூடுதலாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். பணம் இல்லாத காரணத்தால் நாங்கள் சிலநேரங்களில் கொடுக்க முடியவில்லை என்று அவர்களுடைய கஷ்டத்தையும் சொல்கிறார்கள். அவர்களுக்கு முறையாக உணவு விகிதத்தை உயர்த்திக் கொடுத்து, வாரத்திற்கு ஒருமுறை கறிவகை சாப்பாடு நல்ல முறையில் கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



திருநெல்வேலி மாவட்டத்தில் வாசுதேவநல்லூர் அருகில் தலையணை பக்கம் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கு படிக்கின்ற அந்த மாணவர்கள், தங்களுக்கு விடுதியில் தரமான உணவு வழங்க வேண்டும்; தங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல அனைத்து விடுதிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைக்க வேண்டும். சுகாதார முறைப்படி, சுத்தமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும். மேலும் இப்படிப்பட்ட சில முறைகளில் சீர் செய்ய வேண்டும்.

எங்களுடைய தொகுதிக்கு 1,000 வீட்டுமனைப் பட்டா கேட்டோம். திருநெல்வேலி மாவட்டத்தில் எங்களுடைய சங்கரன்கோயில் தொகுதி தனித் தொகுதி. சங்கரன்கோயில் முதல் இராஜபாளையம் வரையுள்ள சாலையில் கிட்டத்தட்ட 50 ஏக்கர் இடத்தை ஒரு பெரிய நிலச் சுவான்தார் வைத்திருக்கிறார். அந்தச் சாலையில் அந்த வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். அதனுடைய சர்வே எண் கூடத் தெரியும். களப்பாகுளம் சர்வே எண் 438/(ஏ)1(ஏ) என்ற இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும், தொகுப்பு வீடுகள் மற்றும் சமத்துவபுரம் உருவாக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகுவேலு.

***திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற அரிய வாய்ப்புக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையிலே — நேற்று மக்களவையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்து மிக வெற்றிகரமாக நிறைவேற்றிய அந்த் நிகழ்ச்சியை இன்றைக்கு பேரவையிலே — அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-40

அதுபோலவே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையினுடைய வெள்ளை அறிக்கையை இன்றைக்குப் பேரவையிலே நம்முடைய அரசு சமர்ப்பித்திருக்கிறது. இந்த நேரத்தில் நம்முடைய இந்த சட்டப்

பேரவையினுடைய உறுப்பினர்களாக வந்திருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்கள் — நாடாளுமன்றத்திலே 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் — 38 பேருக்கு இந்த சட்டப் பேரவையிலே அங்கம் வகிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதற்குரிய கர்த்தாவாக இருக்கின்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களை, ஆதி திராவிட மானியம் பற்றி விவாதிக்கின்ற இந்த நேரத்திலே நினைவு கூர வேண்டும். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஆதி திராவிட மக்களுக்கு வைத்துவிட்டுச் சென்ற சாசனம், 'கற்பி, ஒன்று சேர், போராடு' என்பதுதான். அதுமாத்திரமல்ல, அவர்கள் இந்த நாட்டு சட்டபூர்வமான தாழ்த்தப்பட்ட கோடானகோடி மக்களுக்கு சட்டப் பாதுகாப்பை அளித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் விட்டுச் சென்ற சொத்து என்பது, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின வகுப்பினர்களுக்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அவர் உருவாக்கிய பாதுகாப்பு ஏற்பாடுகளேயாகும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளில் எந்த வகையிலேயும் தீண்டாமையைப் பின்பற்றுதலைத் தடை செய்யவும், தீண்டாமையை ஒழிக்கவுமான வகையில் உள்ளது 17-வது பிரிவு. கட்டாயமாகவும், கொத்தடிமையாகவும் நடத்தப்படுவதைத் தடுப்பது 23-வது பிரிவு. மத்திய, மாநில அரசுகளில் பல்வேறு பதவிகளில் பணிகளுக்குத் தேர்வு செய்வதில் ஒதுக்கீடு வழங்குவது 235-வது பிரிவு. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்களது மக்கட்தொகைக்கேற்ப, மக்கள் சபையில் பிரதிநிதித்துவத்திற்கான இட ஒதுக்கீடு செய்வது 330-வது பிரிவு. இதுபோன்ற மாநில சட்ட மன்றங்களிலும் இட ஒதுக்கீடு செய்வது 332-வது பிரிவு. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பினரின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை அரசானது மிகுந்த அக்கறையுடன் மேம்படுத்த வேண்டுமென்றும், சமூக அநீதி மற்றும் அனைத்துவித சுரண்டல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துவது 46 ஆவது பிரிவு. இவற்றை நான் இந்தப் பேரவையிலே பதிவு செய்வதற்கு மிகவும் பெருமைப்படுகின்றேன்.

அதேநேரத்தில் 1990 ஆம் ஆண்டு இதே பேரவையில் பேரவை உறுப்பினராக இருந்த சிறுகதை மன்னன், எனது உள்ளம் கவர்ந்த எழுத்தாளர் எஸ்.எஸ். தென்னரசு அவர்கள், மண்டல் கமிஷனை ஆதரித்துப் பேசுகின்ற அந்த நேரத்தில் ஒரு அரிய கருத்தைச் சொன்னார்கள் "தாழ்த்தப்பட்ட சமுதாயமும், பிற்படுத்தப்பட்ட சமுதாயமும் இரட்டைக் காப்பியங்களைப் போல; சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைப்பதைப் போல,



பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களும் ஒன்று சேரவேண்டும். ஒன்று சேர்க்கக்கூடிய ஆற்றல் படைத்த தலைவராக நம்முடைய கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள்" என்று இந்தப் பேரவையிலே அவர்கள் கூறியது இப்போதும் நம்மால் நினைத்துப் பார்க்கக்கூடிய ஓர் அரிய கருத்தாகும். அந்த வகையிலே நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு தந்தை பெரியார் பெயரால் — 99 ஆண்டுகள் வாழ்ந்து, தன்னுடைய வாழ்நாளை இந்தச் சமுதாயத்தினுடைய மேம்பாட்டிற்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அர்ப்பணித்த தந்தை பெரியாருடைய பெயரால் — சமத்துவபுரம் என்ற சீரிய திட்டத்தை உருவாக்கிய நம்முடைய கலைஞர் அவர்கள் மிகப் பெரிய சமுதாய விஞ்ஞானியாக இருக்கின்ற காரணத்தால்தான், மிகப் பெரிய சிந்தனையாளராக இருக்கின்ற காரணத்தால்தான்; ஓர் அரசியல் கட்சியினுடைய தலைவராக மட்டுமல்லாமல், ஒரு நாட்டினுடைய முதலமைச்சர் என்று இல்லாமல் உலகத்திலே இருக்கக்கூடிய மிகச் சிறந்த சிந்தனையாளர்கள் வரிசையில் இருக்கின்ற Karl Marx, Voltaire, Rousseau போல, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த ஒப்பற்ற தலைவர்; திராவிட இயக்கத்தினுடைய தந்தை பெரியார் அவர்கள். பெரியார் அவர்களுக்குப் பிறகு, அறிஞர் அண்ணா, அண்ணாவுக்குப் பிறகு, நம்முடைய ஒப்பற்ற சமுதாயத் தலைவராக, சமுதாயத்தினுடைய தலைவராக இருக்கின்ற கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சமத்துவபுரத் திட்டத்தை இந்த அரசு வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-45

சென்ற ஆண்டு, மனிதநேயத்தோடு அறிவிக்கப்பட்ட, மனிதக் கழிவுகளை மனிதர்களே தலையிலே தூக்குகின்ற, கொடுமையை ஒழித்த ஒரு மாநிலம், புதுவை மாநிலம்.

நீங்கள் புதுவை மாநிலத்திற்குச் சென்று எந்தப் பகுதியைப் பார்த்தாலும் அங்கே சில காட்சிகளை வைத்து இருப்பார்கள். மனிதக் கழிவுகளை மனிதர்களே தூக்குகின்ற, கொடுமையை ஒழித்த மாநிலம் புதுவை என்ற அந்தப் பெருமையை அந்தச் சின்னஞ்சிறு மாநிலம் பெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த நிலையைத் தமிழகத்திலேயும் உருவாக்குவதற்காக கலைஞர் அவர்கள் அந்த அருமையான திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும்விட பழங்குடி மக்களுக்காக ஒரு தனி இயக்ககத்தை இந்த ஆண்டு தொடங்கியிருக்கிறார்கள். 1974-லே தொடங்கப்பட்டது தாட்கோ. அந்த தாட்கோவின் மூலமாக இந்த ஆண்டு நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே தாட்கோ கிராமங்கள் ஏற்படுத்தப்படும் என்ற குறிப்பு காணப்படுகிறது.

எல்லாவற்றையும்விட கலைஞருடைய பேச்சு, கலைஞருடைய எழுத்து அவருடைய உழைப்பு இந்தச் சமுதாயத்திற்கு என்றும் பயன்படும் என்று (மணியடிக்கப்பெற்றது) கருதுகின்ற இந்த நேரத்தில், எழுத்துக்களே ஆற்றல் மிக்க படைக்கலன்கள். அந்த வகையிலே தந்தை பெரியாருடைய பேச்சுகளும், எழுத்துகளும், அறிஞர் அண்ணாவினுடைய பேச்சுகளும் எழுத்துகளும், கலைஞருடைய எழுத்துகளும், அவர் எழுதிய "ஒரே ரத்தம்" என்ற அற்புதமான நூலும் நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த Magna Carta என்று கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடஒதுக்கீட்டைப் பற்றிய வெள்ளை அறிக்கை இன்றைக்கு அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெள்ளை அறிக்கையின் மீது விவாதம் இன்னொரு நாள் நடைபெற இருக்கிறது. அதனால் மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். நேரம் அதிகமாக இல்லை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** ஏனென்று சொன்னால், அதில் Backlog fill up பண்ணப்படுகின்றது என்று சொல்லும்போது..... (மணியடிக்கப்பெற்றது) சரி, விட்டுவிடுகிறேன், பிறகு பேசலாம்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலே பணிபுரியக்கூடிய சமையல்



உதவியாளர்களுக்கு இப்போது அரசு 500 ரூபாய் தொகுப்பு ஊதியமாக வழங்கிக் கொண்டிருக்கிறது. அதை நம்முடைய அரசு உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், இதில் ஒரு ஒழுங்குமுறை வர முடியவில்லை. ஏனென்று சொன்னால், இதற்குத் தனியாக வட்டாட்சியர்கள் நியமிக்கப்படும்போதுதான், அதை ஒழுங்குபடுத்துவதற்கு, அதை விரைந்து கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். அந்த அடிப்படையிலே தனி வட்டாட்சியர்களை நியமிக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா என்று சொல்லும்போது, எங்கள் கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை எங்குமே நன்செய் நிலங்கள்தான் மிகவும் அதிகமாக இருக்கின்றன. எனவே, இந்த நன்செய் நிலங்களை வீட்டுமனைகளாக வழங்குவதற்கு, வருவாய்த் துறைக்குச் சென்று அனுமதி பெற்று வருவதற்கு மிக நீண்ட காலமாகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனது தொகுதியில் இருக்கக்கூடிய எரும்பூர் மற்றும் எனது சொந்த ஊரான ஆயங்குடி, மேலபக்கத்துறை ஆகிய இந்தப் பகுதியிலே வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டும்கூட, இன்றைக்கு வரை பட்டா வழங்கப்பட முடியாத நிலையிலிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் வருவாய்த் துறையிலேயிருந்து அதற்கு ஒப்புதல் கிடைக்கவில்லை. எனவே, அரசு விரைந்து அந்த ஒப்புதலைப் பெற்று பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு அரசு விதிவிலக்கு வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக இயக்கப்படுகின்ற இஸ்லாம், அதாவது சிறுபான்மை நல பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திலிருந்து கடன் வழங்குவதற்கு மிகவும் காலதாமதமாகிறது. எனவே, அந்தக் கடன் வழங்குகின்ற முறையை எளிமைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, வாகனக் கடன்கள் வழங்கும்போது, அதற்கு வீடு, மனை போன்றவற்றை அடமானமாக வைக்க வேண்டுமென்ற பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. எனவே, அதை மாற்றி அந்த வாகனங்களையே security-யாக வைத்துக் கடன் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வக்ஃப் வாரியத்தைப் பொறுத்தவரை அரசு இப்போது மானியமாக 30 இலட்சம் ரூபாய் வழங்கிக்கொண்டிருக்கிறது. அதை 80 இலட்சமாக — பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் வழங்குவது போல, 80 இலட்சமாக — உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 1-50

அதுமட்டுமல்லாமல், இப்போது மசூதிகளை புனரமைப்பதற்கு 10 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை 25 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

வக்ஃப் வாரியத்திலே வேலை செய்யக்கூடியவர்கள் இப்போது மிகவும் குறைவான எண்ணிக்கையிலே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால், வேலைப் பளுவின் காரணமாக அங்கு ஒழுங்காக வேலை நடைபெறமுடியவில்லை. எனவே, அதற்குக் கூடுதலாகப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அந்த வக்ஃப் வாரியத்திலே வேலைசெய்துவிட்டு இறந்துவிட்டவர்களுடைய வாரிசுகளுக்குப் பணியிடம் அளிப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஹஜ் குழுவைப் பொறுத்தவரை, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதாவோடு இப்போது கூட்டு வைத்த பிறகு, பாரதிய ஜனதா அரசு மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, விண்ணப்பித்த அனைத்து மக்களுக்கும் அனைத்து முஸ்லீம்களுக்கும், ஹஜ் செல்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதற்காக எங்கள் நன்றியை எங்கள் சமுதாயத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.



அதோடு, இப்போது தாட்கோ மூலமாக வழங்கப்படுகின்ற கடன்களை அதாவது பரிந்துரை செய்யப்படக்கூடிய கடன்களை வங்கிகள் வழங்குவதேயில்லை. அக்கடன்களை விரைந்து வழங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். இதை வங்கிகள் மூலமாக வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால், கூட்டுறவுத் துறையின் மூலமாகவாவது அந்தக் கடன்களை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். அரசு, ஆதிதிராவிடர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக எவ்வளவோ அக்கறைகொண்டு, வேலை செய்தாலும் — இப்போது அந்த மானியங்கள் கொடுக்கப்படுகின்றன; விளிம்புத்தொகை கொடுக்கப்படுகின்றது — கடன் கிடைக்காத காரணத்தினால் அந்தத் தொகை எல்லாம் மீண்டும் அரசுக்கே திரும்பி வருகிறது என்ற நிலை இருக்கிறது. எனவே, அதை மாற்றுகின்ற வகையிலே அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இப்போது கணினிப் பயிற்சியைப் பொறுத்தவரையில், ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாகவும் சரி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாகவும் சரி, அனைத்துச் சமுதாய மக்களுக்கும் கணினிப் பயிற்சியளிப்பதற்கு அரசு ஆவன செய்துகொண்டிருக்கிறது. அதற்காக அந்த மாணவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதே நேரத்திலே, இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். இஸ்லாமியச் சமுதாயத்தினர் இன்றைக்கு மிகவும் ஆவலோடும் ஏக்கத்தோடும் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். உங்களை விட்டால் வழங்குவதற்கு வேறு யாரும் இல்லை என்பதைத் தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். ஏனென்றால் இந்த சமுதாயம் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் மிகவும் பின்தங்கியிருக்கிறது. எனவே, எங்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி.

***திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 2000-2001 ஆம் ஆண்டில், இந்தத் துறையில் பேசுவதற்கு எனக்கு........ (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** இல்லையில்லை, கொள்கை
விளக்கக் குறிப்பேட்டிலே... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக்
குறிப்பேட்டிலே சிறுபான்மையினர் நலம் என்கின்ற தலைப்பின்கீழ்
தமிழகத்தில் முகம்மதியர்... (குறுக்கீடு) பிழை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசியதிலே ஏதாவது
Point of order இருந்தால் எழுந்து கேளுங்கள், இப்போது உட்காருங்கள்.
(குறுக்கீடு) அதை உங்களுக்கு வாய்ப்பு வரும்போது சொல்லலாம்.
திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தங்களுக்கும்,
எங்கள் தொகுதி மக்களுக்கும், எங்கள் மக்கள் தலைவர் ஐயா மூப்பனார்
அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த
அரசானது பொறுப்பேற்றவுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் இட
ஒதுக்கீட்டுக் குழுவை அமைத்து, இந்தக் குழுவின் மூலமாக, பல்வேறு
துறைகளில் அதற்கான கருத்துரு பெறப்பட்டது. இருந்தாலும், இந்தக்
குழு அமைத்து கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் கடந்து, இன்றைக்குத்தான்
அந்தக் குழுவினுடைய அறிக்கையை அளித்துள்ளார்கள். இதிலிருந்து
இந்த அரசுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதுள்ள அக்கறை எப்படி
உள்ளது என்பதை இங்கு நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. H.D.C.M.
உயர்நிலைப் பட்டயப் பயிற்சி, கூட்டுறவுத் துறையின் மூலம்
பயிற்சியளிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 210 நபர்கள் அந்தப் பயிற்சி
பெற்றுள்ளார்கள். ஆனால், அந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு இதுவரை
கூட்டுறவுத் துறையில் எந்தவித அரசுப் பணியும் கொடுக்கப்படவில்லை
என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய
கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் தமிழக முதலமைச்சர்
அவர்களும் ஒன்றாகக் கலந்துபேசி H.D.C.M. — அந்த உயர்நிலைப்
பட்டயப் பயிற்சி — முடித்தவர்களுக்கு கூட்டுறவுத் துறையில் பணி
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் திவலூர் என்ற கிராமம்
உள்ளது. அந்தத் திவலூர் கிராமத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளி உள்ளது.
அந்தப் பள்ளிக்குப் போதுமான இடவசதி இல்லை. ஆதலால் அந்தப்
பள்ளிக்குப் போதுமான இடவசதி செய்து தரவேண்டும். அந்தப் பள்ளிக்கு



அருகில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான
இடம் சுமார் 5 ஏக்கர் உள்ளது; அந்த 5 ஏக்கர் நிலத்தைப் பெற்று
அந்த உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி செய்து தருவதற்கு இந்த
அரசு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே அன்புடன்
கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)*

சிறுமங்கலம் என்ற கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளியானது
கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாகத் தொடக்கப் பள்ளியாகவே இருக்கிறது.
அந்தப் பள்ளியினுடைய தரத்தை உயர்த்தி, அதை ஒரு நடுநிலைப்
பள்ளியாக அறிவிக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தாட்கோ இருக்கிறது. இப்போது தாழ்த்தப்பட்ட மக்கள்
பொருளாதார ரீதியிலே மிகப் பின்தங்கிய நிலையிலே உள்ளார்கள்.
இந்த மக்கள் வங்கிக்குச் சென்று கடன் உதவி பெற வேண்டுமென்று
சொன்னால், அந்த வங்கியில் உள்ளவர்கள் பல்வேறு காரணங்களைச்
சொல்லி, அவர்களுக்குக் கடன் உதவி கொடுக்க முடியாத ஒரு
சூழ்நிலை உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலை தொடர்ந்து இருந்து
வருகின்ற காரணத்தினால், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார
ரீதியிலே முன்னேற்றம் அடையாத அந்த நிலைமை பல ஆண்டு
காலமாக இருந்து வருகின்றது. அந்த நிலையைப் போக்குகின்ற
வகையிலே தமிழக அரசு தாட்கோ வங்கி என்று தனியாக ஒரு வங்கி
ஆரம்பித்தால்தான், அதன் மூலம் இந்த மக்களுக்குப் போதுமான உதவி
செய்ய முடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மணியடிக்கப்பெற்றது) தாட்கோ வங்கி தொடங்குவதற்குக்கூட
கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் ரிசர்வ் வங்கியில் டெபாசிட்
செய்தால்தான், தாட்கோ வங்கி தொடங்க முடியும் என்று அறிவித்து
உள்ளார்கள். அதைக் கருத்தில்கொண்டு, இந்தத் துறைக்கு இந்த
ஆண்டில் ஒதுக்கப்படுகின்ற அந்த நிதியிலிருந்து சுமார் 200 கோடியை
ரிசர்வ் வங்கியில் டெபாசிட் செய்து தாட்கோ வங்கியை நீங்கள்
ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தவரையில், அந்த நிலத்தின்
சொந்தக்காரர்கள் தடையாணை பெற்றுவிடுகிறார்கள். அவ்வாறு
தடையாணை பெற்றுவிட்டவுடன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த
வீட்டுமனைப் பட்டா கிடைக்க வழி இல்லாமல் போய்விடுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உரையை முடியுங்கள்.

**திரு. ச. புரட்சிமணி:** ஆதலால், அரசு பல்வேறு விஷயங்களுக்குத் தனி கோர்ட் அமைக்கிறது. அதேபோல இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா விரைந்து வழங்குவதற்கு ஒரு தனி கோர்ட் அமைத்துத் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க இந்தப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் நான் கேட்கின்றபோதெல்லாம் என்னுடைய தொகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா அளித்து மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

விடுதிகளிலே பயிலுகின்ற மாணவ மாணவியர்களுக்கு அளிக்கப்படுகின்ற உணவுக் கட்டணத்தை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தரமான சீருடைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாணவ மாணவியர்களுக்கு ஏற்கெனவே கட்டப்பட்ட விடுதிக் கட்டடங்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாடகைக் கட்டடங்களில் இருக்கின்ற அந்த விடுதிகளை அரசுக் கட்டடங்களாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விடுதியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதந்தோறும் மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாலை நேரங்களில் போதனா கல்வி Part-time tuition அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆதிதிராவிடர்களுக்கு இட ஒதுக்கீட்டிற்காக அளிக்கப்பட்ட 18 விழுக்காட்டில் இனவாரியாக, அதாவது பறையர், பள்ளர், அருந்ததியர் என்று சொல்கின்ற வகையில் உள்ள அவர்களுடைய ஜனத்தொகை எப்படி இருக்கின்றதோ, அந்த வகையாக அதைப் பிரித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இது நாடாளுமன்றத்தில் வரவேற்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆந்திர மாநிலத்திலும் இந்த நடைமுறை இருக்கிறது. எனவே, இதைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

எனது தொகுதியிலே பழமைவாய்ந்த ஐந்து கண் பாலத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புறவழிச் சாலை நகரத்திற்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய பஸ் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காய்கறி மார்க்கெட் வளாகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேத்துறை ஏரியின்கீழ் மாற்றுச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வடஆளப் பிறந்தான் நெடுங்கல் சாலையை முழுவதுமாகப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய அளவில் உள்ள அனைத்து ஏரிகளையும், கால்வாய்களையும் தூர் வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்நெமிலி கிராமத்தில் 40 வீடுகள், தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்டு இருக்கின்றன. அதற்கு மின் இணைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரேசாபுரம்-விண்ணம்பூண்டி வரை மாவலவாடி சாலையைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணிமங்கலம் பகுதியில் உணவுப் பொருள் வழங்கல் துறை மூலமாக ஒரு கூட்டுறவுக் கடை பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாலுகா பொது மருத்துவமனையை 100 படுக்கைகள் உள்ளதாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்நேத்தப்பாக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன். வந்தவாசி ஒன்றியத்தைச் சேர்ந்த உளுந்தை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் இந்த ஊரிலுள்ள பாடசாலையை நடுநிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளியம்பாக்கம் கிராமத்தில் நடுநிலைப் பள்ளி உள்ளது. அதைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தி-காழியூர் இடையில் தரைப் பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொண்டயாங்குப்பம் என்ற கிராமத்தினைத் தனி வருவாய்க் கிராமமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் நிதிச் செலவுகூட ஆகாது. ஏற்கெனவே அங்கே V.A.O. இருக்கிறார்கள், மற்றவர்கள் இருக்கிறார்கள். எனவே, இதை மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விடுதிகளிலே பணியாற்றக்கூடிய காப்பாளர்கள் தலைமையிடம்சென்று வரும்பட்சத்தில் அவர்களுக்குப் பயணப்படி அளிக்கப்படுவதில்லை என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பால. ஆனந்தன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

"பட்டு உடுத்தியிருப்பான் பக்கத்தே பருவ மங்கை
தொட்டு கால் பிடித்திருப்பாள்—துறவி
இவன் பேரோ, இவ்வித கோயிலிலே
எட்டி நாம் பார்த்துவிட்டால்—வந்தது
திட்டென்று வைதிகம் உளருதோடி"

ஒரு காலத்திலே இந்தத் திட்டைப் பற்றிச் சொல்கின்றபோது இப்படிச் சொன்னார்கள். நாங்களெல்லாம் ஒரு காலத்தில் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்தோம். அந்த நேரத்திலே தந்தை பெரியார் அவர்கள் வித்திட்ட இந்த ஜாதி ஒழிப்பு, பேரறிஞர் அண்ணா காலத்தில் முளைத்து, தழைத்து, கலைஞர் காலத்தில் சமத்துவபுரத்தில் நின்று ஜாதி அறவே அழிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்றுச் சாதனை என்றே நாம் கருத வேண்டும்.

அம்பேத்கர் ஒரு காலகட்டத்திலே இந்த மக்களுக்காக உழைத்தவர். இன்றைக்கு உழைத்துக் கொண்டிருக்கிற எங்களது இரண்டாம் அம்பேத்கர் கலைஞர் அவர்கள் நினைவால், நேர்மையால், எழுத்தால், கவிதையால்,



கதையால், ஏன் குடும்பத்தாலும்கூட, ஆதிதிராவிடர் உச்ச நிலை அடைய உழைத்து வருகின்றார்கள் என்பதை நினைத்து நாம் உண்மையிலேயே பாராட்ட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** சரி, பேசி முடியுங்கள்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு முதலமைச்சரின் வலது கையில் ஆட்காட்டி விரல் மற்றும் கட்டை விரல்களுக்கு இடையே அகப்பட்ட எழுதுகோல் அசையும்பொழுதெல்லாம் இந்த ஆதிதிராவிடர்களுக்கு நலப் பணிகளை அள்ளித் தருகிறது. இதைவிட வேறு யார்தான் செய்ய முடியும்? இந்த நேரத்திலே அவருக்கு நன்றி தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** திரு. டேவிட் செல்வின்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நீதிப் போரில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு தமிழக மக்களுக்காகப் பாடுபட்டுவரும், தமிழினத்தினுடைய ஒப்பற்ற தலைவர், வாழ்கின்ற அம்பேத்கர் கலைஞர் அவர்களுக்கும், பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கும் நன்றி தெவித்துக்கொண்டு, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் நலன் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் பற்றிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு விழைகிறேன்.

*பிற்பகல் 2-05*

இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் தன்னுடைய உறுதியான நிலைப்பாட்டினை தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இள வயது முதல், தன்னுடைய உறுதியினை என்றைக்கும் நிலைநாட்டி இருக்கின்றார்கள். சமூக நீதிக்கு ஆபத்து வந்தபோதெல்லாம் போர்க் குரல் கொடுத்த ஒப்பற்ற தலைவர் நமது முதல்வராக இருக்கின்ற காரணத்தால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பூக்களுடைய கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்காகப் பல்வேறு சலுகைகளை அள்ளித் தந்திருக்கின்றார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களில் முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள்

போன்றவர்கள் பயன்படுத்துகிற கருவிகள் போன்றவை எல்லாம் கடந்த ஆண்டுகளைவிட அதிகமாகக் கொடுப்பதற்கும், இந்த ஆண்டு தகவல் தொழில்நுட்பத்திலே 5000-க்கு மேற்பட்டோருக்குப் பயிற்சி தருவதற்கும் அவர்கள் பல திட்டங்களை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுபோல இலவச வீட்டுமனை வழங்குகிற திட்டத்திற்கு ஒரு காலத்தில் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்று இருந்த நிலையை மாற்றி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு மட்டுமல்லாமல் எல்லாச் சமூகத்திலும் வறியவர்கள் வாழ்கிறார்கள் என்பதை மனதிலே கொண்டு மனித நேயத்தோடு எண்ணிப்பார்த்து, தலைவர் கலைஞர் அவர்கள் முன்னேறிய வகுப்பினருக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய அனைத்து மக்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்குகிற திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் வாயிலாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மற்றவர்களுக்கும் பல்வேறு நலப் பணிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் இப்போது பல்வேறு கோரிக்கைகள், பிற்படுத்தப்பட்டோரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கைகள் எல்லாம் அறிந்து அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் பணியாற்றி வருகிறது.

அதுபோல இப்போது பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தோற்றுவித்து அதன்வாயிலாகக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன்களை வழங்குவதற்கான முறைகளை எளிதாக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

படித்து வேலையில்லாத பெண்களுக்கு தையல் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், கறவை மாடுகள் போன்றவற்றை எல்லாம் வழங்கி அவர்கள் தொழில் தொடங்குவதற்கு கலைஞர் அவர்கள் தாராளமாக அள்ளித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவற்றை பெறுகின்ற முறையினை எளிமையாக்க வேண்டுமென்றும் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



முதன்முதலாக உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதியாக ஒரு தாழ்த்தப்பட்டவரை நியமித்ததோடு மட்டுமல்லாமல் சட்டக் கல்லூரிக்கு டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய பெயரைச் சூட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** பாராளுமன்றத்தினுடைய மைய மண்டபத்திலே டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய படத்தை வைக்க வேண்டுமென்று குரல் எழுப்பியதற்குக் காரணமாக இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஓட்டு வீடுகள் கட்டிக் கொடுத்தால் அடிக்கடி பழுதாகிவிடும் என்று சொல்லி கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரை ஒரு பெரியவருடன் சரிசமமாக உட்கார வைத்து, சமூக நீதியைப் பார்த்து இரசித்த தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், அதற்காகவே அந்த ஆண்டிலே தன்னுடைய ஆட்சியை இழந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு [illegible]க்கப்பட்டவர் இருக்க வேண்டுமென்று சொல்லி, [illegible] முன்மொழிந்தவர் நம்முடைய [illegible] கலைஞர் அவர்கள். அதுபோல இப்போது [illegible] ஆதிதிராவிட மக்களுக்காகத் தாட்கோ மூலமாகப் பல்வேறு கடன்கள் வழங்கப்படுகின்றன. அந்தக் கடன்களை வங்கிகளுக்குச் சென்று வாங்குவதிலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** பல்வேறு காலதாமதங்கள் ஏற்படுகின்றன. எனவே, தாட்கோவிற்கு என்று தனியாக வங்கி ஒன்று அமைக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நன்குடிவேளாளர் என்ற சமூகத்தவர்கள் என்னுடைய தொகுதியிலே சுமார் 40,000 பேர் வாழ்கிறார்கள். இந்திய இராணுவத்திலும், காவல் துறையிலும் பணியாற்றுகிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் விவசாயக் கூலிகள். கார்கில் எல்லையில் உயிர்நீத்த தியாகி அருணாசலம் இந்தச் சமூகத்தில்

பிறந்தவர்தான். இவர் பிறந்த இந்தச் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மிகவும் கடினமான தொழிலைச் செய்துவரும் பனையேறும் தொழிலாளர்களைக் கொண்ட நாடார் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோராக அறிவித்து அவர்களின் சமூக நிலை உயரப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காடுகளிலும், மலைகளிலும் ஆடு மாடுகளை மேய்த்து, கல்வித் துறையிலும், வேலைவாய்ப்புகளிலும் மிகவும் பின்தங்கியுள்ள யாதவ சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கான விழுக்காட்டினையும் கூடுதலாக ஆக்கித்தர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** முடிதிருத்தும் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் சமூகரீதியாக எல்லோருக்கும் வேலையாட்கள் போலவே நாடெங்கிலும் நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்குச் சமூக நீதி, அந்தஸ்து கிடைப்பதற்கு அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

*பிற்பகல் 2-10*

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆதிதிராவிடர் நலம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளில் சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன். தமிழகத்தில் தொடர்ந்து 50 ஆண்டுகளாக இட ஒதுக்கீட்டுக் கொள்கை இருந்தாலும், கல்வி வேலைவாய்ப்பில் கிடைக்க வேண்டிய நியாயம் சில சமுதாய மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை இன்றைக்கு வெள்ளை அறிக்கையின் மூலம் தெரிந்து கொண்டேன் என்பதை முதலில் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, இந்திய அரசு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த இருக்கிறது. நம்முடைய



மரியாதைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் இராமதாஸ் அவர்கள் சொல்லியதைப்போல மாவட்டவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தி, தமிழகத்தில் இருக்கக்கூடிய சாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தி ஒதுக்கீட்டை அந்த மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தாலொழிய வேறு வழியில் எங்களைப் போன்ற மிக மிக நலிந்த சமுதாயத்தில் இருக்கிற முத்தரையர் சமுதாய மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் நிச்சயமாகச் சுதந்திரம் கிடைக்காது என்பதை நான் ஆழமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அப்படி மாவட்டவாரியாக சாதிக் கணக்கெடுப்பு நடத்தி பிரித்துக் கொடுக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் பொருளாதார அடிப்படையில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னதைப் போல தமிழகத்தில் இருக்கக்கூடிய கல்வி, வேலைவாய்ப்புகளில் அந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டும். இவை இரண்டும் அன்னியில் வேறு வழியில் நிச்சயமாகக் கல்வி, வேலைவாய்ப்பில் பெரியார் அவர்கள் கண்ட அந்தச் சமூக நீதியை நிச்சயமாகக் காணமுடியாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று நம்முடைய துறைக்கு அதிக நிதியை இன்றைக்கு ஒதுக்குகிறார்கள். மாவட்டத்திற்கு நிதி வருகிறது. ஆனால், அங்கே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலோ, ஆதிதிராவிடர் நலத் துறையிலோ ஏதாவது கடனை வாங்க முடியும் என்று சொன்னால் நிச்சயமாக முடியவில்லை. வீட்டுமனைப் பட்டாகூட இப்போது தனித் தாசில்தார் வட்ட அளவில் இல்லாத காரணத்தால், அவர்களுக்கு வாகனங்கள் இல்லாத காரணத்தினால், டெலிபோன் வசதி இல்லாத காரணத்தால்கூட வழங்கப்படுகிற நிதி முழுமையாக அந்தக் கிராமப் பகுதி மக்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்தி, இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்க முடியவில்லை. நிதி திரும்பி வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 3, 4 ஆண்டுகளாக புதுக்கோட்டையில் 10% ஆதி திராவிடர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கூட வீட்டுமனைப் பட்டா வழங்கவில்லை என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு 70%-க்கு மேல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இருக்கக்கூடிய தமிழகத்தில் இப்போது I.A.S., I.P.S. தேர்வுகளுக்கு 100 மாணவர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுக்கக்கூடிய மிக மிகக் குறைந்த நிலைமை இருக்கிறது. ஆகவே

4, 5 இடங்களிலாவது தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், I.A.S., I.P.S. தேர்வு எழுதக்கூடிய, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு, 500 மாணவர்களுக்காவது பயிற்சி கொடுக்கக்கூடிய அளவில் 5 இடங்களில் மையங்களை உருவாக்கித் தந்தால் இந்தப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சமுதாய மாணவர்களுக்கு சிறப்பாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இப்போது சமத்துவபுரத்தில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அப்படி வீடுகள் ஒதுக்கப்படுகிறபோது, மிக மிக நலிந்த நிலையில் இருக்கின்ற, வீடே இல்லாமல் இருக்கிற, ஓலைக் குடிசையில் இருக்கிற, மிகவும் பாதிக்கப்பட்டவருக்கு, M.B.C. என்று சொல்லுகிற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஒன்றிய அளவில் ஆண்டுக்கு 10 வீடுகள் மட்டும் தான் கட்டிக் கொடுக்க முடிகிறது.

அதுபோல சமத்துவபுரத்திலாவது மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 25% ஒதுக்குகிற அளவுக்கு அந்தத் திட்டத்தை விரிவாக்கிக் கூடுதலாக 30, 35 வீடுகளாவது, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு சமத்துவபுரத்தில் வீடுகள் ஒதுக்குவதற்கு அரசு பரிசிலனை செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை இந்த அரசு [illegible] வழங்குகிறபோது, இப்போது [illegible] விலைவாசியில் நிச்சயமாக அந்த மாணவர்களுக்குத் தரமான உணவை வழங்க முடியாது, ஆகவே அந்த உணவுக் கட்டணத்தை உயர்த்தித்தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்குக் கடன் வழங்குவதற்கு நிதி வழங்கப்படுகிறது. ஆனால், அது Bank மூலம் வழங்கப்படுகிறது. அதை நேரடியாக தாட்கோ மூலமாக வழங்கினால்தான் அவர்களுக்கு முழுப் பயனும் நிச்சயமாகப் போய் சேரும். இப்போது வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதனைத் தட்டிக் கேட்க முடியவில்லை என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். இந்த மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு கடன் கொடுக்க வேண்டுமென்று



சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த மனுவைப் பரிசிலனை செய்து நேரடியாக அவர்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அந்த மனுக்கள் முழுமையாக இந்த மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு வந்து 3, 4 ஆண்டுகளாக இங்கேயே இருக்கின்றன, யாருக்கும் கடன் வழங்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-15

இன்னொன்று 108 சாதிகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. அ. வெங்கடாசலம்:** 108 சாதிகளை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்து அவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கிக் கொண்டிருந்தாலும், இப்போது சமுதாயத்தில் மிகவும் நலிவுற்று இருக்கிற கோனார் சமுதாயம், மரம் ஏறுகின்ற நாடார் சமுதாயம், வண்ணார் என்று சொல்லக்கூடிய சலவைத் தொழிலாளர் சமுதாயம், போயர், கழுதை வெட்டி என்று சொல்லக்கூடிய இன்னொரு S.C. வல்லநாட்டுச் செட்டியார், கிரமங்கலம் செட்டியார், வேளாளர், மண்பாண்டம் செய்பவர்கள் இவர்கள் எல்லாம் இன்றைக்கு B.C. என்ற பட்டியலிலே இருக்கிறார்கள். ஆக, இவர்களை எல்லாம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்து அவர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அரசு வழங்குகின்ற வாய்ப்புகளை வழங்க வேண்டும். இப்போது சலவைத் தொழிலாளி சலவைத் தொழிலாளியாகத்தான் இருக்கிறான். யாரும் வேலைக்கு வர முடியவில்லை. அதைப்போல, வல்லநாட்டுச் செட்டியார் எவரும் அரசுப் பணிக்கு வரமுடியவில்லை. அதைப்போல மண்பாண்டம் செய்யக்கூடிய வேளாளர்கள் அரசுப் பணிக்கு வரமுடியவில்லை. (மணியடிக்கப்பெற்றது) தொகுதி பற்றிச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். திரு. முத்து.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரத்தின் அருமை கருதி 2000-2001 நிதிநிலை அறிக்கையையும் இன்றைய இந்த மானியக் கோரிக்கைகளை மனதாரப் பாராட்டி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சங்ககிரியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், அதுபோன்று, பொம்மம்பட்டியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, அரசராமணி செட்டிபட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையின் மூலமாக மல்லசமுத்திரம் பேரூராட்சிக்கு பூலாம்பட்டி, ராசிபுரம் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகக் குடிநீர் வசதி செய்து கொடுத்ததற்கும், சங்ககிரி பேரூராட்சிக்குப் புதிய தனிக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்ததற்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எலச்சிப்பாளையம் ஒன்றியம், மல்லசமுத்திரம் ஒன்றியம் பயன்படும் வகையில்—புளோரைடு நீக்கும் திட்டத்தின் மூலமாக அந்த இரண்டு ஒன்றியங்கள் பயன்படும் வகையில்—முடிவுறும் நிலையில் உள்ள திட்டத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு நானும் எனது தொகுதி மக்களும் நன்றி சொல்லிக்கொள்கிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சேலத்திலிருந்து தருமபுரியைத் தனி மாவட்டமாக அறிவித்தபோது தருமபுரியை மாவட்டத் தலைநகராக ஆக்கி, கிருஷ்ணகிரியில் மாவட்ட நீதிமன்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். அதேபோன்று சேலத்திலிருந்து நாமக்கல்லைத் தனி மாவட்டமாக அறிவித்தபோது நாமக்கல்லைத் தலைநகரமாக ஆக்கினீர்கள். மாவட்ட நீதிமன்றங்களை ஏற்படுத்துகின்ற நேரத்தில் திருச்செங்கோட்டில் அந்த நீதிமன்றங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளத்திலிருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலை சங்ககிரி வழியாகச் செல்கிறது. சங்ககிரி நகரத்தில் சாலை குறுகியதாய் இருப்பதால் விபத்துகளின் மூலம் நிறைய உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. சட்டமன்றத்தில் மூன்றாவது முறையாக அதற்குப் புறவழிச் சாலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தாங்கள் இதனைச் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.



மல்லசமுத்திரம் பகுதியில் இருந்து மாவட்டத் தலைநகரான நாமக்கல் செல்லும் அந்தப் பாதை பழுதடைந்த நிலையிலும், ஒருவழிப் பாதையாகவும், போக்குவரத்துக்கு இடையூறாகவும் உள்ளது. அதை இருவழிப் பாதையாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதிக்கு உட்பட்ட சங்ககிரி ஒன்றியம் மலையும் மலைசார்ந்த பகுதியாகவும் இருக்கிறது. அங்கு நிறைய ரோடுகள் பழுதடைந்துள்ளன. ஆகவே, தாங்கள் அதிகாரிகள் மூலமாகச் சர்வே செய்து அந்தப் பகுதியிலுள்ள ரோடுகளைப் புதுப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஆலத்தூர் ரோட்டிலிருந்து எல்லப்பாளையும் வரை செல்லும் பாதை மூன்று பக்கமும் மலையால் சூழ்ந்த ஒரு காட்டுப் பகுதியாக உள்ளது. அதைக் கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு கிலோமீட்டருக்கான தொகையை அந்தப் பகுதிக்குக் கொடுத்திருந்தாலும் அது யானைப் பசிக்கு சோளப்பொரி கொடுத்தது போன்ற ஒரு நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே, இதனைத் தாங்கள் R.R.-லே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மல்லசமுத்திரம் சுமார் பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு நெசவாளர் பகுதியாகும். (மணியடிக்கப்பெற்றது) பத்தாயிரம் மக்களும் கைத்தறி, விசைத்தறி மூலமாகத் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் நெற்பயிர் சாகுபடி செய்து இலாபம் இல்லை என்றால் க்ரும்பு பயிர் செய்கிறார்கள். கரும்பில் இலாபம் இல்லை என்றால் மரவள்ளிக் கிழங்குப் பயிர் செய்து இலாபம் சம்பாதிக்கிறார்கள். ஆனால், நெசவாளர்கள் இலாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதையே நம்பியிருக்கக்கூடிய ஒரு நிலை உள்ளது. ஆகவே, பின்தங்கிய பகுதியாக இருக்கிற மல்லசமுத்திரத்தில் ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தில் சேர்வராயன்மலையில் உற்பத்தியாகும் திருமணிமுத்தாறு வீரபாண்டி தொகுதியைக் கடந்து எனது தொகுதியில் மல்லசமுத்திரம் எலச்சிபாளையம் வழியாகக் காவிரியில் கலக்கிறது. அங்கு ஐந்து கிராமங்கள், தாய்க் கிராமம் ஆற்றின் ஒரு பகுதியிலும் குக்கிராமம் அடுத்த பகுதியிலும் இருக்கிறது. அதனால் அந்த 5 கிராமங்களுக்கும் உடனடியாக, பாலம் இல்லாத இடத்திற்கு பாலமும், தரைப் பாலங்கள்

இருக்கின்ற இடத்திலே மேல் பாலமும் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன். அப்படிப் பாதிக்கப்பட்ட கிராமங்கள், மாமுண்டி, மாமுண்டி அக்ரஹாரம், கருங்கல்பட்டி, கொன்னையாறு, லத்துவாடி போன்ற பகுதிகளாகும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 2-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். தமிழ்ச்செல்வன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கைகளின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெருந்தலைவராக, அவர்களின் வாழ்வு முன்னேற, அடிமை விலங்கை உடைத்தெறிய அயராது பாடுபட்ட அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பெயரைப் பெருமைப்படுத்துவதன் மூலம் அந்தச் சமூக மக்களுக்குப் பெருமை சேர்ப்பதாக எண்ணி, டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பெயரில் சட்டக் கல்லூரி, அம்பேத்கர் பெயரில் கலைக் கல்லூரி, இந்தியாவிலேயே முதன்முறையாக அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம், அவர் பிறந்த மராட்டிய மண்ணிலே அவர் பெயரைச் சூட்டுவதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள், அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை அரசு விடுமுறை நாளாக்கியது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு 16 சதவிகிதமாக இருந்ததை 19 சதவிகிதமாக உயர்த்திக் கொடுத்தது, அம்பேத்கர் பெயருக்குப் புகழ் சேர்ப்பதற்கு இன்று 5 கோடி ரூபாயில் மணிமண்டபம், இப்படிப் பல வழிகளிலே அண்ணல் அம்பேத்கருடைய பெயரை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமைப்படுத்தியதற்கு அந்த மக்களின் சார்பிலே இன்றையதினம் நான் நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், அந்த மக்களுக்கு வழங்கிய பொன்மொழிகளில், "கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய்" என்று கூறியதற்கேற்ப நம்முடைய தலைவர் அவர்கள் இப்போது அந்தக்



"கற்பி" என்பதற்கேற்ப அந்த மக்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த நிதியிலேயிருந்து கிட்டத்தட்ட 70 விழுக்காட்டை அந்த இன மக்களின் கல்வி அறிவுக்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியிலே கடந்த ஒருவார காலத்திற்கு முன்னாலே நாகவேடு, வேப்பேரி என்ற பகுதிகளில் ஆதிதிராவிட மக்களுக்கு வாழ்வு தருவதற்கு 142 வீட்டுமனைப் பட்டாக்களை இலவசமாக வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அந்தத் துறைக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வீட்டு மனைகள் இன்னும் 10, 15 கிராமங்களிலே 6, 7 ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றன. என்ன காரணம் என்று தெரியவில்லை. அவற்றையும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். இந்த வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக, நில ஆர்ஜிதம் செய்யும்போது, நில உரிமையாளர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தடையாணை பெற்றுவிடுகிறார்கள். எனவே, அந்தத் தடையாணைகளைப் பெறாமல் இருப்பதற்காக ஏதாவது சட்டத்திருத்தம் செய்ய வேண்டுமென்றால், தயவுகூர்ந்து இந்தத் துறையின் சார்பிலே செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, தாட்கோ மூலமாகக் கடன்கள் வழங்கப்படும்பொழுது, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் அந்தக் கடன்களை வழங்காமல் காலதாமதம் செய்வதோடு, அதை நிராகரித்தும் விடுகிறார்கள். எனவே, தாட்கோ மூலமாக ஒரு நிதி நிறுவனத்தை ஏற்படுத்தி, அந்தக் கடன்களை எளிமையாகப் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகள் போன்றவர்களுக்கு ஆண்டுதோறும் மாவட்ட ஆதிதிராவிட நலத் துறையின் சார்பிலே தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. இப்போது அது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை மீண்டும் வழங்குவதற்குத் தாங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1986 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையிலே இந்தத் துறையிலே கிட்டத்தட்ட 230 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, 1996 வரை 10 ஆண்டு காலம் அவர்கள் பணியாற்றிவிட்டு, 1996 ஆம் ஆண்டு நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பணி வரன்முறையை 1986 ஆம் ஆண்டிலிருந்தே வழங்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் கனிவுடன் பரிசீலனை செய்ய தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதிப் பிள்ளைகளுக்கு உணவுக் கட்டணமாக வழங்கப்படும் தொகையை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அரக்கோணம் தொகுதியிலே ஆதிதிராவிடப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 6 இலட்சம் ரூபாயிலே சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுத்தீர்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயுள்ள ஆதிதிராவிட ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் ஒரு சுற்றுச்சுவர் அவசியம். அதற்குரிய கோரிக்கையைத் தங்களிடம் ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும். அந்த ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தேவையான அளவு இடம் இருக்கின்ற காரணத்தினால், தொழிற்கல்வியுடன் இணைந்த ஒரு பள்ளியாக அதை மாற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 2-25*

தங்கும் விடுதி புதிதாகக் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலுள்ள வளர்புரம் கிராமத்திலுள்ள தங்கும் விடுதி கடந்த இரண்டு ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்தில் மாறி மாறி இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான இடத்தைத் தேர்வு செய்யாமல், அதிகாரிகள் வந்து வந்து பார்த்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள அம்மனூர், ஆத்தூர், களத்தூர் இலுப்பைத்தண்டலம் போன்ற இடங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கான. கட்டடங்களின் கூரைகள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பள்ளிக் கட்டடங்களைச் சீரமைத்துத் தரும்படி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது.... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.



நம்முடைய டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இப்போது இல்லை. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தங்களைத் தான் நடமாடும் அம்பேத்கராக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த நம்பிக்கையோடு என்னுடைய பேச்சை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நிஜாமுதீன், 3 நிமிடங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கான வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே, ஸ்பெஷல் தாசில்தார்கள் எல்லா மாவட்டங்களிலும், எல்லாத் தாலுகாக்களிலும் நியமிக்கப்படுவதில்லை. இதனால், பல்வேறு பணிகள் பாதிக்கப்படுகின்றன. அதேபோல், ஆதிதிராவிட நலத் துறையிலே, எங்களது மாவட்டத்திலே, 3 தாசில்தார்கள்தான் இருக்கிறார்கள். மற்ற தாலுகாக்களிலே தாசில்தார்கள் இல்லை. ஆகவே, எல்லா இடங்களிலும் அந்தத் தாசில்தார்களை நியமித்தால்தான் பணிகள் உரிய நேரத்திலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் நியமிக்கப்படக் கூடிய பணியாளர்கள் முடிந்தவரை பிற்படுத்தப்பட்டோராகவே இருப்பது நலம். ஏனென்றால், சமீபத்தில் நியமிக்கப்பட்ட 20 பணியாளர்களில் 7 பேர் முற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். துறையே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை. ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வக்ஃபு போர்டு இருக்கிறது. வக்ஃபு போர்டினுடைய ஆய்வுகளை, செலவுகளையெல்லாம் மன்றத்திலே வைத்து விவாதம் நடத்தக்கூடிய அளவுக்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அது தனியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. என்ன நடக்கின்றது என்று வெளியே தெரிவதில்லை. இதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. ஆகவே, அதுகுறித்து ஆய்வு செய்வதற்கு இந்த மன்றம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கக்கூடிய உணவுக்கான கட்டணத்தை 225 ரூபாயிலிருந்து, 460 ரூபாயாக உயர்த்தித்

தரவேண்டும். ஏனென்றால், அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. 225 ரூபாயிலே அவர்கள் சாப்பிட முடியாது. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. ஆகவே, அதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இட ஒதுக்கீடு. இப்போது, முதலமைச்சர் அவர்கள் வெள்ளையறிக்கை வைத்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குப் பல்வேறு நன்மைகளைச் செய்யவிருக்கிறார்கள். அதேபோல், இஸ்லாமியச் சமுதாயத்தினர், சிறுபான்மைச் சமுதாயத்தினர் ஆகியோர் பல்லாண்டுகளாக இட ஒதுக்கீடு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மேடைகளிலே நிச்சயமாகச் செயல்படுத்தப்படும் என்று கூறி வருகிறார்கள். நிச்சயமாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால், காலம் கடத்துவது முறையல்ல. நீங்கள் உங்கள் காலத்திலே, இப்போதே இதை அறிவித்து, "சிறுபான்மை மக்களுக்கு நான்தான் அதைச் செய்தேன்" என்று உறுதிப்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், பல்வேறு வகைகளிலே அவர்கள் பின்தங்கி இருந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை சதவிகிதம் வேலையிலே இருக்கிறார்கள், எத்தனை சதவிகிதம் நாட்டிலே இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. ஆகவே, இதுகுறித்து கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து உடனடியாக இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு முடிவை அறிவிக்கவேண்டும். எவ்வாறு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைத் தூக்கி நிறுத்துவதில் நீங்கள் பாடுபடுகிறீர்களோ, அதேபோல் சிறுபான்மைச் சமுதாயத்தையும் தூக்கி நிறுத்துவதற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வருகின்ற 24 ஆம் தேதி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மயிலாடுதுறைக்கு வருகிறார்கள். அப்படியே, அவருக்கு உகந்த தொகுதி, பக்கத்து தொகுதி, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதி; கோயில், சர்ச், தர்கா எல்லாமே அங்கே இருக்கின்றன. (குறுக்கீடு) அதுவும் நிறைய இருக்கிறது. ஆகவே, தாங்கள் ஒருமுறை எனது தொகுதிக்கு வருகை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் இரண்டு பேருமே தனியாகப் பேசிக்கொள்ளலாம். (சிரிப்பு) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசி நேரத்திலே, 5 நிமிடத்திலேயாவது பேசி முடித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எல்லோருக்குமே கஷ்டமாகத் தெரிகிறது.



இப்போது நான் பேசுவதற்கு முன்பாக, நம்முடைய உறுப்பினருடைய தொகுதியான பாபநாசத்திலே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டவை, பாளம் பாளமாகக் கீறல் இருக்கிறதாம்; அதை அவர்களே ரிப்பேர் செய்வதாக இருந்தால், 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் ஆகுமாம்; அவர்களால் முடியாதாம். ஆகையினால், தயவுசெய்து அதை இலாகாவினரே, நேரிலே பார்வையிட்டு, அவற்றைச் செப்பனிட்டுக் கொடுப்பதற்கான முயற்சியினை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு அந்த உறுப்பினரின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மண்பாண்டத் தொழிலாளர்கள் நிறைந்து இருக்கிறார்கள் நம்முடைய தமிழகத்திலே. அவர்களுக்கு இதுவரை அந்தத் தொழிலுக்கு எந்தவிதமான உதவியும் செய்ததாகத் தெரியவில்லை. ஆகையினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கென்று ஒரு தனி வாரியம் அமைத்துக் கொடுத்து அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு முயற்சியினை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு, எதிர்க்கட்சித் தலைவரின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே, அரிசன மக்களுக்காக, பேரறிஞர் அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், நம்முடைய இன்றைய முதலமைச்சர் அவர்கள் எல்லாம் சிறப்பான முறையிலே பணியாற்றுவதை இங்கே எல்லோரும் பேசினார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். [illegible] காலத்திலே, அரிசன மக்கள் வெளியிலே [illegible]

பிற்பகல் 2-30

அந்தக் காலகட்டத்திலே, நம்முடைய மகாத்மா காந்தி அவர்கள் தன்னுடைய வாழ்நாளை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை வெள்ளையனை வெளியேற்றவும், இன்னொரு பகுதியிலே, மிக மோசமான சூழ்நிலையிலே இருக்கக்கூடியவர்களை, மனிதனோடு மனிதனாக வாழ வைக்க வேண்டுமென்பதற்காகவும் அரும்பாடுபட்டார்கள். அவர்களைப் பின்பற்றித்தான் நம்முடைய அருமைத் தலைவர் காமராஜர் அவர்களும் அதற்காகவே ஒரு தனி துறையை ஆரம்பித்தார்கள். அந்த அடிப்படையிலேதான் இங்கே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்-ஏனென்றால் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே நான் சட்டமன்ற உறுப்பினராக

இல்லை, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—சிறப்பான
முறையிலே நம்முடைய அரிசன சமுதாயத்து மக்களுக்காக நல்ல
முறையிலே பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நான்
ஏற்றுக்கொள்கிறேன், அதை வரவேற்கிறேன்.

இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களிலே 112 பிரிவுகள் இருக்கின்றன. 10
வேலைகள் இருக்கிறதென்றால், அந்த 10 வேலைகளையும் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, நான் இந்தப் பிரிவைச் சார்ந்தவன்,
எனக்கு அதைக் கொடுங்கள், நான் இந்தப் பிரிவைச் சார்ந்தவன்,
எனக்கு வேலை கொடுங்கள் என்று கேட்டால், எந்தப் பிரிவுக்குக்
கொடுப்பார்கள். ஆகையால், குறுகிய மனப்பான்மையிலே நாம் பேசிக்
கொண்டிருப்போமானால், அது நல்லதல்ல என்பதை நான் மூத்த
உறுப்பினர் என்ற முறையிலே மிகவும் வேதனையுடன் கூறிக்
கொள்கிறேன். Backward, Most Backward, பின்தங்கிய வகுப்பினர், மிகவும்
பின்தங்கிய வகுப்பினர், அரிசன வகுப்பு, தாழ்த்தப்பட்ட வகுப்பு,
Forward என்று இருக்கிறதே, அந்த அடிப்படையிலே நாம், கொடுக்கக்கூடிய
உதவிகளைப் பெற்றுக் கொண்டால்தான், மிகச் சிறப்பான முறையிலே
பணியாற்ற முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள
விரும்புகின்றேன். ஏனென்றால், தனித் தனியாக கொடுக்க முடியாது.
அது நல்லதல்ல. மாண்புமிகு அங்கத்தினர்கள், என்னுடைய பிரிவிலே
இருந்து சொன்னார்கள். அதை நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.
இப்படிக்கூட நம்முடைய அன்புத் தம்பிகள், இந்த அளவிற்கு ஆகி
விட்டார்களே என்று நினைக்கும்போது, கொஞ்சம் எனக்கு மனதிலே
வேதனைதான். இருந்தாலும் நான் அதைச் சொல்லவில்லை. சொன்னால்
அதன்படி செய்வார்கள்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சி குறித்து நான்
பேச விழைகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 42000, ஆசிரியப்
பணியிடங்களை ஒதுக்கி அவர்களை நியமித்தார்கள். அதேமாதிரி,
போலீஸ்காரர்களையும் நியமித்தார்கள். அதேபோல இப்போது, பி.எட்
ஆசிரியர்கள் 6000 பேரை நியமித்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.
நியமித்து இருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

அதேபோல, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த
ஆதிதிராவிடர் நலத் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் போதவில்லை,
அவர்களை அந்தப் பணியிடங்களில் நிரப்ப முடியவில்லை. ஆகையால்,



திண்டுக்கல் மாவட்டத்திற்கு அரசினர் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்
பள்ளி ஒன்றைக் கொடுத்து உதவ வேண்டுமென்று அந்த ஏழை
மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். என்ன இந்த அம்மா,
கல்லூரியைக் கேட்டு வாங்கினார்கள் என்று நினைக்கலாம். அதனை
நீங்கள் சும்மா கொடுக்கவில்லை. பணம் கட்டச் சொன்னீர்கள், பணம்
வசூல் செய்து கட்டினேன். இப்போது கொடுத்தார்கள், அது சிறப்பாக
நடக்கிறது. அங்கு உங்களை அழைத்துக் கொண்டே இருக்கிறேன்.
தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்
அவர்களும் அங்கே வந்து அந்தக் கல்லூரி எப்படி நடக்கிறது, எப்படி
இருக்கிறது என்பதையாவது நீங்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டிருக்கிறேன். அதேபோன்றுதான், இந்தப் பெண்கள் ஆசிரியர்
பயிற்சிப் பள்ளியை தயவுசெய்து நடப்பு ஆண்டிலேயே ஏற்படுத்திக்
கொடுத்தால், இந்த வருடம் ஆரம்பிப்போமானால் 100 குழந்தைகள்
பயன்பெறுவார்கள், அடுத்த 2, 3 ஆண்டுகளுக்குள்ளாக 300, 400 பேரை
நாம் பயனடையச் செய்யலாம். அப்படிச் செய்தால் ஆசிரியர்கள்
இல்லை என்ற நிலையை நாம் போக்கலாம் என்பதையும் நான் இந்த
நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிறகு இங்கே பேசியவர்கள் எல்லாம், "நாம் நிறையச்
செய்துவிட்டோம், இடம் வாங்கிக் கொடுத்துவிட்டோம், வீட்டடி மனை
வாங்கிக் கொடுத்துவிட்டோம்" என்று சொன்னார்கள். நான்கூட, 1989-
லே பேசினேன், அதாவது, "அரிசனங்களுக்கு வீட்டடி மனைகளை
வாங்கிக் கொடுக்கிறோம், வீடுகட்டிக் கொடுக்கிறோம் ஆனால், இந்த
அரிசனங்களைக் காட்டிலும், மற்ற ஜாதி இந்துக்கள் மிக மோசமான
நிலைமையிலே இருக்கிறார்களே, அவர்களுக்கு நீங்கள் வீட்டடி மனை
வாங்கிக் கொடுக்க வேண்டும்" என்று சொன்ன உடனேயே, நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள், "மாண்புமிகு அம்மையார் அவர்கள்
ஒரு நல்லக் கேள்வியைக் கேட்டார்கள். அவர்கள் கேட்கும்போது,
நான் உள்ளமெல்லாம் பூரிப்பு அடைந்திருந்தேன், அவர்களுக்கும் செய்து
கொடுக்கப்படும்" என்று இங்கே பேசினார்கள். ஒத்துக்கொண்டார்கள்.
அந்த அடிப்படையிலேதான், இப்போது இதர ஜாதி இந்து மக்களுக்கும்,
எந்த ஜாதியாக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் வீட்டடி மனை
இனாமாக வாங்கிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையையும் அரசு இங்கே
ஏற்படுத்தி இருக்கிறது. வீட்டடி மனையை வாங்கிக் கொடுத்து
விட்டோம். வீடு கட்டுவதற்கு இப்போது கடன் கொடுக்கிறார்கள்.

நான் முழு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. மூன்றிலே ஒரு பாகம் மானியம், மீதம் மூன்றிலே இரண்டு பாகம் கடனாகக் கொடுக்கின்றோம். அதை மாற்றி பாதி மானியமாகக் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு 12,000 ரூபாய்க்கு வீடு என்றால் 6,000 ரூபாய் மானியமாகவும், 6000 ரூபாய் கடனாகவும் கொடுத்தால் அவர்களுக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிறகு, இவர்களையெல்லாம் நாம் வாழ்க்கையிலே முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், தொழில் துறையால்தான் முன்னேற்ற முடியும். Land Colonisation Scheme என்று காங்கிரஸ் ஆட்சியின்போது நாம் செய்தோம். அப்போது என்னுடைய தொகுதியிலேகூட, 2 இடத்திலே எங்கெல்லாம் புறம்போக்கு நிலங்கள் இருக்கிறதோ, அதை நேரிலே பார்வையிட்டு, 50 குடும்பங்களை அங்கே போய் வைத்து, அவர்களுக்கு 5 ஏக்கர், கிணறு வெட்டுவதற்கு இவ்வளவு பணம், மாடுகள் வாங்குவதற்கு இவ்வளவு பணம், நிலத்தைப் பண்படுத்துவதற்கு இவ்வளவு பணம் என்று கொடுத்து நாங்கள் ஏற்பாடு செய்தோம்.

அதுபோன்று மாநிலத்திலே எங்கெல்லாம் புறம்போக்கு இடங்கள் இருக்கின்றனவோ, அந்தப் புறம்போக்கு இடங்களிலே 100 பேர் அரிசனங்களாக இருந்தால், 25 பேர் Backward Community இதா [illegible] கொடுத்து,

வேலைகளையும் செய்வோமேயானால் [illegible] ஓரளவிற்கு அவர்களை வாழ்க்கையிலே உயர்த்துவதற்கு ஒரு நல்ல வழியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-35*

அதுமாத்திரமல்லாமல், நிறைய hostels வைத்துவிட்டோம். அந்த hostel-களைப் பற்றி தம்பி ஒருவர் சொன்னார். அவர்களுக்கு "வெறும் 250 ரூபாய் மட்டும் போதாது; 400 ரூபாய், 500 ரூபாயாவது சாப்பாட்டிற்கு" என்று. நிறைய hostel வைத்திருக்கிற காரணத்தால், படிப்பதற்கு நாம் எல்லா உதவிகளையும் செய்தாலும்கூட, இந்தத் துறையிலே, இதை நாம் கொஞ்சம் அதிகம் செலவு செய்வோமேயானால், பணம் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால், அந்தக் குழந்தைகள் கைச்



செலவு செய்யாமல் இருப்பார்கள் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிறகு, இந்த ரிசர்வ் தொகுதி என்பது எத்தனை ஆண்டுகளாக இருக்கிறது தெரியுமா? 1967-லிருந்து ரிசர்வ் தொகுதி. அதிலே வேறு ஆட்களே நிற்க முடியாது. 1967, 1977, 1987, 1997, 33 வருடங்களாக, இதிலே ஒரு பிரிவுதான் நிற்க வேண்டும். வேறு பிரிவு நிற்பதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது நாங்கள் எல்லாம் சந்தோஷப்பட்டு ஓட்டு போட்டால்கூட, மனத்திற்குள்ளே சில பேருக்கு இருக்கும் இல்லையா, என்ன எப்போது பார்த்தாலும், இந்த அக்காதான், வேறு யாரும் வரக்கூடாதா, அப்படி யாரும் நினைக்க மாட்டார்களா? ஆகையினாலே, இந்தத் தொகுதிகளை, இந்த நடப்பு ஆண்டிலாயினும், 2001-ல் ஆயினும் மாற்றுவதற்கான முயற்சிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மத்தியிலே நல்ல செல்வாக்கு இருக்கிற காரணத்தால், எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், இந்த வீட்டடி மனையிலே, ஒரு மூன்று வருட திட்டம் போட வேண்டும் நீங்கள். மூன்று ஆண்டிற்குள்ளாக, தமிழகத்திலே எல்லா ஜாதிககாரர்களுக்கும் வீட்டடி மனை கொடுத்துத்தான் தீர வேண்டும். பிறகு, நமக்கு இடம் போதவில்லை. இப்போது இடம் குறுகிக் கொண்டே வருகிறது. நாம் வீட்டடி நிலத்தை எல்லாம் எடுத்துக்கொண்டே இருக்கிறோம். அதிலே apartments கட்ட வேண்டும். சும்மா வீடு கட்டினால் சரியாக வராது, அடுக்குமாடி வீடுகள் கட்ட வேண்டும். அடுக்குமாடி வீடுகளைக் கட்டிக்கொடுப்போமேயானால், அப்போதுதான், நாம் இருக்கிற அந்த இடத்தைப் பாதுகாக்க முடியும். இல்லாவிட்டால், இன்னும் 20, 50 ஆண்டிற்குள்ளாக ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம். மூன்றுபேர் என்றால் நின்றுகொண்டே இருக்க வேண்டும். ஒருவர் என்றால் நீட்டி, நிமிர்ந்து படுத்துக்கொள்ளலாம். இரண்டு பேர் என்றால், உட்கார்ந்துகொள்ளலாம். அப்படி ஒரு நிலைமை வந்துவிடக் கூடாது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைப்பார்களேயானால், இந்த வீட்டடி மனை வாங்கிக் கொடுப்பதிலே, அப்பார்ட்மென்ட்ஸ் கட்டிக் கொடுப்பதிலே, ஒரு முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் தலைவர் அவர்கள் மூலம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நான் தினம் பார்க்கிறேன், வீடு இல்லாமல் அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கான ஒரு பெரு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், இந்தத் தொழில் துறையிலே, அரிசன மக்களுக்கும் சரி, பின்தங்கிய மக்களுக்கும் சரி, என்னென்ன தொழில்களை அவர்களுக்குக் கொடுக்கலாம், எப்படியெப்படிக் கொடுக்கலாம் என்று சிந்திக்க வேண்டும். வங்கிக்காரர்கள் சரியாகப் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். "என்ன பணம் கொடுப்பது, இவர்கள் என்ன திருப்பிக் கட்டவா போகிறார்கள்" என்று நினைக்கிறார்கள். ஆனால், அதேநேரத்திலே எங்களை மாதிரி அரசியல்வாதிகள் "வாங்கிய கடனை விடப்பா, கலைஞர் இருக்கிறாரப்பா, கட்டிக்கொள்வார் விடு" என்று, அப்படிச் சொல்வதற்கும் ஆள் இருக்கிறார்கள். அது நன்றாகப் படவில்லை. ஆகையினாலே, வாங்கிய கடனைத் திருப்பி கொடுக்கின்ற அளவிற்கு அவர்களைத் தயார்படுத்தி, நாம் கடன் கொடுத்து, அந்த மக்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உயர்நிலைக் கமிட்டியை அமைத்தார்கள். அந்தக் கமிட்டியிலே, இப்பொழுது எல்லா இலாகாக்களையும் அழைத்துப் பேசியாகிவிட்டது. 154 இலாகாக்களையும் கூப்பிட்டுப் பேசியாகிவிட்டது. அதிலே இந்த ஆதிதிராவிடர் நலத் துறையிலே 18 சதவிகிதம் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆனால், வெளியிலே என்ன பேச்சு, "என்னப்பா எந்த அரசாங்கம் வந்தாலும், இந்த அரிசனங்களுக்கு வாழ்வு. . . ."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத் தானே வெள்ளை அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தனியாக ஒரு நாள் விவாதிக்கலாம்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** ஆமாம், ஆமாம், அதற்குத்தான். ஆகையினாலே, அதற்காக வேண்டிய ஏற்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த, இந்த மாமன்றத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, மானியக் கோரிக்கை எண் 30-ஐ இப்பேரவையில் வைத்துப் பெருமகிழ்வடைகின்றேன். முதன்மைமிகு நிலப்பரப்பில், முன்தோன்றிய மூத்த இனங்களாம் ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் முன்னேற்றம் கண்டு வாழ்வதற்காக மூன்று



பெரும் திட்டங்களைத் தந்து, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழுகின்ற மக்கள், நலமான, வளமான வாழ்வு வாழ்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 626 கோடி நிதிதனை அள்ளித் தந்து இருக்கின்றார்கள் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியினை இப்பேரவையில் தெரிவிப்பதோடு, இத்துறையின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊசி முன்னுக்கும், நூல் பின்னுக்கும் செல்வதைப் போல, பேரறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்திடும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இன்றையதினம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினையும், ஆதிதிராவிடர் நலத் துறையினையும், ஒன்றாக இணைத்து, ஒரே நாளிலே இரண்டு துறை மக்களும் சங்கமம் ஆகவேண்டும், இரண்டு துறை மக்களுடைய உள்ளங்களும், உணர்வுகளும் ஒன்றாய்க் கலந்திட வேண்டும், உறவாடிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இருதுறை மானியக் கோரிக்கைகளையும் ஒன்றாக இணைத்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, இந்த இரு சமுதாயத்தின்மீதும் அவருக்குள்ள நீங்காப்பற்றை நினைக்கும்போது நம் நெஞ்சமெல்லாம் நெகிழ்கின்றது.

பிற்பகல் 2-40

அதேநேரத்திலே தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் ஏழை எளிய மக்களுக்காக, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்காக எவ்வளவோ திட்டங்களைத் தீட்டிச் சாதனை புரிந்துள்ளார் என்பதை நாடு மறக்கவில்லை. குறிப்பாக, ஆதிதிராவிட மக்களுக்காக அவர்கள் செய்திட்ட சாதனை அளவுக்கு அரியது, விவரித்தால் பெருகிக் கொண்டே போகும். இருந்தாலும் 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போல இம்மானியக் கோரிக்கையின் மூலமாக ஒன்றிரண்டைக் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

முதலில் கல்வி. கல்விக்குத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலிடம் கொடுத்திருக்கின்றார்கள். ஏன் முழு இடமே கொடுத்திருக்கின்றார்கள் என்கின்ற சொல்லை நினைவூட்டுகின்ற அளவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் 626 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். அதிலே 70 விழுக்காடு ரூ.440.30 கோடியினை கல்விக்கு வாரி வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த

அளவிற்கு ஆதி திராவிட மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற அக்கறை கொண்டதுதான் காரணம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் துறையின் சார்பாக மொத்தம் 1260 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த 1260 பள்ளிகளிலே ஆதிதிராவிடர்களுக்கென்று 1017 பள்ளிகள் இயங்கி வருகின்றன. தொடக்கப் பள்ளிகள் 806, நடுநிலைப் பள்ளிகள் 110, உயர்நிலைப் பள்ளிகள் 47, மேல்நிலைப் பள்ளிகள் 54 இயங்கி வருகின்றன. மொத்தம் 2,43,000 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள் என்ற செய்தியையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் துறையின் சார்பாக இலவச எழுது பலகைகள், பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், சிறப்பு வழிகாட்டிகள் போன்ற உதவிகளும் அதேநேரத்தில் அதிக மதிப்பெண்கள் பெறுகின்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை, உதவித் தொகை, பரிசுகள் போன்றவைகளும், வழங்கப்பட்டு வருகின்றன.

கல்லூரியில் பயிலுகின்ற மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை, கடன் உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன. இலவச தொழிற் கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. அறிவுக் கூர்மைப் பரிசு, காந்தி நினைவுப் பரிசு, முதலமைச்சர் தகுதிப் பரிசு போன்றவைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான சிறப்புப் பயிற்சி, கணினிப் பயிற்சி, வழக்கறிஞர்களுக்கு சட்டப் பயிற்சி, இந்திய ஆட்சிப் பணி, காவல் பணி போன்ற ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

"பாரதத்தில் வேலையைக் காண்பது அரிது, பாலைவனத்தில் நீரைக் காண்பது அரிது" என்பார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், மாணவர்கள் இவற்றையெல்லாம் நினைத்து, வேதனையைச் சுமந்து கொண்டு இருக்கின்றார்கள் என்று அவர்களுக்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்காக பிளாஸ்டிக் மற்றும் தோல் தொழில்நுட்பவியல் பயிற்சிகளும், ஆடை அலங்காரத் தொழில்நுட்பவியல் பயிற்சிகளும் மற்றும் மாணவர்களுக்கான வேலையை நோக்கமாகக் கொண்ட, அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளும் இந்தத் துறையின் சார்பாக ஏராளமாக அளிக்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக ரூ.4.98 கோடியினை இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள்.



கடந்த 4 ஆண்டுகளில், சொல்லப்போனால் ரூ.52.67 கோடி நிதியினை வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் துறையின் சார்பாக, இலவசமாகவே பாடப் புத்தககங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எந்த அரசும் குறை சொல்ல முடியாத அளவிற்கு, எவரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு குறை காண நினைப்போரும் நிறை காணும் வகையிலே—கடந்த காலங்களில் எல்லாம் இலவசப் புத்தகங்கள் என்று இல்லாமல் விலையோ விலை என்று விற்பனைக்கு சென்று கொண்டிருந்தன. ஆனால்—இந்த ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு, இந்தப் புத்தகங்கள் விற்பனைக்கு அல்ல என்று சொல்லுகின்ற அளவிற்கு அந்தக் குறைகளை எல்லாம் மாற்றி, பள்ளி திறப்பதற்கு முன்னாலேயே அந்தப் புத்தகங்களை வழங்கி மாணவர்கள் பள்ளிகளில் கால் வைத்தவுடனே, அவர்கள் கைகளில் கிடைத்திடுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலவசப் புத்தகங்களுக்காக ரூபாய் 12.40 கோடியினை வழங்கி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 4 ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக 58 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர். அதேநேரத்தில் இலவச சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒட்டுடை இல்லாத மக்களுக்கு பட்டுடை இல்லாவிடினும் சிற்றுடை தரலாம் என்று சிறப்புடையும் தந்தார் சிறப்பான முதலமைச்சர் அவர்கள். இந்தச் சீருடையும் சிறப்பான உடைதான். கடந்த காலங்களைப் போல் சீர்கேடுகள் எதுவும் இல்லாத முறைதான் என்பதை நிலைநாட்டியிருக்கிறார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இங்கே பேசிய அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சொன்னார்கள், சீருடை வழங்கவில்லை என்று. சீருடைகள் அவர்களுடைய ஆட்சியில்தான் அலங்கோலமாக வழங்கப்பட்டன. சரியான அளவில் தைத்துக் கொடுக்கப்படாமல், உரிய நேரத்தில் வழங்கப்படாமல் இருந்தன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனே, ஆண்டுக்கு இரண்டு இணை சீருடைகள் சரியான அளவிலே, முறையான அளவிலே உரிய நேரத்தில் தைத்து வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.7.8 கோடி நிதியினை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் மூலமாக 12.51 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூலகக் கல்வி. உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் நூலகக் கல்வி கற்க வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அக்கறை கொண்டதன் காரணமாக—'நூல் இல்லா பள்ளி பாழ்' என்பதை உணர்ந்து 'நூல் நிலையம் இல்லாத வீடு, உயிரில்லாத உடலைப் போன்றது' என்று பிளாட்டோ சொன்னான். சிந்திக்காமல் படிப்பது ஏன்? படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது என்று சீனப் பேரறிஞர் கன்பூசியஸ் சொன்னதைப் போல—அன்று திருவாரூரில் தான் மாணவராக இருந்து படித்திட்டபோது 'நன்றாகப் படி' என்று பேரறிஞர் அண்ணா சொன்னதை மனதில் நினைத்தபடி. இப்போது மாணவர்களை 'நன்றாகப் படி, படி' என்று மாணவர்கள் நன்றாகப் படிப்பதற்காக நூலகம் அமைத்துக் கொடுக்கும்படி, புத்தகங்கள் வாங்கி வழங்கிட அவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.1000 வழங்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக 26,000 புத்தகங்கள் வாங்கி வழங்கவும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2-45*

அதுமட்டுமல்ல, விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்கள் பத்திரிகைகள் படிக்க வேண்டும், நாட்டு நடப்புகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் நாட்டு நடப்பைத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு, உலகைப் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு, உலக விவரங்களைத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அன்றாட அரசியல், அறிவியல் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'The newspaper is the best way of learning' என்பதை உணர்ந்து இரு நாளிதழ்களை, அதாவது ஆங்கிலத்திலும், தமிழிலும் மாணவர்கள் படிப்பதற்காக விடுதிக்கு வழங்குவதற்கு உத்தரவிட்டு, அதன்மூலமாக இரண்டு பேப்பர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இரு மொழி கொள்கையைக் கடைபிடிக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாணவர் விடுதிகளிலும் இரு மொழிகளிலும் - தமிழிலும் ஆங்கிலத்திலும்—நாளிதழ்களை வழங்குவதற்காக ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதேநேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீருடைகள் வழங்கியதோடு மட்டுமல்ல, உபகரணங்களுக்காகவும் சிறப்பாகப் படிப்பதற்காகவும்—அடுப்பெரிய விறகு இருந்தால்தானே,



அருமையாய்ச் சமைத்திட முடியும் என்ற கிராமத்துப் பழமொழி போல்-தலைவர் கலைஞர் அவர்கள் ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கு, அமர்வு இருக்கைகள் அமைப்பதற்கு, சாய்வு மேஜைகள் அமைப்பதற்கு, ரூ.225.2 இலட்சத்தை வாரி வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, உபகரணங்களுக்காக உயர்ந்த எண்ணத்தோடு ரூ.150.2 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இங்கே தடைபடா பெண் கல்வித் திட்டம் என்ற ஒரு அற்புதத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கேள்வி கேட்டார்கள். "தடைபடா பெண் கல்வித் திட்டம் இங்கே நடைபெறவில்லை, அது தடைப்பட்டுக் கிடக்கிறது" என்றெல்லாம் சொன்னார்கள். மாணவிகள்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதல்வர் அவர்கள், பெண் கல்வியின் அவசியத்தை உணர்ந்த தலைவர் அவர்கள், பெண்களே நாட்டினுடைய கண்கள் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள்—பெண்ணாட்சி நடத்தியவர்கள் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணராமல் சென்று விட்டார்கள். ஆனால்—குறள்வழி நடக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பெண் கல்வித் திட்டத்திற்காக ரூ.6 கோடியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அது நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த நான்கு ஆண்டுகளில் இதற்காக ரூ.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக 3.60 இலட்சம் மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி உதவித் தொகை; இப்படி அடுக்கடுக்காகப் பல நல்ல திட்டங்களை நாட்டுக்குத் தீட்டித் தந்த தமிழக அரசு கல்வி உதவித் தொகைக்காக ரூ.39.69 கோடி நிதியையும் வாரி வழங்கியிருக்கின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் 62 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.135 கோடி கல்வி உதவித் தொகை வழங்கியுள்ளார்கள் நம் முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் தகுதிப் பரிசுத் தொகை. அரசுத் தேர்வில் மாநிலத்தில் முதன்மை பெறும் மாணவர்களுக்கு என்று ஆண்டிற்கு 90 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு ரூ.60 இலட்சம்

வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.90 இலட்சம் வழங்கியிருக்கின்றார்கள்.
இதனால் சென்ற ஆண்டு மாணவர்கள் 90 விழுக்காடு அரசுத் தேர்வில்
வெற்றி பெற்றார்கள். இந்த ஆண்டும் 90 விழுக்காட்டிற்கு
மேலாக மாணவர்கள் வெற்றி பெறக்கூடிய நிலைமை இருக்கிறது
என்பதையும் நான் மிகுந்த நம்பிக்கையோடு கூறிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக் கடன் உதவித் தொகை. இந்தத் துறையின் சார்பாகக் கல்விக்
கடன் உதவித் தொகையை ஏழை எளிய மாணவர்களுக்குத்
தொடர்ந்து படிப்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள்
வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் "கல்விக் கடன் கடந்த காலத்தில்
முறையாகக் கொடுக்கப்பட்டது" என்றெல்லாம் சொன்னார்கள். அந்த
நேரத்திலே இங்கே அமர்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமியும் "கல்விக் கடன் உதவித் தொகை
வழங்கவேயில்லை" என்று சொன்னார்கள். நான் இந்தப் பேரவைக்கு
ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த
காலத்தில் கல்விக் கடன் உதவித் தொகையை 1995-96 ஆம் ஆண்டிலே
நிறுத்தி, ஆணையிட்டுச் சென்றவர்கள்தான் அந்தக் கடந்த கால
ஆட்சியினர் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்
(மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட
பழங்குடியின மாணவர்கள் படிக்க வேண்டும், கல்வி அறிவு பெற
வேண்டும், சமுதாயத்தில் முன்னேற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின்
அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு
வந்தவுடனே கல்விக் கடன் உதவி வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு
மகிழ்ந்தவர் தலைவர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்திலே
கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கல்விக் கடன் உதவித்
தொகைக்காக மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த நான்கு ஆண்டுகளில்
ரூ.19.28 கோடி வழங்கியிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில்
இருந்தவர்கள் ஐந்து ஆண்டுகால ஆட்சியில் இருந்தவர்கள் வழங்கிய
தொகையோ ரூ.7.27 கோடிதான். அதையும் நிறுத்திச் சென்றுவிட்டார்கள்.
பிறகு நம்முடைய தலைவர் அவர்கள், ஆட்சிக்கு வந்தவுடனே கல்விக்
கடன் உதவித் தொகையை வழங்குகின்ற அற்புதத் திட்டத்தை தொடர்ந்து
நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட, அந்த மாணவர்களுக்கு
ரூ.3 கோடி வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை
நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 2-50

ஆரம்பக் கல்வி முதல் ஐ.ஏ.எஸ். படிக்கிற வரைக்கும், அகில
இந்தியப் பணிகளுக்கான ஐ.ஏ.எஸ். போன்ற தேர்வு பெறுகிற வரை
அனைத்து உதவிகளையும் செய்கின்ற அரசுதான் தமிழக முதல்வர்,
டாக்டர் கலைஞருடைய அரசு என்பதை நான் மிகழ்ச்சியோடு
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும்
இரண்டு பயிற்சி மையங்கள் முன்னோடித் தேர்வுப் பயிற்சி மையங்கள்
தனித்தனியாக செயல்பட்டு வந்தன. அவை சிறப்பாகச் செயல்பட
வேண்டும், அகில இந்திய அளவில் அதிகமான எண்ணிக்கையில்
மாணவர்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக 1-4-2000 முதல்
ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக இயங்கி வந்த முன்னோடித்
தேர்வுப் பயிற்சி மையத்தையும், பிற்படுத்தப்பட்ட நலத் துறையின்
சார்பாக இயங்கி வந்த முன்னோடித் தேர்வுப் பயிற்சி மையத்தையும்
ஒன்றாக இணைப்பதற்கு அரசு ஆணை வெளியிட்டவர்தான் தமிழ்
இணையமாக, இதயமாக, இமயமாக விளங்கும் மாண்புமிகு முதல்வர்
அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைபபட்டிருக்கிறேன்.

இந்தத் துறையின் சார்பாக 1,075 மாணவர் விடுதிகள் இயங்கி
வருகின்றன. 1075 மாணவர் விடுதியில் 615 விடுதிகள் வாடகைக்
கட்டடத்தில் இயங்கி வருகின்றன. சுவர் இல்லாமல் சித்திரமா,
சுற்றுச்சுவர் இல்லாமல் பத்திரமாக அந்த மாணவர் விடுதியில் தங்கி
படிக்க முடியுமா என்பதையெல்லாம் நினைத்த முதலமைச்சர் அவர்கள்
வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய விடுதிகள் எல்லாம் அரசுக்
கட்டடங்களுக்கு மாற வேண்டும், சொந்தக் கட்டடங்களுக்கு மாற
வேண்டும் என்பதற்காக முதல்வர் அவர்கள் 3 ஆண்டு காலத்திலே
ரூ.39.34 கோடி நிதியை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
1999-2000 ஆம் ஆண்டுக்கு ரூ.14 கோடி ஒதுக்கப்பட்டு 43 விடுதிகள்
கட்டப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். மேலும் நடப்பு நிதியாண்டிலே நிதிநிலைமை நெருக்கடி
இருந்தாலும் மாண்புமிகு தலைவர் அவர்கள் வாடகைக் கட்டடத்தில்
இயங்கக்கூடிய விடுதிகள் எல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயங்க
வேண்டும் என்ற எண்ணத்திலே ரூ.13.86 கோடி ரூபாய் ஒதுக்கித்
தந்திருக்கிறார்கள். பழங்குடி மாணவர்களுக்காக 5 பள்ளிகளும், 9
விடுதிகளும் இயங்கி வருகின்றன. இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். 1995-96-லே ரூ.4.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

அப்போது யார் ஆட்சி என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.
அப்போது ஒரு விடுதிகூடக் கட்டப்படவில்லை என்பதையும் நான்
கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விடுதி கட்டுவதற்கு, பணம்
ஒதுக்கப்பட்டு விடுதி கட்டப்படாமல் சரண்டர் செய்யப்பட்டது.
இப்பொழுது தலைவர் கலைஞர், ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு 111
மாணவர் விடுதிகள் புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. 124 விடுதிகள்
கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5
ஆண்டுகால ஆட்சியிலே 62 விடுதிகள் மட்டும்தான் கட்டி
முடித்திருந்தார்கள்; இப்பொழுது 124; இரண்டு மடங்கு உயர்ந்து
இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல உணவுக் கட்டணங்கள். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்ற
பிறகுதான் மாணவர்களுடைய உணவுக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.
இங்கே பேசிய அருமைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் "உணவுக்
கட்டணத்தை உயர்த்த வேண்டும்" என்றார்கள். தலைவர் கலைஞர்,
ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு ரூ.138.75 பைசாவாக இருந்த உணவுக்
கட்டணத்தை 225 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். ஏன் கல்லூரி
மாணவர் விடுதிகளுக்கு ரூபாய் 197.50 பைசாவாக இருந்ததை ரூ.400
ஆக உயர்த்தியிருக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதைச்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
விடுதிகளில் சேர்வதற்கு பெற்றோரின் வருமான வரம்பு ரூ.15,000 என்று
இருந்ததை ரூ.50,000-ஆக உயர்த்தி ஆணையிட்டவர்தான் தலைவர் கலைஞர்
அவர்கள்.

அதுமட்டுமல்ல, சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை. சுற்றுச்சுவர்
இல்லாமல் பத்திரமாக மாணவர்கள் படிக்க முடியாது என்பதற்காக 10
மாணவியர் விடுதிகளுக்கு 20.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித்
தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு. அனைத்து மாணவ,
மாணவியர் விடுதிகளுக்கும் சமையல் எரிவாயு வழங்குவதற்காக ரூ.24
இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

குடிநீர்த் தொட்டிகள். சுவாமி சகஜானந்தா அவர்களால்
ஆரம்பிக்கப்பட்டது சிதம்பரத்திலே உள்ள பள்ளி. இங்கே நம்முடைய
மூத்த உறுப்பினர் அம்மையார் பொன்னம்மாள் அவர்கள்கூட அந்தப்
பள்ளியிலே படித்ததாக அடிக்கடி சொல்வார்கள். அந்தப் பள்ளியிலே



குடிக்கத் தண்ணீர் இல்லாமல் அந்த மாணவியர் தவித்த நேரத்திலே
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கி
அங்கே குடிநீர்த் தொட்டி கட்டப்பட்டு வருகிறது என்பதை
மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடியிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியசாமி
கேட்டுக்கொண்டதற்கிணங்க—அங்கே ஒரு விடுதி பழுதுபட்டு கிடந்தது—
அந்த விடுதியைப் பராமரித்திட, பழுது நீக்கிட 10 இலட்சம் ரூபாயும்
வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிகளின் நிலை உயர்த்துதல். 'அடக்கம்தான் என் அரசியல்
வாழ்வில் தொடக்கம்' என்று நாட்டு மக்களுக்கு அடையாளம்
காட்டிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அடக்கத்தோடு ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து, அற்புதமான நிதிநிலை
அறிக்கையும் தந்து, அழகாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தொடக்கப் பள்ளிகள்
25-ஐ நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகள் 5-ஐ உயர்நிலைப்
பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் இரண்டை மேல்நிலைப்
பள்ளிகளாகவும் தரம் உயர்த்துவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள்.
ஆணை மட்டுமல்ல; அதை நிறைவேற்றுவதற்காக, செயல்படுவதற்காக
ரூ.253.25 இலட்சத்தையும் அன்பு நிதியாக, பண்பு நிதியாக, பாச
நிதியாக, கருணை நிதியாக வழங்கியிருக்கிறார்கள்.

இந்தத் தருணத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
கடந்தகால ஆட்சியாளர்களால் நிலை உயர்த்தப்பட்ட தொடக்கப்
பள்ளிகள் 13, நடுநிலைப் பள்ளிகள் 13, உயர்நிலைப் பள்ளிகள் 13, 5
ஆண்டுகளில் அவர்களால் நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளே 39 தான்.
ஏன் 13,13,13 என்று நிலை உயர்த்தினார்களோ தெரியவில்லை. ஆனால்
சொல்வார்கள் "நான்கும் விளங்கவேண்டுமானால் எவருக்கும் நாற்பது
வேண்டும்" என்று. இனியவை 40 ஆகக்கூட இல்லாமல் போனது
என்பதுதான் ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு வருத்தம். அப்படிப்பட்ட
நிலையை அவர்கள் உருவாக்கினார்கள். ஆனால் இந்த ஆட்சியிலே
தொடக்கப் பள்ளிகள் 75 நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. நடுநிலைப்
பள்ளிகள் 21 நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள்
21 நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகமொத்தம் 117 பள்ளிகள் நிலை
உயர்த்தப்பட்ட பள்ளிகளாக மாறி மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக்
கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-55

நிதி நெருக்கடியிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டிலே 509 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். இந்த ஆண்டு 626 கோடி ரூபாய் நிதியினை அமுத சுரபியாக வழங்கியிருக்கின்றார்கள். இதிலும் 117 கோடி ரூபாய். என்ன பொருத்தம் பாருங்கள்? இந்த ஆதிதிராவிட மக்களுக்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இந்த 117,117 என்பது நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளும் நிதியாக ஒதுக்கப்பட்ட கோடிகளும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

நிதி ஒதுக்கீடு செய்வதிலும், நிலை உயர்த்துவதிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தியத் துணைக் கண்டத்தில் விஞ்சும் அளவிற்கு யாரும் இல்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஒன்றை உங்கள் பார்வைக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். முந்தைய 5 ஆண்டு கால ஆட்சியில் அவர்கள் ஒதுக்கிய மொத்தத் தொகையே 729.71 கோடி ரூபாய்தான். ஆனால், இந்த 4 ஆண்டுகளில் கழக ஆட்சியில் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 1485.13 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த இரண்டு ஆண்டுகளில் 755.42 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருக்கின்றார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்றால் இந்தத் துறையின்மீது எந்த அளவிற்கு அவருக்குப் பந்தம், பரிவு, பாசம், பற்று இருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

கல்விக்காக முந்தைய 5 ஆண்டு கால ஆட்சியில் ஒதுக்கியது 415.71 கோடி ரூபாய். ஆனால் இந்த 4 ஆண்டுகளிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 923.30 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் 2 மடங்கு சாதனைதான் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஏன், ஒரு கால் நூற்றாண்டைத் திரும்பிப் பார்க்க விரும்புகிறேன். 1975-76 ஆம் ஆண்டில் இந்தத் தமிழ்நாட்டினுடைய வருமானம் 563 கோடி ரூபாய். அப்போது இத்துறைக்காக ஒதுக்கப்பட்டது 19 கோடி ரூபாய். அப்போது முதலமைச்சர், இங்கு முதலமைச்சராக அமர்ந்து இருக்கக்கூடிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்தான், ஆதிதிராவிட மக்களின் குறைகள் முழுவதையும் களைந்திடக்கூடிய தலைவர்தான் 19 கோடி ரூபாயை ஒதுக்கி இருந்தார்கள். அப்போது 563 கோடி ரூபாய் வருமானம் 19 கோடி ரூபாய் இந்த நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை. ஆனால், அதற்குப் பின்னாலே, 1978-79 ஆம் ஆண்டிலே நிதி ஒதுக்கீடு 849 கோடி ரூபாய். இத்துறைக்கு



ஒதுக்கப்பட்டதோ 18 கோடி ரூபாய். வருமானம் உயர்ந்திருக்கிறது, ஆனால் துறைக்கான ஒதுக்கீட்டுப் பணமோ குறைந்திருக்கிறது. அப்போது முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள். 563 கோடியில் 19 கோடி ரூபாயை ஒதுக்கிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் ஆதிதிராவிட நலத் துறைக்காக அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1991-92 ஆம் ஆண்டிலே மொத்த நிதி ஒதுக்கீடு 1,600 கோடி ரூபாய். அப்போது இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 116 கோடி ரூபாய். 1991-92-லே யார் முதலமைச்சர் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். உங்களுடைய பார்வைக்கே அதை விட்டுவிடுகின்றேன். ஏன், 4 ஆவது முறையாகவும் முதல்வராகி, 5-வது முறையாகவும் ஆட்சிக் கட்டிலில் அமர இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் நடப்பாண்டில் கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 626 கோடி ரூபாய். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால் ஆதிமுதல் இந்தத் தேதிவரை ஆதிதிராவிட மக்களுக்காக, ஆதவனாய், ஆதி பகவனாய் விளங்குபவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசு பாராட்டு. இந்த மாநிலத்தில் நலத் துறை எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயலாற்றுகிறது என்பதை மத்திய அரசு பாராட்டியிருக்கிறது.

'முறை செய்து காப்பாற்றும் மன்னவன்' என்ற அய்யன் வள்ளுவருடைய கூற்றிற்கேற்ப தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 ஆவது முறையாகத் தமிழகத்தின் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததிலிருந்தே ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்காகத் திட்டங்களைத் தீட்டுவதில், முழுமையாகச் செயல்படுத்துவதில் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்ற சாதனையைப் புரிந்துள்ளது என்று மத்திய அரசு பாராட்டியிருக்கிறது. இதை நான் கூறவில்லை; என்னுடைய கருத்து என்றும் கூறிட விரும்பவில்லை. மத்திய அரசு இதைப் பாராட்டியிருக்கிறது. மத்திய அரசின் திட்டம் மற்றும் புள்ளியியல் துறையும் இணைந்து பாராட்டியிருக்கிறது. ஆனால் இப்போது, அரசியல் இலாப நோக்கத்தோடு சிலர் மனச்சாட்சியை மயானத்திற்கு அனுப்பிவிட்டு, மானிட தர்மத்தை விலை கூறி விற்றுவிட்டவர்கள், ஆதிதிராவிட நலத் துறை அந்த மக்களுக்குப் பயன்படவில்லை என்று சேராத இடம் தனிலே

சேர்ந்துவிட்ட காராணத்தினால் குறை சொல்ல வேண்டுமென்று சொல்வதற்காகச் சில கருத்துகளை எடுத்து வைக்கின்றார்கள். அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், அதேநேரத்தில் இந்த இனத்தின் விடியலுக்காகப் பாடுபட்டு வருகின்ற நம் இனத் தலைவர் கலைஞர் அவர்கள் பகல் பிறக்கும் முன்னால் விழித்து, இரவு தொடரும்வரை இந்தச் சமுதாயத்திற்காக உழைத்துக்கொண்டு இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள்.

"வரப்பு உயர்ந்தால்தான் நீர் உயரும்; நீர் உயர்ந்தால்தான் நெல் உயரும்; நெல் உயர்ந்தால்தான் குடி உயரும்; குடி உயர்ந்தால்தான் கோன் உயர்வான்" என்ற ஔவைக் கிழவியின் வாக்குப்படி தலைவர் கலைஞர் அவர்கள் ஆதிதிராவிட மக்களுடைய வாழ்வு உயர, வாக்குயர, சீர் உயர, சிறப்புயர, அவர்கள் செம்மாங்கு வாழ்வதற்காக எல்லா வகைகளிலேயும் பாடுபட்டு வரும் ஆண் ஔவையாகத் திகழ்ந்து வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 3-00

ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக தாட்கோ நிறுவனம் இருக்கிறது. தாட்கோ நிறுவனம் ஏழையெளிய மக்களைப் பொருளாதாரத்தில் கைதூக்கி விடுவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். தாட்கோ என்றால் முறைகேடு; இடைத்தரகர்களுடைய குறுக்கீடு; ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு கறுப்பாடு; இதுதான் கடந்த கால ஆட்சியினுடைய செயல்பாடு. இப்படித்தான் தாட்கோவை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தலைவர் கலைஞர் பொறுப்பேற்ற பிறகு இடைத்தரகர்களின் தலையீட்டைத் தவிர்த்து அந்த ஏழையெளிய மக்களுக்கு, உண்மையான பயனாளிகளுக்கு இடைத்தரகரின்றி அரசு நலத் திட்டங்கள் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் அற்புதத் திட்டங்களைத் தீட்டி தந்து அறிவுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். பங்களா தோட்டத்து பளபளக்கும் குரோட்டன்ஸ் இலைகளாக, பழுப்பு இலைகளாக, பயனில்லாமல் ஒரு காலத்திலே காட்சியளித்தது தாட்கோ நிறுவனம். இப்போது ஏழையெளிய மக்களை, குப்பைமேட்டிலே இருக்கக்கூடிய மக்களை கோபுரத்தில் உயர்த்துவதற்காக குப்பைமேனிக் கீரையைப்போல பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சிங்காரச் சென்னையைத் தூய்மை மிகுந்த நகரமாக மாற்றுவதற்காக குப்பை வாரும் இயந்திரத்தைக் கொண்டு வந்து



அழகுபடுத்துகின்ற ஓர் அற்புத நிகழ்ச்சியை உருவாக்குகின்ற மேன்மைமிகு மேயர் அவர்கள் எப்படி எழுச்சியோடு பணியாற்றுகிறார்களோ அதைப்போலவும் தாட்கோ நிறுவனம் மாண்புமிகு முதல்வருடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கின்ற அளவுக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மை தொடர்பான திட்டங்களும், தனி நபர் தொழில் திட்டங்களும் மற்றும் பல திட்டங்களும் இப்போது இந்தத் துறையின் சார்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அதேநேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பழங்குடியினர் மையத்தை ஊட்டியிலே உருவாக்கி அந்தப் பழங்குடியினர் மையத்தின் சார்பாக அந்த மக்களின் பண்பாடு, கலாச்சாரம் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக ஓர் ஆய்வு மையத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் இயக்குநரையும் நியமித்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே காட்டு நாயக்கருக்கு சாதிச் சான்று கிடைக்கவில்லை, கொண்டாரெட்டிக்கு சாதிச் சான்று கிடைக்கவில்லை. பழங்குடியின மக்கள் படும் துன்பம், பெரும் துயரம் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். "தாத்தாவுக்கும், தகப்பனுக்கும்" சாதிச் சான்று, "பேரனுக்கும், பேத்திக்கும் இல்லையா"? என்று விரக்தியின் விளம்பிலே இருக்கக்கூடிய பழங்குடியின மக்களுடைய உணர்வுகளைப் புரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அம்மக்கள் காட்டு நாயக்கர் மட்டுமல்ல, நாட்டுக்கும் நாயக்கர் என்று அவர்களைப் பெருமைப்படுத்தி அந்த இன மக்களுக்கு விரைந்து சான்றுகள் வழங்குவதற்காக கோட்டாட்சித் தலைவர் மூலம் வழங்கி வந்த சாதிச் சான்றுகள் இனிமேல் ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர் மூலமும் வழங்கப்படும் என்ற எளிதான சட்டத்திற்கு விரைந்து ஆணையிட்டவர்தான் மாண்புமிகு முதல்வர் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறைக்கு மிகக் குறைவான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான பணம் ஒதுக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி அவர்களும் கேட்டுக்கொண்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சிறப்பு

உள்ளடக்கத் திட்டம் என்ற ஒரு சிறப்பான திட்டத்தை 1980-லேயிருந்து இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. 20 துறைகளில், பல்வேறு துறைகளில் இந்த ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்காக.....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு புள்ளிவிவரம் சொன்னார்கள். 1975-76-ல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 563 கோடி ரூபாய் பட்ஜெட் போட்டபோது 19 கோடி ரூபாய் ஒதுக்கியதாகச் சொன்னார்கள். அது 3.5 சதவிகிதம் வருகிறது. இப்போது 21 ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட், இதில் 626 கோடி ரூபாய் என்பது 3 சதவிகிதம் தான் வருகிறது. அதனால் ஏற்கெனவே இருப்பதைவிட இப்போது குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளம் பெரியது தலைவர் அவர்களுக்கு என்பதை எடுத்துக்காட்டத்தான் அதை நான் சொன்னேன். 849 கோடி வருமானம் வந்த நேரத்திலே 18 கோடி ஒதுக்கப்பட்டது. 563 கோடியாக இருக்கிறபோது 19 கோடி ஒதுக்கப்பட்டது என்றால் கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது என்று சொல்வார்களே, அதைப்போல, என்னுடைய தலைவர் உள்ளம் உயர்ந்தது என்பதை நான் எடுத்துக்காட்டுவதற்காகத் தான் சொன்னேன். எனவே எந்த விதத்திலும் ஆதிதிராவிடர் நலனைக் காப்பதில் இந்தியாவிற்கு முதல்வராக விளங்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, அவருடைய சாதனையை யாராலும் மிஞ்ச முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, ஆதிதிராவிட மக்களுடைய உள்ள உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய அளவிலே 'கற்பி, ஒன்றுசேர், போராடு' என்று சொன்ன, நாதியற்ற சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக முளைத்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே ரூ.4 கோடி வழங்கி ஒரு அற்புதமான மணிமண்டபம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இரத்தினங்கள் பதித்த உத்திரங்கள், அந்த உத்திரங்கள் அத்தனையும் சித்திரங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அந்த மணிமண்டபத்தைப் பார்க்கிற நேரத்திலே, பார்க்கின்றவர்கள் எல்லாம் பாராட்டிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மணிமண்டபத்தை அம்பேத்கருக்காக எடுத்துக்கொண்டு இருக்கக்கூடியவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள்.



தீண்டாமை ஒழிப்புத் திட்டத்திலே மனித நேய விழாவை ஒரு மகத்தான விழாவாக எடுத்த தலைவர் கலைஞர் அவர்கள் சமத்துவபுரத் திட்டமெனும் ஓர் அற்புதமான திட்டத்தை உருவாக்கி நாட்டுக்குத் தந்தார்கள்.

கடந்த காலத்திலே வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் என்ன குளறுபடிகள், என்ன குறைபாடுகள் என்பது நாட்டு மக்கள் அறிந்த ஒன்று. ஆனால் இங்கே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி பேசுகின்ற நேரத்திலே "வீட்டு அடி மனை வழங்குவதற்கு 10 ஆண்டு, 20 ஆண்டு என்று கால தாமதம் ஆகிறது. நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளிலே உறங்குகிறது" என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றவுடனே எந்த வழக்கும் தாமதமாகக் கூடாது என்பதற்காக, அதற்காகத் தனிச் சிறப்பு வழக்கறிஞர்களை நியமனம் செய்து, எந்த நீதிமன்றத்திலும் வழக்குகள் தாமதம் இல்லையென்ற சொல்லை நிலைநாட்டியிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, State Act தமிழ்நாடு அரசின் சார்பாக 78-ல் ஓர் ஆணை வெளியிட்டு அந்தச் சட்டத்தின் மூலமாக, நஞ்சையாக இருந்தாலும் சரி, புஞ்சையாக இருந்தாலும் சரி, எந்த நிலமாக இருந்தாலும் சரி, அதை ஆதிதிராவிட மக்களுக்காக எடுத்திட வேண்டும் என்பதில் அக்கறையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதை எதிர்த்து வழக்குமன்றம் செல்ல முடியாத அளவிற்கு சட்டத்தைப் போட்டிருக்கின்றார்கள் என்பதையும் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3-05

தொகுப்பு வீடுகள். அதைப்போலத் தொகுப்பு வீடுகள் கட்டுவதிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிகமான பணத்தை அள்ளித் தந்து கொண்டிருக்கின்றார்கள்.

நான் என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னாலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறைக்கு ஏராளமான சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பது நாட்டு மக்கள் அறிந்திருக்கின்ற ஒன்றாகும் என்பதையும் நான் பெருமையோடு கூறிக்கொண்டு, இந்தத் துறையின் சார்பாக, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்திலே மாண்புமிகு நம் தலைவர் முதல்வர் அவர்கள் வைர விழாவை நோக்கி வீறுநடை போடுகின்ற வேளையிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு சென்ற ஆண்டினைக் காட்டிலும் கூடுதலாக ரூ.117 கோடியினை வழங்கியிருக்கின்றார்கள். ஏன், தேவைக்கும் அதிகமான பணத்தை வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு சொல்கின்ற நேரத்திலே, காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கும் மக்களுக்கு என்றும் பால் நினைந்தூட்டும் தாயாய், ஆதிதிராவிட மக்களின் ஆதிபகவனாய்த் திகழும் கலைஞர் அவர்களை, அம்மக்களின் வாழ்விற்கும், வளத்திற்கும், நலத்திற்கும், அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் உன்னதத் தலைவரை, அகிலத்தில் பிறந்திட்ட அண்ணல் அம்பேத்கரின் புதிய வரைபடமாகவே, வார்ப்படமாகவே, மறுபிறவியாகவே, இரண்டாவது அம்பேத்கராகவே ஆதிதிராவிட மக்கள் கருதி மகிழ்கிறார்கள் என்பதையும் என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணலின் அவதாரமே, ஆதிதிராவிட மக்களின் ஆதாரமே, பழங்குடியின மக்களின் புதையலே என்றெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். நான் பாராட்டவில்லை, அந்த அளவிற்குப் பழங்குடியின மக்களுக்காகத் தனி இயக்குநரகம் கண்டதற்காக அந்த மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்றும் வற்றாது வளம் கொழிக்கும் வரலாற்றுத் தமிழ்க் கடலாகவே இருக்கின்றார்கள். பகுத்தறிவுப் பெருங்கடலாகவே இருக்கின்றார்கள். தென்னகத்தின் திருவிளக்கே, திராவிடத்தின் மணிவிளக்கே, தமிழினத்தின் குலவிளக்கே, ஏன் ஆயிரம் விளக்கினையும் இந்த அவைக்குத் தந்திட்ட அகல்விளக்காக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றோம், வணங்கக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இந்தியத் துணைக் கண்டத்தின் இதயத் துடிப்பே, நாடு போற்றும் நல்லவரே, நீங்கள் நீடு புகழோடும், நோயற்ற வாழ்வோடும், வாழ வேண்டும். இவ்வளவு கோடிகளை இன்று அள்ளித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை, நான் என்னுடைய துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்தி வணங்குகிறேன். "எகிப்தின் நன்கொடை நைல் நதி" என்று சொல்வார்கள். ஆதிதிராவிட நலத் துறைக்கு இவர் வழங்கிய, அற்புதமான திட்டங்களைப் பற்றி, நன்கொடைகளைப் பற்றி இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் முனைப்போடு செயல்படுத்துவதற்காக இதுநாள் வரையில் மூன்று சட்டப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இப்போது 11 சரகங்களாக மாற்றியமைக்கப்படுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பழங்குடியினர் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை விற்பதற்காக ஒரு விற்பனை மையம் ஊட்டியிலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் திறக்கப்படும்.

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் வருவாய்த் துறை மற்றும் ஊட்டியிலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மூலமாக ஒரு விசேடக் கணக்கெடுப்பு நடத்தி உண்மையான பழங்குடியினருக்கு நிரந்தர சாதிச் சான்று அடையாள அட்டை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின் கீழ் ரூ.62.6 கோடி செலவில் இவ்வாண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டத்திலுள்ள தாளவாடி, சத்தியமங்கலம் மற்றும் அந்தியூர் ஆகிய வட்டங்கள் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 1,524 குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ரூ.8.41 கோடி நிதியுதவியுடன் கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தாட்கோ மூலமாக 1,000 குழுக்களைக் கொண்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கும், 4,000 தனி நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்கள் துறையின் நலன் கருதி மாவட்ட தாட்கோ மேலாளர்களின்கீழ், இணைந்து பணிபுரியும் திட்டம் ஆய்வில் உள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வாழும் குடியிருப்புகள் உள்ள கிராமங்கள் தாட்கோ திட்டத்தின் மூலம் தத்தெடுத்துக்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சிகரமான ஒரு நல்ல திட்டத்தினை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு,

இம்மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தி, வாழ்த்துரைத்த வரிகளையும், அறிவுரைகளையும் மனமகிழ்வோடு ஏற்கிறேன் செயலாற்ற. அவற்றிற்கு என் பதிலாக இவ்வுரைகளை ஏற்றிடவும், இதனையே சட்டப் பேரவை நிகழ்ச்சியில் பதிவு செய்திடவும் வேண்டுகிறேன்.

நான் தந்த விளக்கத்தை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை மனமுவந்து விலக்கி, மானியக் கோரிக்கை எண் 30-ல் ரூபாய் 346,25,84,000/-க்கு மேற்படாத தொகையினை அரசிற்கு வழங்கிட வேண்டுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் துறை சார்பாக ஐந்தாவது தடவையாக மானியக் கோரிக்கையின் மீது பதில் அளிக்க நல்லதொரு வாய்ப்பை நல்கிய எங்களுடைய குடும்பத் தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையைத் தொடங்குகிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்த நாள் முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பு மக்களுக்கு எனத் தனியாக ஒரு துறை கிடையாது. தலைவர் கலைஞர் அவர்கள் இதைப் பார்த்து, கவனிப்பாரற்றுக் கிடந்த இச்சமுதாய மக்களைக் கை தூக்கிவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கென தனியாக ஒரு துறையை 1969 ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார்கள். 1971-72 ஆம் ஆண்டில் இதற்கென்று தனியாக மானியக் கோரிக்கையையும் தலைவர் கலைஞர் அவர்கள் கழக ஆட்சியில்தான் அறிவித்தார்கள். இதற்கு என்று தனியாக அமைச்சர் ஒருவரை நியமித்து இந்தச் சமுதாய மக்களுக்குப் பணியாற்ற வாய்ப்பளித்தார்கள்.

மேலும் 1989 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கும் தனியாக ஓர் இயக்குநரகத்தையும் உருவாக்கித் தந்தார்கள். அதே ஆண்டிலேயே தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்ற ஒரு துறையை உருவாக்கி, அதன் மூலமாக இந்தச் சமுதாய மக்களைக் கைதூக்கி விடுவதற்காகப்



பல்வேறு திட்டங்களைத் தீட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். மேலும் இந்தியா சுதந்திரம் அடைந்த நாள் முதல் இந்தத் துறைக்கு என்று 1969 ஆம் ஆண்டு வரையில், சில இலட்சங்களே ஒதுக்கப்பட்டு இருந்தன. தலைவர் கலைஞர் அவர்கள் 1969-70 ஆம் ஆண்டில் ஆட்சியில் இருக்கும்போது பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு என்று தனியாக ஒரு துறையை உருவாக்கி, அதன்மூலம் கோடிக்கணக்கில் நிதியை ஒதுக்கிச் சிறப்பாகச் செயல்படச் செய்தார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996 ஆம் ஆண்டுக்கு முன்பாக இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ.47.26 கோடியாக இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பிறகு ரூ.54.52 கோடியாகவும், 1997-98-ல் ரூ.64.32 கோடியாகவும், 1998-99-ல் ரூ.89.45 கோடியாகவும், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.150 கோடியாகவும், இந்த நிதியாண்டில் ரூ.175 கோடியாகவும் இந்தத் துறைக்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தந்தவர் ஆவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பாக, ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய அமைச்சர் அவர்களுடைய உரையையும் கேட்டிருப்பீர்கள். அந்தத் துறை 1969-ல் தான் பிறந்தது. குறுகிய காலத்தில் கிட்டத்தட்ட ரூ.175 கோடி அளவுக்கு நிதியை ஒதுக்கீடு செய்து அந்தச் சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கு பல திட்டங்களைத் தீட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தச் சமுதாய மக்களைக் கைதூக்கிவிடும் எண்ணத்தில் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், அதேபோல சமூக அமைப்பிலும் பொருளாதார மேம்பாட்டிலும் இந்தச் சமுதாய மக்களை மேலும் கை தூக்கிவிடவேண்டுமென்ற எண்ணத்தில் கலைஞர் அவர்கள் பல திட்டங்களை உருவாக்கி, கல்விக்கெனத் தனியாகக் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் அளவிற்கு நிதியைத் துறையின் மூலமாக ஒதுக்கீடு செய்து அதிகமான திட்டங்களை நிறைவேற்றியவர் கலைஞர் அவர்கள்தான்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மூலமாக இந்தச் சமுதாய மக்களைக் கைதூக்கிவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை உருவாக்கி அதன் மூலமாகக் கிட்டத்தட்ட 51,494 மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூ.9.63 கோடியிலிருந்து இன்றையதினம் ரூ.20.87 கோடியாக அந்த நிதியை ஒதுக்கீடு செய்து, பல திட்டங்களை அந்தச் சமுதாய மக்களுக்குத் தந்தவர் டாக்டர்

கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்தக் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மூலமாக மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் சீர்மரபின மக்களின் கல்வி வளர்ச்சிக்காகக் கிட்டத்தட்ட 265 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 198 ஆரம்பப் பள்ளிகள், 29 நடுநிலைப் பள்ளிகள், 23 உயர்நிலைப் பள்ளிகள், 15 மேல்நிலைப் பள்ளிகள் என்று அவை இயங்கி வருகின்றன. அவற்றில் கல்வி நிலையை மேம்படுத்த கழக ஆட்சியில் 1996-க்குப் பின்னர் 137 விடுதிகள் இந்தத் துறை மூலம் தொடங்கப்பட்டு, மொத்தத்தில் 972 விடுதிகள் இப்போது இயங்கி வருகின்றன. அவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 537 விடுதிகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 435 விடுதிகளும் இயங்கி வருகின்றன. அவற்றில் 55,271 மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயில்கிறார்கள். 972 விடுதிகளில் 193 விடுதிகள் மட்டுமே சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. தலைவர் கலைஞர் அவர்கள், 1996-க்குப் பிறகு 37 விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். அந்தப் புதியக் கட்டடங்கள் கடந்த காலத்தில் கட்டப்பட்டதைவிட கழக ஆட்சிக் காலத்தில் புதிய விடுதிகள் நவீன வசதிகளுடன், அதிகமான நிதியை ஒதுக்கியதன் மூலமாகக் கட்டப்பட்டுள்ளன. மாணவர் விடுதி ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன கட்டடமாகக் கட்டப்பட்டுள்ளது. மாணவியர் விடுதி ரூ.33 இலட்சத்தில் கட்டப்பட்டு நவீன வசதிகளுடன் இப்போது மாணவியர்கள் தங்கிப் படிக்கிறார்கள்.

பிற்பகல் 3-15

திரு. கருப்பசாமி அவர்கள், மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் குறைந்த அளவில் வழங்கப்படுவதாக இங்கே புகார் கூறினார்கள். அவர்களுடைய அம்மையார் ஆட்சிக் காலத்தில், ஒரு மாணவருக்கு வழங்கிய தொகை ரூ.135 ஆகும். ஆனால், தலைவர் கலைஞர் 1996-ல் பொறுப்பேற்ற பிறகு ரூ.135-லிருந்து இப்போது உணவுக் கட்டணத்தை ரூ.225 ஆக உயர்த்தியுள்ளார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது பள்ளி மாணவர் விடுதிகளுக்கு. கல்லூரி மாணவர்களுக்கு, கிராமப்புறங்களில் இருக்கின்ற கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு ரூ. 193-லிருந்து, இப்போது 400 ரூபாயாக உயர்த்தியவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மூலமாக இலவசச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கும், விடுதிகளில் தங்கிப் பயிலும் 10-வது



வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இது கடந்த காலத்தில் தீபாவளி, பொங்கல் திருநாளில் வழங்கப்பட்டன. ஆனால், கலைஞர் அவர்கள் இந்தப் பள்ளி விடுதிகள் என்றைக்குத் திறக்கப்படுகின்றனவோ அன்றையதினமே இந்த இரண்டு செட் சட்டைகளையும், துணிகளையும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 44,950 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகிறார்கள். கடந்த ஆண்டு இதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.133.04 இலட்சமாகும். நடப்பு ஆண்டில் இது 143.63 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இந்தத் துறையின் மூலமாகக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ.25,000-க்குள் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இந்தத் துறையின்கீழ் வரும் விடுதிகளில், 4 முதல் 8 ஆம் வகுப்பு வரை தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. மேலும், மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் கல்வி நிலையங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு மிகைப்படாத மற்றும் பட்டதாரி அல்லாத குடும்பத்தைச் சார்ந்த 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில மொழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்குக் கல்விக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. ஆனால், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி கல்விக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.577.86 இலட்சமாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் ரூ.683.97 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, பள்ளி மேல் படிப்பு உதவிகளும் இந்தத் துறையின் மூலமாக வழங்கப்படுகின்றன. படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் உதவித் தொகைகளாக வழங்கப்படுகின்றன.

பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு வரை ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இதே வருமான வரம்பிற்குட்பட்டு கல்விக் கட்டணம் திருப்பி வழங்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஆங்கிலவழிக் கல்வி பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் எவ்விதமான நிபந்தனையுமின்றிக் கல்விக் கட்டணச் சலுகையைப் பெறலாம். கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.689.24 இலட்சமாக இருந்தது. நடப்பு நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ.812.44 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

கல்விக்கென ஊக்கப் பரிசுகள் நல்ல கல்வியைப் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் பிளஸ் 2 வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின் ரூ.3000-ம், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரெனில் ரூ.5000-ம் பரிசாக வழங்கப்படுகின்றது.

மாநில அளவில் 10 ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவருக்கும் ஒரு மாணவிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருப்பின் ரூ.1500-ம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின் ரூ.3000-ம் வழங்கப்படுகின்றது. இதேபோன்று மாவட்ட அளவில் முதலிடம் பெறுகின்ற பிளஸ் 2 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.1.78 இலட்சமாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் ரூ.2.13 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பிளஸ் 2 வகுப்புத் தேர்வில் முதலிடம், இரண்டாவது இடம் பெற்று தொழில் பட்டப் படிப்பில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவியர் இருவர், மாணவர்கள் இருவர் ஆக, நால்வருக்கும் தலா ரூ.3000 வீதம் 4 ஆண்டுகட்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.



அதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்புத் தேர்வில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று, தொடர்ந்து தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.20.22 இலட்சமாகும். நடப்பு நிதியாண்டிலோ ரூ.23.66 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமப்புறங்களிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கென அனைத்து மாவட்டங்களிலும் 72 மையங்கள் மூலமாக ஒவ்வோர் ஆண்டும் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளுக்காகச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி அரசு மேனிலைப் பள்ளிகள், அரசு உதவிபெறும் மேனிலைப் பள்ளிகளில் 15 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது. நிதி ஒதுக்கீடு ரூ.0.94 இலட்சமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர், மாணவியர்கள் I.A.S., I.P.S. போன்ற பணிகளுக்கு நடைபெறும் தேர்வில் வெற்றி பெறுவதற்காக இத்துறையினரால் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

இப்பயிற்சியானது மதுரையில் 75 நபர்கட்கு முதன்மைத் தேர்விற்கும், சென்னையில் 100 நபர்கட்கு முதன்மை மற்றும் இறுதித் தேர்வுக்கும் அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்கியுள்ளவர்களுக்கு உணவுக் கட்டணமாக மாதம் ரூ.500/- வழங்கப்படுகிறது.

மேலும் சிறப்பாகச் செயல்படவேண்டுமென்ற நோக்கில் இப்பயிற்சி நிலையமானது 1999-2000 ஆண்டு முதல் அண்ணா மேலாண்மை நிலையத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு ரூ.45.20 இலட்சமாகச் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சமுதாய மக்களை மேலும் கைதூக்கிவிடும் வகையில், பொருளாதாரத் திட்டங்கள் மூலமாக, வேலைவாய்ப்புப் பெறுகின்ற திட்டங்கள் மூலமாகப் பல்வேறு பயிற்சிகள் இங்கே வழங்கப்படுகின்றன. வேலைவாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டங்கள் மூலமாகப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதில் மற்றவர்களுடன் போட்டியிடத் தகுதி பெறவும், வேலைவாய்ப்பினைப் பெறவும் இத்துறையில் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்கள் உதவுகின்றன.

இப்போது வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில், முன்னேறிய சமுதாய மாணவர்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், இந்தச் சமுதாய மாணவர்களையும் உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கணினிப் பயிற்சியை முதன்முதலாக டாக்டர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக 1,500 பட்டதாரிகள் Computer பயிற்சி பெறுகிறார்கள் என்பதை நான் மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல இந்த ஆண்டு 5,000 நபர்களுக்குத் தகவல் தொழில் நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் பயிற்சியளிக்கும் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல, 150 பிற்படுத்தப்பட்டோர், 100 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என 250 நபர்களுக்கு மட்டும் இலவசமாகக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. 1997-98-ல் தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஆண்டுதோறும் 2,000 நபர்களுக்கு சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் மூலமாக இப்பயிற்சி 3 மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-25

900 நபர்களுக்கு 6 மாத காலம் தட்டச்சுப் பயிற்சியும் நடைபெறுகிறது. 300 நபர்களுக்கு 12 மாத காலம் சுருக்கெழுத்துப் பயிற்சியும், 200 நபர்களுக்கு ஒரு மாத காலம் தொலைபேசி இயக்கும் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

கழக ஆட்சிக் காலத்தில் புதிய புதிய பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 50 நபர்களுக்கு 12 மாத காலம் தானியங்கிப் பொறியியல் பயிற்சியும், 100 நபர்களுக்கு 6 மாத காலம் குளிர்சாதனப் பெட்டி பழுதுபார்க்கும் பயிற்சியும், 20 மகளிருக்கு 6 மாத காலம் அலங்கார ஆடை வடிவமைப்புப் பயிற்சியும், 20 மகளிருக்கு 8 மாத காலம் ஆடை தயாரிப்புப் பயிற்சியும், 20 மகளிருக்கு 8 மாத காலம் கணினியில் அலங்கார ஆடை வடிவமைப்புப் பயிற்சியும், 250 மகளிருக்கு 12 மாத கால துணைச் செவிலியர் பயிற்சியும், 25 நபர்களுக்கு 6 மாத கால பிளாஸ்டிக்



செயல்முறை இயந்திரம் இயக்குதல் பயிற்சியும், 130 நபர்களுக்கு 6 மாத கால தோல் பொருட்கள் தயாரிக்க குறுகிய காலப் பயிற்சியும், 92 நபர்களுக்கு 15 மாத கால தோல் பொருட்கள் தயாரிக்கும் நீண்டகாலப் பயிற்சியும், 90 நபர்களுக்கு 2 மாத கால தையல் இயந்திரம் இயக்கும் பயிற்சியும், 200 நபர்களுக்கு 6 மாத காலம் அலுவலகச் செயலாளர் பயிற்சியும் இத் துறையில் அளிக்கப்படுகிறது. அனைத்துப் பயிற்சிகளுக்காகவும், 2000-2001 ஆம் நிதியாண்டிற்கு ரூ.20.38 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக 10,897 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள் என்பதை நான் மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம் பயின்ற 20 பட்டதாரிகளுக்கு 3 ஆண்டுகள் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு மாதம் ரூ.750 பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. பயிற்சி அளிக்கும் மூத்த வழக்கறிஞர்களுக்கு வருடத்திற்கு ரூ.5,000 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. இதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.4.70 இலட்சமாக கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோருக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கப்படுகின்றன. கழக ஆட்சியில் ஆண்டுதோறும், 4,000 சலவைப் பெட்டிகள் என்பது 6,000 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 500 கல்லுடைக்கும் கருவிகள் என்பது 2,000 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 500 முடிதிருத்தும் கருவிகள் என்பது 2,000 ஆகவும் (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தி வழங்கப்படுகின்றன. மேலும், 200 முடிதிருத்தகங்கள், 150 சலவை நிலையங்கள், 50 நடமாடும் சலவை நிலையங்கள் அமைக்கவும் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்கென நிதி ஒதுக்கீடு ரூ.64.46 இலட்சமாகும்.

இலவச வீட்டுமனைப் பட்டா இத்துறையின் மூலமாக வழங்கப்படுகிறது. இத்துறையில் வீடற்ற ஏழை எளிய மக்கள் வீடுகள் கட்டிக்கொள்ள ஏதுவாக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர்களுக்கு மட்டும் இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. 1997-98-ல் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கும் பிற்படுத்தப்பட்ட முன்னேறிய பிரிவினருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென 1995-96-ல் ரூ.1 கோடியாகவும்,

1996-97-ல் ரூ.2 கோடியாகவும், 1997-98-ல் ரூ.18 கோடியாகவும் உயர்த்தப்பட்டது. நடப்பு நிதியாண்டிற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ.14 கோடியாகவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ.5 கோடியாகவும், முன்னேறிய வகுப்பினருக்கு ரூ.3 கோடியாகவும் ஆகமொத்தம் ரூ.22 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞர் ஆட்சியில் 1996-97-ல் 4,300 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1997-98-ல் 44,729 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1998-99-ல் 34,832 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1999-2000-ல் 37,812 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆகமொத்தம் 4 ஆண்டு கால ஆட்சியில் 1,21,673 (மேசையைத் தட்டும் ஒலி) பயனாளிகளுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் — இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற வகையில் — தங்களுடைய தொகுதியில் இத் திட்டத்தைப் பயன்படுத்தி, ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, முன்னேறிய சமுதாய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா பெற்றுத் தருவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள், இதற்குத் தனி வட்டாட்சியர் இல்லையென்று கூறினார்கள். திரு. நாசர் அவர்களும் சொன்னார்கள். கடந்த ஆண்டு 7 வட்டாட்சியர்களை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அம்மாவட்டங்கள் தவிர, இப் பணியிடம் இதர அனைத்து மாவட்டங்களிலும் நிரப்பப்படவில்லை. வருகின்ற ஆண்டுகளில் அனைத்து மாவட்டங்களுக்கும் வட்டாட்சியர் பதவி வழங்குவதாக அறிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக இவ்வகுப்பு மக்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. இக்கழகம், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், கூட்டுறவு வங்கிகள் ஆகியவை மூலமாகக் கடனுதவிகள் வழங்குகிறது.



பிற்பகல் 3-30

இதுவரையில் 33,511 பயனாளிகளுக்கு ரூபாய் 2,313.65 இலட்சம், அதாவது சுமார் 23.14 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1999-2000-ல் மட்டும் 1,635 பயனாளிகளுக்கு ரூ.4.77 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்கு ரூ.5.99 கோடி கடன் தொகை வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு புதிய அறிவிப்புகளை இங்கே வழங்கியுள்ளார்கள். அவற்றினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

முதலாவதாக, படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயனடைய தற்போதுள்ள பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.25 ஆயிரமாக இருப்பது, ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு, 1,10,000 மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்று நான் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக அரசுக்குக் கூடுதல் செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3.25 கோடி ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது திட்டம், ஆதிதிராவிட மக்களுக்கு தருகின்றாற்போல், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினர் ஒருவர் இயற்கை எய்தும்போது, இறுதிச்சடங்குச் செலவிற்காக அவர் குடும்பத்திற்கு ரூபாய் 500 வழங்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை நான் மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஆதிதிராவிடர் நலத் துறையில் மட்டும்தான் இருந்தது. அதேபோல, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களும் பயன்பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள் என்பதை நான் மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவர்களுக்குத்

தற்போது வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணம், மாணவர் ஒருவருக்கு உணவுத் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தொழில் கல்வி பயிலுகின்ற மாணவருக்கு ரூபாய் 80-லிருந்து ரூபாய் 140 ஆக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பட்டயப் படிப்பு படிக்கின்ற மாணவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 60-லிருந்து ரூபாய் 90 ஆக உயர்த்தப்படுகிறது. அறிவியல், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலுகின்ற மாணவர்களுக்கு ரூபாய் 70-லிருந்து ரூபாய் 90-ஆக உயர்த்தப்படுகிறது. பிளஸ் 2 மற்றும் இளங்கலைப் பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவருக்கு ரூபாய் 60-லிருந்து ரூபாய் 80-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்காவதாக, பள்ளியிறுதி வகுப்பு, அதாவது பிளஸ் 2 தேர்வில் அதிகமான மதிப்பெண் பெறுகின்ற மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த முதல் 500 மாணவர்களுக்கும் 500 மாணவிகளுக்கும் நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,500 வீதம் ஐந்தாண்டுகளுக்கோ அல்லது அவர்கள் முதல் பட்டப் படிப்பு முடிக்கும் வரையிலோ பரிசுத் தொகைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ரூபாய் 15 இலட்சம் கூடுதல் செலவாகும்.

ஐந்தாவதாக, ஏழை சலவைத் தொழிலாளிகளுக்கு ஆண்டுதோறும் இலவசமாக 4,000 துணி தேய்ப்புப் பெட்டிகள் ரூபாய் 50 இலட்சம் செலவில், வழங்கப்பட்டன. இப்போது கூடுதலாக 4,000 — ஆக இந்த ஆண்டு 8,000 துணி தேய்ப்புப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-35

இந்தச் சமுதாய மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன், உணவாக்கம், உணவு மற்றும் குளிர்பானம் தயாரிப்பு, விடுதிப் பராமரிப்பு, விடுதி வரவேற்பு அலுவல், பேக்கரி மற்றும் கன்பெக்ஷனரி (Bakery and Confectionery) ஆகியவற்றில் 250 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு ரூ.28.40 இலட்சம் செலவில் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



ரூ.65 இலட்சம் செலவில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிகளையும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களையும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ரூ.25 இலட்சம் செலவில் 50 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

ரூ.5 இலட்சம் செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குத் தளவாடச் சாமான்கள் வழங்கப்படுகின்றன.

ரூ.13.20 இலட்சம் செலவில் 10 மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளுக்கும், 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

ரூ.36.30 இலட்சம் செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 10 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படுகின்றன.

ரூ.21.72 இலட்சம் செலவில் 12 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும்.

ரூ.11.71 இலட்சம் செலவில் 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மாணவியர்கட்குக் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன.

ரூ.5 இலட்சம் செலவில் 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

ரூ.11.08 இலட்சம் செலவில் 60 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பினருக்கு பிளாஸ்டிக் உற்பத்தித் தொழில்நுட்பவியலில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ரூ.5.40 இலட்சம் செலவில் 20 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு மருத்துவ சோதனைக்கூடத் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்ககத்திற்கு ரூ.42 ஆயிரம் செலவில் ஒரு நிகரி (FAX) இயந்திரம் வழங்கப்பட இருக்கின்றது.

தமிழ்நாடு ஹஜ் குழு அலுவலகத்திற்கு ரூ.70 ஆயிரம் செலவில் Internet வசதியுடன் கணினி அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை தொடர்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும் கருத்துகளுக்கும் ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் என்று கருதுகிறேன்.

வெட்டுத் தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இம்மானியக் கோரிக்கையை ஏற்று முழுமையாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (ஆ) கோரிக்கை எண் 30 — பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.346,25,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(அ) கோரிக்கை என் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 31—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இலலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

*பிற்பகல் 3-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.156,32,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-5-2000) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-40 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

162. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வருவாய்த் துறையின் 8-6-1999 ஆம் நாளிட்ட 288 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

238. அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)



239. மானியக் கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

240. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

241. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறுவெளியீடு, 2000-2001. (தமிழ்).

242. மானியக் கோரிக்கை எண் 30 - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

243. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

244. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறுவெளியீடு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

245. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து எட்டாவது அறிக்கை, (1999-2000).

246. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை, (1999-2000).

247. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபதாவது அறிக்கை, (1999-2000).

248. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஒன்றாவது அறிக்கை, (1999-2000).

249. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து இரண்டாவது அறிக்கை, (1999-2000).

250. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து மூன்றாவது அறிக்கை, (1999-2000).

[2000 மே 11

251. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து நான்காவது அறிக்கை, (1999-2000).

252. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை, (1999-2000).

253. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஆறாவது அறிக்கை (1999-2000).

254. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை (1999-2000).

255. மனுக்கள் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை (1999-2000).

256. மனுக்கள் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை (1999-2000).

257. மனுக்கள் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை (1999-2000).

258. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

259. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).



# இணைப்பு I

*(165 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**கோரிக்கை எண் 31**

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்,**

**மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2000-2001**

*சாதி பேதநிலை உள்ள நாட்டில் கல்வி, பொதுவாழ்வில் அந்தஸ்து, பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் அவரவர்களுக்கு அளவு விகிதம் இல்லாவிட்டால் பகை, குரோதம், மோசடி முயற்சியோடுதான் வாழ நேரிடும்.*

—தந்தை பெரியார்

**அ. முகவுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலனுக்கென எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழகம், ஏனைய அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டிடும் முன்னணிப் பெருமை கொண்டுள்ளது. இப்பிரிவினரின் சமூக முன்னேற்றத்தை உறுதிசெய்திட, பொருளாதாரம் மற்றும் கல்வி நிலையில் இவர்கள் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். எனவே, இப்பிரிவினரின் கல்வி வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றின்மீது சிறப்புக் கவனம் செலுத்தி அவர்களுக்கென நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் இவ்வரசு முன்னுரிமையோடு செயல்பட்டு வருகிறது. தேவையான நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி இந்த நலிந்த பிரிவினர், சமூக மற்றும் பொருளாதார நிலையில் ஏனைய பிரிவினருடன் இணைந்து வாழ்ந்திட அனைத்து நடவடிக்கைகளும் விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றன. இதுநாள்வரை கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி மறுக்கப்பட்டு வந்த இப்பிரிவினரின் உண்மையான சமூக வளர்ச்சியின் மூலமே சமுதாய நல்லிணக்கத்தை உருவாக்கிட முடியும்.

[2000 மே 11

## ஆ. கொள்கை

### (அ) இட ஒதுக்கீடு

2. இந்தியத் திருநாட்டில் பல்லாண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் ஒரு சில மாநிலங்களில் தமிழகம் தலைமையிடம் வகிக்கிறது. அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களில் அனுமதியிலும் இட ஒதுக்கீட்டுக்கான முன்னோடி இயக்கம் தமிழ்நாட்டில்தான் தோன்றியது. இதன் வாயிலாக இப் பிரிவினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இட ஒதுக்கீட்டு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப, படிப்படியாகத் தொடர்ந்து அதிகரித்துத் தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. அரசு கொள்கையின்படி, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடும், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடும் இட ஒதுக்கீடு நிர்ணயிக்கப்படுகிறது. மண்டல் குழு வழக்கு என்று அழைக்கப்படும் இந்திரா சஹானி வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஒட்டுமொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கக் கூடாது. இந்தத் தடையை நீக்கும் வகையில் மாநிலத்தில் வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வழிவகை செய்ய அரசு, தமிழநாடு 1994 ஆம் ஆண்டு 45 ஆம் சட்டத்தை இயற்றியுள்ளது. அச் சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9 ஆம் விவர அட்டவணையிலும் சேர்க்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் செல்திறனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட சட்டத்தின் செல்திறனை நிலை நிறுத்தவும், அதன் மூலம் இம் மாநிலத்தில் தற்போதுள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாக்கவும் வேண்டிய பயனுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் ஒடுக்கப்பட்ட இப் பிரிவினரின் தொகை எத்தனை விழுக்காடாக இருக்கின்றதோ அதற்கு ஏற்றபடி இட ஒதுக்கீட்டின் அளவும் அமைய வேண்டும் என்பதே இவ் வரசின் உறுதியான முடிவாகும். வெவ்வேறு பிரிவினரை உள்ளடக்கிய ஒடுக்கப்பட்ட இம் மக்களுக்கு இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயம் செய்வதில் வேறு சில சமூக அளவுகோல்கள் மற்றும் வரலாற்று உண்மைகளும் அடிப்படையாக



2000 மே 11]

அமைகின்றன. இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவதால் இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தந்த மாநில அரசின் முடிவிற்குவிடப்பட வேண்டும். இதற்கு வழிவகை செய்திட அரசியலமைப்புச் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவர மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள்.

### (ஆ) கல்வி

3. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட இப் பிரிவினரின் ஒட்டுமொத்த முன்னற்றத்திற்கு கல்வி சிறந்த வழியாகும். இப் பிரிவினரின் கல்வி அறிவினை வளர்க்கவும், அவர்களது கல்வித் தரத்தினை, குறிப்பாக இப் பிரிவினைச் சார்ந்த பெண்களின் கல்வி அறிவினைப் பெருக்கவும், இவ் வரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இப் பிரிவினரின் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ரூ.79 கோடியில் இருந்து ரூ.122 கோடியாக உயர்த்தப்படுகிறது.

### (இ) பொருளாதார நிலை உயர்த்துதலும், வேலைவாய்ப்பும்

4. கல்வி மற்றும் சமூக நிலையில் இப் பிரிவு மக்களின் பின்தங்கிய நிலைக்கு வறுமையே அடிப்படைக் காரணமாகும். வளர்ந்து வரும் நாடுகளில் வேலையின்மையே பெருமளவிலான வறிய நிலைக்கு நேரடி தொடர்புடையதாக அமைகிறது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் போதுமான வேலைவாய்ப்பு இல்லாத பின்னணியில் சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் தலையாய கடமை அரசுக்கு உள்ளது. வேலைவாய்ப்பை வழங்குதல் மற்றும் சுய வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் இடையே உள்ள நுணுக்க இடைவெளியை உந்து சக்தியாக கொண்டுதான் இவ் வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினருக்கான கொள்கைகளை வகுக்கிறது. வறுமை, வேலையில்லாமை ஆகியவற்றை நீக்குவதற்கு வாழ்க்கைக் கல்வி, தொழிற்பயிற்சிகள் பெரிதும் உதவும் என்பதை அனுபவத்தினால் அறிகிறோம். எனவே, முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், போயர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்கியும், முடிதிருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம் ஆகியவற்றை அமைப்பதற்காக உதவித் தொகை மற்றும் நிதி உதவி அளித்தும், பல்வேறு வேலைவாய்ப்புப் பயிற்சிகளை வழங்கியும் அவர்களுக்குச் சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை வகுப்பதில் இவ் வரசு தனிக்கவனம் எடுத்துக்கொண்டுள்ளது.

[2000 மே 11

எதிர்வரும் ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பம் பெரும் அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் என்ற உண்மையை உணர்ந்து, தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1999-2000 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, இப் பிரிவினைச் சேர்ந்த 5000 பேருக்கு தகவல் தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதற்கான நிறுவனங்கள் மற்றும் பயிற்சியாளர்களை தேர்வு செய்யும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (எல்காட்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புச் சந்தையில் மற்றவர்களுடன் போட்டியிட்டு வேலைவாய்ப்பினைப் பெறுவதில் இப் பிரிவினரின் திறமையை உயர்த்துவதற்கு இத்தகைய நடவடிக்கைகள் உதவியாக அமையும்.

### (ஈ) வீட்டு வசதி

5. முன்னுரிமையுடன் கவனிக்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் என கண்டறியப்பட்டுள்ள இனங்களில், தங்குவதற்கு இடமின்றி உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதும் ஒன்றாகும். வீடற்றவர்களில் பெரும்பான்மையினர் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தை சார்ந்தவர்களாய் இருந்ததனால் வீட்டுமனை வழங்கும் திட்டத்தினை இத்துறை மேற்கொண்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோரில், குறிப்பாக (1) முடிதிருத்துவோர், (2) சலவைத் தொழிலாளர் (3) போயர் (4) நரிக்குறவர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த நிலமற்ற குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தை அரசு 1981-82 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் இத் திட்டம், 1990-91 ஆம் ஆண்டு முதல் இவ் வரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சமுதாய நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்குடன் அனைவரும் ஒன்றாக வாழ்ந்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1997-98 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட உரையில், ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் முற்பட்ட வகுப்பினருக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

### (உ) சிறுபான்மையினர் நலம்

6. தமிழகத்தில் முகமதியர், கிறித்துவர், சீக்கியர், புத்தமதத்தினர் மற்றும் பார்சி சமயத்தைச் சார்ந்தவர்கள் சிறுபான்மை வகுப்பினராக



2000 மே 11]

அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். சமய மற்றும் மொழி வகையில் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு மாநிலத்தில் சிறுபான்மையினர் நல ஆணையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சிறுபான்மையினர், மாநிலத்தின் பெரும்பான்மையினரின் சமுதாய பண்பாடு மற்றும் நெறிமுறை ஆகியவற்றில் தாங்களும் ஒருங்கிணைந்த அங்கம் என உணரச் செய்யும் வகையில் சிறுபான்மையினருக்கான நலத் திட்டங்களை வகுத்து செயலாக்குவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சிறுபான்மையினருக்கான நலத் திட்டங்களை செம்மையாக செயலாக்கம் செய்யும் நோக்குடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) 1-7-1999 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

## இ. திட்டங்கள்

### 1. கல்வி

### கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

7. சீர்மரபினருக்கான, குறிப்பாக பிரமலைக் கள்ளர்களுக்கான சீரமைப்புத் திட்டங்கள் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே செயலாக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவினரின் கல்வித் தரம், ஏனைய சமுதாயத்தினரின் கல்வித் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. சமுதாயத்தில் சீர்மரபினர், மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கு இப்பிரிவினரின் கல்வி வளர்ச்சியின்மையே அடிப்படை காரணமாகும். பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் அவர்களது கல்வித் தரத்தைத் திறம்பட மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக் கள்ளர் அதிகமாக வாழும் இடங்களான மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இத்துறையின் மூலம் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1999-2000 கல்வி ஆண்டில் இப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 51,494 ஆகும்.

8. இப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு தேவையான திட்டங்களை உடன்செயல்படுத்த அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பள்ளிகளின் நிலை உயர்த்துதல்,

கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருதல், ஆய்வகங்கள் மற்றும் மாணவியர்களுக்கு கழிப்பறைகள் கட்டுதல், ஆய்வுக்கூட உபகரணங்களை வழங்குதல், மின் இணைப்புகள் அளித்தல், குடிநீர் வசதிகள் செய்து தருதல் ஆகியவைகள் இத்திட்டங்களில் அடங்கும்.

9. 1999-2000 ஆம் ஆண்டில் 10 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக, ரூ.51.45 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டன. அதேபோன்று 1999-2000 ஆம் ஆண்டில் பின்வரும் வசதிகளும் செய்துதரப்பட்டுள்ளன:

(அ) ரூ.9.00 இலட்சம் செலவில் 15 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.

(ஆ) ரூ.5.00 இலட்சம் செலவில் 20 பள்ளிகளுக்கு மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.

(இ) ரூ.10.65 இலட்சம் மதிப்பீட்டில் 20 பள்ளிகளில் மாணவியர்களுக்காக கழிப்பறைகள் கட்டித்தரப்பட்டன.

அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும் கணினிப் பாடத்திட்டம் அமலாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 15 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளில் 1999-2000 ஆம் ஆண்டில் 6 பள்ளிகளில் கணினிப் பாடத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

10. அனைத்து நிலைகளிலும் பின்தங்கியுள்ள பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சிறந்த கல்வி அறிவை அளிப்பதற்கு ஏதுவாக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கென 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.2087.18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக 2000-2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் "புதிய திட்டங்கள்" என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.



**பாடப்புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல்**

11. சீர்மரபினர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காகவும், உதவித் தொகை அளிப்பதற்காகவும் செயற்படுத்தப்படும் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எழுதுபலகைகளும், 10-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு குறிப்பேடுகளும், பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.35.83 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சீருடை வழங்கல்**

12. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் ஒவ்வோராண்டும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 21,120 மாணவ/மாணவியரும், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 20,050 மாணவ/மாணவியரும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைச சேர்ந்த 44,950 மாணவ, மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு தற்காலிக நிதி ஒதுக்கீடாக ரூ.143.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**படிப்புதவித் தொகை**

13. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000/- என்ற வரம்பிற்குட்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பல்வேறு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

14. பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர்களுக்கு, அனைத்துப் பாடப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இத்துறையின் விடுதிகளில் தங்கி நான்கு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட,

[2000 மே 11

மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

15. சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இப்புத்தகங்கள் அனைத்தும் பெற்றோர் ஆண்டு ரூ.25,000-க்கு மிகைப்படாத மாணவ/மாணவியர்களுக்கு வருமானம் பாடநூல் கழகத்தின் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு மாணவர்கள் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் மேலும், நிலையங்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. 10 ஆம் வகுப்பு கல்வி தேர்வுக்கு செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் பொதுத் சார்பில் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகின்றது. மாணவர்கள் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு மிகைப்படாத பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த, ஆங்கிலமொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்கும், எந்த நிபந்தனையும் இன்றி அனைத்து மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியர்களுக்கும் கல்விக் கட்டணமும் ஈடு செய்யப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்கள் இச்சலுகைகளுக்கு தகுதியுடையவராவர். இத்திட்டத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.683.97 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை**

16. ஆரம்பப் பள்ளி அளவிலேயே கல்வியை இடையில் கைவிடுவதற்கு கிராமங்களில் நிலவும் வறுமையே அடிப்படைக் காரணமாகும். மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவியர்களிடையே இந்நிலை அதிகமாகக் காணப்படுகிறது. வறுமையின் காரணமாக கல்வியை தொடர்ந்து பயிலாமல் இடையில் நிறுத்திவிட்டு செல்லும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர்கள் எண்ணிக்கையைக் குறைத்து அவர்கள் நடுநிலைப் பள்ளி வரை தொடர்ந்து பயின்றிட ஊக்குவிப்பதற்கென ஒரு புதிய திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.500 ஊக்கத் தொகையும், 6 ஆம் வகுப்பு பயிலும் 30,000 மாணவியருக்கு மாதமொன்றிற்கு ரூ. 100 வீதம் ஓர் ஆண்டில் பத்து மாதத்திற்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும். இத்திட்டத்திற்கென 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,200.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



2000 மே 11]

**பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

17. பள்ளிகளில் +2 வகுப்பு முதல், கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி பட்டப் படிப்பு வரையில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்காக பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு மிகைப்படாத மாணவ/மாணவியர்களுக்கு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவைகளில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையுமாக உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

18. மேனிலைப் பள்ளியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், அவர்களது கல்விக் கட்டணத்தை திரும்பப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு உட்பட்டிருக்க வேண்டும். அவர்களுடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஆங்கிலம் வழி கற்கும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்கள் நிபந்தனைகள் ஏதுமின்றி மேற்கூறிய சலுகைகளை அடையலாம். கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி உணவு மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மெட்ரிக் படிப்புக்குப் பிந்தைய படிப்புக்குரிய படிப்புதவித் தொகை வழங்குவதற்காக, 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.812.44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இலவசக் கல்வி**

19. பத்தாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தை கணக்கில்கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தமட்டில், (அ) அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு மேல் இருக்கக் கூடாது மற்றும் (ஆ) அவருடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, பத்தாம் வகுப்பிலிருந்து பட்டப் படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

[2000 மே 11

20. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளோடு, அக்குடும்பத்தில் அம்மாணவர் தொழிற்கல்வி பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் சட்டம் போன்ற தொழில் பட்டப் படிப்பு மற்றும் பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பட்டயப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

21. இந்த இலவசக் கல்வி திட்டங்களின்கீழ் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கு அரசு ஏற்பளித்துள்ளவாறு அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும் பொருந்தத்தக்க வீதங்களில் கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டண விலக்களிப்பினால், கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதி இழப்புத் தொகை, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைகள் மூலம் இக்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களின்கீழ், 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.1244.71 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பரிசுகள் வழங்குதல்

**(1) மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்:**

22. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000-மும், மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.5,000-ம் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.1,500-ம் மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000-மும் வழங்கப்படுகிறது.



2000 மே 11]

23. இதுபோலவே, மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்பட்டு வருகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.1,500-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.3,000-மும் வழங்கப்படுகின்றன.

24. பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராய் இருப்பின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ.500, ரூ.250 மற்றும் ரூ.150 வழங்கப்படுகின்றது. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராயிருப்பின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ.1,000 ரூ.500 மற்றும் ரூ.300 வழங்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.2.13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(2) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு:**

25. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3,000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

**(3) தந்தை பெரியார் நினைவுப் பரிசு:**

26. ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப் படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் உயரிய மதிப்பெண்கள் பெற்றுள்ள மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக 2000-2001 ஆம் ஆண்டிற்கென ரூ.23.66 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2000 மே 11

**மாணவரில்லங்கள்:**

27. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை 1998-99 வரையில் 967 மாணவரில்லங்களை நடத்தி வந்தது. 1999-2000 ஆம் ஆண்டில் புதிதாக 5 மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் கல்லூரி மாணவரில்லங்கள் தொடங்கப்பட்டன. இன்றைய நிலையில் 972 மாணவரில்லங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 537 மாணவரில்லங்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. எஞ்சியுள்ள 435 மாணவரில்லங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் மொத்தம் 55,271 மாணவ/மாணவியர்கள் மாணவரில்ல வசதிகளைப் பெற்றுள்ளனர். மாணவரில்லங்களில் சேர அனுமதிபெற, விண்ணப்பதாரரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்குட்பட்டு இருத்தல் வேண்டும். 972 மாணவரில்லங்களில், 193 மாணவரில்லங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்படுகின்றன. எஞ்சியுள்ள 779 மாணவரில்லங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அரசு இல்லங்களில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் போதுமான இட வசதியுடன் பொதுப்பணித் துறையினால் வடிவமைக்கப்பட்ட வரைபடங்களின்படி விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மாணவியர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியருக்கு பாதுகாப்பு அளித்திடும் நோக்கத்துடன் சுற்றுச்சுவர் மற்றும் காப்பாளினி குடியிருப்புடன் அமைந்த இல்லக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. விடுதிகளுக்கு குடிநீர் வசதி படிப்படியாக செய்து கொடுக்கப்பட்டு வருகிறது.

28. இந்த மாணவரில்லங்களுக்கு மாவு அரவை இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவரில்லங்களுக்கு மட்டும்) நூலகங்கள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மாணவரில்லங்களில் தங்கிப் படிப்பவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் வகையில், இந்த மாணவரில்லங்களுக்கு ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன. அரசு இல்லங்களில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை இலவச பாடப்புத்தகங்கள் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு மற்றும் +2 அரசு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ/மாணவியர்களின் தேர்ச்சி சதவிகிதத்தை உயர்த்த அவர்களுக்கு இலவசமாக பல்வேறு பாடமுறைகளுக்கான



2000 மே 11]

வழிகாட்டி நூல்களும் (கைடுகள்) வழங்கப்படுகின்றன. இந்த மாணவரில்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாணவரில்லத்திற்கும் மாணவரில்ல கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட உள்ள ஏனைய வசதிகள் பற்றிய விவரங்கள், இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் 'புதிய திட்டங்கள்' என்ற தலைப்பின்கீழ் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

**உணவுக் கட்டணங்கள் மற்றும் உணவு மானியங்கள்:**

29. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை நடத்தும் மாணவரில்லங்களில் தங்கிப் பயில்பவர்களுக்கு அரசு அனுமதிக்கும் வீதங்களில் உணவுக் கட்டணங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

கல்லூரி விடுதி மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை நபர் ஒருவருக்கு ரூ.400 ஆகவும், பள்ளி விடுதி மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை நபர் ஒருவருக்கு ரூ. 225 ஆகவும் வழங்கப்பட்டு வருகின்றது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு விடுதிகளைப் பராமரிக்க மொத்தம் ரூ. 3868.18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

30. ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகப் பராமரிக்கப்பட்டுவரும், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் விடுதிகள், இல்லங்கள் ஆகியவற்றிற்கு அவ்வில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் உறையுள் கட்டணம் தொடர்பான செலவுகளை ஏற்பதற்கு உணவு மானியம் என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, உணவு, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 150 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 39 தனியார் இல்லங்கள் உள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 2900 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.21.16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2. பொருளாதார மேம்பாடு:**

**கருவிகளை இலவசமாக வழங்குதல்:**

31. சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள பிரிவினருக்கு, குறிப்பாக, ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கும் குறைவாக உள்ள சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையிலும், சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கும் ஆண்டுதோறும் 4,000 பித்தளை தேய்ப்புப் பெட்டிகளும், 500 முடிதிருத்தும் கருவிகளும், 500 கல்லுடைக்கும் கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இருப்பினும், 1999-2000 ஆம் ஆண்டில் மேலும் கூடுதல் நபர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட துணி தேய்ப்புப் பெட்டிகளின் எண்ணிக்கை 4,000-லிருந்து 6,000 ஆகவும், முடிதிருத்துவோர் கைப்பெட்டிகள் எண்ணிக்கை 500-லிருந்து 2000 ஆகவும், கல்லுடைக்கும் கருவிகள் எண்ணிக்கை 500-லிருந்து 2,000 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.59.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஏற்படுத்துதல்**

32. பூர்வீக தொழிலை மேற்கொண்டு வரும் மிகப்பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கிறது:-

| திட்டத்தின் பெயர் | பயனடைவோரின் எண்ணிக்கை | அரசு உதவித் தொகை ரூ. | வங்கிக் கடன் உதவி ரூ. | ஒவ்வொரு பயனீட்டாளருக்கான மொத்தச் செலவு ரூ. |
|---|---|---|---|---|
| முடிதிருத்தகம் | 200 | 1500 | 3500 | 5000 |
| சலவை நிலையம் | 150 | 1500 | 3500 | 5000 |
| நடமாடும் சலவை நிலையம் | 50 | 600 | 1400 | 2000 |



பயனடைவோர் 400 பேருக்கு நிதியுதவி அளிப்பதற்காக 2000-2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. பயிற்சியும், வேலைவாய்ப்பும்:**

**அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்:**

33. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றி பெற இயலும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க 1971 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் நூறு பேருக்கு இந்நிலையத்தின் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வட்டார பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில், 75 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. இலவச இடவசதி, தனிப்பயிற்சி, நூல் நிலைய வசதி ஆகியவற்றுடன் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500 வீதம் உணவுக் கட்டணமும் அளிக்கப்படுகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த அனைத்து மாணவ மாணவியருக்கும் இவ்வசதி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தைப் போன்று, அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பயிற்சி அளிப்பதற்கென தனியே ஒரு பயிற்சி நிலையம் சென்னையில் அதே வளாகத்தில் இயங்கி வருகிறது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் ஒன்றாக இணைந்து வாழ்வதன் மூலம் சமூக நல்லிணக்கத்தை உருவாக்கலாம் என்பதற்கு சமத்துவபுரம் கோட்பாடு முன்னோடியாக உள்ளது. மேற்சொன்ன திட்டத்தின் வெற்றியின் அடிப்படையிலே இக்கோட்பாடு சிறப்புப் பயிற்சி நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்விரு பயிற்சி நிலையங்களும் இணைக்கப்படும் என்றும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் ஒன்றாக தங்கிப் பயிலுவார்கள் என்றும் 1999-2000 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கிணங்க ஆணைகள் வெளியிடப்பட்டு இந்த ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி நிலையம் சென்னையிலுள்ள

அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.45.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்**

34. கிராமப் பகுதிகளிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்க இத்துறை, தொழிற்கல்வி நுழைவுத் தேர்வை எழுதுகின்ற இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 72 மையங்கள் மூலம் ஒவ்வோராண்டும் சிறப்புப் பயிற்சி அளிக்கிறது. மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் அரசு மானியம் பெறும் மேனிலைப் பள்ளிகளில் 15 நாட்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேருவதற்கு வருமான வரம்பு ஏதுமில்லை. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 0.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்**

35. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த 20 சட்டப் பட்டதாரிகளுக்கு ஒவ்வோராண்டும் மூத்த வழக்குரைஞர்களின்கீழ் மூன்றாண்டுகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இப்பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ.750 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர ஆண்டு வருமான வரம்பு ரூ.25,000 ஆகும். பயிற்சி அளிக்கும் மூத்த வழக்குரைஞருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5001 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.4.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சி மையங்கள்**

36. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூரில் ஒன்றும், மதுரை மாவட்டத்திலுள்ள செக்கானூரணியில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூரில் ஒன்றும், ஆக மூன்று தொழிற் பயிற்சி நிறுவனங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் நிதியுடன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோராண்டும்



இந்தப் பணிமனைகளில் 208 நபர்களுக்கு வெவ்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2000-2001-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.56.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

37. திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் 220 பெண்கள் பயனடையும் வகையில், ஏழு தையற் பயிற்சி மையங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறையில் நாரிழைத் தயாரிப்புப் பயிற்சி மையம் ஒன்றையும் அரசு நடத்தி வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.18.41 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்**

38. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் வேலைவாய்ப்புப் பெறுவதில் மற்றவர்களுடன் போட்டியிடத் தகுதி பெற, இந்த வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் வகை செய்கின்றன. இந்தப் பயிற்சித் திட்டங்கள் மாணவ மாணவியர் தகுதியினை உயர்த்துவதுடன் வேலைவாய்ப்பினைப் பெறவும் உதவுகின்றன. வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம் பெரும்பாலும் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாலும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் பயிற்சிகளின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் (1) | பயிற்சி (2) | பயிற்சியாளர் எண்ணிக்கை (3) | பயிற்சியின் காலம் (4) |
|---|---|---|---|
| 1 | கணினிப் பயிற்சி | 1000 | 6 மாதம் |
| 2 | கணினிப் பயிற்சி (சிறப்புப் பாடத் திட்டம்) | 500 | 6 மாதம் |
| 3 | கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி | 2000 | 3 மாதம் |
| 4 | தானியங்கி பொறியியல் | 50 | 12 மாதம் |
| 5 | குளிர்சாதன/குளிர்பதனப் பெட்டி பழுதுபார்த்தல் | 100 | 6 மாதம் |

[2000 மே 11

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6 | அலங்கார ஆடை வடிவமைப்பு | 20 | 6 வாரம் |
| 7 | ஆடை தயாரிப்பு | 20 | 8 மாதம் |
| 8 | கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல் | 20 | 8 மாதம் |
| 9 | துணைச் செவிலியர் | 250 | 12 மாதம் |
| 10 | பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல் | 25 | 6 மாதம் |
| 11 | தோல் பொருட்கள் தயாரித்தல் (குறுகியகாலப் பயிற்சி) | 130 | 6 மாதம் |
| 12 | தோல் பொருட்கள் தயாரித்தல் (நீண்டகாலப் பயிற்சி) | 92 | 15 மாதம் |
| 13 | தையல் இயந்திரம் இயக்குதல் | 90 | 2 மாதம் |
| 14 | அலுவலக செயலர் பயிற்சி | 200 | 6 மாதம் |
| 15 | தட்டச்சுப் பயிற்சி | 900 | 6 மாதம் |
| 16 | சுருக்கெழுத்துப் பயிற்சி | 300 | 12 மாதம் |
| 17 | தொலைபேசி இயக்குதல் | 200 | 1 மாதம் |
| 18 | தகவல் தொழில்நுட்பம் | 5000 | 12 மாதம் |

இத்திட்டத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.2038.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்

39. 1996-97 ஆம் ஆண்டு வரையில், ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு கீழ் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினரைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் 3 சென்ட் பரப்பளவு உள்ள நிலம் வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு இத்திட்டத்தின்கீழ் அதிக



2000 மே 11]

எண்ணிக்கையிலான மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினரைச் சேர்ந்த குடும்பங்கள் பயன்பெறுகிற வகையில் இத்திட்டத்திற்காக முன்பு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூ.2.00 கோடி என்பது ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.10.00 கோடியிலிருந்து இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 14.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1997-98 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் நீட்டிக்கப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ. 5.00 கோடியும், முன்னேறிய வகுப்பினருக்கு ரூ. 3.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. ஏனைய நடவடிக்கைகள்

#### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்

40. மண்டல் குழு வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு 15-3-1993 அன்று அமைத்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து பரிந்துரை செய்வதே இந்த ஆணையத்தின் பணியாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திருத்தும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்தும், அவை மீதான மறுப்புகள் குறித்தும் ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

41. இதுவரை 148 வகுப்புகளிடமிருந்து முறையீடுகள் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. இவற்றில் 73 வகுப்புகள் குறித்த விசாரணைகள் நடைபெற்றுள்ளன. மீதமுள்ள வகுப்பினர் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

[2000 மே 11

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

42. தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 16-11-1981 ஆம் நாளன்று நிறுவப்பட்டு, 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை ரூ. 1,200 இலட்சமாகவும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1119.01 இலட்சமாகவும் உள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கென, இப்பிரிவைச் சார்ந்த தனிநபர், குழுக்கள் மற்றும் சங்கங்களிலிருந்து பெறப்படும் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் நிலைத்திருக்கக் கூடிய திட்டம், தொழில் அல்லது செயல்முறைத் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்த அளவில் புது தில்லியில் அமைந்துள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் வழிமுகமையாகச் செயல்படுகிறது. 1993-94 ஆம் ஆண்டு முதல் நிதி உதவிகள் பெற்று வழங்கி வருகிறது.

43. கீழ்க்கண்ட நிறுவனங்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முகவர்களாகச் செயல்பட்டு கடன்கள் வழங்கவும் கடன்களை வசூலிக்கவும் செயல்படுகின்றன:

1. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3. கூட்டுறவு வங்கிகள்
4. தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
5. ஆவின்

44. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில், புது தில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 2425.90 இலட்சமும், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 464 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது. இதுவரையில், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு தவணைக் கடன் வகையில் நிதியுதவி



2000 மே 11]

ரூ. 2170.35 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கும் முன்னர், இக்கழகத்தால் சிறுபான்மையினர்களைப் பொறுத்தவரையில் இத்தகைய தவணைக்கடன் ரூ. 143.30 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

45. இதுவரையில், இக்கழகம், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி இணையங்களின் உறுப்பினர்கள் மற்றும் தனிநபர் கடன்களைப் பொறுத்தவரை, 33,511 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 2313.65 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

46. நடப்பு நிதியாண்டில் இக்கழகம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 5.99 கோடி நிதியுதவி பெற்று கடன் வழங்க உத்தேசித்துள்ளது.

**சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

47. சமூக நீதிக்காகப் போராடியவர்களை கௌரவிக்கும் பொருட்டு அரசு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை வழங்கி வருகின்றது. 24-12-1999 ஆம் நாளன்று நடைபெற்ற அரசு விழாவில் மாணபுமிகு முதலமைச்சர் அவர்கள், 1999 ஆம் ஆண்டுக்கான ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம் அடங்கிய இந்த விருதினை திரு. நன்னிலம் நடராசன் அவர்களுக்கு வழங்கினார்கள்.

**சிறுபான்மையினர் நலன்**

48. பிரதமரின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், சிறுபான்மையினரின் நலனுக்காக, கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்கு தனிச் சலுகை அளித்தல்.

(ஆ) மேம்பாட்டுத் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.

(ஈ) மொழிவாரிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி, தேசூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

## மாநில சிறுபான்மையினர் நல ஆணையம்

*49.* சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு மாநிலத்தில், மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் இயங்கி வருகிறது. இவ்வாணையம் சிறுபான்மையினர் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெறுகிறது. தேவை இருப்பின் மனுதாரர்களை விசாரணை செய்து, அம்மனுக்களில் கண்டுள்ள கோரிக்கை/பிரச்சினைகள் மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகள் பெறப்படுகின்றன. சிறுபான்மையினர்களின் குறைகளைக் கண்டறியும் பொருட்டு இவ்வாணையம் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு அக்குறைகளைத் தீர்க்க தக்க பரிந்துரைகளைச் செய்கின்றது.

## தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

*50.* தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1-7-1999 முதல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கென இக்கழகம் பணியாற்றுகிறது. இக்கழகம் 31-8-1999 முதல் 1956 நிறுமச் சட்டத்தின்கீழ் (Companies Act, 1956) பதிவு செய்யப்பட்டு, 27-12-1999 முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அண்மையில் தொடங்கப்பட்டமையால் உடனடிச் செலவினத்திற்காக அரசு ரூ. 10.00 இலட்சம் வழங்கியுள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5.00 கோடி ஆகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இயங்குகின்ற வகையிலேயே இக்கழகமும் செயல்படுகிறது.

*51.* தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்தால் 31-3-1994 அன்று ரூ. 464 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன தொகையில் 30-6-1999 வரை ரூ.143.30 இலட்சம் 276 சிறுபான்மையினருக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புது டில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும்



நிதிக்கழகத்தின் முகவராகப் பணியாற்றும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் துணை முகவர்களே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் துணை முகவர்களாகச் செயல்படுவார்கள். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொடங்கிய பின்னர் இதுவரை 45 பயனாளிகளுக்கு ரூ.19.00 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## வக்பு வாரியம்

*52.* 1995 ஆம் ஆண்டு வக்பு சட்டம் (மத்தியச் சட்டம் 43/1995) மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின்கீழ், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த வாரியத்திற்கான நியமன உறுப்பினர்களையும் அரசு நியமனம் செய்துள்ளது. அதற்கிணங்க, புதிய தமிழ்நாடு வக்பு வாரியம் 10-6-1997 ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. இவ்வாரியத்திற்குப் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் புதிய தலைவர் 17-7-1999 அன்று பொறுப்பேற்றுள்ளார்.

*53.* வக்பு அல்லது வக்பு சொத்து தொடர்பான எநதவொரு பூசலையும் முடிவு செய்வதற்கு, 29 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்பு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வக்பு சொத்துக்களைப் பொறுத்தவரையில் நில அளவை நிலவரி ஏற்பாட்டு ஆணையாளர்-இயக்குநர், தேவையான துணைப் பணியாளர்களுடன், நில அளவை ஆணையாளராக அறிவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டு உள்ளார். ஆண்டுதோறும் தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு நிர்வாக மானியம் அரசு வழங்கி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் வக்பு வாரியத்திற்கு அரசு ரூ.30.00 இலட்சம் வழங்கியது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பழுதுபார்ப்பு சீரமைப்பு மானியம்

*54.* மசூதியைப் புதுப்பித்தல், சுற்றுச்சுவர் கட்டுதல் அல்லது இஸ்லாமியர் இடுகாட்டிற்கு முட்கம்பி வேலி அமைத்தல் ஆகிய வகையில் ஒவ்வோராண்டும், வக்பு வாரியத்திற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டில் 40 வக்பு நிறுவனங்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.10.00 இலட்சம் வழங்கப்பட்டது. பழுதடைந்த மற்றும் உடனடி கவனிப்பு தேவைப்படும் மசூதி கட்டடங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்பட்ட மேற்சொன்ன மானியத்தோடு 1999-2000 ஆண்டில்

மசூதிகள் மற்றும் தர்கா பழுதுபார்ப்புப் பணிக்கென ரூ.40.00 இலட்சம் மொத்த ஒதுக்கீட்டில் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்தொகையில் 1999-2000 ஆண்டில் 19 வக்பு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் ரூ.16.00 இலட்சம் வழங்கப்பட்டது.

**உலமா ஓய்வூதியம்**

55. பதிவு செய்யப்பட்ட வக்புகளில் முவாஜின் (மோதினார்), பேஷ் இமாம் அல்லது அரபு மொழி ஆசிரியராக 20 ஆண்டுகள் பணியாற்றி 60 வயதை அடைந்துள்ள வறியநிலையில் உள்ள உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. 26-1-1999 வரை, அளவை செய்யப்பட்டு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட, வக்பு சட்டம் 1995-ன்கீழ் சகாயத் தொகை செலுத்திவரும் வக்புகளில் எந்தவித நிதி ஆதாரம் இல்லாத உலமாக்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.500 உலமா ஓய்வூதியமாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. 27-1-1999 முதல், அளவை செய்யப்பட்டு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட வக்புச் சட்டம் 1995-ன்கீழ் சகாயத் தொகை செலுத்தி வரும் வக்புகளில், அவ்வக்புகள் பதிவு செய்திருந்தாலும் அல்லது பதிவு செய்யப்படாமல் இருந்தாலும், அவற்றில் பணியாற்றிய உலமாக்களுக்கு, உலமா ஓய்வூதியத்திற்கான மற்ற பிற தகுதிகள் பெற்றிருந்தால் உலமா ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டுவரை உலமா ஓய்வூதியப் பயனாளிகளின் எண்ணிக்கை 2000 ஆக இருந்து வந்தது. இது, 1998-99 ஆம் ஆண்டு முதல் 2200 ஆக உயர்த்தப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கென ரூ.1.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இத் திட்டத்தை நிர்வகிப்பதற்கு 2000 ஆண்டு மார்ச் மாதத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் 8 உறுப்பினர்கள் கொண்ட அனுமதிக் குழு அரசால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழு**

56. தமிழக ஹஜ் குழு, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகவும், 15 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டு 18-3-1997 ஆம் நாளன்று அமைக்கப்பட்டுள்ளது. 7 பேரை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவும் அரசு இசைவு அளித்துள்ளது. நிர்வாகச் செலவுகளுக்காக அரசால், 1997-98 ஆம் ஆண்டுவரை ஒவ்வோராண்டிற்கும், தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழுவிற்கு, ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. 1998-99 முதல் இத்தொகை ரூ.7.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.



57. ஹஜ் புனிதப் பயணத்தின்போது, ஹஜ் பயணிகளுக்கு, வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்துகொடுத்தல், தங்கியிருக்கும் இடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து விமானத்தில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் போன்ற வசதிகளைச் செய்வதே தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் பணியாகும்.

58. ஒவ்வோர் ஆண்டும், அரசு தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு பின்வரும் மானியங்களையும் அளித்து வருகிறது:

| | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| (அ) | ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்காக அரசு வழங்கும் மானியம் | 6.75 |
| (ஆ) | கட்டடத் தேர்வுக் குழுவிற்காக, இரண்டு பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்காக அரசு வழங்கும் மானியம் | 1.00 |
| (இ) | உயர்மட்ட அதிகாரியை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்காக அரசு வழங்கும் மானியம் | 0.75 |

2000 ஆம் ஆண்டில் ஹஜ் புனிதப் பயணத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 3660. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அலுவலகத்திற்கு இண்டர்நெட் வசதியுடன் கூடிய கணினி 2000-2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளது.

**முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம்**

59. முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம், சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. இச்சங்கம், சங்கங்களைப் பதிவு செய்வதற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் முக்கியமான நோக்கங்கள் யாதெனில், ஆதரவற்ற முஸ்லீம் விதவைகளுக்கு மாதாந்திரப் படி அளித்து உதவுதல், தகுதியுடைய முஸ்லீம் மகளிர் மற்றும்

பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லீம் மகளிருக்கு கதர், கைவினைப் பொருள்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான இல்லம் ஒன்றை அமைத்தல், தொண்டர்களிடமிருந்து பெறும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் இச்சங்கம் அதன் நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம், திரட்டும் நிதியில், பாதித் தொகை அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்கு மானியமாக 1999-2000 ஆம் ஆண்டில் அரசு ரூ.30,428 வழங்கியுள்ளது. இந்நோக்கத்திற்காகவே 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.31,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### *2000-2001 ஆம் ஆண்டின்போது செயல்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்கள் குறித்த விவரங்கள்*

60. மாநிலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மக்களின் முன்னேற்றத்திற்காக 2000-2001 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்:-

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ.65.00 இலட்சம் செலவில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.
2. 50 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்பு ஏற்படுத்துதல்.
3. கள்ளர் பள்ளிகளுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் தளவாடச் சாமான்கள் வழங்குதல்.
4. 10 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள் மற்றும் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.13.20 இலட்சம் செலவில் குடிநீர் வசதியளித்தல்.
5. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.36.30 இலட்சம் செலவில் 10 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.
6. 12 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.21.72 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடங்கள் கட்டுதல்.



7. 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மாணவியருக்கு ரூ.11.71 இலட்சம் செலவில் கழிப்பறைகள் கட்டுதல்.
8. 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் மின் இணைப்பு அளித்தல்.
9. பிளாஸ்டிக் உற்பத்தி தொழில் நுட்பவியலில் 60 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு ரூ.11.08 இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சி அளித்தல்.
10. மருத்துவச் சோதனைக்கூடத் தொழில் நுட்பத்தில் 20 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு ரூ.5.40 இலட்சம் செலவில் சான்றிதழ் பயிற்சி அளித்தல்.
11. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரகத்திற்கு ஒரு நிகரி (Fax) ரூ.0.42 இலட்சம் செலவில் வழங்குதல்.
12. தமிழ்நாடு ஹஜ் குழு அலுவலகத்திற்கு ரூ.0.70 இலட்சம் செலவில் இண்டர்நெட் வசதியுடன் கணினி அமைத்தல்.

**FF. முடிவுரை**

61. தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினரின் எண்ணிக்கை சுமார் 70 விழுக்காடு ஆகும். மாநிலத்தின் வளர்ச்சி என்பது குறிப்பாக இப்பிரிவினரின் வளர்ச்சியே என்பதை அரசு நன்கு அறியும். கல்வி, மக்கள் நல்வாழ்வு, உள்ளாட்சி போன்ற அரசின் பல்வேறு துறைகளினால் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் பெரும்பாலும் இப்பிரிவினரை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது. இருப்பினும், பல்வேறு நலத்திட்டங்களுடன் தனியாக இப்பிரிவினருக்கென ஒரு துறை இயங்குவதன் நோக்கமே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின இனத்தவருக்குப் பாதிப்பு ஏற்படுத்துகின்ற முக்கிய இனங்களைக் கூரிய நோக்குடன் கண்டறிவதற்காகவே ஆகும். நிறைவான நேரடிப் பலன்கள் இதன்மூலம் அடையப்பெற்றுள்ளன. அரசுத் துறையில் வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதியிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையினைத் திறம்படச் செயல்படுத்தி வருவதை இத்துறையின் தனிப்பெரும் சாதனையாகக் குறிப்பிடலாம்.

[2000 மே 11

பணியாளர் நியமன முறைகளில் உள்ள பல்வேறு குறைபாடுகளின் காரணமாக அரசுத் துறை வேலைவாய்ப்பில் மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு சட்டப்பூர்வமாகக் கிடைக்க வேண்டிய பங்கு மறுக்கப்பட்டுள்ள விவரம் சில காலமாகவே முறையிடப்பட்டு வந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதலாம் நாளில் அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, 112 துறைத் தலைவர்களையும், 114 பொதுத் துறை நிறுவனங்களையும், பல்கலைக் கழகங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் அழைத்து ஆய்வு செய்யும் பெரும்பணியினை மேற்கொண்டது. மேற்கூறிய துறைகளின் அலுவலர்கள், தங்கள் அமைப்புகளில் பணியாளர் நியமனங்களில் இட ஒதுக்கீட்டு அளவினைப் பொறுத்தமட்டில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை விளக்குமாறு கோரப்பட்டனர். இந்த உயர்மட்டக் குழு சில மாவட்டங்களிலும் நேரடி விசாரணை மேற்கொண்டது. இத்தகைய நடவடிக்கையினால் வேலைவாய்ப்பில் சட்டப்பூர்வமான தங்களுடைய பங்கை அடையலாம் என்ற நம்பிக்கை பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பணியாளர்களுக்கு ஏற்பட்டது. வெளிப்படையான அணுகுமுறை, பொதுவிவாதங்கள் மற்றும் விளம்பரங்கள் வாயிலாக, இட ஒதுக்கீட்டு விதிகளைப் புறக்கணித்து பணியாளர் நியமனங்களில் இதுநாள் வரை இழைக்கப்பட்டு வந்த தவிர்க்கக் கூடிய தவறுகள் பெருமளவில் நிகழாமல் தவிர்க்கப்பட்டுள்ளன.

மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை ஏற்று மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாகப் பெற்றிடும் வகையில் அரசுப்பணி நியமனங்களில், முதல் 10 இடங்களில் 2 இடங்கள் அப்பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய இனச் சுழற்சி பட்டியலில் தக்க மாற்றம் செய்யப்படும் என இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9-3-2000 அன்று அறிவித்துள்ளார்கள்.

இப்பிரிவினர் பயனடையும் பொருட்டு பல்வேறு நலத் திட்டங்களைச் செயலாக்குவதன் மூலம், இப்பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அவர்களின் எதிர்காலத்தையும் மற்றும் நல்வாழ்வினையும் செவ்வனே வடிவமைத்திட அனைத்து முயற்சிகளையும் எடுத்திட அரசு உறுதி பூண்டுள்ளது.



2000 மே 11]

## இணைப்பு

### 2000-2001 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| நிர்வாகம் | | மொத்த ஒதுக்கீடு | |
| --- | --- | --- | --- |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 68903 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 622920 |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1525 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 834266 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 2643 | வக்பு வாரியம் | 17200 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 9217 | ஹஜ் குழு | 1445 |
| **திருப்பி வசூலிக்கப்பட்டவை** | | முஸ்லீம் பெண்கள் சங்கம் | 31 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 2101 | | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 3028 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 9 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 115149 | | |
| மொத்தம் | 87437 | | 1475862 |
| கூடுதல் மொத்தம் | | | 1563299 |

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்டங்கள் | திட்டப் பணிகள் | | | திட்டத்தில் சேராப் பணிகள் | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பிவ | மிபிவ | சிம | பிவ | மிபிவ | சிம | பிவ | மிபிவ(ம) சிம |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | படிப்புதவித் தொகை | - | 10654 | 2064 | 94981 | 32327 | 9615 | 94981 | 54660 |
| 2. | இலவசக் கல்வி | 53690 | 55948 | - | 9760 | 5073 | - | 63450 | 61021 |
| 3. | பள்ளிகள் (புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் உட்பட) | - | - | 9493 | - | - | 202808 | - | 212301 |
| 4. | உடைகள் | - | 1250 | 6600 | 4363 | 705 | 1445 | 4363 | 10000 |
| 5. | உணவு மானியம் | - | 320 | - | 1192 | 604 | - | 1192 | 924 |
| 6. | மாணவர் இல்லங்கள் | 66260 | 36120 | 3353 | 14189 2 | 79489 | 59704 | 208152 | 178666 |
| 7. | பல்கலைக்கழக மானியம் | - | - | - | 27 | 10 | - | 27 | 10 |
| 8. | சீர்மரபினர் வகுப்பினர் சார்ந்த ஆசிரியர்களுக்கு வீடுகள் | - | - | 15 | - | - | - | - | 15 |
| 9. | பல்நோக்கு பொறியியல் பட்டறைகள் | - | - | - | - | - | 5629 | - | 5629 |
| 10. | குடிசைத் தொழில்கள் | - | - | - | 1512 | - | 329 | 1512 | 329 |
| 11. | இலவசக் கருவிகள் | - | 500 | - | - | 5946 | - | - | 6446 |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. | சலவைத்துறை | - | 1 | - | - | - | - | - | 1 |
| 13. | சிறப்புத் தனிப் பயிற்சி நிலையம் | - | - | - | 4614 | - | - | 4614 | - |
| 14. | வீட்டுமனை கையகப் படுத்துதல் | 80040 | 140000 | - | - | 350 | - | 80040 | 140350 |
| 15. | மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | - | - | - | 29 | - | - | 29 | - |
| 16. | பட்டயக் கணக்கர் படிப்பு | - | - | - | 3 | - | - | 3 | - |
| 17. | பரிசுகள் வழங்குதல் | 2579 | - | - | - | - | - | 2579 | - |
| 18. | வேலைவாய்ப்புத் திட்ட மாணவர் இல்லம் | 1534 | - | - | - | - | - | 1534 | - |
| 19. | பணி சார்ந்த பயிற்சிகள் | 114038 | 3160 | - | 45879 | 40754 | - | 159917 | 43914 |
| 20. | சட்டபட்டதாரிகளுக்குப் பயிற்சி | 470 | - | - | - | - | - | 470 | - |
| 21. | பள்ளி/மாணவர் இல்லங்கள் பழுதுபார்த்தல் | - | - | - | 10 | - | - | 10 | - |
| 22. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | - | - | - | 47 | - | - | 47 | - |
| 23. | மிபிவ/சிம மாணவியருக்கு சிறப்பு ஊக்கத்தொகை | - | 120000 | - | - | - | - | - | 120000 |
| | மொத்தம் | 318611 | 367953 | 21525 | 304309 | 165258 | 279530 | 622920 | 834266 |

| மொத்தம் 1999-2000 | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 479877 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1325 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 2899 | 484101 | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை | 559401 | 559401 | |
| வக்பு வாரியம் | 17801 | | |
| ஹஜ் குழு | 1325 | | |
| முஸ்லீம் பெண்கள் சங்கம் | 40 | 19166 | 1062668 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | 5028 |
| மொத்தம் | | | 1067696 |

| மொத்தம் 2000-2001 | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 691823 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1525 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 2643 | 695991 | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை | 843483 | 843483 | |
| வக்பு வாரியம் | 17200 | | |
| ஹஜ் குழு | 1445 | | |
| முஸ்லீம் பெண்கள் சங்கம் | 31 | 18676 | 1558150 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | 5149 |
| மொத்தம் | | | 1563299 |



# இணைப்பு II

*(166 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண்—30

## பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2000-2001

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல்வாழ்விற்கும் மற்றும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, சீரிய முறையில் முனைப்புடன் இவ்வரசு செயல்படுத்தி வருகின்றது.

2. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி., இம்மாநிலத்தின் மொத்த மக்கட் தொகை 5.59 கோடியில் ஆதிதிராவிடர் மக்கள் 1.07 கோடி என்றும் (19.18 விழுக்காடு) பழங்குடியினரின் மக்கள் தொகை 0.06 கோடி என்றும் (1.03 விழுக்காடு) கணக்கிடப்பட்டுள்ளது.

3. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார நிலையினை வளப்படுத்தும் பணிக்கு இவ்வரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. அவர்களுடைய பொருளாதார நலிவுக்கும், சமூக இயலாமைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கென வலுவான பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுவதில் இவ்வரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. இக்குறிக்கோளினை குறிப்பிட்ட காலவரையறைக்குள் எய்துவதற்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் முயற்சிகள் மற்றும் ஆதாரங்கள் பிற துறைகளின் முயற்சிகள் மற்றும் ஆதாரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றன.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக கீழ்க்கண்டவாறு இவ்வரசு பல்வகைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது:

## I. கல்வி

[2000 மே 11

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு கல்வி மிக முக்கியமானதொன்றாகும். எனவே, இத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் மொத்தத் தொகையில் 70 சதவீதம் கல்விக்கென செலவிடப்படுகிறது. இத்துறையின் மூலம் 1,260 பள்ளிகள் இயங்கி வருகின்றன.

1. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் கொண்டுவரப்பட்டு மொத்தம் 85 பள்ளிகளில் கணினிப் பாடம் நடத்தப்பட்டு வருகின்றது.
2. இத்துறையின் கீழ் இயங்கும் 55 உயர்நிலைப் பள்ளிகளிலும் 63 மேல்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
3. கடந்த நான்காண்டு காலத்தில் ரூ.78 இலட்சம் செலவில் 15 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட்டு ரூ.26 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட உபகரணங்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.
4. ரூ.2.06 கோடி செலவில் 49 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, ரூ.21.50 இலட்சத்திற்கு ஆய்வுக்கூட உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.
5. 12-ம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் 2 இணைச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.7.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
6. ரூ. 0.99 கோடி செலவில் 10 பள்ளிகளில் புதிய கட்டடங்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் கட்ட ரூ. 1.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
7. இவ்வரசு பொறுப்பேற்றபின் கடந்த நான்காண்டு காலத்தில் போதிய வசதிகள் கொண்ட விடுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காகக் கட்ட வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளித்து ரூ. 39.34 கோடி செலவில் 124 விடுதிகள் கட்டி முடிக்கப்படடுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் மேலும் 42 விடுதிகள் கட்டுவதற்கு ரூ.13.86 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



2000 மே 11]

8. இவ்வரசால் கடந்த நான்காண்டுகளில் 111 மாணவ/மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 5 விடுதிகள் முதுகலைப் பட்டதாரி மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
9. கடந்த 4 ஆண்டுகளில் இவ்வரசு 75 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 21 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 21 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தியுள்ளது. மேலும், பழங்குடியினருக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் 19 உண்டி உறைவிடப் பள்ளிகளை நிறுவியுள்ளது.
10. 2000-2001 ஆம் நிதி ஆண்டில் 25 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 2 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.1.98 கோடி செலவில் நிலை உயர்த்தப்பட உள்ளன.
11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின அனைத்து மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக நடப்பு நிதி ஆண்டிற்கு ரூ.12.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
12. பத்தாம் வகுப்பு படிப்பிற்கு முற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவித் தொகை வழங்கும் மாநில அரசுத் திட்டத்தின் கீழ் ரூ.2.62 கோடியும், மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் ரூ.3.37 கோடியும் இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
13. பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான மாநில அரசின் சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.2.15 கோடியும், மைய அரசுத் திட்டத்தின் கீழ் ரூ.31.55 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
14. 1999-2000 ஆண்டிலிருந்து சுயநிதிக் கல்லூரிகளில் அரசுப் பங்கீடு இலவச இடங்களில் (Free Seats) பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு

வருமானம் ரூ. 50,920-க்குள் உள்ளவர்களுக்கு, அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கான கல்விக் கட்டண அளவிற்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

15. விடுதிகளில் தங்கி பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி உதவித் தொகையுடன் கல்விக் கடனுதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6,500-ம் தொழில் படிப்பு மற்றும் பட்ட மேல்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ. 7,000-மும், கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் ரூ.4.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. விடுதிச் சேர்க்கைக்கான பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு 1997-1998-ம் ஆண்டு முதல் ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

17. அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் கல்லூரி மற்றும் தொழிற் கல்வி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் 1998-99 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.400 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

18. இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற் கல்வியில் 60 விழுக்காடு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகையான ரூ. 1,000 ரூ. 1,250 மற்றும் ரூ. 1,500 என்பது முறையே ரூ. 2,000, ரூ. 4,000 மற்றும் ரூ. 5000 ஆக 1997-98 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ. 32.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. 1999-2000 ஆம் ஆண்டு முதல் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற் கல்வியில் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்குப் பதிவுக் கட்டணம் மற்றும் சேர்க்கைக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

20. விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையிலுள்ள வெள்ளிமலையில் பழங்குடியினருக்காக ஒரு உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி, ரூபாய் ஒரு கோடி செலவில் 1998-99 முதல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.



21. புத்தக வங்கித் திட்டத்தின்கீழ் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, பல்நோக்கு தொழில்நுட்பம், சட்டம், முதுநிலை வணிக நிர்வாகம், பட்டயக் கணக்கு, உயிர் அறிவியல் படிப்பு மற்றும் தொழிற் கல்வியில் முதுநிலை பட்டப் படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ. 2,400 முதல் ரூ. 7,500 வரை மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த சட்டப் பட்டதாரிகள் சுயமாகச் சட்டத் தொழில் செய்ய 180 சட்டப் பட்டதாரிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.5,000 மானியமாக வழங்க ரூ.9.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## II. வீட்டுமனை வழங்கும் திட்டம்

இத்திட்டம் சொந்த வீட்டுமனை இல்லாத ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும்.

1999-2000 ஆண்டில் ரூ.14.36 கோடி செலவில் 54,898 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ.18.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## III. வீட்டு வசதி

வசிக்க வீடில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. 1999-2000-ம் ஆண்டில் கூரை போடுவதற்காக ரூ.29.34 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.31.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## IV. தீண்டாமை ஒழிப்பு மற்றும் வன்முறைத் தடுப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் மீது வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் அரசு தீவிரமாக உள்ளது. வன்முறை தொடர்பான வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மாவட்டங்களில் தனியாகக் கூடுதல்

அமர்வு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கென ஒரு சிறப்பு அரசு வழக்கறிஞர் பணியிடம் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தேநீர் கடைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தேநீர் வழங்க தனிக்குவளை பயன்படுத்தும் முறை அடியோடு மாற்றப்பட்டுவிட்டது. இதனை மீறுபவர்கள் மீது காவல் துறை தலைவர் (மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி) மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இணைந்து கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாதிப் பூசல்களால் அவ்வப்போது ஏற்படும் சில நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக கடந்த நிதி ஆண்டில் ரூ.1.06 கோடி நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### V. கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை ஒழிப்பில் இந்நாட்டிற்கே தமிழகம் முன் உதாரணமாகத் திகழ்கிறது. இம்மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் உச்ச நீதி மன்றத்தால் பாராட்டப்பட்டு பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்கள் கண்டறிந்துள்ள 25,008 கொத்தடிமைகளை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.3 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### VI. துப்புரவுப் பணியாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம்

இந்த அரசு கடைப்பிடிக்கும் மனித நேயக் கொள்கையின அடிப்படையாக மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றவும், சுமக்கவுமான இழிவு நிலையினை அகற்றுவதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு, சுயதொழில் வசதி போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் (29-2-2000 வரை) 19,505 துப்புரவுப் பணியாளர்கள் இதன் மூலம் மறுவாழ்வு பெற்றுள்ளனர். இதற்கென ரூ.20.43 கோடி மானியம் மற்றும் விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



### VII. பணி நியமனங்களில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு

ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றுவதில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அரசுப் பணிகளில் நியமனம் பற்றி இரு துறைகளின் குழுக்களால் ஆராயப்பட்டு அக்குழுக்களின் அறிக்கைகள் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் பரிந்துரைகள் தொடர்புடைய அமைச்சர்கள், துறைச் செயலர்கள் ஆகியோரைக் கொண்ட குழு ஆய்ந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### VIII. வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிகள்

போதிய கல்வித் தகுதி பெற்றவர்களுக்குச் சுய தொழில் செய்யவும் பணிகளில் சேரவும் வாய்ப்பளிக்கும் பயிற்சிகள் (Job Oriented Training) பல இத்துறையின் நிதி உதவியோடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதுவோருக்குப் பயிற்சி அளிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்காக ஒன்றும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒன்றும் ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் சென்னையில் இயங்கி வருகின்றன. பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், நம் மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், இவ்விரண்டு பயிற்சி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, சென்னை, அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

### IX. டாக்டர் அம்பேத்கர் மணி மண்டபம்

டாக்டர் அம்பேத்கர் மணி மண்டபம் அமைக்கும் பணி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மணி மண்டபம் கட்டும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு பணி வேகமாக நடைபெற்று வருகிறது. பணி வெகு விரைவில் முடிவடையும்.

### X. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில், தமிழக அரசு பழங்குடியினர் துணைத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. ஆறு மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் ஒன்பது பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்தமான மேம்பாட்டுப் பணிகளுக்கென ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின் பாரம்பரிய தொழில் முறைகளுக்கேற்பத் தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு ஆகிய திட்டங்கள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியின மக்களின் விளை பொருட்களை விற்பனை செய்ய வகை செய்வதோடுமட்டுமின்றி, குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கும், பழங்குடியினருக்குத் தேவையான நுகர் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்வதற்கும், பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMP SOCIETY) செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதிகளில் 16 சங்கங்களும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் 2 சங்கங்களும், பழங்குடியினரின் தேவைகளை நிறைவு செய்ய நிறுவப்பட்டுள்ளன.

பழங்குடியினரின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்துவதோடு, கல்வி, மருத்துவம், மின்வசதி, குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் செய்து தரப்படுகின்றன.

பழங்குடியின மக்களில் மிகவும் பின்தங்கிய பண்டைய பழங்குடியின மக்களில் கண்டறியப்பட்ட ஆறு பிரிவினர்களுக்கு உதவ தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பழங்குடியின மக்களுக்காகத் தீட்டப்படும் திட்டங்களின் பயன் அப் பழங்குடியின மக்களுக்கு விரைவில் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்குடனும், பழங்குடியின மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நேர் செய்வதற்காகவும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவர் தலைமையில் பழங்குடியினர் மேம்பாட்டு இயக்ககம் ஒன்று 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது.



## XI. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (TAHDCO)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காகவே கடந்த 15-02-1974-இல் தொடங்கப்பெற்ற ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் தொழில் நுட்பப் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு என இரு பெரும் பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றன.

**தொழில்நுட்பப் பிரிவு**

கீழ்க்காணும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்கிறது:—

1. விடுதி/பள்ளிக் கட்டடங்கள்
2. ஆசிரியர் குடியிருப்புகள்
3. சமுதாயக் கூடங்கள்
4. பாலர் பள்ளிகள்
5. வகுப்பறைகள் (அனைவருக்கும் எழுத்தறிவு எனும் திட்டத்தில்).

**1. திட்ட வளர்ச்சிப் பிரிவு**

1980-81 ஆம் ஆண்டிலிருந்து இக் கழகம் மாநிலத்திலுள்ள நலிந்த ஆதிதிராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தித் தேவை அடிப்படையில் விரிவான தொகுப்பு நிதி உதவித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

**2. செயல்படுத்தப்பட்டவை**

மத்திய சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி உதவியைக்கொண்டு இந் நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது:—

1. வேளாண்/வேளாண்சார் தொழில்கள்
2. தனி நபர் தொழில் முனைவோர் திட்டங்கள்
3. ஏனைய துறைகள் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்
4. தேசிய துப்புரவுப் பணியாளர்களை அப்பணியிலிருந்து விடுவித்து மறுவாழ்வு வழங்கும் திட்டம்

5. பெண் குழந்தைகள் கல்வி ஊக்கத் திட்டம்

6. மகளிருக்கான சிறப்புத் திட்டங்கள்

7. பயிற்சித் திட்டங்கள்

8. பழங்குடியினருக்கான திட்டங்கள்

9. தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள்

10. துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்

11. ஈங்கூர் மற்றும் முதலிபாளையத்தில் தொழில் வளாகத் திட்டம்.

**3. 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்:**

1. மேலே பத்தி இரண்டில் சொல்லப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும்

2. தாட்கோ கிராமம்

தாட்கோவின் தாக்கம் கிராமப்புறங்களிலே உணரப்படும் வகையில் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஏற்படுத்த கிராமங்கள் தன்னிறைவு அடைகிற வகையில் திட்டங்களை கிராம மக்களைக்கொண்டே தீட்டி உண்மையான வளர்ச்சி எய்திட வகை செய்வதே தாட்கோ கிராமம் என்ற திட்டத்தின் நோக்கமாகும்.

ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டுக்காக இத்திட்டம் தமிழ்நாட்டில் முதன்முறையாகச் செயல்படுத்தப்பட உள்ளது.

ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிராமம் என்ற விகிதத்தில் நகரங்களில் இருக்கும் குடியிருப்புக்களையும் கணக்கில்கொண்டு நாடு முழுவதும் சுமார் 500 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, அதில் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஏற்கெனவே உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட கிராமங்களில் கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்குமட்டும் திட்டங்கள் தீட்டி இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது.



மேற்சொன்ன மூன்று வளர்ச்சித் திட்டங்களுக்காக சுமார் 2500 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒரு கிராமத்திற்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என்ற வகையில் கிராம வளர்ச்சி ஒருங்கிணைப்பாளர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்குத் திட்டமிடுதல்/தலைமையேற்றல்/செயல்படுத்துதல் போன்றவற்றில் தீவிரப் பயிற்சி வழங்கி, அப்பயிற்சியின் நன்மைகள் கிராம மக்களுக்குச் சென்றடையும் வகையில் இந்நிதியாண்டில் திட்டங்கள் தீட்டப்படவுள்ளன.

—0—

223321